உ

காசிமடாலயம் ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகள்

இயற்றி யருளிய

வைத்தீசுவரன் கோயில்

முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

(மூலமும் உரையும்)

காஞ்சி - மகாவித்வான்

இராமசாமி நாயுடு அவர்கள்

இயற்றிய உரையுடன்

Second Edition

(Reprinted in 1945)

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

வெளியிட்டது

1945

[விலை 1-4-0 ரூபாய்

ரெஜிஸ்தர் செய்தது]

Printed at
The 'Caxton Press,'
Madras.

முக்வுரை

ஸ்ரீமான் - மகாவித்வான், காஞ்சீபுரம் - இராமசாமி நாயுடு அவர்கள் புள்ளிருக்குவேளூர் - முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ் என்னும் நூலுக்கு ஓர் அரிய உரை இயற்றியுள்ளார். இவ்வுரையேயன்றி மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந் தருளிய திருவாசகம், தாயுமானவர் பாடல், பட்டினத்துப் பிள்ளையார் பாடற் பிரபந்தம் முதலிய நூல்களுக்கும் உரை வரைந்துள்ளார்.

இவர் எழுதிய திருவாசகத்தின் உரையைப்பற்றி, கனம் - ஜி. யூ. போப்புத் துரையவர்கள் தாம் வெளிப்படுத்திய ஆங் கிலத் திருவாசகத்தில் இவரைப்பற்றிப் புகழ்ந்தும், இவர் பெய ரால் அவ்வுரை வெளியிடாமைப்பற்றி வருந்தியும் உள்ளார். பின்னர், துரையவர்கள், ஐகோர்ட், டிராண்ஸ்லேடர், கனம் - தோ. இராமகிருஷ்ணப் பிள்ளை அவர்கள் மூலமாக, இவர் பெயரையும், இவரால் செய்யப்பட்ட உரைநூற்களையும் வரு வித்துப் பார்த்து மகிழ்ந்தனர்.

இப் பிள்ளைத்தமிழின் உரையை இரண்டாம் பதிப்பாக இவர் மாணாக்கருள் ஒருவனாகிய யானும், தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் ஜெயராம் நாயுடு அவர்களும் இந்நூலைப் பரிசோதித்து வெளிப்படுத்துவது நலமென காக்ஸ்டன் பிரஸ் அதிபர்கள் சிரு. கன்னையய நாயுடு அவர்கள் குமாரர்களாகிய, கனம் - பத்மநாப நாயுடு, சம்பத்து நாயுடு அவர்கள் எம்மை ஊக்க லாயினர். எனது ஆசிரியர் உரைநூலொன்று என்பார்வையில் வெளியாமாறு செய்த முருகப்பிரான் திருவருளே மனமொழி மெய்களால் வழுத்துகின்றேன்.

தமிழ்ப் பண்டிதர்

சென்னை, கோ. இராமலிங்கத் தம்பிரான்.

பொருளடக்கம்

எண்	பருவங்கள்	பக்கம்
	விநாயக வணக்கம் - - - -	1
1.	காப்புப் பருவம் - - - - -	6
2.	செங்கீரைப் பருவம் - - - -	25
3.	தாலப் பருவம் - - - - -	38
4.	சப்பாணிப் பருவம் - - - -	50
5.	முத்தப் பருவம் - - - - -	63
6.	வருகைப் பருவம் - - - -	76
7.	அம்புலிப் பருவம் - - - - -	89
8.	சிற்றிற் பருவம் - - - - -	104
9.	சிறுபறைப் பருவம் - - - - -	116
10.	சிறுதேர்ப் பருவம் - - - -	127
	செய்யுண் முதற் குறிப்பு - - - -	139

க

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

மூலமும் உரையும்

விநாயக வணக்கம்

ஆசிரிய விருத்தம்

பொன்பூத்த குடுமிப் பொலங்குவட் டிமவான்
பொருப்பிற் பிறந்துதவளப்
பொழிநிலவு தவழுமுழு வெள்ளிவே தண்டத்தொர்
போர்க்களிற் றைப்புணர்ந்து

தென்பூத்த பாட்டளி துதைந்தபைங் கூந்தற்
செழும்பிடி பயந்தளித்த
சிறுகட் பெருஞ்செவிக் குஞ்சரக் கன்றினிரு
செஞ்சரணை யஞ்சலிப்பாம்

மின்பூத்த சிற்றிடைப் பேரமர்க் கட்கடவுள்
வேழங் கடம்படுபடா
வெம்மூலக் கோடுகொண் டுழுதுழு துழக்கமுகை
விண்டுதண் டேன்றுளிக்குங்

கொன்பூத்த தெரியற் கடம்பணி தடம்புயக்
குரிசிலைப் பொருசிலைக்கைக்
குமரனைக் கந்தபுரி முருகனைப் பரவுமென்
கொழிதமிழ்க் கவிதழையவே.

(இதன் பொருள்) மின்பூத்த - மின்கொடி போன்ற, சிறு இடை - சிறிய இடையினையும், பேர் அமர் கண் - பெரிய போர்செய்கிற கண்களையுமுடைய, கடவுள் வேழம் - தெய்வயானையானது, கடம்படு - குடம்

போன்ற, படா - சாயாத, வெம் - விருப்பத்தைத்தருகிற, மூலை கோடு கொண்டு - மூலைக்கொம்பினால், உழுது உழுது - கிளைத்துக் கிளைத்து, உழக்க - அலைக்க, முகைவிண்டு - மொட்டுவிரிந்து, தண்தேன் துளிக்கும் - குளிர்ந்த தேனைத் துளிக்கின்ற, கொன்பூத்த - பெருமைபொருந்திய, தெரியல் கடம்பு அணி - கடப்பமலர் மாலையைத் தரித்த, தடம் புயம் - மலைபோலும் திருத்தோள்களையுடைய, குரிசில - பெருமையிற் சிறந்த வனே, பொரு - போர்புரிதற்குரிய, சிலை - வில்லைத்தாங்கிய, கை - திருக் கையினையுடைய, குமரனே - குமரவேளே, கந்தபுரி முருகனே - கந்தபுரி யில் வாழ்கின்ற முருகக்கடவுளே, பரவும் - துதிக்கின்ற, என் - எனது, கொழி தமிழ்க் கவி - வடித்த தமிழ்க் கவிகள், தழைய - செழிக்கும் பொருட்டு, பொன்பூத்த - அழகமைந்த, குடுமி - உச்சியாகிய, பொலம் குவடு - பொற்சிகரங்களையுடைய, வான் - மேலாகிய, இமப்பொருப்பில் பிறந்து - இமயமலையிற் பிறந்து, பொழி - சொரியப்பட்ட, தவள நிலவு தவழும் - வெண்ணிலவுதவழ்கின்ற, முழு - நிறைவாகிய, வெள்ளிவேய் தண்டத்து - வெள்ளிமலையிலுள்ள, ஓர் - ஒப்பற்ற, போர்களிற்றை புணர்ந்து - போர் யானையைக்கூடி, தென்பூத்த - அழகு பொருந்திய, பாட்டு அளி துதைந்த - பாட்டுப்பாடுகின்ற வண்டுகள் மொய்த்த, பை கூந்தல் - பசிய கூந்தலையுடைய, செழும்பிடி - செழிய பெண்யானையா னது, பயந்து - ஈன்று, அளித்த - வளர்த்த, சிறு கண் - சிறிய கண்களை யும், பெரு செவி - பெரிய காதுகளையுமுடைய, குஞ்சரக் கன்றின் - யானைக்கன்றின், செம் - செம்மையாகிய, இரு சரணை - இரண்டு திரு வடிகளை, அஞ்சலிப்பாம்-கைகூப்பி வணங்குவோம் (யாம்); (என்றவாறு).

யாதானுமோர் நூல்செய்யப் புகுவோர், மங்கலமொழி முதல் வகுத்துக்கோடன் மரபாதலால் இந்நூலாசிரியரும், பொன் என்னும் மங்கலமொழி முதல்வகுத்துக் கொள்வாராயினர். "பொன்பூத்த குடுமி" என்னுஞ் சொற்றொடர் முருகக்கடவுளது திருவருளால் அசரீரிவாயி லாகக் கிடைத்தது. பொன்பூத்த என்பதற்குப் பொன்னலியன்ற என்றுரைப்பினுமாம். இது, " பனிமா லிமயப், பொருப் பகஞ்சேர்ந்த பொல்லாக் கருங்காக்கையும் பொன்னிறமா, யிருக்குமென் றிவ்வாறு சைக்குமன் றேவிவ் விருநிலமே " " புள்ளிமால்வரை பொன்னென நோக்கி " என்றற் றொடக்கத்தான்றேர் செய்யுட்களாலினிது விளங் கும். இமம் - பனி, அதனுனிடையறாது மூடப்பட்டிருத்தலான் இதனை 'இமப்பொருப்பு' என்பர். இதற்கு மேன்மையாவது, கங்கை பார்வதி யென்னும் பெண்க ளிருவரைப் பெற்று ஈடெடுப்பில்லா விறைவற் களித்தமை. வெள்ளிமலை - கயிலைமலை. 'வெள்ளி வேதண்டத்தொர் போர்க்களிறு' என்றது சிவபிரானை. 'சிறுகட் பெருஞ்செவி' என்றது முரண்தொடை. 'குஞ்சரக்கன்று' என்றது மூத்தநாயனரை. இருசர

ணுக்குச் செம்மையாவது அடைந்தாரைப் பிறவியளக்கர் கடத்தி முத்திக்கரையிலுய்ப்பது. கொன்பூத்த என்பதற்குப் பகைவருக் கச்சத்தை வினைக்கின்ற எனினுமாம். கொன்பூத்த தடம்புயம் என வியையும். செழும்பிடி என்றது உமாதேவியை. கந்தபுரி முருகனைப் பரவுமென் கொழிதமிழ்க் கவிதழைய, செழும்பிடி பயந்தளித்த குஞ்சரக் கன்றினிரு செஞ்சரணை யஞ்சலிப்பாம் என முடித்துக்கொள்க. அஞ்சலிப்பாம் என்னும் பயனிலைக்கு யாம் என்னும் எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது. இது பொது விநாயகவணக்கம்; பின்னர்க் காப்புப்பருவத்துக் கூறப்படுவது தலவிநாயகவணக்கம் என்றுணர்க. தமிழ்க்கவி யென்பதற்குப் பிள்ளைத் தமிழ் என்னும் பிரபந்தம் என்றலும் பொருந்தும்.

*முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்:— புள்ளிருக்கு வேளூரில் எழுந்தருளிய முத்துக் குமாரசாமி மீது பாடிய பிள்ளைத் தமிழ் என்னும் பிரபந்தம் என்பது பொருள்.

காப்புப் பருவம்:— பிள்ளைத் தமிழ் பாடுமிடத்து இரண்டாமாதத்தில் பிள்ளையைக் காக்கவெனத் திருமால் முதல் மும்பத்துமுக் கோடி தேவர்களீருகப் பல கடவுளர் காக்கவென நூலிற் கூறுதல் மரபு.

அத் தேவருள் திருமால், பரமசிவம், பராசத்தி, விநாயகர், முருகவேள், பிரமன், இந்திரன், திருமகள், கலைமகள், சத்த மாதர்கள், மும்பத்துக் முக்கோடி தேவர்கள் இப் பதினொருவரும் காக்கவென்று சான்றோரால் பத்து நிலங்களுள் முதனிலமாகிய காப்புப் பருவம் கூறப்பட்டு வருகின்றது.

இங்குக் குமாரகுருபர சுவாமிகள் முருகக்கடவுளினது பிள்ளைமைப் பருவத்தைக் கூறுதலால், அக் கடவுள் தன்னைக் காக்கவெனக் கூறுதல் அமையா தென்பது கருதி, அக் கடவுளை யொழித்துத் திருமால் முதல்

---

*புள்ளிருக்கு வேளூர் என்பது வைத்தீசுரன் கோயில் ரெயில்வே ஸ்டேஷன்; சீகாழிக்குத் தென்மேற்கு 3½ மைல். சம்பாதீ - ஜடாயு, இருக்குவேதம், முருகக்கடவுள், சூரியன் இவர்கள் பூசித்தஸ்தலம். "புள்ளினூர்பணி புள்ளிருக்குவேளூர், தள்ளாய் சம்பாதி சடாயென்பார் தாமிருவர், புள்ளானூர்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே"— என்பது தேவாரம். இந்தத் தல ஆலயத்துக்குள் இருக்கும் முத்துக் குமாரசுவாமி சந்நிதி மிகப் பிரபலமானது. கிருத்திகை தினங்களில் அடியார்கள் திரளாய்ச் செல்கிறார்கள்.

"கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தந் கதிர்மதய முள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானு றுறையுமிடந்தள்ளாய் சம்பாதி சடாயென்பார் தாமிருவர் புள்ளானூர்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே."

முப்பத்துமுக்கோடி தேவர்களீருகத் தனித்தனியே காப்புக் கடவுளாக வைத்துக் கூறினர். ஏனைத் தேவரையும் காப்புப் பருவத்தில் கூறுதலு முண்டு. இதனை,

"திருமா லரனே திசைமுகன் கரிமுகன்
பொருவேல் முருகன் பரிதி வடிகன்
எழுவகை மங்கைய ரிந்திரன் சாத்தன்
நிதியவள் நீலி நிலமகள் மலைமகள்
திருமகள் நாமகள் திகழ்மதி யென்று
மருவிய காப்பினுள் வருங்கட வுளரே."

எனப் பன்னிருபாட்டியலில் வருஞ் சூத்திரத்தா னுணர்க.

பத்து நிலம்:— காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பனவாம்.

இனி,

"சாற்றரிய காப்புத்தால் செங்கீரை சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை - போற்றரிய
அம்புலியே யாய்ந்த சிறுபறையே சிற்றிலே
பம்புசிறு தேரோடும் பத்து." எனவும்,

"முறைதரு மூன்றுதி மூவேழ் ருந்திங்கள்
அறைகநிலம் பத்து." எனவும்

வச்சணந்தி மாலை யென்னும் வெண்பாப் பாட்டியலில் வருதல் காண்க. இந் நிலங்கள் மூன்று மாத முதல் இருபத்தோரா மாத காறும் ஒற்றித்த மாதமாகக் கூறுக என்றார் ஒரு சாரார்.

இந் நூலாசிரியர் ஆரும் திங்களின் செய்தியையும், ஏழாந்திங்களின் செய்தியையும் நீக்கி மற்றைச் செய்தியை இரண்டா மாதத்தில் தெய்வம் காக்க வெனவும், ஐந்தா மாதத்தில் செங்கீரையாடலும், எட்டா மாதத்தில் தாலாட்டெதலும், ஒன்பதா மாதத்தில் சப்பாணியும், பதிஞொராமாதத்தில் முத்தமும், பன்னிரண்டா மாதத்தில் வாரானையும், பதினெட்டா மாதத் தில் அம்புலியை யழைத்தலும், இரண்டாம் வருடத்தில் சிற்றில் சிதைத்த லும், மூன்றும் வருடத்தில் சிறுபறை கொட்டலும், நாலாமாண்டில் சிறு தேருருட்டலும் பிள்ளைக் கவிக்கு நிலம் வகுத்துக்கொண்டார்.

அதனை,

"பிள்ளைப் பாட்டைத் தெள்ளிதிற் கிளப்பின்
திங்க ளிரண்டிற் றெய்வங் காக்கென
வின்றமிழ்ப் புலவ ரியம்பிய காப்பும்

ஐந்தாந் திங்களிற் செங்கீரை யாடலும்
ஆறாந் திங்களிற் கூறுதல் கற்றவோ
டேழாந் திங்களி லின்னமு தூட்டலும்
எட்டாந் திங்களி லியற்று லாட்டலும்
ஒன்பதாந் திங்களி லுயர்ச்சப் பாணியும்
பத்திலே டொன்றின் முத்தங் கூறலும்
ஆண்டு வரையி லீண்டுவரு கென்றலும்
மதியீ ரொன்பதில் மதியை யழைத்தலும்
இரண்டா மாண்டிற் சிற்றில் சிதைத்தலும்
மூன்று மாண்டிற் சிறுபறை கொட்டலும்
நாலா மாண்டிற் சிறுதே ருருட்டலும்." என வரும்

நூற்பாவாலுணர்க. (பிங்கலந்தை)

இனி,

"கடுங்கொலை நீக்கிக் கடவுட் காப்புச்
செங்கீரை தால்சப் பாணி முத்தம்
வாரானை முதல வகுத்திடு மம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதே ரென்னப்
பெறுமுறை யாண்பாற் பிள்ளைப் பாட்டே."

(இ - வி. பாட் - 46)

என இலக்கணவிளக்க நூலுடையார் கூறினரேனும், வெண்பாப் பாட்டியலுள் முதலடியில் "காப்புத்தால் செங்கீரை" என்பதைச் செய்யுள் நோக்கி முறை பிறழ்ந்ததாகவும், மூன்றுமடியில் "அம்புலியே சிற்றிலே யாய்ந்த சிறுபறையே" என்னும் பாடம் பிறழ்ந்ததைக் கவனிக்காமலும் அந்நூலின் வழியே தாமும் செய்தனர்.

சிற்றிலை யழித்து, அதன் பிரதாபத்தின் பொருட்டுப் பறை கொட்டல் தகுதியாதலின் அதன்பின் வைத்தலே சால்புடைத்து.

பெண்பாற் பிள்ளைக் கவிக்கு :—

"பின்னைய மூன்றும் பேதையர்க் காகா
ஆடுங் கழங்கம் மானை யூசல்
பாடுங் கவியாற் பகுத்து வகுப்புடன்
அகவல் விருத்தத் தாற்கோ ளளவாம்.

(இ - வி. பாட் - 47)

1. காப்புப் பருவம்

திருமால்

1. பூமேவு கற்பகப் பொங்கரிற் செங்கட்
புலோமசை வளர்த்தகும்பப்
புணர்முலைக் களியானை விளையாடு பன்னிரு
பொருப்பனை விருப்பனைத்துங்

கோமேவு சாரற் குறச்சிறுமி மேல்வைத்த
குழகனைக் கழகந்தொறுங்
கொத்துமுத் தமிழ்மொய்த்த கந்தபுரி முத்துக்
குமாரனைத் தனிபுரக்க

தேமேவு கடவுட் பொலங்கிரி திசைக்கரிக
டிகிரிகிரி குலகிரியொடுந்
திரியத் திரித்துமத் தெறியத் தடங்கடற்
றெண்டிரை மூகட்டுதித்த

பாமேவு மதுரம் பழுத்தமுத மொழுகும்
பசுங்குதலை மழலையஞ்சொற்
பங்கயச் செல்வியிரு கொங்கைக் குவட்டுவளர்
பச்சைப் பசுங்கொண்டலே.

(இ - ள்) தேம்மேவ-இடம் பொருந்திய, கடவுள்-தெய்வத்தன்மை யமைந்த, பொலம்கிரி - அழகாகிய மந்தரமலையானது, திசைக்கரிகள் - அஷ்ட திக்கயங்களும், திகிரிகிரி - சக்ரவாள மலையும், குலகிரியொடும் - குலமலைகளோடும், திரிய - சுழல, திரித்து - சுழற்றி, மத்து எறிய - மத்தாகவீச, தடங் கடல் - பெரிய பாற்கடலின், தெள்திரைமுகட்டு - தெளிவாகிய அலைகளின்மேல், உதித்த - தோன்றிய, பாமேவு மதுரம் பழுத்து - பாக்களிற் பொருந்திய இனிமைமுதிர்ந்து, அமுதமும் ஒழுகும்-அமிர்தம் போன்றொழுகாநின்ற, பசு குதலை-பசுங் குதலையாகிய, மழலையஞ்சொல் - மழலைச் சொற்களையுடைய, பங்கயச்செல்வி - தாமரை மலரை யாசன மாகவுடைய திருமகளது, இரு கொங்கை - இரண்டு ஸ்தனங்களாகிய, குவட்டு - மலைகளின்மேல், வளர் - தூங்குகிற, பச்சை பசுங்கொண்டல்-பச்சைப் பசுமேகமானது, பூமேவு - அழகுபொருந்திய, கற்பகப் பொங்கரில் - கற்பகச் சோலையில், செங்கண் - சிவந்த கண்களையுடைய, புலோ

மசை வளர்த்த-புலோமசையால் வளர்க்கப்பட்ட, கும்பம்-குடம்போன்ற, புணர் முலை - நெருங்கின ஸ்தனங்களையுடைய, களியானை-களிப்பை யுடைய தெய்வயானையானது, விளையாடு - விளையாடுதற் கிடமாகிய, பன்னிரு பொருப்பனே - பன்னிரண்டு (திருப்புய) மலைகளை யுடைய வனே, விருப்பு அனைத்தும் - விருப்ப மூழுதும், கோ சாரல் மேவு - மலைச் சாரலில் வாழ்கின்ற, குறச்சிறுமிமேல் வைத்த-குறச்சிறுமியாகிய வள்ளி நாயகிமேல் வைத்த, குழகனே - கட்டழகனே, கழகந்தொறும் - இடந் தோறும், கொத்து - கூட்டமாகிய, முத்தமிழ் மொய்த்த - முத்தமிழ் நிறைந்த, கந்தபுரி - கந்தபுரியில் வாழ்கின்ற, முத்துக்குமாரனே-முத்துக் குமாரசாமியை, தனிபுரக்க - ஒப்பறக் காக்கக்கடவன். (எ - று)

புலோமசை - இந்திராணி ; புலோமன் என்பவன் மகளாதலால் இவட்கிப்பெயர் வழங்கும். புலோமன், தது புத்திரருள் ஒருவன். 'புலோமசை வளர்த்த களியானை விளையாடு' என்றதனால், பன்னிரு பொருப்பு என்றதற்குப் பன்னிரண்டு புயமலைகளென் றுரைக்கப்பட்டது. முத்தமிழ்-இயல் இசை நாடகம் என்பன. பொலங்கிரியென்றாயினும், குலகிரியொடுங் திரியத்திரித்து மத்தெறியத் தடங்கடற் றெண்டிரை முகட்டுதித்த பங்கயச்செல்வி என மேல்வருதலால் அழகிய மந்தரமலையென் றுரை யுரைக்கப்பட்டது. மேகம் மலைமீது கண் வளர்த்த லியல்பாதலால், 'பங்கயச்செல்வி யிருகொங்கைக் குவட்டு வளர் பச்சைப் பசுங்கொண்டல்' என்றார். கும்பப்புணர் முலைக்களி யானை யென்பதற்கு மத்தகத்தையும் நெருங்கின தனங்களையுமுடைய களி யானை யென்றுரைத்தலுமாம். யானை விளையாட்டுக் குரியது பொருப் பென்பது தோன்ற, 'களியானை விளையாடு பன்னிரு பொருப்பனே' என்றார். களியானை யாதலால், இதன் விளையாட்டுக்கு ஒரு பொருப்பு அமையாதென்றற்குப் 'பன்னிரு பொருப்பனே' யென்றார். கிரிசரம், வநசரம், நதிசரம் என்னும் மூவகையானைகளுள் இது கிரிசரம் எனப் படும். கிரிசரம் - மலைகளிலும், மலைச்சாரல்களிலும் சஞ்சரிப்பது. வந சரம்-காட்டிற் சஞ்சரிப்பது. நதிசரம்-நதிதீரங்களிற் சஞ்சரிப்பது. அகத் தியனார்க்குத் தமிழறிவுறுத்த பரமாசாரிய ஞதலாலும், தமிழ் வழங்கு மிடத்திற்றனக்குப் பெருவேட்கை யாதலாலும், 'கொத்து முத்தமிழ் மொய்த்த கந்தபுரி முத்துக்குமாரன்' என்றார். 'பங்கயச் செல்வியிரு கொங்கைக் குவட்டுவளர் பச்சைப்பசுங்கொண்டல் கந்தபுரி முத்துக்குமா ரனைத் தனிபுரக்க' என முடித்துக்கொள்க. பச்சைப் பசுங்கொண்டல் - உவமையாகுபெயர். பச்சை முழுமைப் பண்புப்பொருட்டுப்பச்சைப்பசும் பொய் என்பதிற்போல. இக் காப்புப் பருவத்தில் எல்லாத் தேவர்களையுந் துதித்தல் இயல்பாயினும், காத்தற்றொழிலில் இன்றியமையாப் பெருஞ் சிறப்பின ராதலேக்கித் திருமால்துதி முதற்கட் கூறப்பட்டது. (1)

வைத்தியநாதர்

சந்த விருத்தம்

2. ஒருபு றத்துமர கதமி மைப்பவொளிர்
மாமேரு மற்றொருரு மேருவைச் சாய்த்தென
வுலக ளக்கநிர் வடபொ ருப்பையொரு
தோளால் வளைத்தபி லகியைத் தீக்கன
லுமிழு மூக்குடுமி யயிறி ரித்துவரு
வாய்வாண் மழுப்படை வீரனைப் பார்த்தனை
டுடலு மற்றொழிலி னறவி ளைத்துமெதி
ரோடாது டற்றுகி ராதனைக் கூக்குரல்

விரிக டற்புடவி மூழுது ணச்சமையு
மோர்காலை கட்டுப்ர தாபனைக் கார்க்கடு
விடமெ டுத்தரிய திருமி டற்றிலிடு
காமாரி யைக்கவு மாரியைப் போற்றிரு
விழிமு னிற்கும்வடி வழகு டைக்கடவுண்
மாமோகி னிக்கும ணாளனைச் சூக்கும
வெளியி னிற்பரம நடந விற்றுதிறல்
வேளூர்வ யித்திய நாதனைப் போற்றுதும்

குரவு செச்சையொடு நறவு யிர்ப்பவிரி
தேனுறு வட்டெழு மார்பனைப் பேய்த்திரள்
குரவை யிட்டவுணர் தடிசு வைத்திடவொர்
கூர்வேல் விடுத்தகு மாரனைப் பார்ப்பதி
குமர னிச்சமரி லுருமு கக்குளிறு
காலாயு தக்கொடி யாளனைக் கோட்டிய
குறுந கைக்குமன முருக வெற்பவர்த
மாலைடு மற்பொரு தோளனைத் தாக்கிய

திரண்ம ருப்பினமர் பொருத னிக்கடவுண்
மால்யானை யைப்புணர் காளையைச் சாற்றிய
செழும றைப்பொருளி னுரைவி ரித்துமெனும்
வேதாமு டித்தலை மோதுகைக் காய்ப்பொடு
திருவ டித்துணையின் முடிப தித்தவடு
வாறுத மெய்ப்புக ழாளியைப் பூட்டிய
சிறைவி டுத்தமரர் குறைமு டித்துதவு
சேலுப திப்பெரு மாடனைக் காக்கவே.

(இ - ள்) குரவு - குராமலர், நிரைச்சையொடு-வெட்சி மலரோடு, நற உயிர்ப்ப - வாசனைவீச, விரி - விரிதலாலுண்டாகிய, தேன் ஆறு - தேன் யாறுனது, உவட்டெழு - பெருகியோடுதற் கிடமாகிய, மார்பனை - திரு மார்பை யுடையவனை, பேய்த்திரள் - அலகைக் கூட்டமானது, குரவை யிட்டு - குரவைக் கூத்தாடி, அவுணர்-இராக்கதருடைய, தடி-தசையை, சுவைத்திட - சுவைக்கும்படி, ஓர் - ஒப்பற்ற, கூர்வேல் விடுத்த - கூரிய வேற்படையை யேவின, குமரனை - குமாரக் கடவுளை, பார்ப்பதி குமரனை - பார்வதீ புத்திரனை, சமரில் - போர்க்களத்தில், உரும் உக - இடி யேறுகள் சிந்தும்படி, குளிறு - சத்திக்கிற, காலாயுதம் - சேவலாகிய, கொடியாளனை - கொடியையுடையவனை, கோட்டிய குறுநகைக்கு - செய்த புன்சிரிப்புக்கு, மனம் உருக - மன முருகும்படி, வெற்பவர் மானைடு - குன்றவர் பெண்ணைடு, மல் பொரு தோளனை - மற்போர் புரிந்த திருப்புயங்களையுடையவனை, தாக்கிய - இடித்த, திரள்மருப்பின் - திரண்ட கொம்பினால், அமர் பொரு - போர்செய்த, தனி - ஒப்பற்ற, மால் - பெரிய, கடவுள்யானையை - தெய்வயானையை, புணர் - சேர்ந்த, காளையை - வல்வந பருவமுடையவனை, சாற்றிய - சொல்லப்பட்ட, செழு மறைப்பொருளின் - செழிய வேதார்த்தத்தின், உரை - உரையை, விரித்தும் எனும் - விரித்துச் சொல்வோமென்ற, வேதா - பிரமனது, முடித் தலையில் - முடியணிந்த சிரத்தின்மீது, மோது - குட்டின, கை காய்ப் பொடு - கைத்தழும்பொடு, திருவடி தூணையில் - இரண்டு திருவடியில், முடிபதித்த - முடியழுத்தின, வடு - தழும்பானது, ஆறுத - தணியாத, மெய் புகழாளியை - உண்மையாகிய புகழையுடையவனை, பூட்டிய சிறை விடுத்து - அடைக்கப்பட்ட சிறையினின்றும் விடுவித்து, அமரர் - தேவர்களுடைய, குறை முடித்து உதவு - குறை தவிர்த்தருளின, சேனபதி பெருமாளை - சேனாபதியாகிய பெருமானை, காக்க - காக்கும் பொருட்டு, ஒருபுறத்து - ஒரு பக்கத்தில், மரகதம் இமைப்ப - மரகத மணி விளங்க, ஒளிர் - பிரகாசிக்கிற, மாமேரு - மகா மேருமலையானது, மற்றொரு மேருவைச் சாய்த்தென - வேறொரு மேருமலையைச் சாய்த் தாற்போல, உலகு அளக்க - உலகங்களை யளக்கும் பொருட்டு, நிமிர் - நிமிர்ந்த, வட பொருப்பை - வடமலையை, ஒரு தோளால் வளைத்த - ஒப் பற்ற திருத்தோளால் வளைத்த, பிநாகியை - பிநாகத்தை புடையவனை, தீ கனல் உமிழும் - தீக்கின்ற நெருப்பைக் கக்குகிற, மூக்குடுமி - மூத் தலையையுடைய, அயில் - சூலத்தை, திரித்து வரு - சுழற்றிவருகிற, வாய் வாள் - வாயிலொளியுள்ள, மழுப்படை வீரனை - மழுவாயுதத்தையுடைய வீரனை, பார்த்தனொடு - அருச்சுனனோடு, உடலும் - கோவித்தெதிர்ந்த, மல்தொழிலின் - மற்போரினால், அற இளைத்தும் - மிகமெலிந்தும், எதிர் ஓடாது - அவனெதிரே யோடாமல், உடன்று - கோவித்தெதிர்த்த, கிரா

தனை - வேடனை, கூக்குரல்விரி - ஒலிமிகுத்த, கடல் புவிமுழுவதும் - கடல் சூழ்ந்த வுலகமுழுதும், உண்ண சமையும் - உண்ண அமைந்த, ஓர் காளை - ஒருகாளை யெருதை, கட்டு - பிணித்த, பிரதாபனை-மகிமையுள்ள வனை, கார் கடு விடம் எடுத்து - கரிய கடுவிடத்தை யெடுத்து, அரிய - அருமையாகிய, திருமிடற்றில் இடு - திருமிடற்றி லடக்கிக்கொண்ட, காமாரியை - மன்மத சத்ருவை, கவுமாரியைப்போல் - பார்வதியைப் போல், திருவிழிமுன் நிற்கும்-திருக்கண்களுக் கெதிரே நிற்கின்ற, வடிவு அழகு உடை-சரீரசவுந்தரியமுள்ள, கடவுள்-தெய்வத்தன்மை யமைந்த, மா - பெருமை பொருந்திய, மோகினிக்கு மணாளனை - மோகினிக்கு நாயகனை, சூக்கும வெளியினில் - சூக்ஷ்மமாகிய சிதாகாயத்தில், பரமம் - மேன்மையாகிய, நடம்நவிற்று - நடனத்தைச் செய்கிற, திறல் - வெற்றியையுடைய, வேளூர் - வேளூரி லெழுந்தருளி யிருக்கிற, வயித்திய நாதனை - வைத்தியநாதன் என்னும் திருநாமத்தை யுடைய சிவபெருமானை, போற்றுதும் - போற்றுவோம் (யாம்). (எ - று)

மரகதம் - உவமையாகு பெயராய் உமாதேவியை யுணர்த்திற்று. வட பொருப்பு - மேருமலை. பிலுகி - பிலுகம் என்னும் வில்லையுடையவன். தீக்கனல் - எரித்தலையுடைய நெருப்பு எனினுமாம். புடவி முழுதுணச்சமையு மோர்காளை என்றது திருமாலை. காமாரி - (காமன் அரி) - காமனுக்குப் பகை. உரும் - இடி. காலில் முள்ளாகிய ஆயுதத்தையுடைய தாதலால் சேவலைக் 'காலாயுதம்' என்றார். "காலாயுதத்தைய னென்றெனை யேசொலுங் காசினியே," "பதவா யுதக்கொடி வேடாதை" என்றார் பிறரும். வெற்பவர்தம் மான் என்றது வள்ளிநாயகியாரை, இவரை மான் என்றது மான்வயிற்றிற் பிறந்தமைபற்றி யென்க. காளை - உவமையாகு பெயர். 'யானையைப் புணர் காளை' என்றது 'யானை யெருத்தைப் பொலிய' என்றாற்போல நகைவிளைப்பதோர் சொற்றொடர். மறைப்பொருள் - பிரணவம். அமரர் - இறவாதவர், கற்பத்திலிறக்குந் தேவரை அமரர் என்றது மங்கலவழக்கு. சேநாபதிப் பெருமாடனைக் காக்க, வேளூர் வயித்தியநாதனைப் போற்றுதும் (யாம்) என முடிக்க. (2)

தையனூயகியம்மை

வேறு

3. குழைய டர்ந்துவடி கணைது ரந்துசெறி
குமிழ்ம றிந்தவிழி நவ்வியைக் கோட்டொடு
குவடெ றிந்தமுத கலசம் வென்றதட
முலைசு மந்தமலை வல்லியைச் சேற்றெளிர்

குழுதம் விண்டசுவை, யமுத முண்டினிய
கொழுநர் கொஞ்சுசிறு கிள்ளையைத் தாட்டுணைக்
குறுகு தொண்டர்பிழை யறம றந்துபிறர்
குணமி கழ்ந்ததக வில்லியைச் சேட்செலும்
எழுபெ ரும்புவன முழுதொ ருங்குதவு
மிறைவி யென்றுமறை கையெடுத் தார்க்கவு
மிடைநு டங்குமட நடையி ளங்குமரி
யெனவி ருந்தகன கள்வியைப் பூத்தவென்
னிதய புண்டரிக மலரி லெந்தையொடு
மினித மர்ந்தவொரு செல்வியைப் பாற்றெரு
மிருவர் கண்கள்கது வரிய செஞ்சுடரி
னிடம ருங்குடைய தையலைப் போற்றுதும்
முழுது ணர்ந்துமுணர் வரிய தொன்றையொரு
மொழியின் விண்டசிறு பிள்ளையைச் சூர்ப்பெயர்
முதுப ழம்பகையை யறவெ றிந்தவுணர்
முதற டிந்ததனி வில்லியைப் பாட்டளி.
மூரல விண்டதரு நிழறெ ழும்புகுடி
புகவ ழங்குகொடை வள்ளலைப் போற்றடி
மூடியு மின்றிவெறு வெளிக டந்துமறை
முடிவி னின்றுநிறை செல்வனைக் காத்தொறும்
மழலை வண்டுதட மலர்கு டைந்துபுது
மதுவ ருந்திநறு மல்லிகைச் சேக்கையின்
வடிப சுந்தமிழி னிசைப யின்றபெடை
யொடுது யின்றினிய செவ்வழிப் பாட்டினை
வருவி பஞ்சிபயி றரும தங்கர்தெரு
மரமு ரன்றுநெடு வைகறைப் போய்ச்செழு
மலரி லஞ்சிதொறு முலவு கந்தபுரி
மருவு கந்தனையெ மையனைக் காக்கவே.

(இ - ள்) முழுது உணர்ந்தும் - முற்றுமறிந்தும், உணர் அரியது ஒன்றை - அறிதற்கரிதாகிய வொருபொருளை, ஒரு மொழியின் விண்ட - ஒரு சொல்லாற் சொல்லிய, சிறுபிள்ளையை - சிறியசேயை, சூர்பெயர் - சூர னென்னும் பெயரையுடைய, முது பழம் பகையை - முதுமையாகிய பழம்

பகைவனை, அற எறிந்த - முடியும்படிகொன்று, அவுணர் - இராக்கதரு டைய, முதல் தடிந்த - வேரைக்களைந்த, தனி வில்லியை - ஒப்பற்ற வில் லாளியை, பாட்டி அளி முரல - பாடல்களை வண்டுகள்பாட, விண்ட - மலர்ந்த, தருநிழல் - தருநிழலில், தொழும்பு - தொண்டர், குடிபுக - குடியேற, வழங்கு - வழங்கின, கொடைவள்ளலை - கொடையையுடைய வள்ளலை, போற்று - யாவரும் வழிபடுதற்குரிய, அடிமுடியும் இன்றி - ஆதியுமந்தமு மில்லாமல், வெறு வெளி கடந்து - வெட்டவெளியைத் தாண்டி, மறைமுடிவில் - வேதாந்தத்தில், நின்றநிறை - நிறைந்து நின்ற, செல்வனை - ஐசுவரியத்தை யுடையவனை, காதொறும் - சோலைதோறும், மழலை வண்டு - இளவண்டுகள், தடம் மலர் குடைந்து - தடாகமலர்களைத் தோண்டி, புதுமது அருந்தி - புதியதேனையுண்டு, நறுமல்லிகைச் சேக்கை யின் - நறியமல்லிகைமலர்ப் பள்ளியில், வடி பசுந் தமிழின் - வடித்த பசுந் தமிழின், இசைபயின்ற - இசையைப்பழகின, பெடையொடு துயின்று - பெடை வண்டுகளோடு தூங்கி, இனிய செவ்வழிப் பாட்டினை - இனி தாகிய செவ்வழிப் பண்ணை, வரு - வளர்கின்ற, விபஞ்சி - வீணைவாசித் தலை, பயில்தரு - பழகின, மதங்கர் - மதங்கரும், தெருமர - மயங்கும்படி, மூன்று - பாடி, நெடு வைகறை போய் - நீண்ட வைகறையி லெழுந்து சென்று, செழுமலர் - செழிய மலர்களையுடைய, இலஞ்சிதொறும் உலவு - குளந்தோறும் உலாவுகிற, கந்தபுரி மருவு - கந்தபுரியில் வாழ்கின்ற, கந்தனை - கந்தவேளை, எம் ஐயனை - எமதிறைவனை, காக்க - காக்கும் பொருட்டு, குழை அடர்ந்து - குழையை நெருங்கி, வடி கணை துரந்து - வடித்த அம்பைத் துரத்தி, செறி குமிழ் மறிந்த - நெருங்கின குமிழம் பூவைத் தடுத்த, விழி - கண்களையுடைய, நவ்வியை - பெண்மானை, கோட்டொடு - யானைக் கொம்புகளுடன், குவடு எறிந்து - மலைகளை வென்று, அமுத கல்சம் வென்ற - அமிர்த குடங்களை வென்ற, தட முலை சுமந்த - பெரிய தனங்களைத் தாங்கிய, மலை வல்லியை - மலையரையன் பெண்ணை, சேற்று - சேற்றில், ஒளிர் - விளங்குகின்ற, குமுதம் விண்ட - செவ்வல்லி மலர்ந்த, சுவை அமுதம் உண்டு - சுவையுள்ள தேனை யுண்டு, இனிய - இனிதாகிய, கொழுநர் - கணவர், கொஞ்சு - கொஞ்சுகிற, சிறுகிள்ளையை - இளங்கிளியை, தாள்துணை - திருவடித் துணையை, குறுகு - அடைந்த, தொண்டர் - அடியார்களுடைய, பிழை - குற்றங்களை, அற மறந்து - முற்றும் மறந்து, பிறர்குணம் - பிறருடைய குணங்களை, இகழ்ந்த - அவமதித்த, தகவு இல்லியை - தகுதியில்லா தவனை, சேண் செல்லும் - தூரத்தேயுள்ள, எழு பெரும் புவனம் - எழென் கிற பெரிய வுலகங்கள், முழுது ஒருங்கு உதவும் - முற்றும் ஒருங்கே யீன்ற, இறைவியென்று - தலைவியென்று, மறை - வேதங்கள், கை யெடுத்து ஆர்க்கவும் - கைகூப்பி வாழ்த்தவும், இடைதுடங்கும் - இடை

துவளா நின்ற, மடநடை - மந்தநடையை யுடைய, இளங் குமரியென இருந்த-இளங் குமரி யென்று சொல்லும்படியிருந்த, கன கள்வியை - பெரிய கள்வியை, பூத்த - மலர்ந்த, என் இதய புண்டரிக மலரில் - என இதய தாமரைமலரில், எந்தையொடும் - எமது தந்தையாகிய சிவபிரானோடும், இனிது அமர்ந்த - இனிதா யமர்ந்திருக்கிற, ஒரு செல்வியை - ஒப்பற்ற செல்வியை, பால்தொகும் - இருபுறத்துஞ் சேர்ந்திருக்கிற, இருவர் - பிரம விஷ்ணுக்களாகிய இருவருடைய, கண்கள் - கண்களால், கதுவு அரிய - பற்றப்படாத லருமையாகிய, செஞ்சுடரின் - செவ்வொளி யாகிய சிவபெருமானது, இடமருங்கு உடைய - இடப்பாகத்தையுடைய, தையலை - தையலாகியை, போற்றுதும் - வழிபடுவோம் (யாம்). (எ - று)

குழை - காதணி. வடிகணை - வினைத்தொகை நிலைத்தொடர். சூழ் - முதலாகுபெயர். கொழுநர் என்றது சிவபிரானை. தகவு-நடுவு நிலைமை. ஒருசெல்வி - எல்லாவுலகங்களையும், அவற்றிலுள்ள எல்லா வுயிர்களையும் தன்னவாக்கிக் கொண்டிருக்கும் பெருஞ் செல்வத்தை யுடையவள். தையல் - கைபுனையப்பட்டவள். முழுதுணர்ந்து முணர் வரியதொன்று என்றது 'உணர்ந்தார்க் குணர்வரியோன்' என்றாற் போல் வது. ஒருமொழி-பிரணவம். தொழும்பு-பண்பாகு பெயராய்த் தேவரை யும் அடியாரையுங் குறித்தது. இனித், தொழும்பர் என்பது அர் விகுதி குறைந்து நின்றது என்றலுமாம்; அரசு, அமைச்சு என்பன போல. இவர் குடி புகவென்றதனால் முறையே தாம்இழந்த விண்ணுட்டை மீட்டும் பெறவெனவும், இந்திரபதம் பெறவெனவும் பொருளுரைத்துக் கொள்க. வள்ளல்-பரமோதாரன் (பெருங்கொடையாளி). இலஞ்சி-மடவெனினு மாம். தையலாகி - பெண்ணரசி. ஆசிரியர் அம்மையாரது கண்ணழகி லீடுபட்டவ ரென்பதைக், 'குழையடர்ந்து வடிகணை தூரந்து செறிகுமிழ் மறிந்தவிழி' என்னுஞ் சொற்றொடரே புலப்படுத்தா நின்றது. குமுதம்-செவ்வல்லி, இங்கு இது, இதன் மலரையுணர்த்தினமையால் முதலாகு பெயராகவும், மலர் அதரத்தை யுணர்த்தினமையால் உவமையாகு பெய ராகவுங் கொள்ளக் கிடத்தலால் இருமடியாகுபெயர். கிள்ளை-உவமை யாகுபெயர். எல்லார்க்குமொப்பில்லாத அடியார்க்கும் அல்லார்க்கும் முறையே புலப்படலும் புலப்படாமையு முடைமையின், 'கனகள்வி' என்றார். கதுவல்-பற்றுதல். செஞ்சுடர் - சூரியனுக்கும் அக்கினிக்கும் பெயராதலால் சூரியன்போ லொளிவிடுவோனென்றும், நெருப்புருவாய் நிமிர்ந்தோ னென்றும் பொருளுரைத்துக் கொள்க. விபஞ்சி - வீணை. மதங்கர் என்பத னீற்றிலுயர்வுசிறப்பும்மை தொக்கது. மதங்கர்-பாணர். 'காத்தொறும் மழலைவண்டு தடமலர் குடைந்து புதுமதுவருந்தி நறுமல்லி கைச் சேக்கையின் வடிபசுந்தமிழி னிசை பயின்ற பெடையொடுதுயின்றி னிய செவ்வழிப்பாட்டினை வருவிபஞ்சி பயிறரு மதங்கர் தெருமர

முரன்று நெடுவைகறைப் போய்ச் செழுமல ரிலஞ்சிதொறு முலவு கந்த புரி மருவுகந்தன் என்றது 'இருஞ்சேற் றகல்வயல் விரிந்து வாய விழ்ந்த முட்டாட்டா மரைத்துஞ்சி வைகறைக் கட்கமழ்நெய்தலூதி யெற்படக் கண்போன் மலர்ந்த காமர் சுனை மலர் அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங் குன்றமர்ந் துறைதலு முரியன்' என்றுற் போல் வது. தம்போல்வாரையு முளப்படுத்தற்கு, 'எம்மையன்' என்றார். 'கந்த புரி மருவுகந்தனை யெம்மையனைக்காக, பாற்றொகும், இருவர் கண்கள் கதுவிய செஞ்சுடரினிட மருங்குடைய தையலைப் போற்றுதும்' என முடிக்க. (3)

கற்பக விநாயகர்

வேறு

4. கடாமுமிழ் கைக்கதக் கிம்புரிக் கோட்டொரு
கராசல மிட்டமெய்க் களுகிக் கேற்பவொர்
படாமணி மத்தகத் தந்தியைத் தீர்த்தர்கள்
பராவரு கற்பகக் கன்றினைப் போற்றுதும்
வடாதுபொ ருப்பினிற் றுன்றுபுத் தேட்கெதிர்
மலைய முற்றமெய்ப் பண்பினைக் காட்டிய
சடானன னைத்தலைச் சங்கம்வைத் தாற்றிய
சடாயுபு ரத்தருட் கந்தனைக் காக்கவே.

(இ - ள்) வடாது பொருப்பினில் - வடமலையில், துன்று - எழுந் தருளிய, புத்தேட்கு எதிர் - சிவபிரானுக்கெதிரே, மலையம் உற்ற - மனோநாசத்தை யடைதற் கேதுவாகிய, மெய் பண்பினை - உண்மை நிலையை, காட்டிய - அறிவித்த, சடானனனை - அறுமுகனை, தலைச் சங்கம்வைத்து ஆற்றிய - முதற்சங்கத்தைத் தாபித்து நிர்வகித்த, சடாயுபுரத்து - சடாயுபுரத்தி லெழுந்தருளி யிருக்கிற, அருள் - அருட் பெருக்கையுடைய, கந்தனை - கந்தவேளை, காக்க - காக்கும்பொருட்டு, கடாம் உமிழ் - மதநீரையுமிழ்கின்ற, கை - துதிக்கையினையும், கதம் - கோவத்தினையும், கிம்புரி - பூணணிந்த, கோடு - கொம்பினையு முடைய, ஒருகர அசலம் - ஒரு கைம்மலையானது, இட்ட - கொடுத்த, மெய் கஞ்சு கிக்கு ஏற்ப - சரீரசட்டைக்கேற்க, ஓர்படாம் அணி - ஒப்பற்ற முகபடா மணிந்த, மத்தகம் - மத்தகத்தையுடைய, தந்தியை - யானையை, தீர்த்தர் கள் - பரிசுத்தான்மாக்கள், பராவு - வழிபடற் குரிய, அரு - அருமை யாகிய, கற்பகக்கன்றினை - கற்பகவிநாயகரை, போற்றுதும் - வழிபடு வோம் (யாம்). (எ - ஓ)

வடாது பொருப்பு - மேருமலை. புத்தேள் - தேவன். மலையை முற்ற மெய்ப்பண்பு - பிரணவார்த்தோபதேசம். சடாயு பூசித்துய்ந்ததல மாதலால் இதற்குச் சடாயுபுரமெனப் பெயர்வாய்த்தது. கைம்மலை - யானை. ஈண்டிது கயாசுரனைக் குறித்தது. கஞ்சுகம்-சட்டை (போர்வை). தீர்த்தர்கள் - தேவர்கள் எனினுமாம். கற்பகக்கன்று என்பது இத் தலத்தி லெழுந்தருளிய கற்பகவிநாயகரை யுணர்த்திற்று. 'சடாயு புரத் தருட் கந்தனைக்காக்க, கற்பகக் கன்றினைப் போற்றுதும்' என முடித் துக்கொள்க. (4)

பிரமன்

ஆசிரிய விருத்தம்

5. பைங்காய்க் கமுகு செம்பழுக்காய்ப்
பவள முதிர்ப்பக் கதிர்ச்செந்நெல்
பனிமுத் துகுக்குஞ் சோணாட்டின்
பரிசு பாடி ஞிமிறிரப்பக்

கொங்கார்த் திறைக்கு நறைக்காந்தள்
குறிஞ்சி மலரோ டணிந்தநறுங்
குஞ்சிப் பெருமாள் வேதபுரிக்
குமரப் பெருமா னனைக்காக்க

செங்காற் கருங்கட் பைந்தொடியார்
சிற்றூர்ப் பாடிப் பெருங்குடியிற்
றீம்பா றிருடிக் கட்டுண்டு
திரியா வண்ணந் திருத்தாதைக்

கங்காப் படங்கப் பாறயிர்நெ
யருந்தேன் கடலோ டிருந்துண்ண
வகிலம் படைத்துத் தனக்கேற
வன்னம் படைத்த பெருமாளே.

(இ - ள்) செங்கால்-செவந்த காலையும், கருங்கண்-கரிய கண்ணினை யும், பைந்தொடியார்-பசிய வளையலையுமுடைய ஆய்ச் சிறுமியர் வாழ் கின்ற, சிறு ஆய்ப்பாடி-சிறிய ஆய்ப்பாடியிலுள்ள, பெருங்குடியில் - பெருங்குடியிலே, தீம் பால் திருடி - இனிமையாகிய பாலைத் திருடி, கட் டுண்டு - கட்டுப்பட்டு, திரியாவண்ணம் - திரியாதபடி, திருத்தாதைக்கு

தன் திருத்தந்தையார்க்கு, அங்காப்பு அடங்க - வாய்திறத்த லில்லையாக, பால் தயிர் நெய் அருதேன் - பால் தயிர் நெய் அரியதேன் (என்ப வற்றை), கடலோடு - கடலுடனே, இருந்து உண்ண - இருந்துண்ணும் படி, அகிலம் படைத்து - உலகத்தைச் சிருட்டிசெய்து, தனக்கு ஏற - தனக்கேறும் பொருட்டு, அன்னம் படைத்த - அன்னத்தைப் படைத்துக் கொண்ட, பெருமாள் - பெருமையை யுடையவனுகிய பிரமன், பைகாய் கமுகு-பசுங்காயையுடைய கமுகங்கள், செம்பழுக்காய்-செவந்த பழுத்த காய்களாகிய, பவளம் உதிர்ப்ப - பவளங்களே யுதிர்க்க, கதிர் செந்நெல் - செந்நெற் கதிர்கள், பனிமுத்து உகுக்கும் - குளிர்ச்சியாகிய முத்துக் களைச் சிந்துகிற, சோணாட்டின் - சோழநாட்டினது, பரிசுபாடி - பெருந் தன்மையை யெடுத்துப் பாடி, ஞிமிறு இரப்ப - பொன்வண்டுகள் யாசிக்க, கொங்கு ஆர்ந்து இறைக்கும் - தேன் நிறைத்து இறைக்கிற, நறை - வாசனையுள்ள, காந்தள் - காந்தள் மலர்களே, குறிஞ்சி மலரோடு - குறிஞ்சி மலர்களுடனே, அணிந்த - தரித்துக்கொண்ட, குஞ்சி - ஆண் மயிரையுடைய, பெருமாள் - பெருமாளும், வேதபுரி - வேதபுரியில் வாழ் கின்ற, குமரப்பெருமாள்தனை - குமரப்பெருமாளு மாகிய முருகனை, காக்க - காக்கக்கடவன். (எ - று)

செந்நெற்கதிரில் முத்துண்டாத லியல்பாதலால், 'கதிர்ச் செந் நெல் பனி முத்துதிர்க்கும்' என்றார். செந்நெற்கதிரில் முத்துண்டா தலை, "தந்திவராக மருப்பிப்பி பூகந் தனிக்கதலி, நந்து சலஞ்சல மீன்றலை கொக்குநளின மின்னர், கந்தரஞ்சா லிகழை கன்னலாவின்பல் கட்செவிகார், இந்துவுடும்புகரா முத்தமீனு மிருபதுமே," "கயல்கொக் குடும்பின் சிரசுகளுங் கரிக்கோ டேனமுடக்கோடுங், கழையுங் கரும்புங் கமுகினமுங் கதலிசாலி கடிக்கமலம், புயனத் தாதிரு முத்தம்புனலிற் கனலிற் புடவியினிற், பொன்றும் பொதியிற் கேழொளிபோம் பொருந் தும் வீலையுண்டவை வேண்டேம், இயல்புற்றிறுன்று னழிவிலதா யென்றும் புதுமைதரு மொளியா, யெவர்க்கு மதிக்க வரிதாகியிருந்து மிகுந்த மதுரமெலாம், முயல்வுற்றளிக்கு நின்கனிவாய் முத்தந்தருக முத்தமே, முருந்தன்மருகா சமரபுரிமுருகா முத்தந் தருகவே" என்றற் றொடக்கத்துச் செய்யுட்களானுணர்க. கமுகு பவளத்தையும், செந்நெல் முத்தினையும், உதிர்த்தலும் உகுத்தலுஞ் செய்யுமாயின், அந்நாட்டிலுள்ள மாந்தரது ஔதாரியஞ் சொல்ல வேண்டாதாயிற்று. ஆதலால், 'சோணாட்டின் பரிசுபாடி ஞிமிறிரப்ப' என்றார். ஞிமிறு சோணாட்டின் பரிசுபாடி யென்றமையால் புலவர் பாடுதல் சொல்லாதே யமையும். குறிஞ்சிமலர் - மருதோன்றி மலர். குஞ்சி - சிகை. வேதங்கள் பூசித்த தலமாதலால், 'வேதபுரி' யென வழங்கும். தீம்பால் என்பதில் தீம்-சாதி யடை. திருத்தாதை யென்றது திருமாலை. ஓடு இசைநிறையாகக் கொண்டு

பாற்கடல் முதலியவற்றையென் றுரைத்தலுமாம். அகிலம்-எல்லாம் என்றலு மொன்று. தோன்றி யழிதன் மாலேத்தாகிய வுலகத்தை அகிலம் என்றது மங்கலவழக்கு. அன்னம் - சோறு. தந்தைக்குப் பருகுவன அளித்துத் தனக்குண்பதை யமைத்துக்கொண்டான் என்ன பாவம். அகிலம் படைத்த பெருமாள், குமரப்பெருமாடனைக் காக்க என முடித்துக்கொள்க. (5)

தேவேந்திரன்

வேறு

6. காலுறு கற்பகக் காவுமூ வுலகுமக்
காவென நிழற்றுமொற்றைக்
கவிகையுங் குணதிசைக் காவலும் பிறவுமுள
காணியுங் காணியாக

வானுறு கோட்டிமய மலைவயிறு வாய்த்ததலை
மகளுக்கு மணமகற்கும்
மருமகளை யுரியதன் றிருமக ளெனப்பெற்ற
மாமடிக ளேத்துதிப்பாம்

பானுறு செந்நெற் பசுங்கதிர் கறித்துமென்
பைங்குவளை வாய்குதட்டும்
பணைமருப் பெருமைமடு மடிமடை திறந்ததீம்
பாலாறு பங்கயச்செந்

தேனுறு டன்கடவுள் வான் றெனப்பெருகு
சித்தாமிர் தஞ்சிவபிரான்
சீர்த்திப்ர தாபநிகர் தினகர புரித்தேவ
தேவனைக் காக்கவென்றே.

(இ - ள்) பால் நாறு - பால் பிடித்த, செந்நெல் - செந்நெல்லின், பசுங்கதிர் கறித்து - பசிய கதிர்களைக் கறித்து, மெல் - மிருதுவாகிய, பைங்குவளை - பசிய குவளைமலர்களை, வாய் குதட்டும் - வாயினால் மெல்லுகிற, பணை மருப்பு - பருத்த கொம்புகளையுடைய, எருமை - எருமைகள், மடி மடு மடைதிறந்த - தமது மடிகளாகிய மடுக்களைத் திறந்ததனாலுண்டாகிய, தீம் பால் ஆறு-இனிய பால்யாறுனது, பங்கயச் செந்தேன் ஆறுடன் - தாமரை மலர்களினின்றும் பெருகுகிற செந்தேனாறுகளோடு, கடவுள் - தெய்வத்தன்மையுள்ள, வான் ஆறு என பெருகு - ஆகாய கங்கைபோலப் பெருகுகிற, சித்தாமிர்தம் - சித்தாமிர்த தீர்த்தமானது, சிவபிரான் - சிவபெருமானது, கீர்த்திப் பிரதாபம் நிகர் - கீர்த்திப் பிரதாபத்தை நிகர்த்த, தினகரபுரி - தினகரபுரியிலுள்ள, தேவதேவனை -

தேவ தேவனுகிய கந்தவேளே, காக்கவென்று - காக்கவேண்டுமென்று, கான் நாறு - வாசனை வீசுகிற, கற்பகக் காவும் - கற்பகச்சோலையும், மூவுல கும் - மூன்றுலகங்களும், அ - அந்த, கா என - கற்பகச் சோலைபோல, நிழற்றும் - நிழலைச் செய்கிற, ஒற்றைக் கவிகையும் - தனியாகிய கொற் றக்குடையும், குணதிசைக் காவலும் - கீழ்த்திசைக் காவலும், பிறவும் உள்ள - பிறவுமாயுள்ள, காணியும் - இடமும், காணி ஆக - காணியாட்சி யாக, வான் நாறு - ஆகாயத்தை யளாவுகிற, கோடு - சிகரங்களையுடைய, இமயமலை வயிறு வாய்த்த - இமயமலையிற் பிறந்த, தலைமகளுக்கும் - மூத்தமகளுக்கும், மணமகற்கும் - அவளது கணவனுக்கும், மருமகளே - மருமகளாகிய தெய்வயானையை, உரிய - உரிமையாகிய, தன் திருமகள் என பெற்ற - தனது திருமகளாகப் பெற்ற, மாமடிகளே துதிப்பாம் - மாம னுகிய அடிகளைத் தோத்திரம் பண்ணுவோம் (யாம்). (எ - று)

இமயமலை வயிறுவாய்த்த தலைமகள் - பார்வதி. மணமகன் - சிவபெரு மான். தெய்வயானையார் கந்தவேளுக்கு மனைவியாதலும், இந்திரனுக்கு மகளாதலும், பார்வதி பரமேச்சுரருக்கு மருமகளாதலும், கானுறு கற்பகக் காவும் எனத் தொடங்கி மாமடிகளைத் துதிப்பாம் என் முடித்த சொற்றொ டர்களா லினிதுணரக்கிடந்தன. கறித்தல் - கடித்தல். பணைமருப்பு - வினைத் தொகை நிலைத்தொடர். பணையென்பதை முதனிலைத் தொழிற் பெய ராக்கிப் பணைத்தலையுடைய என இரண்டனுருபும் பயனும் முடன் றொக்க தொகையாக்கினுமாம். மாமடிகள் என்றது இந்திரனை. பெண்ணைக் கொடுத்த மாமனை மாமடிகள் என்றன் மரபு. சித்தாமிர்தம் - கோயிலுக் குள் அம்பிகையின் சந்நிதிக்கு முன்னுள்ள விசேட தீர்த்தம்; திருக ரபுரி - திருகரனுற் பூசிக்கப்பெற்ற தலம்; தினகரன் - சூரியன். திருகரபுரித் தேவதேவனைக் காக்கவென்று மாமடிகளைத் துதிப்பாம் என முடித்துக் கொள்க. (6)

திருமகள்

7. மானிறக் கடவுடிரு மறுமார்பி னறவிரி
வனத்துழாய்க் காடுமூடி
மாயிருள் வழங்குதன் றிருமாளி கைக்கந்தண்
மணிவிளக் கிட்டுமுட்டாட்

கானிறைக் குங்கமல வீட்டுக்கு நெட்டிதழ்க்
கதவந் திறந்தளித்தும்
காதன்மை காட்டுங் கவுத்துவத் துடன்வந்த
கன்னிகையை யஞ்சலிப்பாம்

மீனிறப் புணரியை விழுங்குங் கடற்றூனை
வெள்ளமொடு கள்ளமனமும்
மெய்யுமிரு ளத்திரளு மவுணக் கருங்கங்குல்
விடியக் கடுங்குரல்விடும்
தீநிறக் குடுமிவெண் சேவலை யுயர்த்துவண்
சிறைமயிற் பரிநடாத்தும்
சேவகப் பெருமாளை வேதபுரி வருமிளஞ்
சேயைப் புரக்கவென்றே.

(இ - ள்) மீன்நிறம் புணரியை - மீன்மயமாகிய கடலை, விழுங்கும் - அடக்குகிற, கடல் - வேறொரு கடல்போன்ற, தானைவெள்ளமொடு - சேனைப்பெருக்கோடு, கள்ளம் - வஞ்சகத்தோடு கூடிய, மனமும் - தமது மன்மும், மெய்யும் - உடம்பும், இருள - இருண்டிருக்க, திரளும் - திரண்டுவருகிற, அவுணர் - இராக்கதராகிய, கரு கங்குல் விடிய - கரிய இரவானது விடியும்படி, கடுங் குரல்விடும் - கடுங்குரலெடுத்துக் கூவுகிற, தீநிறம்குடுமி - நெருப்பு நிறமாகிய உச்சிக்கொண்டையையுடைய, வெண் சேவலை - வெள்ளைச்சேவலை, உயர்த்து - உயரவெடுத்து, வண்சிறை - வளவிய சிறைகளையுடைய, மயில்பரி நடாத்தும் - மயில்வாகனத்தைச் செலுத்துகிற, சேவகப்பெருமாளை - வீரனாகிய பெருமானை, வேதபுரி வரும் - வேதபுரியில் எழுந்தருளின, இளஞ்சேயை - இளஞ்சேயினை, புரக்கவென்று - காக்கவென்று, மால் நிறம் - மேகநிறத்தையுடைய, கடவுள் - தெய்வத்தின், திரு மறு மார்பில் - அழகிய மறுவமைந்த மார் பின்கண், நறவிரி - வாசனையோடு மலர்கின்ற, வனம் துழாய்க்காடு மூடி - அழகாகிய துளவக்காட்டினால் மூடப்பெற்று, மா இருள்வழங்கு - யேரிருளடர்ந்த, தன் திருமாளிகைக்கு - தனது திருமாளிகைக்கு, அம் தண் - அழகும் தட்பமுமுள்ள, மணிவிளக்கு இட்டு - மணிவிளக்கேற்றியும், முள்தாள் - முள்ளோடு கூடிய நாளத்தையுடையதாய், கான் நிறைக்கும் - வாசனையை நிரப்புகிற, கமலம் வீட்டுக்கு - தாமரைமலராகிய வீட்டுக்கு, நெடு இதழ் கதவம் - நீண்ட இதழ்களாகிய கதவை, திறந்து அளித்தும் - திறந்து கொடுத்தும், காதன்மை காட்டும் - தன்து அன்புடைமையைக் காட்டுகிற, கவுத்துவத்துடன் வந்த - கௌஸ்துபமணியோடு தோன்றின, கன்னிகையை - திருமகளை, அஞ்சலிப்பாம் - கைகூப்பி வணங்குவோம் (யாம்). (எ - று)

மால் - மேகம். மாணிறக்கடவுள் - கொண்டல் வண்ணனாகிய திருமால். மறு - உத்தமலக்ஷணமாகிய வோர் மறு, இது திருமாலின் மார்பிலிருப்பது, இதனை ஸ்ரீ வத்ஸம் என்பர் வடநூலார். மணிவிளக்கு-

ரத்நதீபம், இதுகௌஸ்துப மணியைக்குறித்தது. கவுத்துவத்துடன் வந்த கன்னிகை யென்பது ஒருசொன்னீர்மைத்து. காட்டும் என்னும் பெயரெச்சம் இவ்வொரு சொன்னீர்ப் பெயரைக்கொண்டு முடிந்தது. இது திருமகளே யுணர்த்திற்று. கவுத்துவத்துடன் வந்த கன்னிகை யென்றமையானே கவுத்துவத் தோற்றம் முன்னென்பதும், திருமகடோற்றம் பின்னென்பதும் பெறப்பட்டன. மீனிறப்புணரியை விழுங்குங்கடற்றூனே வெள்ளம் என்றமையான், சேனையின் மிகுதிபெறப்பட்டது. குரல்விடுதல் - கூவுதல். கோழி கூவுதல் விடிவுக்குறியாதலால், 'அவுணக்கருங் கங்குல் விடியக் கடுங்குரல்விடுந்நிறக்குடுமி வெண்சேவல்' என்றார். உயர்த்தல் - கொடியாக எடுத்தல். நெடுங்காலம் விடியாதிருந்த தென்றற்கு, 'அவுணக்கருங் கங்குல்விடிய' என்றார். 'வேதபுரிவருமிளஞ் சேயைப் புரக்கவென்று கவுத்துவத்துடன் வந்த கன்னிகையை யஞ்சலிப்பாம்' என முடித்துக்கொள்க. (7)

கலமகள்

8. துறைபட்ட மறையவன் செந்நாப் படிந்துதன்
சுதைநிறஞ் சிதைவுறுமே
தொன்மறை கனிந்தூறு *மன்பனீ ரூறலிற்
றூத்துகி னனைப்புறுமே
நறைபட்ட வெண்டோட்டு நளினப் பொகுட்டெமது
நன்னெஞ் செனக்குடிபுகும்
ஞானப் பிராட்டியைச் சொற்கடற் றெள்ளமுதை
நாத்தழும் பத்துதிப்பாம்
சிறைபட்ட தண்டுறைச் சித்தாமிர் தப்பெருந்
தீர்த்தந் திளைத்தாடிய
செஞ்சுடர்க் கடவுளும் வெண்சுடர்க் கடவுளிற்
றெள்ளமுத மயமாகலான்
உறைபட்ட சுதைநிலவொ டிளவெயிலு மளவளாய்
உண்ணச் சகோரம்வெஃகும்
ஓங்கெயிற் பரிதிபுரி முருகனைச் சண்முகத்
தொருவனைக் காக்கவென்றே.

(இ - ள்) சிறைபட்ட - சிறைசெய்யப்பட்ட, தண் துறை - குளிர்ந்த துறையையுடைய, சித்தாமிர்தம் - சித்தாமிர்தம் என்னும் பெயரை

* அண்பனீர் என்றும் பாடம்.

யுடைய, பெருதீர்த்தம்-பெரியதீர்த்தத்தில், திளைத்தாடிய - மூழ்கின, செஞ்சுடர் கடவுளும் - சூரியனும், வெண்சுடர் கடவுளும் - சந்திரனும், தெள் அமுதமயம் ஆகலான் - தெளிவாகிய அமிர்தவுருவாதலால், உறை பட்ட - துளித்தலைப் பொருந்திய, சுதை நிலவொடு-அமுதகிரணத்தோடு, இளவெயிலும் அளவளாய்-இளவெயிலுங்கலந்து, சகோரம்-சகோரப்புட்கள், உண்ண வெஃகும் - உண்ண விரும்புகிற, ஓங்கு எயில் - உயர்ந்த மதிலையுடைய, பரிதிபுரி - பரிதிபுரியிலெழுந்தருளிய, முருகனே - முருகவேளே, சண் முகத்து ஒருவனே - ஆறு திருமுகங்களையுடைய ஒப்பற்ற வனே, காக்கவென்று - காக்கவேண்டுமென்று, துறைபட்ட - பலதுறைகள் பொருந்திய, மறையவன் - வேதங்களை யுடையவனுகிய பிரமனது, செந்நா படிந்து - சிவந்த நாவிற்படிந்து, தன்-தனது, சுதைநிறம் - வெண்ணிறம், சிதைவு உறுமே - அழியாமலும், தொல் மறை - பழமையாகிய வேதங்கள், கனிந்து ஊறும் - முதிர்ந்து சுரக்கிற, மன் - மிகுதியாகிய, பல் நீர் ஊறலின் - பல் நீர் சுரத்தலால், தூ துகில்-வெள்ளாடை, நனைப்பு உறுமே - நனைவையடையாமலும், நறைபட்ட - வாசனைபொருந்திய, வெள்தோட்டு - வெள்ளிதழ்களை யுடைய, நளினம் பொகுட்டு - தாமரைப் பொகுட்டில், எமது நல்நெஞ்சு என - எமது நன்மனத்திற்போல, குடிபுகும் - குடிபுகாநின்ற, ஞானப்பிராட்டியை - ஞானநாயகியை, சொல் கடல் - கலைக்கடலிற் றோன்றிய, தெள் அமுதை - தெளிவாகிய அமிர்தத்தை, நா தழும்ப - நாவில் தழும்பேறும்படி, துதிப்பாம் - தோத்திரம் பண்ணுவோம் (யாம்). (எ - று)

துறை - பலபொருட்டிறைகள், அவை அறமுதலாயின. பட்ட - மறையினை விசேடித்த பெயரெச்சம். செந்நா - செவ்வியநா, (நடுவு நிலை நிலைபெற்ற நா). அண்பனீர் என்பதற்குத் தன் கணவனுகிய பிரமனது அண்பல்லினீர் என்றுரைப்பினுமாம். வெண்டோட்டு நளிநம் - வெண்டாமரைமலர். பொகுட்டு-கொட்டை, இதனைக்கர்ணிகை யென்பர் வடநூலார். பிராட்டி - உபகாரகுண முள்ளவள். இதற்கு ஆண்பாற் பெயர் பிரான். திருமகளைப் பாற்கடற் றெள்ளமுது என்றல்போல இவளைச் 'சொற்கடற் றெள்ளமுது' என்றார். மிகுதியாய்த் துதிப்போமென்றற்கு நாத்தழும்பத்துதிப்பாம் என்றார். சித்தாமிர்தம் - சித்தர்கள் வைத்தியநாதப் பொருமானைப் பாராட்டிய தேவாமிர்த கலப்புடையதாகலின் ''அமுதமயம்'' என்றார். சூரியன் வழிபட்டெய்ந்த தலமாதலால் இதற்குப் பரிதிபுரியென்னும் பெயர் வழங்கும். சகோரம்-நிலாமுகிப்புள். இது சந்திரகிரணத்தையே யுண்டியிர் வாழ்வது. (சக்கரவாகம் - சூரியகிரணத்தையே யுண்டியிர் வாழ்வ தென்க.) 'சண்முகத் தொருவனைக் காக்கவென்று சொற்கடற் றெள்ளமுதை நாத்தழும்பத் துதிப்பாம்' என முடித்துக் கொள்க. (8)

சத்தமாதர்கள்

(சந்த விருத்தம்)

9. பயிறரு மூதுமறை நூலைத் தெரித்தவள்
பகைதொகு புரமெரி மூளச் சிரித்தவள்
பணிவரை பகநெடு வேலைப் பணித்தவள்
படுகடல் புகையெழ வார்விற் குனித்தவள்

எயிறுகொ டுழுதெழு பாரைப் பெயர்த்தவள்
எறிதரு குலிசம்வி டாமற் றரித்தவள்
இடுபலி கொளுமொர்க பாலக் கரத்தினள்
எனுமிவ ரெழுவர்க டாளைப் பழிச்சுதுங்

கயறிரி சரவண வாவிக் கரைக்குரை
கழலொடு பரிபுர மோலிட் டிடக்கட
களிரொடு களிறெதிர் மோதத் திசைத்திசை
கடுநடை யுளதக ரேறச் சமர்த்தனே

முயறரு கறையொடு தேய்வுற் றிளைத்தொரு
முழுமதி குறைமதி யாகத் துகிற்கொடி
முகிலொடு தடமதில் வேதப் பதித்தனி
முதல்வனை யறுமுக வேளைப் புரக்கவே.

(இ - ள்) கயல்திரி - கயல்கள் சஞ்சரிக்கிற, சரவண வாவி கரை - சரவணப்பொய்கைக்கரையில், குரைகழலொடு-ஒலிக்கின்றகழலுடனே, பரிபுரம் ஒலிட்டிட - நூபுரங்கள் சத்திக்க, கடகளிரொடு களிறு - மத யானையோடு மதயானை, எதிர்மோத - எதிரெதிர்தாக்க, திசை திசை - திக்குகள்தோறும், கடுநடை உள்ள - வேகமாகிய நடையுள்ள, தகர் ஏற - ஆட்டுக்கடாவின் மீதேற, சமர்த்தனே - வல்லமை யுள்ளவனே, முயல்தரு கறையொடு - முயற் கறையுடனே, தேய்வுற்று - தேய்ந்து, இளைத்து - மெலிந்து, ஒரு முழுமதி - ஒப்பற்ற பூர்ண சந்திரன், குறை மதி ஆக - குறைச்சந்திரனுகும்படி, துகில்கொடி - கொடியாடைகள், முகில்தொடு - மேகத்தைத் தீண்டுகிற, தடமதில் - பெரியமதில் சூழ்ந்த, வேதப்பதி - வேதபுரியில் வாழ்கின்ற, தனி முதல்வனே - ஒப்பற்ற முதல்வனே, அறுமுகவேளை - ஆறுமுகங்களையுடைய கந்தனே, புரக்க - காக்கும்பொருட்டு, பயில்தரு - பழகுதற்குரிய, முது மறைநூலை - பழைய வேதநூலை, தெரித்தவள் - உணர்த்தினவள் (அபிராமி), பகைதொகு -

பகைகளாகக் கூடின, புரம் - மும்புரங்களில், எரிமூள - நெருப்பு மூண்டெரியும்படி, சிரித்தவள் - நகைத்தவள் (மாகேசுவரி), பனிவரை பக - பனிதவழ்கின்ற கிரௌஞ்சகிரியானது பிளக்கும்படி, நெடுவேலப் பணித்தவள் - நெடிய வேற்படையை யேவினவள் (கௌமாரி), படு கடல் - ஒலிக்கின்ற கடலில், புகையெழ - புகையெழும்படி, வார்வில் குனித்தவள் - நெடியவில்லை வளைத்தவள் (நாராயணி), எயிறு கொடு உழுது - கொம்பினால் தோண்டி, எழுபாரை பெயர்த்தவள் - எழுலகங் களையும் பேர்த்தவள் (வராகி), எறி தரு குலிசம் - எறிதற்குரிய வச்சிரப் படையை, விடாமல் தரித்தவள் - இடையறாது தரித்திருப்பவள் (இந்திராணி), இடபலிகொள்ளும் - இடப்படுகிற பலியேற்கிற, ஓர் கபாலக் கரத்தினள் - ஒப்பற்ற கபாலத்தை யேந்திய கையையுடையவள் (காளி), என்னும் - என்று சொல்லப்படுகிற, இவர் எழுவர்கள் - இவ ரெழுவருடைய, தாளை - திருவடிகளை, பழிச்சுதும்-துதிப்போம் (யாம்) (எ - று).

முயற்கறை - முயற்களங்கம் ; இது சந்திரனிடத்துள்ளது, மான் களங்கமென்பாருமுளர் ; முயற்களங்க முடைமையால் சசாங்கனென் றும், மான்களங்க முண்மையால் ஏணங்க னென்றும் கூறுவர் வட நூலார் ; இவற்றுள் முன்னையதற்கு முயலைத் தன் இடுப்பின்மீது வைத் திருப்பவனென்பதும், பின்னையதற்கு மானைத் தன் இடுப்பின்மீது வைத்திருப்பவ னென்பதும் பொருள். சசம் - முயல், ஏணம் - மான், அங்கம்-(இடுப்பு). வேதங்களாற் பூசிக்கப்பட்டமையால் இத் தலத்திற்கு வேதப்பதி யென்னும் பெயர் வாய்ந்தது. அநாதியாதலால் வேதத்தை முதுமறை யென்றார். நெடுவேலப் பணித்தவள் என்ற குறிப்பால் பனிவரை கிரவுஞ்ச மலையைக் குறித்தது. வேள் மன்மதனுக்கும் பெய ராதலால் அவனை வேறு படுத்தற்கு அறுமுகவேள் என்றார் அறுமுக வேளைப் புரக்க, எழுவர்கள் தாளைப் பழிச்சுதும் என முடித்துக் கொள்க. (9)

முப்பத்துமுக்கோடி தேவர்கள்

வேறு

10. முறுக்குடை நறைச்சத தளத்திரு மலர்த்தவிசு
சொர்க்கத் தலத்தோடு சேஷசய னத்தையும்
மூடித்தலை யடித்தலை பதித்தெதிர் துதித்தவர்த
மக்குக் கொடுத்தானை மாதிரமொ ரெட்டையும்

இறைப்பொழு தினிற்பொடி படுத்தருள் கொடுக்கவல
சத்திக் கரத்தானை யூதியமெ னத்தனை

இருப்பினு நடப்பினு நினைப்பவ ரிருக்கவெமர்
சித்தத் திருப்பானை யாறிரு புயத்தனை
வெறுப்பொடு விருப்பினை யறுத்தவ ருளத்துமலர்
பத்மப் பதத்தானை வேதபுரி யிற்கினை
விடைக்கொடி வலத்தினு மடக்கொடி யிடத்துமுள
முக்கட் டிருத்தாதை யார்பணி குருக்களை
மறைக்கிழ வனைத்தலை புடைத்துல கனைத்தினையும்
ஒக்கப் படைத்தானை மூவிரு முகத்தனை
மருத்துவர் வசுக்கதி ருருத்திர ரெனப்பொலியு
மூப்பத் துமுக்கோடி தேவர்கள் புரக்கவே.

(இ - ள்) முறுக்கு உடை - முறுக்கவிழ்ந்த, நறை - வாசனையுள்ள, சததளம் - நூற்றிதழ்களையுடைய, திருமலர்த்தவிசு - அழகிய தாமரை மலர்ப்பீடத்தையும், சொர்க்கத்தலத்தோடு - சுவர்க்கலோகத்தோடு, சேஷ சயனத்தையும் - அநந்த சயனத்தையும், முடிதலை - தமது முடித்தலைகளை, அடித்தலை பதித்தவர் தமக்கு - தன் திருவடியிற் பதித்தவர்களுக்கு, கொடுத்தானை - அருள் செய்தவனை, மாதிரம் ஓர் எட்டையும் - அஷ்ட திசைகளையும், இறைப்பொழுதினில்-கொஞ்ச நேரத்தில், பொடிபடுத்து - நீறுசெய்து, அருள் கொடுக்கவல்ல - அருள் செய்யவல்ல, சத்திக் காத்தானை - வேற் கையனை, தனை - தன்னை, ஊதியம் என - பெரும்பேறாக, இருப்பினும் நடப்பினும்-இருந்தாலும் நடந்தாலும், நினைப்பவர் இருக்க - கருதுவோரிருக்க, எமர் சித்தத்து இருப்பானை - எம்போல்வார் மனத்தி லிருப்பவனை, ஆறு இரு புயத்தனை - பன்னிருதோளனை, வெறுப்பொடு விருப்பினை - வெகுளிவிழைவுகளை, அறுத்தவர் - அறுத்தவரது, உள் ளத்து - மனத்தின்கண், மலர் - மலர்கின்ற, பத்மம் பதத்தானை - கமல பாதனை, வேதபுரியில் - வேதபுரியின்கண், சினம் - கோபத்தையுடைய, விடைக்கொடி - இடபக்கொடியை, வலத்தினும் - வலப்புறத்திலும், மடக்கொடி - மடக்கொடியை, இடத்தும் - இடப்புறத்திலும், உள்ள - அமைத்துள்ள, முக்கண் - மூன்று கண்களையுடைய, திருத்தாதையார் - திருத்தந்தையாராகிய சிவபிரானுர், பணி - வணங்குதற்குரிய, குருக் களை - ஆசாரியரை, மறைக்கிழவனை - பிரமனை, தலைபுடைத்து - தலை யிற் குட்டி, உலகு அனைத்தையும் - உலகமுழுதும், ஒக்க படைத்தானை - ஒக்கப் படைத்தவனை, மூவிரு முகத்தனை - அறுமுகனை, மருத்துவர் - மருத்துவர்கள், வசு - வசுக்கள், கதிர் - கதிர்கள், உருத்திரர் - உருத் திரர்கள், என - என்று சொல்லும்படி, பொலியும் - விளங்குகிற, மூப் பத்து முக்கோடி தேவர்கள்—, புரக்க - காத்தருள்க. (எ - று)

திருமலர்த்தவிசு கொடுத்தானே யென்றியைத்துப் பிரமபதத்தைக் கொடுத்தவனே யென்றும், சொர்க்கத்தலங் கொடுத்தானே யென்றியைத்து இந்திரபதங் கொடுத்தவனே யென்றும், சேஷசயனத்தைக் கொடுத்தானே யென்றியைத்து விஷ்ணுபதங் கொடுத்தவனே யென்றும் பொருள்கொள்க. முடித்தலை யடித்தலை பதித்தெதிர் துதித்தவர் தமக்கு என்றது தன் திருவடியைத்துதித்த அடியார்க்கு என்றவாறு. "தாழச் செய்தார் முடிதன்னடிக் கீழ்வைத்த வரைவிண்ணோர், சூழச்செய்தான்" என்றார் மணிவாசகரும். இறை - அற்பம், வெறுப்பொடு விருப்பினை யறுத்தவர் என்றது ஞானியரை. மடக்கொடி யென்றது உமாதேவியை. பணி குருக்களை - வினைத்தொகை நிலைத்தொடர். பணிந்தது பிரணவார்த்தத்தை விரித்துணர்த்திய காலத்தி லென்றுணர்க. அது "சியநம் போதியென வாய்புதைத்துச் செவிதர" என மேலோர் கூறுதலாலினிது விளங்கும். கிழமை - உரிமை, மறைக்கிழவன் - வேதங்களுக்குரியவனுகிய பிரமன். முப்பத்து மூவராவார் அவர்: மருத்துவர் இருவர்: அச்சுவினி மருத்துக்கள். வசுக்கள் எண்மர்: அவர் அனலன், அநிலன் முதலியோர். கதிர் ஆதித்தர் பன்னிருவர்: அவர் - தாத்துரு, சக்கரன், அரியமன் முதலியோர். உருத்திரர் பதினொருவர்: அவர் மாதேவன் அரன் உருத்திரன் முதலியோர். இவர் தத்தங் கூற்றில் தனித்தனி கோடியராய்த் தத்தமக்குரிய அவ்வவர் இனத்தவர்கட்குத் தலைமை பெற்றவர். இதனைத் திருமுரு காற்றுப்படையில் "நால் வேறியற்கை" என்னுஞ் சொற்றொடர்க்கு நச்சினார்க்கினியர் வரைந்த உரையாற்றெளிதி னுணர்க. (10)

காப்புப்பருவம் முற்றிற்று

2. செங்கீரைப் பருவம்

ஆசிரிய விருத்தம்

11. இருக்கோ லிடும்பரி புரக்கோல மூந்துதலில்
இட்டபொட் டுஞ்சுட்டியும்
எரிமணிப் பட்டமுங் கட்டுபொன் னரைஞாணும்
இளஞாயி றுதயஞ்செயும்
உருக்கோல மூஞ்சூழி யக்கொண்டை யும்முச்சி
உச்சியும் வாளிமுத்தும்
ஒள்ளொளி ததும்புங் குதம்பையுங் கண்டுகண்
டோடரிக் கண்களிக்கும்

மருக்கோல நீலக் குழற்றைய லாட்கரு
மருந்தா யிருந்ததெய்வ
மகக்கோல மேமுதிர் கிழக்கோல மாய்க்குற
மடந்தைமு னடந்துமற்றத்
திருக்கோல முடனெரு மணக்கோல மானவன்
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே.

(இ - ள்) இருக்கு ஒலிடம் - வேதங்கள் சத்திக்கிற, பரிபுரக் கோல மும் - பாதசாலத்தின் அழகினையும், நுதலில் இட்ட பொட்டும் - நெற் றியிலிட்ட பொட்டினையும், சுட்டியும் - சுட்டியினையும், எரிமணி பட்ட மும் - விளங்குகிற நெற்றிப் பட்டத்தினையும், கட்டுபொன் அரைஞா ணும் - கட்டப்பட்ட பொன்னரைநாணும், இளஞாயிறு உதயம்செயும் - இளஞ் சூரியனுதிக்கின்ற, உருகோலமும் - வடிவழகினையும், சூழியக் கொண்டையும் - உச்சிக் கொண்டையினையும், முச்சி உச்சியும் - முச்சி முடித்த உச்சியினையும், வாளி முத்தும் - வாளி முத்தினையும், ஒள்ஒளி ததும்பும் குதம்பையும் - ஒட்பமாகிய வொளி தளும்புகிற குதம்பையினை யும், கண்டுகண்டு - பார்த்துப் பார்த்து, ஒடி அரி - செவ்வரிபடர்ந்த கண்களிக்கும் - கண்களிக்கப்பெற்ற, மருகோலம் நீலம் - வாசனை அழகு நீலநிறம் என்பவற்றை இயற்கையாகவுடைய, குழல் - கூந்தலையுடைய, தையலாட்கு - உமாதேவிக்கு, அருமருந்தாய் இருந்த - அரிய மருந்தா யிருந்த, தெய்வம் - தெய்வத்தன்மை பொருந்திய, மகக்கோலமே - பிள் ளைக்கோலமே, முதிர் - முதிர்ந்த, கிழக்கோலமாய் - கிழக்கோலமாகி, குறமடந்தைமுன் நடந்து - குறப்பெண்ணுக் கெதிரே நடந்து, அ திருக் கோலமுடன் - அந்தத் திருக்கோலத்தோடு, ஒருமணக்கோலம் ஆனவன் - ஒப்பற்ற மணக்கோலமுங் கொண்டவனே, செங்கீரையாடியருள் —; செத்து—; (எ - று)

இருக்கு இவ்விடத்து வேதத்தின் பொதுப்பெயராய் நின்றது. ஒலமிடும் - ஒலிடும் எனத் தொகுத்தலாயிற்று. பொட்டு-திலகம். ''உலக முவப்ப வலனேர்பு திரிதரு, பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு, ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி'' என்ற மேலோர் கூற்றையடி யொற்றி 'இளஞாயி றுதயஞ்செயு முருக்கோலமும் என்றார். முச்சி - ஐவகை மயிர்முடியினென்று. வாளிமுத்து - காதணியின் முத்து. குற மடந்தை - குறச்சிறுமி (வள்ளிநாயகி). மணக்கோலம் - விவாஹ வேஷம். மணக்கோலமானவன் செங்கீரை யாடியருள் எனவும், தெய் வங்கள் மணவாளன் செங்கீரை யாடியருள் எனவும் முடித்துக்கொள்க,

மணக்கோலமானவன் அண்மைவிளியாதலா லியல்பாயிற்று. செங்கீரை யாடும் பருவம் - செவ்விய மதலைச் சொற்களைப் பேசும் பருவம். இப் பருவத்தின்க ணிகழுஞ் செய்ல், ஒரு காலை மடக்கி ஒரு காலை நீட்டி இரு கைகளையும் நிலத்தில் ஊன்றித் தலை நிமிர்த்து முகமசைய ஆடுதல். (1)

12. கும்பாதி காரிய மெனத்தமை நிமித்தமாக்
கொண்டவகி லாண்டங்களின்
குழுவுக்கு மற்றுத்த மிருவர்குறி யுந்தலைக்
கூடினுந் தான்றனக்கச்
சொம்பாதி யன்மைக் கனைத்துந்தன் மயமெனுஞ்
சுருதிகரி யாவைத்துமச்
சுருதிக்கு மெரிசுடர்ப் பரிதிக்கு மிரவிகுலத்
தோன்றற்கு மிளவலுக்கும்
சம்பாதி யொடுநற் சடாயுவுக் கும்பெருந்
தவமுனிவ ரெழுவருக்கும்
தண்ணளி சுரந்திட்ட தீராத வினைதீர்த்த
தம்பிரான் றிருமேனியிற்
செம்பாதி யுங்கொண்ட தையலை யகிகுமர
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே.

(இ - ள்) கும்பாதி-குடமுதலிய, காரியம் என-காரியங்கள் (தமக்குக் குலாலனை நிமித்தகாரணனாகக் கொண்டாற்) போல, தமை - சிவ சத்திகளை, நிமித்தம் ஆ கொண்ட - நிமித்தகாரணமாகக் கொண்ட, அகிலாண்டங்களின் குழுவுக்கு - அகிலாண்ட கோடிக்கு, தம் இருவர் குறியும்-தம் மிருவர் குறிகளும், தலைக்கூடினும்-கலந்திருந்தாலும், தனக்கு அ சொம்-தனக்கு (சத்திக்கு) அந்தப் பொருள், பாதி அன்மைக்கு - பாதியேலா மைக்கு, அனைத்தும் தன்மயம் எனும்-எல்லாம் தன்மயமென்கிற, சுருதி-வேதங்களை, கரி ஆ வைத்தும்-சாக்ஷியாக வுடைத்தாயிருந்தும், அ சுருதிக்கும் - அந்த வேதங்களுக்கும், எரிசுடர் பரிதிக்கும் - எரிகின்ற கிரணங்களையுடைய சூரியனுக்கும், இரவிகுலம் தோன்றற்கும்-சூரியகுலோதயராகிய ஸ்ரீராமருக்கும், இளவலுக்கும் - அவர் தம்பியாகிய இலக்குமணருக்கும், சம்பாதியோடு நல்சடாயுவுக்கும் - சம்பாதியோடு நல்ல சடாயுவுக்கும், பெருந்தவம் - பெருந்தவத்தினையுடைய, முனிவர் எழுவருக்கும் - சத்தமுனிவருக்கும், தண்ணளி சுரந்திட்ட - கருணைசுரந்த, தீராதவினை தீர்த்த - தீராதவினைகளைத் தீர்த்தருளின, தம்பிரான் - சிவ

பெருமானது, திருமேனியில் - திருமேனியில், செம்பாதியும் கொண்ட-சரிப்பாதியையும் பகிர்ந்துகொண்ட, தையல்நாயகி குமர - தையலையகிக் குப் புதல்வனே, செங்கீரை யாடியருள் —, செத்து —, (எ - று)

கும்பாதிகாரியம் - குடமுதலிய காரியங்கள். குடமுதலிய வென்றது கலசாதிகளை. தம்மையென்றது சிவசத்திகளை. அ கி ல ம் - எல்லாம். அண்டம் - உலகு. குழு - கூட்டம். குறி - அடையாளம். (ஆண்குறி பெண்குறி) இவற்றை ஸ்த்ரீலிங்கம் புல்லிங்கம் என்பர் வடநூலார். தலைக்கூடல் ஒரு சொல். சொம் - ஸ்வம் என்னும் வடசொற்றிரிபு. தன்மயம்-தத்ஸ்வரூபம். சுருதி-கேட்டறிதற்பாலது. வேதம் எழுதிப் படித்தறியாது செவியிற் கேட்டறிதற்பால தாதலானே இதற்கு இப் பெயர் வழங்கும். சம்பாதி - அநூருவின் மூத்தகுமாரன், இவன்தம்பி சடாயு. இவ்விருவரும் மேனிலையைக் காணவேண்டுமென்னும் எண்ணத் தோடு பறந்து சூரியமண்டலத்தைக் குறுகுதலும், சடாயுவானவன் சூரிய வெப்பம் பொறுக்க லாற்றாது கீழ்சாய, அது கண்ட சம்பாதி யானவன், அவனைத் தன் சிறகுகளால் மூடினமையால் இவன் சிறகு களும் எரிந்துபோயின. அப்பொழுது அந்தரத்து நிலை பெறாது சம்பாதி கடலினும், சடாயு தண்டகவனத்து ஜநஸ்த்தாநத்திலும் விழுந்தார்கள். பிறகு சம்பாதி அநூமதாதிகளுக்குச் சீதை யிலங்கையி லிருக்குஞ் செய்தி யைத் தெரிவித்த சுக்ருதத்தால் இறகுகள் மூளைக்கப்பெற்றுத் தன திருப்பிடமாகிய இமயமலையைச் சேர்ந்தானென்பது புராணகதை. தவ முனிவ ரெழுவர் - அத்திரி, ஆங்கிரசன் முதலாயினோர். கும்பாதி காரி யங்கள் மண், தண்டசக்கரங்கள், குலாலன் என்பவற்றை முறையே முதற்காரணம் துணைக்காரணம் நிமித்த காரணங்களாகக் கொண்டாற் போல, அகிலாண்டங்களின் குழு - ஐம்பூதம், மாயை, ஈச்சுரன் என்ப வற்றை முறையே முதற்காரணம் துணைக்காரணம் நிமித்த காரணங்க ளாகக் கொண்டு விரிந்ததென்பது கருத்து. தையலையகிகுமர, தெய் வங்கள் மணவாள, செங்கீரையாடியருள் என முடித்துக் கொள்க. (2)

13. கைக்கெட்டு மெட்டுக் களிற்றைப் பிடித்தக்
களிற்றேடு முட்டவிட்டுக்
ககனவட் டத்திலெடு பரிதிவட் டத்தைவீ
திகிரிவட் டத்திலிட்டு
முக்கட் டிருத்தாதை கோதண்ட மெனவைத்த
வேதண்ட மாதண்டமா
மூதண்ட கூடந்தி கூடத் தொடுஞ்சாடி
மூரிக் கடாசலமவன்

மெய்க்கிட்ட சட்டைக்கு நேரிட் டிடப்பட்ட
மேகபட லத்துமொண்டு
மேல்கட லினைப்பெருங் கீழ்கடல் புகப்பெய்து
வினையாட்டு வீரர்களொடுந்
திக்கெட்டும் வினையாடு சேவ பதிக்கடவுள்
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே.

(இ - ள்) கைக்கு எட்டும் - கைக்கெட்டுகிற, எட்டு களிற்றை பிடித்து - அஷ்ட திக்கயங்களைப் பிடித்து, அ களிற்றோடு முட்ட விட்டு - அந்த யானைகளுடனே முட்டவிடித்து, ககனவட்டத்தினூடு - ஆகாய மண்டலத்தோடு, பரிதிவட்டத்தை - சூரிய மண்டலத்தை, வளை - உலகை வளைந்திருக்கிற, திகிரிவட்டத்தில் இட்டு - சக்ரவாளகிரியிலிட்டு, முக்கண் - மூன்று கண்களையுடைய, திருத்தாதை - திருத்தந்தையார், கோதண்டம் என வைத்த - தமது வில்லாகக் கொண்ட, வேதண்டம் - மேருமலையை, மாதண்டம் ஆ - பெரிய தண்டாயுதமாகக் கொண்டு, மூது - பழமையாகிய, அண்டகூடம் - அண்டகூடத்தை, திரிகூடத்தோடும் சாடி - திரிகூடாசலத்தோடு மோதி, மூரி - வலிமையுள்ள, கடாசலம் - யானையானது, அவன் - அவனது, மெய்க்கு இட்ட சட்டைக்கு நேரிட்டிட - திருமேனிக்கிட்ட சட்டைக்குச் சமமாக, மேகபடலத்து மொண்டு - மேகத் திரளினின்று முகந்து, மேல்கடலினை - மேற்கடலை, பெரு - பெரிதாகிய, கீழ்கடல் புக பெய்து - கீழ்க்கடலிற் புகவிட்டு, வினையாடு - வினையாடுகிற, வீரர்களொடும் - வீரரோடு, திக்கு எட்டும் - எட்டுத் திக்குகளிலும், வினையாடு - வினையாடுகிற, சேனாபதிக் கடவுள் - சேனாபதிக் கடவுளே, செங்கீரையாடி யருள் —, செத்து —, (எ - று)

அஷ்டதிக்கயங்கள் - ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீபம் என்பன. இவற்றிற்குப் பெண்யானைகள் முறையே அப்பிரமை, கபிலை, பிங்கலை, அநுபமை, தாமிரபர்ணி, சுதந்தி, அஞ்சனை, அஞ்சனவதி என்பன. இவை கிழக்கு முதலிய எட்டுத் திக்குகளினும் நிலைபெற்றிருப்பன. கடாசலம் - கடம் அசலம் எனப் பிரிக்கப்பட்டு மதமலையெனப் பொருள்படும். இது யானையைக் குறித்தது. படலம் - கூட்டம். சேனாபதிக் கடவுள் அண்மை விளியாதலால் இயல்பாயிற்று. சேனாபதிக் கடவுள் செங்கீரையாடியருள் ; தெய்வங்கள் மணவாள செங்கீரையாடியருள் என முடித்துக்கொள்க. (3)

14. மைவிழிச் செங்கமல வல்லிக்கு நேமியான்
மணிமார்பு வாணிக்குநான்
மறைமூதலி செந்நாத் தடந்தைய லாளொடும்
வயித்தியக் கடவுளார்க்கு
மெய்விரிக் குந்தொண்ட ருள்ளத் தடத்திலெடு
வேதச் சிரங்கடுப்ப
வேதபுரி கந்தபுரி புள்ளூ ரெனப்பொலியும்
வேளூர திசைதிசைதொறுங்
கைவகுத் தரமகளிர் குரவையாட் டயர்பெருங்
கயிலைத் தடஞ்சாரலுங்
கனகாச லத்தும்வள ரிமயா சலத்துமுயர்
கந்தமா தனவெற்பெனத்
தெய்வதப் பிடியோடும் விளையாடு மழகளிறு
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே.

(இ - ள்) மைவிழி - அஞ்சனக் கண்களையுடைய, செங்கமல வல்லிக்கு - திருமகளுக்கு, நேமியான் - சக்ராயுதத்தை யுடையவனுகிய திருமாலின், மணிமார்பு கடுப்ப-கௌஸ்துபமணி யணிந்த மார்பை நிகர்க்கவும், வாணிக்கு - சரசுவதிக்கு, நான்மறைமுதலி - பிரமனது, செந்நாதடம் கடுப்ப - செவந்த நாவினிடத்தை நிகர்க்கவும், தையலாளொடும் வயித்தியக் கடவுளார்க்கு - தையலையுடியோடு வயித்தியநாதருக்கு, மெய்விரிக்கும் - உண்மைவிரித்த, தொண்டர் - அடியார்களுடைய, உள்ளம் தடத்திலெடு-மனப் பிரதேசத்தோடு, வேதச்சிரம் கடுப்ப-வேதாந்தத்தை நிகர்க்கவும், வேதபுரி கந்தபுரி புள்ளூர் என - வேதபுரி கந்தபுரி புள்ளூர் என்று சொல்லும்படி, பொலி-விளங்குகிற, வேளூர-வேளூரனே, உயர்-உயர்ந்த, கந்தமாதன வெற்பு என-கந்தமாதனகிரியிற்போல, திசை திசைதொறும் - எல்லாத் திக்குகளிலும், கை வகுத்து - கை வகுக்கப் பட்டு, அரமகளிர் - தெய்வப்பெண்கள், குரவையாட்டயர் - குரவையாடலைச் செய்கிற, பெருகயிலை-பெரிய கயிலாயமலையின், தடம் சாரலும் - பெருஞ் சாரலினும், கனக அசலத்தும் - மேருமலையிலும், வளர் - வளர்கின்ற, இமய அசலத்தும் - இமயமலையிலும், தெய்வதம் பிடியோடும் - தெய்வயானையோடும், விளையாடும் - விளையாடுகிற, மழகளிறு - இளங்களிறே, செங்கீரையாடியருள் —, செத்து—, (எ - று)

கமலவல்லி யென்பதில் வல்லி உவமையாகுபெயர். மணி - அழகெனினுமாம். நான்மறை முதலி - சதுர்வேதாக்ரேஸ்வரன். கைவகுத்தல் - ஒழுங்காக வகுக்கப்படுதல். குரவையாட்டு - கைகோத்தாடுவதோர் விளையாட்டு. இது, "குரவைக் கூத்தே கை கோத்தாடல்" என்பதனு லினிது விளங்கும். கனகாசலம் என்பதைக் கனகம் அசலம் எனப் பிரித்துப் பொன்மலையென் றுரைத்துக் கொள்க. இமயாசலம் என்பதை இமயம் அசலம் எனப் பிரிக்க. மழகளிறு - அண்மைவிளியாதலா லியல்பாயிற்று. மழகளிறு செங்கீரை யாடியருள், தெய்வங்கள் மணவாள செங்கீரை யாடியருள் என முடித்துக்கொள்க. (4)

15. மீனேறு குண்டகழி தீவாய் மடுத்ததனி
வில்லியா ரிளவலோடும்
விதிமுறை வணங்கச் சடாயுபுரி யிற்கருணை
வெள்ளமென வீற்றிருக்கும்

ஆனே றுயர்த்திட்ட வையற்கு மம்மைக்கும்
அருமருந் தாகிநின்ற
ஆதிப் பிரானென்று மும்மூதற் கடவுளும்
அடித்தொழும் பாற்றமற்றக்

கூனேறு மதிநுதற் றெய்வக் குறப்பெண்
குறிப்பறிந் தருகணைந்துன்
குற்றேவல் செய்யக் கடைக்கண் பணிக்கெனக்
குறையிரந் தவடொண்டைவாய்த்

தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே.

(இ - ள்) மீன் ஏறு - மீன்கள் மிகுந்த, குண்டு அகழி - ஆழமாகிய கடலே, தீவாய் மடுத்த - நெருப்பிலிட்ட, தனிவில்லியார் - ஸ்ரீராமபிரான், இளவலோடும் - தம்பியோடும், விதிமுறை வணங்க - விதிக்கிரமமாக வணங்க, சடாயுபுரியில் - சடாயுபுரியினிடத்தே, கருணை வெள்ளமொடு வீற்றிருக்கும் - கருணைப் பெருக்குடனே வீற்றிருக்கிற, ஆன் ஏறு - விடையை, உயர்த்திட்ட - கொடியாயுயர்த்தின, ஐயற்கும் - தந்தைக்கும், அம்மைக்கும் - தாய்க்கும், அருமருந்து ஆகி நின்ற - அரிய

மருந்தாய் நின்ற, ஆதிபிரான் என்று - முதற்கடவுளேயென்று, மும் முதற் கடவுளும் - மூவராகிய முதற்கடவுளரும், அடித்தொழும்பு ஆற்ற - திருவடித் தொண்டுசெய்ய, அ - அந்த, கூன் ஏறுமதி - வளைவு மிருந்த இளம்பிறை போன்ற, நுதல் - நெற்றியையுடைய, தெய்வம் - தெய்வத்தன்மையுள்ள, குறப்பெண் - வள்ளிநாயகியின், குறிப்பு அறிந்து - கருத்துணர்ந்து, அருகு அணைந்து - அவளருகே சென்று, உன் குற்றேவல் செய்ய - உன் குற்றேவல் செய்யும்படி, கடைக்கண் பணிக்க என - கடைக்கண் பார்க்கவென்று, குறையிரந்து - குறை யிரந்து, அவள் - அவளது, தொண்டைவாய் - கோவைக்கனிபோலும் வாயினின்றும் வெளிப்படுகின்ற, தேன்ஊறு கிளவிக்கு - தேன் சுரக்குஞ் சொற்களுக்கு, வாய் ஊறி நின்றவன் - வாயூறி நின்றவனே, செங்கீரை யாடி யருள் —, செத்து —, (எ - று)

மீனேறு என்பதில் ஏறுதல் மிகுதிப்பொருடந்து நின்றது. குண்டு- ஆழம், அகழி - கடல், அகழ்தல் - தோண்டல், இது சகரரால் தோண்டப் பட்டதென்னும் பொருடந்து நின்றது. "சகரர்தொட்ட வெண்டிரை யெறி தடங்கடல்" என்றூர் பிறரும். தீவாய் மடித்த என்பதற்குத் தீக் கடவுளின் வாய்க் கிரையாக்கின என்றுரைப்பினுமாம். இது நிகழ்ந் தது சேது பந்தநார்த்தம் வருணன்மீது வாளிதொடுத்த காலத்தில். கோதண்ட தீக்ஷா குருவாதலால் ஸ்ரீராமபிரானைத் 'தனிவில்லியார், என்றூர். இளவல் என்றது இலக்குமணரை. சடாயு பூசித்த தலமாத லால் சடாயு புரியென வழங்கும். விடை - இடபம், ஆனேறுயர்த்திட்ட வையன் - சிவபிரான், அம்மை - உமாதேவி, அருமருந்து - அருமையாகிய தேவாமிர்தம், ஆதிப்பிரான் - அண்மைவிளி. மும்முதற் கடவுள் என்றது தோற்ற நிலை யிறுதிகட்குக் காரணராகிய பிரமாதிகளை. மற்று - வினை மாற்றின்கண் வந்தது. நுதற்குவமையாகப் புணர்க்கப்படுவதால் கூனேறுமதி யென்றது அஷ்டமீ சந்திரனை. குறிப்பு - தம்மிடத் தார்வம். குற்றேவல் - சிறுத்தொண்டு. பணிக்க என வெனற்பாலது பணிக் கெனத் தொகுத்தது. இவ்வாறு ஆடவர் குறையிரத்தலியல்பென்பதை, "மடுக்கோ கடலின் விடுதிமிலன்றி மறிதிரைமீன், படுக்கோ பணிலம் பலகுளிக்கோ பரன்றில்லை முன்றிற், கொடுக்கோவளை மற்றுநும்மையர்க் காய குற்றேவல் செய்கோ, தொடுக்கோ பணியீரணியீர் மலர்நுஞ்சுரி குழற்கே" என்பதனாலறிக. தேனூறவு மிகுதிபற்றி அவள் சொல்லுந் தேன் போன்றினிக்குஞ் சொல்லாயிற்று, இனிய தேன் முக்கனி முதலிய வற்றை யொருவர்காணின், அவர் வாயினீரூற லுலகியல்பாதலால், 'தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்' என்றூர். நின்றவன் - அண்மை விளி. நின்றவன் செங்கீரை யாடியருள், மணவாள செங்கீரை யாடியருள் என முடித்துக்கொள்க.

(5)

வேறு

16. செம்பொ னடிச்சிறு கிங்கிணி யோடு
சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி
திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தியொ டுஞ்சிறு
பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச்
சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை
காது மசைந்தாடக்
கட்டிய சூழியு மூச்சியு மூச்சிக்
கதிர்முத் தொடுமாட
அம்பவ ழத்திரு மேனியு மாடிட
ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குகன்
ஆடுக செங்கீரை.

(இ - ள்) அடி - திருவடியில், செம்பொன் - செம்பொன்னுற் செய்யப்பட்ட, சிறு கிங்கிணியோடு - சிறு கிங்கிணிகளோடு, சிலம்பு - சிலம்புகளும், கலந்து ஆட - கூடியாடவும், திரு அரை - திருவரையில், அரைஞாண் - அரைநாணும், அரைமணியொடும் - உடை மணியொடும், ஒளி திகழ் - ஒளி விளங்குகிற, அரை வடம் ஆட - அரை வடங்களாடவும், பைம்பொன் அசும்பிய - பசும்பொன்போ லொளிவீசுகிற, தொந்தியொடும் சிறுபண்டி - தொந்தியுடனே சிறுவயிறும், சரிந்து ஆட - சரிந்தாடவும், பட்டம் நுதல் பொலி-பட்டத்தோடுகூடிய நெற்றியில் விளங்குகிற, பொட்டொடு - பொட்டுடனே, வட்டச்சுட்டி - வட்டவடிவாகிய சுட்டியும், பதிந்து ஆட - பதிந்தாடவும், கம்பி விதம்பொதி - கம்பி வகைகளமைந்த, குண்டலமும் - குண்டலங்களும், குழைகாதும் - குழையோடு கூடிய காதும், அசைந்து ஆட - அசைந்தாடவும், கட்டிய சூழியும் - கட்டப்பட்ட சூழியும், முச்சியும்—, முச்சி - முச்சியினது, கதிர் முத்தொடும் ஆட - ஒளியுள்ள முத்துக்களோடும் ஆடவும், அம் பவழம் - அழகிய பவளம்போன்ற, திருமேனியும் ஆடிட - திருமேனியு மாடவும், செங்கீரை ஆடுக - செங்கீரை யாடியருள்க, ஆதி வயித்தியநாதபுரி

குகன் - முதன்மையாகிய வயித்தியநாதபுரியி லெழுந்தருளிய குகனே, செங்கீரை ஆடுக - செங்கீரையாடி யருள்க. (எ - று.)

செம்பொனடிச் சிறுகிங்கிணியோடு சிலம்பு கலந்தாட எனத் தொடங்கிக், கட்டியகுழியு முச்சியுமுச்சிக் கதிர்முத்தொடுமாட என முடித்தலால் இச் செய்யுள் பன்னிருவாகன் பாதாதிகேச நுகர்ச்சி யென் றறிக. பாதாதிகேசமாகிய வுறுப்புக்கள் யாவுமாடுழித் திருமேனியு மாடல் இன்றியமையாமையின் இறுதியில் 'அம் பவழத் திருமேனியு மாடிட' என்றார். திருமேனியு மென்றவும்மை யிறந்தது தழீஇயது. வயித்திய நாதர் என்னுஞ் சிறப்புத் திருநாமம் பெற்ற சிவபெருமான் எழுந்தருளி யிருக்குந் தலமாதலால் இதற்கு வயித்தியநாதபுரி யென்னும் பெயர் வாய்ந்தது. குகன் - அண்மைவிளி. வயித்தியநாதபுரிக்குகன் செங் கீரை யாடுகவென முடிக்க. (6)

17. குழையொடு குழையெதிர் மோதிக் காதணி
குண்டலம் வெயில்வீசக்
குமுத விதழ்க்கனி வாயமு தூறிய
குறுநகை நிலவூர

முழுவயி ரப்புய வலயமு மின்கை
முதாரியு மொளிகால
முத்த மரும்பி யெனக்குறு வேர்வு
முகத்தி லரும்பியிடப்

புழுதி யளைந்த பசுந்திரு மேனிப்
பொங்கொளி பொங்கியெழப்
புண்டரி கங்கண் மலர்ந்த விழிக்கடை
பொழியருள் கரைபுரள

அழகு கனிந்து முதிர்ந்த விளங்கனி
ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குகன்
ஆடுக செங்கீரை.

(இ - ள்) குழையொடு குழை எதிர்மோதி - குழையோடு குழை யெதிர்தாக்கி, காதணிகுண்டலம் வெயில்வீச - காதிலணிந்த குண்டலங் களும் ஒளிவீச, குமுதம் - செவ்வல்லி மலர்போன்ற, இதழ் - இதழோடு கூடிய, கனிவாய் - கனிவாயினிடத்து, அமுது ஊறிய - அமிர்தஞ்

சுரந்த, குறுநகை - சிறு நகையாகிய, நிலவு ஊர - நிலாவிரிய, முழுவயிரம் - முழுவயிரத்தாற் செய்யப்பட்ட, புய வலயமும் - தோள் வலயமும், முன்கை முதாரியும் - முன்கையிலணிந்த முதாரியும், ஒளிகால - ஒளியை யுமிழ, முத்தம் அரும்பியென - முத்துக்கள் அரும்பினற்போல, குறு வேர்வு - சிறுவெயர்வை, முகத்தில் அரும்பியிட - முகத்தில் அரும்ப, புழுதி அளைந்த - புழுதி படிந்த, பசு திருமேனி - பசிய திருமேனியில், பொங்கு ஒளி - மிக்க வொளியானது, பொங்கியெழ - விளங்கியெழ, புண்டரிகங்கள் மலர்ந்த - தாமரை மலர்கள்போல மலர்ந்த, விழிக்கடை - கடைக்கண்கள், பொழி - பொழிந்த, அருள் - அருள்வெள்ளமானது, கரைபுரள - கரைபுரண்டோட, அழகுகனிந்து முதிர்ந்த - அழகு பழுத்து முதிர்ந்த, இளங்கனி - இளங்கனியே, ஆடுக செங்கீரை —, ஆதி வயித்தியநாதன் புகுகன் —; (எ - று.)

முதாரி - முன்னங்கையி லணிதற்குரியதோ ராபரண விசேடம். கரைபுரள வென்றதனால் அருள் என்பதற்கு அருள்வெள்ள மெனப் பொருள் கூறலாயிற்று. கனி, குகன் என்பன அண்மை விளிகளாதலா னியல்பாயின. அழகுகனிந்து முதிர்ந்த விளங்கனி செங்கீரையாடுக, வயித்தியநாதபுரிக் குகன் செங்கீரை யாடுக என முடித்துக் கொள்க. (7)

18. விரல்சுவை யுண்டு கனிந்தமு தூறிய
மெல்லிதழ் புலராமே
விம்மிப் பொருமி விழுந்தமு தலறியுன்
மென்குரல் கம்மாமே
கரைவுறு மஞ்சன நுண்டுளி சிந்திக்
கண்மலர் சிவவாமே
கலுழ்கலு ழிப்புன லருவி படிந்துடல்
கருவடி வுண்ணுமே
உருவ மணிச்சிறு தொட்டி லுதைந்துநி
லெண்பத நோவாமே
ஒருதா ளுந்தி யெழுந்திரு கையும்
ஒருங்கு பதித்துநிமிர்ந்
தருள்பொழி திருமுக மசைய வசைந்தினி
தாடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குகன்
ஆடுக செங்கீரை.

(இ - ள்) விரல் - விரல்கள், சுவையுண்டு - சுவைக்கப்பட்டு, கனிந்து அமுது ஊறிய - பழுத்து அமுதஞ் சுரந்த, மெல் இதழ் - மெல்லிய இதழ்கள், புலராமே - உலராமலும், விம்மி பொருமி - விம்மியும் பொருமியும், விழுந்து அழுது அலறி—, உன்-உனது, மெல்குரல் கம்மாமே - மெல்லிய குரல் கம்மாமலும், கரைவுறும் - கரைகின்ற, அஞ்சனம் - அஞ்சநத்தின், நுண்துளி சிந்தி - நுண்ணியதுளிகள் சிந்தி, கண் மலர் சிவவாமே - கண்களாகிய தாமரை மலர்கள் சிவக்காமலும், கலுழ் - அழுகின்ற, கலுழிப்புனல் - கலங்கனீராகிய, அருவிபடிந்து - அருவியிற் படிந்து, உடல் கருவடி வுண்ணுமே - திருமேனி கருவுருக் காட்டாமலும், உருவம் மணி - நிறமுள்ள மணிகள் பதித்த, சிறுதொட்டில் உதைந்து - சிறிய தொட்டிலை யுதைந்து, நின் - உனது, ஒள்பதம் நோவாமே - அழகிய திருவடிகள் நோவாமலும், ஒருதாள் உந்தி எழுந்து-ஒருதாளூன்றி யெழுந்து, இருகையும் - இரண்டு கைகளையும், ஒருங்கு பதித்து - ஒருங்கே நிலத்தேபதித்து, நிமிர்ந்து - நிமிர்ந்திருந்து, அருள் பொழி திருமுகம் - கருணைபொழிகின்ற திருமுகங்கள், அசைய-அசையா நிற்க, அசைந்து - நீ யசைந்து, இனிது - இனிதாக, ஆடுக செங்கீரை—, ஆதி வயித்திய நாதன்புரி குகன் —; (எ - று.)

இதழ் - உதடு. கம்மல் - குரலடைத்தல். அழும்போது சிந்துதல் அஞ்சநத்தைக் கரைத்துக்கொண்டு வருகிற கண்ணீராதலால் கருவடி வுண்ணல் பெறப் பட்டது. கருவடி வுண்ணுமே யென்றதனால் குமர வேள்திருமேனி செந்நிறத்த தென்பதும் பெறப்பட்டது. (8)

சந்த விருத்தம்

19. கும்பம தக்களி யானையி ரண்டே யொன்றேமைக்
கொண்டல்வி ழிக்கயன் மீனுமி ரண்டே கொண்டேகிச்
சம்பர னைப்பொரு சேவகன் வந்தான் வந்தான்முற்
சண்டைகொ ளற்கென நேர்வரு பெண்பா லன்பாயே
அம்பவ ளக்கொடி யேவளர் கொம்பே யென்றேநீ
அன்றுபு னத்துயிர் சோர்வது கண்டே முன்போதும்
கம்பம தத்தர்ச கோதர செங்கோ செங்கீரை
கந்தப ரிக்கரு ணாகித செங்கோ செங்கீரை.

(இ - ள்) கும்பம் - கும்பம்போன்ற, மதம் களியானை இரண்டே - மதத்தையுடைய களியானை யிரண்டும், மை கொண்டல் ஒன்றே - கரிய மேகமொன்றும், விழிகயல் மீனும் இரண்டே - விழித்தலையுடைய கயல் மீன்களிரண்டும், கொண்டு ஏகி - கொண்டு வந்து, சம்பரனை பொரு - சம்பரனைப் பொருது வென்ற, சேவகன் - வீரனவன், முன் சண்டை

கொளற்கு - எதிரே நின்று சண்டை செய்ய, வந்தான் வந்தான் என - வந்தான் வந்தானென்று சொல்ல, நேர்வரு - எதிரே வந்த, பெண்பால் - பெண்ணினிடத்தில், அன்பாய் - அன்புகொண்டு, அம் பவளக்கொடியே - அழகாகிய பவளக்கொடியே, வளர்கொம்பே - வளர்கின்ற பூங்கொம்பே, என்றே - என்று சொல்லிக்கொண்டே, அன்று - அந்நாளில், புனத்து - தினைப்புனத்தில், நீ உயிர்சோர்வது கண்டு - நீ உயிர் தளர்வது கண்டு, முன்போதும் - உனக்கெதிரேவந்த, கம்பம் - கட்டுத்தறியிற் கட்டப்படுகிற, மதத்தர் - மதயானை யுருவினராகிய விநாயகருக்கு, சகோதர - சகோதரனே, செங்கோ செங்கீரை—, கந்தபுரி கருணாநிதி செங்கோ—; (எ - று.)

கும்பமதக் களியானை யிரண்டென்றது இருதனத்தை. மைக் கொண்டல் ஒன்றே யென்றது கூந்தலை. விழிக்கயல் மீனு மிரண்டே யென்றது கண்களை. சம்பரனைப் பொரு சேவகன் என்றது மன்மதனை. நேர்வருபெண் என்றது வள்ளிநாயகியை. இரண்டே ஒன்றேயென்னு மேகாரங்கள் உம்மைப் பொருளன. சம்பரன் - ஓரசுரன், இவன் மன்மதனைக் கடலிற் கொடுபோ யெறிந்து, பிறகு அவனுலேயே கொல்லப்பட்டான். சம்பரனைக் கொன்றதனால் மன்மதனுக்குச் சம்பராரி யென்னும் பெயர் வழங்கும். வள்ளிநாயகி தன் கருத்திற் கிணங்காமையால் வாட்ட முறுவ தொழித்தற்கு மூத்தநாயனர் யானையுருக்கொடு வந்தாராதலால், 'நீயன்று புனத்துயிர் சோர்வது கண்டே முன்போதுங் கம்ப மதத்தர் சகோதர' என்றார். கம்பம் - சாதியடை. கருணாநிதி - கருணைக்கடல், கருணாநிதி அண்மை விளியாதலா னியல்பாயிற்று. செங்கீரை யாடியருள் என்னும் அடுக்குச் செங்கோ செங்கீரை என இணைத்தும், செங்கீரை எனத் தனித்தும் மாறியிற்று. (9)

20. திங்களு தற்றிரு மாதொடு நின்றே மன்றுடும்
செங்கண்வி டைக்கொடி யோனருள் கன்றே யொன்றேயாய்
எங்களு ளத்தமு தூறுக ரும்பே யன்பாளர்க்
கின்பம ளிக்குமெய்ஞ் ஞானம ருந்தே யெந்தாயின்
கொங்கலர் மைக்குழல் வாழ்பொறி வண்டே வண்டுதும்
கொந்தள கக்குற மான்வளர் குன்றே யென்றுதும்
கங்கைம கட்கொரு கான்முளை செங்கோ செங்கீரை
கந்தபு ரிக்கரு ணாநிதி செங்கோ செங்கீரை.

(இ - ள்) திங்கள் தூதல் - பிறைபோன்ற நெற்றியையுடைய, திருமாதொடு நின்று - திருமகளோடு நின்று, மன்றுடும் - பிரார்த்திக்கிற, செங்கண்விடை - செங்கண்மாலாகிய இடபத்தை, கொடியோன் - கொடி

யாயுயர்த்தவனுகிய சிவபிரான், அருள் - ஈன்றருளின, கன்றே—, ஒன்றே ஆய் - ஒருபொருளேயாகி, எங்கள் உள்ளத்து - எங்கள் மனத்தில், அமுது ஊறு கரும்பே - அமுதஞ் சுரக்கின்ற கரும்பே, அன்பாளர்க்கு - அன்புடையவருக்கு, இன்பம் அளிக்கும் - ஆனந்தத்தைக் கொடுக்கிற, மெய் ஞானம் மருந்தே - உண்மையாகிய ஞானமிர்தமே, எம் தாயின் - எமது தாயாகிய சிவையின், கொங்கு அலர் - வாசனைபரந்த, மைக்குழல்வாழ் - கருங்கூந்தலில் வாழ்கின்ற, பொறிவண்டே - புள்ளிகளையுடைய வண்டே, வண்டு ஊதும் - வண்டுகளூதப்பெற்ற, கொந்து - பூங்கொத்துக்களணிந்த, அளகம் - அளகபாரத்தையுடைய, குறமான் வளர் குன்றே - குறமான் வளர்தற்குரிய குன்றமே, என்று ஓதும் - என்று அழைக்கிற, கங்கை மகட்கு - கங்காதேவிக்கு, ஒருகால்மூளை - ஒரு புதல்வனே, செங்கோ செங்கீரை —, கச்சபுரிக் கருணிதி செங்கோ—; (எ - று.)

பொறிவண்டே யென்பதில் பொறி சாதியடை. கங்கை மகள் - கங்கையாகிய பெண். கால்-சந்ததி. அதில் மூளைத்தலாற் புதல்வனைக் காண்மூளையென்றார். மூளை — தொழிலாகு பெயர். இது அண்மை விளி. (10)

செங்கீரைப்பருவம் முற்றிற்று

3. தாலப் பருவம்

ஆசிரிய விருத்தம்

21. பில்கும் பசுந்தே னசும்பிருந்த
பின்ரு ழளகத் தரமகளிர்
பேதைக் குறும்பு விளையாடும்
பேரா யத்துச் சிறுமருங்குற்
கொல்குங் கொடிபோய் நுடங்கியிட
வோங்கும் பளிக்கு நிலாமுற்றத்
துயர்சூ ளிகையின் மரகதத்தி
னெளிகா வீசத் தெளிவிசும்பிற்
பல்குஞ் சுரபித் தரங்கநெடும்
பாகீ ரதியின் கரைகிளைத்த
பசும்புல் லெனைச்செந் நாவளைக்கும்
பைம்பொற் றலங்கள் பலகோடி

மல்குஞ் செல்வக் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ.

(இ - ள்) பில்கும் - சிந்துகிற, பசுதேன் - பசிய தேன், அசும்பு இருந்த - கசிந்துகொண் டிருக்கிற, பின் தாழ் அளகத்து - பின்னே தொங்குகிற அளகபாரத்தையுடைய, அரமகளிர் - தெய்வப் பெண்கள், பேதை குறும்பு விளையாடும் - அறியாமையாலே குறும்பு விளையாடுகிற, பேர் ஆயத்து - பெரிய ஆயத்தினது, சிறு மருங்குற்கு - சிறிய இடைக்கு, ஒல்கும் - தோற்கின்ற, கொடிபோய் நுடங்கியிட - பூங்கொடிகள் சென்ற சையாகிற்றலானும், ஓங்கும் - உயர்ந்த, பளிக்குநிலா முற்றத்து - பளிங்கினால் செய்யப்பட்ட நிலா முற்றத்தின், உயர் சூளிகையில் - உயர்ந்த சிகரத்தில், மரகதத்தின் ஒளி கால்வீச - மரகதத்தின் பிரகாசம் வீசலானும், தெளிவிசும்பில் - தெளிந்த சொர்க்கலோகத்தில், பல்கும்-பரவிய, சுரபித் தரங்கம் - காமதேநுத் தொகுதியானது, நெடுபாகீரதியின் கரைகிளைத்த - நெடிய ஆகாயகங்கையின் கரையில் செழித்திருக்கிற, பசும்புல் என-பசிய புல்லென்று நினைத்து, செந்நா வளைக்கும் - செவந்தநாவை வளைக்கிற, பைம்பொன் தலங்கள் - பசும்பொன்னுலியன்ற மாடங்கள், பலகோடி மல்கும் - அநேககோடிகள் நிறைந்த, செல்வம் - செல்வப் பெருக்கமைந்த, கந்தபுரி வாழ்வே - கந்தபுரிவாழ்வோனே, தாலோ தாலேலோ —, மலையாள் வயிறுவாய்த்த - மலைமகள் வயிற்றிற் பிறந்த, முழுமணியே - முழுரத்நமே, தாலோ தாலேலோ —; (எ - று)

அசும்புதல் - கசிதல். பின்சூழ் - பின்னற்சூழிறங்கிய எனினும் பொருந்தும். குறும்பு - சிறு விளையாட்டு. முழுமணி - தோளாமணி. மேன்மாடத்தும் பசுங்கொடிகளின் நுடக்கத்துச் சாயலும் மரகதத்தின் சாயலும் பொன்னுலகிற்சென்று தோன்ற, அவற்றையங்குள்ள காமதேனுத் தொகுதியானது பசும் புல்லெனக் கருதிச் செந்நாவளைக்கு மென்பது கருத்து. தரங்கம் - தொகுதி; இனி, அலையையுடைய பாகீரதி எனக் கூறினும் அமையும். இதனால் அத் திருப்பதியின் செல்வப்பெருக்குத் தோன்றிற்று. வாழ்வு - தொழிலாகுபெயர். வாழ்வு கருவியாகு பெயராகக் கொண்டு செல்வம் எனினுமாம். வாழ்வே மணியே தாலேலோ என முடிக்க. இச்செய்யுட் கருத்தமைத்து, "மழைக்கண் மங்கையர் பயிறர மரகதமணியி, னிழைத்த செய்குன்றின் பைங்கதிர் பொன்னிலத் தெய்தக், குழைத்த வைந்தரு நீழலிற் குலவுமானினங்க, டழைத்த புல்லென விரைவொடு தனித்தனி கறிக்கும்" என்றிவ்வாறு பிறருங் கூறுதல் காண்க. தாலப்பருவம் - தாலாட்டைச்

கவனிக்கும் பருவம். தாலாட்டு - ஒருவகை நாவசைப்பு. தாலாட்டையேல், தாலாட்டையேல் என்னும் அடுக்குத் தாலோ தாலேலோ என இணைத்தும், தாலெனத் தனித்தும் மீ இயிற்று: (1)

22. தொடுக்குந் தொடைவெண் டுகிற்கொடிக
டொடுநீர்ப் பரவை முகம்புழுங்கத்
தோன்றும் பரிதி மணித்திண்டேர்
தூண்டும் கலின வாம்பரியை

மூடுக்குஞ் சுடர்ப்பொற் றலத்திழைத்த
முழுநீ லத்தி னொழுகொளியின்
முழுகுங் கடவுண் மால்யானை
முகிலிற் றோன்ற வகலிடநின்

றடுக்குங் களிறென் றரமகளி
ரையுற் றிடத்தன் வெளிறுமுடம்
பளறு படிந்த தெனக்கங்கை
யாற்றுப் பசும்பொ னசும்புபுனல்

மடுக்குஞ் செல்வக் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ.

(இ - ள்) தொடுக்கும்-தொடுக்கப்பட்ட, தொடை - வரிசையாகிய, வெள்துகில் கொடிகள் - வெண்கொடிச் சீலைகள், தொடு - சகாரால் தோண்டப்பட்ட, நீர்-நீரையுடைய, பரவை-கடலினது, முகம் புழுங்க - இடம் வெதும்ப, தோன்றும் - உதிக்கிற, பரிதி - சூரியனது, மணி - அழகிய, திண்தேர் - வலிய தேரை, தூண்டும் - செலுத்துகிற, கலினம் - கடிவாளம் பூட்டின, வாம்பரியை - தாவிச்செல்கிற குதிரைகளை, முடுக்கும் - அவசரப்படுத்துதற் கிடமாகிய, சுடர் - ஒளியையுடைய, பொன் தலத்து - பொன்மாளிகைகளில், இழைத்த - இழைக்கப்பட்டிருக்கிற, முழுநீலத்தின் - முழுநீல ரத்தினத்தின், ஒழுகு ஒளியில் - ததும்புகின்ற ஒளியில், முழுகும் - மூழ்குகின்ற, கடவுள் - தெய்வத்தன்மையுள்ள, மால் யானை - பெரிய யானையானது, முகிலின் தோன்ற - மேகம்போலத் தோன்ற, அகலிடம் நின்று அடுக்கும் களிறு என்று - மண்ணுலகத்தினின்றும் வந்த யானையென்று, அரமகளிர் - தெய்வப் பெண்கள்,

ஐயுற்றிட - சந்தேகிக்க, தன் வெளிறும் உடம்பு - தன் வெளுத்த வுடம் பானது, அளறு படிந்தது என - சேறு படிந்திருக்கின்ற தென்று, கங்கையாற்று - கங்காநதியின், பசும்பொன் அசும்புனல் - பைம்பொன் போலத் ததும்புகிற நீரில், மடுக்கும் - மூழ்குகின்ற, செல்வம் - செல்வப் பெருக்குள்ள, கந்தபுரி வாழ்வே - கந்தபுரிச் செல்வமே, தாலோ தாலேலோ—, மலையாள் வயிறு வாய்த்த - மலைமகள் வயிற்றிற் பிறந்த, முழுமணியே - முழுரத்நமே, தாலோதாலேலோ—, (எ - று.)

கடவுண்மால் யானையென்றது ஐராவதத்தை. பரவை-தொழிலாகு பெயர். முகம் - இடம். மணி - மணிகள் கட்டிய எனினுமாம். வாவும் என்பது வாம் எனத் தொகுத்தலாயிற்று. தன் என்றது ஐராவதமாகிய தனது என்க. இதுவு மேலைச் செய்யுளே போலக் கந்தபுரியின் செல்வப் பெருக்கைக் கூறிற்று. அளறு - கருஞ் சேறு எனக் கொள்க. (2)

23. தீற்றுஞ் சுதைவெண் ணிலவெறிப்பத்
திரண்மா மணிகள் வெயில்விரிக்கும்
செம்பொற் றலத்துப் பேரமர்க்கட்
சிறியார் நறிய வகிற்புகையிட்

டாற்றுங் குழற்காட் டினைப்புயலென்
ரூடு மயில்கண் டம்பவளத்
தரும்பு நகையைச் சகோரப்புள்
ளருந்த விரிந்த முழுநகைவிண்

டுற்று நிலவுக் கிந்துசிலை
யொளிர்மா ளிகையுஞ் சூளிகையும்
உருகிப் பெருகுங் கலுழிவெள்ள
மூவரோ டுவரிக் கடற்புலவு

மாற்றுங் கடவுட் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ.

(இ - ள்.) தீற்றும் - பூசப்பட்ட, சுதை-சுண்ணச்சாந்தானது, வெள் நிலவு எறிப்ப - வெண்ணிலா வீச, திரள் - கூட்டமாகிய, மா மணிகள் - பெரிய மணிகள், வெயில் விரிக்கும் - வெயிலைப் பரப்புகிற, செம்பொன் தலத்து - செம்பொன் மாளிகைகளின் மேல், பேர் அமர் கண் - பெரும்

போர் செய்கிற கண்களையுடைய, சிறியார் - சிறுமியர், நறிய - நறுமண முள்ள, அகில்புகையிட்டு - அகிற்புகையினால், ஆற்றும் - புலர்த்துகிற, குழல்காட்டினை - கூந்தற்காட்டை, புயல் என்று ஆடும் - மேகமென் றெண்ணி யாடுகிற, மயில்கண்டு - மயில்களைப் பார்த்து, அம் பவளத்து - அழகிய பவளம்போலும் வாயினிடத்துண்டாகிற, அரும்பு நகையை - புன்னகையை, சகோரப்புள் அருந்த - சகோரப்பறவையுண்ண, விரிந்த முழுநகை - பரந்த முழுநகையானது, விண்டு ஊற்றும் நிலவுக்கு - மிக வூற்றுகின்ற நிலாவுக்கு, இந்துசிலை - சந்திரகாந்தக் கற்களால், ஒளிர் - விளங்குகிற, மாளிகையும் சூளிகையும் - மாடங்களும் மேல்மாடங்களும், உருகி பெருகும் - உருகிப் பெருக்கெடுக்கிற, கலுழி வெள்ளம் - கலங்கல் வெள்ளமானது, உவரிகடல் - உவர்த்தலை யுடையதாகிய கடலினது, உவரோடு - உவர்ப்போடு, புலவும் - புலால் நாற்றத்தையும், மாற்றும் - ஒழிக்கின்ற, கடவுள் - தெய்வத் தன்மையுள்ள, கந்தபுரி வாழ்வே - கந்த புரிச் செல்வமே, தாலோ தாலேலோ —, மலையாள் வயிறுவாய்த்த - மலை மகள் வயிற்றிற் பிறந்த, முழுமணியே - முழுரத்னமே, தாலோ தாலேலோ—, (எ - று.)

அமர்க்கண் - அமர்த்தகண். அமர்த்தல் - அமர் செய்தல், இது பெயரடியாகப் பிறந்தவினை. இதனை, "பண்டறியேன் கூற்றென்பதனை யினியறிந்தேன், பெண்டகையாற் பேரமர்க்கட்டு" என்னும் திருக்குறட் குப் பரிமேலழகர் வரைந்த யுரையானறிக. அகிற் புகையிட்டு என்பதற்கு அகிற்புகை யூட்டியென் றுரைத்தலுமாம். மயிர்ச்செறிவு தோன்றக் 'குழற்காடு' என்றார். "திண்ணிய நெஞ்சப்பறவை சிக்கக் குழற்காட்டிற், கண்ணிவைப்போர் மாயங் கடக்குநர் எங்நாளோ" என்ற மேலோர் செய்யுளினுங் குழற்காடென்றல் காண்க. மேகத்தைக் கண்டும் அது போலும் வேறொன்றைக் கண்டும் மயிலாட வியல்பாதலான், 'குழற் காட்டினைப் புயலென்றோடு மயில்' என்றார். "தெளிதரற் காரெனச் சேனஞ்சிற் றம்பலத் தடியேன், களிதரக் கார்மிடற்றோ னடமாடக் கண்ணுர் முழவ், துளிதரற்காரென வார்த்தன வார்ப்புத் தொக்குன் குழல்போன், றளிதரக் காந்தளும் பாந்தளைப் பாரித் தலர்ந்தனவே" என்றார் மணிவாசகரும். சூளிகை - மாளிகையின் உச்சியறை எனினுமாம். (3)

24. கிளைக்குஞ் சகரர் தொட்டபெருங்
கிடங்கென் றிடங்கர் மாவியங்கும்
கிழ்நீ ரழுவக் குண்டகழிக்
கெழுமு புனற்றெண் டிரைமேய்ந்து

திளைக்குங் கமஞ்சூ னெடும்புயலைச்
சிறுகட் பெருங்கைப் பகடென்றூர்
செங்கட் களிறு பிளிறநிமிர்
திகிரி கிரியென் றிவர்ந்துடலம்
இளைக்கும் படிவின் டொடநிவந்த
வெழிற்பொற் புரிசை விண்டுபதத்
தேறு மேணி பொற்றருவுக்
கிடுவே லியுமா யேழுலகும்
வளைக்குங் கடவுட் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ.

(இ - ள்.) திளைக்கும்-நெருங்கின, சகரர்தொட்ட-சகரர் தோண்டின, பெருகிடங்கு என்று - பெரிய கடலென்று நினைத்து, இடங்கர்மா - முதலைகள், இயங்கும் - சஞ்சரிக்கிற, கீழ்நீர் - கீழ்நீரையுடைய, அழுவம் - பள்ளமாகிய, குண்டு அகழி - ஆழ்ந்த அகழியில், கெழுமு - நிறைந்த, புனல் - நீரின், தெள்திரை - தெளிவாகிய அலைகளை, மேய்ந்து - குடித்து, திளைக்கும் - நெருங்கின, கமஞ்சூல் - நிறைவாகிய சூலினுடைய, நெடும்புயலை - பெரிய மேகத்தை, சிறுகண் பெருகை - சிறிய கண்களையும் பெரிய துதிக்கையினையுமுடைய, பகடு என்று - யானையென்றெண்ணி, ஓர் செங்கண் களிறு பிளிற - ஒப்பற்ற செங்கண்யானைகள் சத்திக்க, நிமிர் - உயர்ந்த, திகிரிகிரி என்று - சக்ரவாளகிரியென் றெண்ணி, இவர்ந்து - ஏறி, உடலம் இளைக்கும்படி - உடம்பு மெலியும்படி, விண்தொட நிவந்த - ஆகாயத்தைத் தீண்டும்படி யுயர்ந்த, எழில் - அழகாகிய, பொன்புரிசை - பொன் மதிலானது, விண்டுபதத்து - ஆகாயத்திற்கு, ஏறும் ஏணி - ஏறத்தகுந்த ஏணியும், பொன்தருவுக்கு - அழகிய கற்பகத்தருவுக்கு, இடுவேலியும் - இட்டவேலியும், ஆய் - ஆகி, ஏழ் உலகும் வளைக்கும்-ஏழுலகங்களையும் வளைக்கின்ற, கடவுள் - தெய்வத்தன்மையமைந்த, கந்தபுரி வாழ்வே - கந்தபுரிச் செல்வமே, தாலோதாலேலோ—, மலையாள் வயிறுவாய்த்த - மலைமகள் வயிற்றிற் பிறந்த, முழுமணியே - முழுரத்னமே, தாலோ தாலேலோ—, (எ - று.)

இடங்கர்மா - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. கீழ்நீர் - ஊற்றுநீர். கமஞ்சூல் - முதிர்ந்தசூல். "கார்கோண்முகந்த கமஞ்சூல்" என்றூர் பிறரும். சிறுகட்பெருங்கை - முரண்டொடை. விண்டுபதம் - ஆகாயம்.

25. சோலைப் புறமூப் புடைக்கனிக
டுக்கு முடத்தெங் கிமையவர்தம்
தோன்ற றிருவோ லக்கத்துத்
தோகை மயிலி னடங்குயிற்றும்

ஏலக் கருங்கொந் தளவளகத்
திளமா தருக்கு முதிர்வேனில்
இளைப்பாற் றுதற்குத் தாற்றெடுஞ்செவ்
விளநீர் கொடுப்ப வீற்றுளைந்த

காலப் புயலின் முகந்துடைக்குங்
கமுகு பழுக்காய்ப் பவழமுடன்
கதிர்முத் திட்டுச் செழும்பாளைக்
கற்றைக் கவரி புடையிரட்டும்

மாலைப் பழனப் பரிதிபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ.

(இ - ள்) சோலைப்புறம் - சோலைகளில், முப்புடைக் கனிகள் - தேங்காய்களை, தூக்கும் - தாங்கிய, முடம்-வளைவாகிய, தெங்கு-தென்ன மரங்கள், இமையவர் தோன்றல் - தேவராசனது, திருவோலக்கத்து - திருவோலக்கத்தில், தோகை - கலாபத்தையுடைய, மயிலின் - மயில் போல, நடம் குயிற்றும் - நடனம் செய்கிற, ஏலம் - மயிர்ச்சாந்தணிந்த, கருங்கொந்தளம் அளகத்து - கரிய குழற்சியாகிய கூந்தலையுடைய, இள மாதருக்கு - இளம் பெண்களுக்கு, முதிர்வேனில் இளைப்பு ஆற்றுதற்கு - முதிர்வேனிற் பருவத்தின் மெலிவை யொழித்தற்கு, தாற்றெடும் - தாறுகளோடும், செவ்விளநீர் கொடுப்ப - செவ்விளநீர்களைக் கொடுக்க, ஈற்று - இறுதிக்காலத்தில், உளைந்த - வருந்தின, காலப்புயலின் - கார் கால மேகத்தின், முகம் துடைக்கும் கமுகு - முகத்தைத் துடைக்கிற கமுகமரங்கள், பழுக்காய் - பழுத்த காயாகிய, பவளமுடன் - பவளத் தோடு, கதிர் - ஒளியுள்ள, முத்து இட்டு - முத்துக்களையும் தந்து, செழும் பாளை - செழிய பாளைகளாகிய, கற்றைக்கவரி - கற்றைச் சாமரங்கள், புடை இரட்டும் - பக்கத்தில் அசையாநிற்கிற, மாலைப் பழனம் - வரிசை யாகிய வயல்கள் சூழ்ந்த, பரிதிபுரி வாழ்வே தாலோதாலேலோ—, மலை யாள் வயிறுவாய்த்த முழுமணியே—, தாலோதாலேலோ—, (எ - று.)

முப்புடை - முப்புடைப்பு. புடைப்பினை மொத்தி யென்பர். திரு வோலக்கம் - திருப்பெருஞ்சபை. மயிலின் என்பதில் இன் ஐந்தனுருபு ஒப்புப்பொருட்டு. தாறு - குலை. கமுகம்பழக் குலை பவளம்போலச் செவ்விதிருத்தலும் அதன்கண் முத்துப்படுதலு முண்மையான், 'கமுகு பழுக்காய்ப் பவளமுடன் கதிர்முத்திட்டு' என்றார். ஆலைப்பழனம் எனக் கொண்டு கரும்புவயல் என்பாருமுளர். மோனையின்மையால் மாலை யெனக் கோடலே நேர்மையாம். (5)

வேறு

26. மாலி மயத்து மடப்பிடி பெற்று
வளர்த்த விளங்களிறே
மழவிடை யேதிரு மாமடி கட்கென
வைத்த கவுத்துவமே
மூல மெனக்குல நான்முறை யோலிடு
முழுமுத லேமூவா
முக்கட் கனிகனி யுஞ்சுவை யேதனி
முத்திக் கொருவித்தே
காலை யிளங்கதி ருக்கெதிர் முதிரும்
கதிர்செம் பவளமுடன்
கதிர்முத் திட்டுவ ணங்கக் கன்னல்கொல்
கமுகுகொ லெனவளரும்
சாலி வயற்றமிழ் வேளூ ரடிகேள்
தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் றலைமைப் புலவா
தாலோ தாலேலோ.

(இ - ள்) மால் இமயத்து - பெரிய இமயமலையிற் பிறந்த, மடப் பிடி - இளம்பிடியானது, பெற்றுவளர்த்த - ஈன்று வளர்த்த, இளங் களிறே - யானைக்கன்றே, மழவிடையே - இளமை பொருந்திய இட பமே, திருமாமடிகட்கு என வைத்த - திருமாமனுகிய அடிகட்கென்று வைத்த, கவுத்துமே - கௌஸ்துப மணியே, மூலம் என - எல்லாப் பொருள்களுக்கும் மூலகாரணனென்று, குலம் - மேலான, நால்மறை - நான்கு வேதங்களும், ஓலமிடும் - முறையிடுதற்குரிய, முழுமுதலே - முழுமுதற் பொருளே, மூவா - அழியாத, முக்கண்கனிகனியும் சுவையே - முக்கண்ணையுடைய கனியினிடத்துப் பழுத்த இரதமே,

தனி - ஒப்பற்ற, முத்திக்கு - வீட்டுக்கு, ஒருவித்தே - ஒரு காரணனே, காலை - காலையில் தோன்றுகிற, இளங்கதிருக்கு - இளஞ் சூரியனுக்கு, எதிர் - எதிராக, முதிரும் - முதிர்கின்ற, கதிர் - கதிர்கள், செம்பவள முடன் - செம்பவளங்களோடு, கதிர் முத்து இட்டு வணங்க - ஒளியுள்ள முத்துக்களையிட்டு வணங்காநிற்க, கன்னல்கொல் - கரும்போ, கழுகு கொல் - கழுகோ, என - என்று (கண்டார்) சொல்லும்படி, வளரும் - வளராநின்ற, சாலிவயல் - செந்நெல்வயல் சூழ்ந்த, தமிழ் - தமிழ்வழங்கு கிற, வேளூர் அடிசேள் - வேளூரடிகளே, தாலோதாலேலோ—, சங்கத் தமிழின் - தமிழ்ச் சங்கத்தின், தலைமைப் புலவா - தலைமைப் புலவனே, தாலோதாலேலோ—, (எ - று.)

மால் மேகத்துக்கோர் பெயராதலால் மாலிமயம் என்றதற்கு மேக மூடிய இமயம் எனப் பொருள் கூறலுமாம். இமயத்து மடப்பிடி யென்றது உமாதேவியை. மடப்பிடி உவமையாகுபெயர். மாமடிகள் என்றது திருமாலை. ஒலிடும் - ஒலமிடும் என்பதன் ரொகுத்தல். (6)

27. கருமுகி லுக்கரி தாமடி வாரம்
கண்டிரு பறவைகடம்
கண்களி பொங்கவொர் பறவை முடித்தலை
காணு துட்குவரப்
பொருபுன லருவித் தலையின் மிசைத்தவழ்
புதுமதி நிலவொழுகப்
புள்ளூ ரிற்பொலி வெள்ளி மலைக்கட்
பொன்மலை யைக்குவவு
குருமணி வயிரப் புயமெனு மெட்டுக்
குவடுஞ் சுவடுபடக்
குத்திப் பொருமிரு கோடு படைத்ததொர்
கூந்தற் பிடிபெற்றுத்
தருமொரு தொந்தித் தந்திக் கிளையாய்
தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் றலைமைப் புலவா
தாலோ தாலேலோ.

(இ - ள்) கருமுகிலுக்கு - கரிய மேகத்துக்கு, அரிது ஆம் - அரி தாகிய, அடிவாரம் - அடிவாரத்தை, இருபறவைகள் கண்டு - இரண்டு புட்கள் கண்டு, தம் கண் களிபொங்க - தமது கண்கள் களிப்புமிக,

ஓர் பறவை - ஒரு புள்ளானது, முடித்தலை காணது - முடித்தலை யைக் காணமாட்டாமல், உட்குவர - நாணிவர, பொருபுனல் - அலைமோதுகிற, புனல் அருவி - நீரருவிகளையுடைய, தலையின் மிசைதவழ் - உச்சிமீது தவழ்கின்ற, புதுமதி நில ஒழுக - புதுமதி யின் நிலாவெறிக்க, புள்ளூரில் பொலி - புள்ளூரில் விளங்குகிற, வெள்ளி மலைக்கண் - வெள்ளிமலையினிடத்துள்ள, பொன்மலையை - பொன் வரையை, குவவு - திரட்சியாகிய, குருமணிவயிரம் - நிறமுள்ள அழகிய வயிரத்தை நிகர்த்த, புயம் என்னும் - தோள்களென்கிற, எட்டு குவடும் - எண் குவடும், சுவடு பட - தழும்பு பட, குத்தி பொரும் - குத்திப் போர் செய்தற்குரிய, இருகோடு படைத்தது - இரண்டு கொம்புபடைத்ததாகிய, ஓர் கூந்தல்பிடி - ஒப்பற்ற கூந்தலையுடைய பெண்யானையானது, பெற்று தரும் - ஈன்றளித்த, ஒரு தொந்தி - ஒப்பற்ற தொந்தியையுடைய, தந்திக்கு இளையாய் - யானைக்கிளையவனே, தாலோதாலேலோ —, சங்கத் தமிழின் - தமிழ்ச் சங்கத்தின், தலைமைப் புலவா - தலைமைப் புலவனே, தாலோதாலேலோ—, (எ - று.)

கருமுகில் என்றது திருமாலை. இருபுட்கள் என்றது சம்பாதி சடாயு என்பவரை. ஓர் பறவை யென்றது பிரமனை. 'குருமணி வயிரப் புயமெனு மெட்டுக் குவடுஞ் சுவடுபடக், குத்திப் பொருமிருகோடு படைத்ததொர் கூந்தற்பிடி' என்றது உமாதேவியை. இங்ஙனங் குத்திப் பொருத தெஞ்ஞான்றெனின், திருக்கச்சியில் கம்பையாற்றிற் பூசித்துக் கொண்டிருந்த ஞான்றென்க. 'மாக்கைக் கிரங்குங் குருகும் வளர்சக்ர வாகப் புள்ளுந், தாக்கச் சரபங் குழைந்த தெவ்வாறு சகதலத்தை, யாக்கிப் பெருக்கித் திருவறச் சாலியி லன்னமிட்டுக், காக்கைக் கொருகொக்கின் கீழே யிருக்குங் கருங்குயிலே' என்றார் பிறரும். 'எட்டுக் குவடுஞ் சுவடுபடக் குத்திப் பொருமிரு கோடுபடைத்ததொர் கூந்தற்பிடி' என்றதனு லிறைவியி னூற்றலுந் தொனிக்கின்றது. தந்தி - தந்தத்தை யுடையதெனப் பொருள்படுவதோர் வடசொல். (7)

28. உண்ணெகிழ் தொண்ட ருளத்திருள் சிந்திட
ஒளிவிடு முழுமணியே
உயர்மறை நூல்கலை முடிவின் முடிந்திடும்
ஒழுகொளி மரகதமே
விண்ணெடு மண்ணை விழுங்கி யருட்கதிர்
விரியு மிளஞ்சுடரே
மெய்ப்புலன் வேய்ந்து சமைந்ததொர் வீட்டை
விளக்கும் விளக்கொளியே

புண்ணிய நாறுமொர் பெண்கனி கனியும்
புனித நறுங்கனியே
புள்ளூ ரெனவெம துள்ளத் தடநிறை
புத்தமு தக்கடலே
தண்ணொளி பொங்கிய கருணை நிதியே
தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் றலைமைப் புலவா
தாலோ தாலேலோ.

(இ - ள்.) உள்நெகிழ் - மனமுருகுகின்ற, தொண்டர் - அடியாரது, உள்ளத்து - மனத்திலுள்ள, இருள் சிந்திட - (அஞ்ஞானமாகிய) இருள் ஒழிய, ஒளிவிடும் - ஒளிவீசுகின்ற, முழுமணியே - முழுமாணிக்கமே, உயர் - உயர்ந்த, மறை நூல் கலை முடிவில் - மறையும் நூலும் கலையுமாகிய இவற்றின் அந்தத்தில், முடிந்திடும் - முடியப்பெற்ற, ஒழுகு ஒளி மரகதமே - ஒழுகாநின்ற ஒளியையுடைய மரகதமே, விண்ணொடு மண்ணை - விண்ணுடனே மண்ணையும், விழுங்கி - உட்கொண்டு, அருள் கதிர் விரியும் - அருளாகிய கிரணங்கள் விரியப்பெற்ற, இளஞ்சுடரே - இளஞாயிறே, மெய்புலன் - உண்மையாகிய அறிவினால், வேய்ந்து சமைந்தது - வேயப்பெற்றுச் சமைந்ததாகிய, ஓர் வீட்டை - ஒப்பற்ற வீட்டினை, விளக்கும் - விளங்கச்செய்கிற, விளக்கு ஒளியே - தீபப்பிரகாசமே, புண்ணியம் நாறும் - புண்ணியம் பரிமளிக்கிற, ஓர் பெண்கனி கனியும் - ஒரு பெண்கனி விரும்பும், புனிதம் - பரிசுத்தமாகிய, நறுங் கனியே - நல்ல கனியே, புள்ளூர் என - புள்ளூரிற்போல, எமது உள்ளத் தடம் நிறை - எமது மனமாகிய இடத்தில் நிறைந்த, புது அமுதம் கடலே - புதிய அமிர்தசாகரமே, தண் ஒளி பொங்கிய - தட்பமாகிய ஒளி மிகுந்த, கருணைநிதியே - கிருபாநிதியே, தாலோ தாலேலோ—, சங்கத்—, (எ - று.)

மறைநூல் கலைமுடிவில் - என்பதனை மறை முதலியவற்றிறுதியிலமைத்து வேதத்தின் முடிவிலும் ஆகமாதிகளாகிய நூல்களின் முடிவிலும், அறுபத்துநான்கு கலைகளின் முடிவிலும் எனப் பொருளுரைக்க. மெய்ப்புலன்வேய்ந்து சமைந்ததொர் வீட்டை என்பதற்கு உண்மையறிவாற் புலன்களை வென்றதனாலுளதாகிய வொப்பற்ற வீட்டினையென்றுரைத்தலுமாம். 'புண்ணியநாறுமொர் பெண்கனி' என்றது உமாதேவியை. புதுஅமுதம் என்பது புத்தமுதமென வொற்றிரட்டித்தது; விரித்தல். 'புத்தமிர்தபோகமுங் கற்பக நன்னீழலும்' என்றார் பெரியாரும்.

சந்த விருத்தம்

29. தோலாத மூத்தமிழ் நாவா மூவா மாவாமச்
சூர்வே ரறத்தொடு வேலா நூலா நூலோதும்
சீலாம லக்கொடி பாலா கீலா மேலாகும்
தேவாதி பற்கொரு தேவா வோவா தேகூவும்
காலாயு தக்கொடி வீரு வேரு வேறேறுங்
காபாலி பெற்றகு மாரா வீரா பேராளா
சேலார்வ யற்குரு கூரா தாலோ தாலேலோ
சேனப திப்பெரு மாளே தாலோ தாலேலோ.

(இ - ள்) தோலாத - தோல்வியடையாத, முத்தமிழ்நாவா - முத்தமிழ் நாவனே, மூவா - முதிராத, மா ஆம் - மாமரவுருவாய் வந்த, அ - அந்த, சூர் - சூரபன்மனது, வேர் அற - வமிச மூலமற்றுப் போகும்படி, தொடு - தொட்ட, வேலா - வேற்படையை யுடையவனே, நூலா நூல் ஒதும் சீலா-வேதத்தினுல் சொல்லப்பட்ட வொழுக்கத்தையுடையவனே, மலைக்கொடி பாலா - மலைமகளுக்குப் பாலகனே, கீலா - ஒளியுருவனே, மேலாகும் - மேன்மையாகிய, தேவாதிபற்கு ஒருதேவா - தேவாதி பனுக்கு ஒப்பற்ற தேவனே, ஓவாதே கூவும் - இடையறுமற் கூவு கின்ற, காலாயுதம் கொடி - சேவற்கொடியையுடைய, வீரு - மேன்மை யுள்ளவனே, ஏரு ஏறு ஏறும் - (ஒருவரும்) ஏறுத ஏற்றின்மீதேறுகின்ற, காபாலி பெற்ற குமாரா - சிவபெருமான் பெற்ற குமாரனே, வீரா - வீரனே, பேராளா - பிரபலனே, சேல்ஆர் வயல்-சேல்மீன்கள் நிறைந்த வயல் சூழ்ந்த, குருகூரா - புள்ளூரனே, தாலோ தாலேலோ —, சேனு பதிப் பெருமாளே, தாலோ தாலேலோ —, (எ - று.)

முத்தமிழ்நாவன் - அகத்தியற்கு முத்தமி ழுறிவுறுத்த நாவினை யுடையவன். நூலாநூல் என்றது ஒருவராற் செய்யப்படாத நூலாகிய வேதத்தை. கீலம் - ஒளி. கபால கரஞ்தலாற் சிவபிரானைக் காபாலி யென்றார். நூலா என்பதற்கு வேதமானவனே என்றும், ஏரு என்பதற்கு சிங்கவேறுபோன்றவனே என்றும் பொருள் கொள்ளுதலும் ஒன்று. பெருமையையுடையவ னென்னும் பொருள் பயப்பதாகிய பெருமான் என்பது பெருமாள் என மரீஇயது. (9)

30. ஊனுயு யிர்க்குயி ரானுய் தாலோ தாலேலோ
ஓதாது ணர்ந்திடு போதா தாலோ தாலேலோ
ஆனவ ருட்கரு பாலு தாலோ தாலேலோ
ஆயாத சொற்சொலு பாயா தாலோ தாலேலோ

நானுயெ னக்கரி தானுய் தாலோ தாலேலோ
நாதாதி கட்கனு பூதா தாலோ தாலேலோ
தேனுர்பொ ழிற்குரு கூரா தாலோ தாலேலோ
சேனுப திப்பெரு மாளே தாலோ தாலேலோ.

(இ - ள்) ஊன் ஆய் - உடம்புகளாகி, (அவற்றுள்ளிருக்கிற)உயிர்க்கு-உயிர்களுக்கு, உயிர்ஆனுய்-உயிரா யிருப்பவனே, தாலோதாலேலோ —, ஓதாது உணர்ந்திடு - ஓதாதுணர்ந்த, போதா - அறிவனே, தாலோ தாலேலோ —, ஆனு அருட்கு - நீங்காத கருணைக்கு, அநுபாநா - அநுபாநமாயிருப்பவனே, தாலோ தாலேலோ —, ஆயாத சொல் சொல் - (ஒருவராலும்) ஆராயப்படாத சொல்லைச் சொன்ன, உபாயா-தந்திரனே, தாலோ தாலேலோ —, நான் ஆய் - நானுகி, எனக்கு அரிது ஆனுய் - எனக்கரிதானவனே, தாலோ தாலேலோ —, நாதாதிகட்கு - நாதமுதலானவைகளுக்கு, அநுபூதா-அநுபூதனே, தாலோ தாலேலோ —, தேன் ஆர் பொழில்-தேன் நிறைந்த சோலைகள் சூழ்ந்த, குருகூரா - புள்ளூரனே, தாலோ தாலேலோ —, சேனுபதிப் பெருமாளே —, தாலோ தாலேலோ —, (எ - று.)

ஊன் - தசை, இது கருவியாகுபெயரா யுடம்பினை யுணர்த்திற்று. உயிர்க்குயிர் - அந்தராத்மா. போதம் - ஞானம். ஆயாத சொல் - பிரணவம். நாதாதிகள் - நாதமுதலாகிய தத்துவங்கள். அநுபூதம் - பிரமாணங்களைக்கொண்டறியத் தகுந்தது. தேன் வண்டு எனினுமாம் (10)

தாலப்பருவம் முற்றிற்று

4. சப்பாணிப் பருவம்

31. முடங்குந் திரைப்பரவை வயிறுளைந் தீன்றநறு
முளரிப் பிராட்டிவைத்து
முத்தாடு பச்சைப் பசுங்கிள்ளை யெனமழலை
முதிருமென் குதலைகற்பத்
தொடங்குங் குறப்பாவை கற்றைக் குழற்கஞ்சி
றூமமொடு தாமமிட்டுச்
சுடிகைநுதல் வெயர்வுந் துடைத்தொழுகு கத்தூரி
தூரியங் கொண்டுதீட்டிக்

குடங்கைக் கடங்கா நெடுங்கட் கடைக்கழகு
கூரவஞ் சனமெழுதிமென்
கொங்கைத் தடத்தும் பசுங்களப மப்பியவள்
குற்றேவன் மூற்றுமாற்றித்
தடங்குங் குமப்புயங் கொட்டிநட மிட்டவன்
சப்பாணி கொட்டியருளே
தையனு யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே.

(இ - ள்.) முடங்கும் திரைபாவை - வளைகின்ற அலைகளையுடைய பாற்கடலானது, வயிறு உளைந்து ஈன்ற - வயிறுநொந்து பெற்ற, நறு முளரிபிராட்டி - நறிய தாமரைமலர்த் தவிசையுடைய திருமகள், வைத்து - தன் முன்கையில் வைத்துக்கொண்டு, முத்தாடு - முத்தமிட்டு விளையாடுகிற, பச்சை பசுங்கிள்ளை என - பச்சைப் பசுங்கிளிபோல, மழலைமுதிரும் - மழலைமுதிர்கின்ற, மெல்குதலை கற்பத் தொடங்கும் - மெல்லிய குதலைச்சொற்களைக் கற்கத் தொடங்குகிற, குறப்பாவை - குறப்பெண்ணாகிய வள்ளி நாயகியின், கற்றைக்குழற்கு - கற்றையாகிய கூந்தலுக்கு, அகில் தூமமொடு - அகிற் புகையோடு, தாமம் இட்டு - பூமாலைகளைச் சூட்டி, சுடிகை - சுட்டியணிந்த, நுதல் - நெற்றியிலுள்ள, வெயர்வும் துடைத்து - வேர்வையையுந் துடைத்து, ஒழுகு கத்தூரி - நெகிழ்ந்த கஸ்தூரி திலகத்தை, தூரியம்கொண்டு தீட்டி - எழுதி கோலால் எழுதி, குடங்கைக்கு அடங்கா - குடங்கைக்குள்ளடங்காத, நெடு - நெடிய, கண் கடைக்கு - கடைக்கண்ணுக்கு, அழகு கூர - அழகு மிகும்படி, அஞ்சனம் எழுதி - அஞ்சனந்தீட்டி, மெல்கொங்கைத் தடத்தும் - மென்மையாகிய ஸ்தனப்பிரதேசத்தும், பசுங் களபம் அப்பி - பசுமையாகிய கலவைச்சந்தனம் பூசி, அவள் - அவளது, குற்றேவல் முற்றும் ஆற்றி - குற்றேவல் முழுதுஞ்செய்து, தடம் - மலைபோலும், குங்குமம் - குங்குமக் குழம்பணிந்த, புயம்கொட்டி - தோள்களைத் தட்டிக்கொண்டு, நடம் இட்டவன் - நடநஞ்செய்தவனே, சப்பாணி கொட்டியருளே - இரண்டு கைகளையும் சேர்த்து ஓசையெழக் கொட்டுக, தையனு யகி மருவு - தையனுயகியார்ச் சேர்ந்த, தெய்வநாயகன் மதலை - சிவபிரானுக்குப் புதல்வனே, சப்பாணி கொட்டியருளே—, (எ - று.)

பரவை யென வாளா கூறினுரேனும் 'வயிறுளைந்தின்ற நறுமுளரிப் பிராட்டி'யென மேல்வருதலால் பாற்கடலென்றுரை யுரைக்கலாயிற்று. குடங்கை - உள்ளங்கை. குடங்கைக் கடங்காநெடுங்கண் என நெடுமையொன்றே கூறினுரேனும் எனைய அகற்சி முதலியவுங்கொள்க.

'ஈசற் கியாம்வைத்த வன்பின கன்றவன் வாங்கியவெம், பாசத்திற் காரொன்றவன் றில்லையின் னெளிபோன்றவன்றேர், பூசத் திருநீறென வெளுத் தாங்கவன் பூங்கழல்யாம், பேசத் திருவார்த்தையிற் பெருளீளம் பெருங்கண்களே.' 'அரியனயாமின்று காண்கின்றன கண்ணன் விண் ணனேயாய், பெரியன காதம் பொருட்கோ பிரிவென ஞாலமெய்தற், குரியன வொண்முத்தும் பைம்பொன்னு மேந்தியொரோ குடங்கைப், பெரியன கெண்டைக் குலமிவையோ வந்துபோகின்றவே' என்றார் பெரியாரும். கூர்தல் - மிகுதல். குறப்பாவையைக் கைபுனைதலாற் றனக்குள்ளதாகிய வுட்களிப்புப் புறம்போதரல் தோன்ற, 'தடங் குங்குமப் புயங்கொட்டி நடமிட்டவன்' என்றார். ஒரு காரியஞ் செய்யப் புகுந் தோன், அது முற்றுப்பெற்ற தனையானே களிப்பின் மிகுதியாற் றேள் தட்ட லுலகியற்கை யாதலுங் காண்க. நடமிட்டவன் மதலை என்பன அண்மைவிளிகள். சப்பாணிப்பருவம் - இருகரங்களையும் ஒருங்கு சேர்த் துக் கொட்டும் பருவம். (1)

32. மழைக்கொந் தளக்கலப மயிலிளஞ் சாயனெடு
மதரரிக் கெண்டையுண்கண்
மான்கன்றை யமருலகு வாழப் பிறந்திடு
மடப்பிடியை வானவில்லைக்
குழைக்குந் தடக்கைத் திருத்தாதை நீரொடு
கொடுப்பக் குடங்கையேற்றுக்
கொழுமலர் மணங்கமழ் மணப்பந்தர் நிற்பவக்
கொம்புமின் கொடியினெல்கி
யிழைக்கும் பசும்பொற் றசும்பென வசும்புபொன்
னிளமுலை முகங்கோட்டிநின்
றெய்யாமை நோக்கும் படைக்கட் கடைக்கணைக்
கின்னமுத மூற்றவின்பந்
தழைக்கும் பெருங்காதல் வெள்ளந் திளைத்தவன்
சப்பாணி கொட்டியருளே
தையனு யிகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே.

(இ - ள்.) மழை - கருமுகில் போன்ற, கொந்தளம் - கூந்தலையும், கலபம் - தோகையையுமுடைய, மயில் - மயிலினது, இளஞ்சாயல் - இளஞ் சாயலையும், நெடு மதர் அரி கெண்டை உண்கண் - நெடிய மதர்த்த செவ்

வரிபரந்த கெண்டைமீன் போன்ற மையுண்ட கண்களையுமுடைய, மான் கன்றை - மான் கன்றினை, அமர் உலகு - தெய்வலோகமானது, வாழ - வாழ்வடைய, பிறந்திடும் - அவதரித்த, மடப்பிடியை - இளம் பிடியை, வானவில்லை குழைக்கும் - ஆகாய வில்லை வளைக்கிற, தடம்கை - பெரிய கையினையுடைய, திருத்தாதை - திருத்தந்தையானவன், நீரொடு கொடுப்ப - தாரை நீரோடு கொடுக்க, குடங்கை ஏற்று - குடங்கையால் ஏற்றுக்கொண்டு, கொழுமலர் - செழிய மலர்களின், மணம் கமழ் - மணம் வீசுகின்ற, மணப்பந்தர் நிற்ப - கலியாணப் பந்தலில் நிற்க, அ - அந்த, கொம்பு - பூங்கொம்பு போல்பவள், மின்கொடியின் ஒல்கி - மின்னற்கொடிபோ லசைந்து, இழைக்கும் - செய்யப்பட்ட, பசும்பொன் தசும்பு என - பசும் பொற்குடம் போல, அசும்பு பொன் - பரவின தேமலையுடைய, இளமுலைமுகம் கோட்டி நின்று - இளமுலைகாறும் முகம் வளைத்து நின்று, எய்யாமை நோக்கும் - அறியாமல் நோக்குகின்ற, படை - வேற்படை போன்ற, கண் - கண்கள், கடைக்கண் நோக்கு - கடைக்கண்ணோக்காகிய, இன்அமுதம் ஊற்ற - இனிய அமிர்தத்தை வார்க்க, இன்பம் தழைக்கும் - இன்ப மிகுதற்கிடமாகிய, பெருங்காதல் வெள்ளம் - பேராசையாகிய கடலில், திளைத்தவன் - மூழ்கினவனே, சப்பாணி—, தையனாகி—, (எ - று.)

மான்கன்றை, மடப்பிடியை என்றது தெய்வயானையாரை. அமருலகென்பது 'அமருலகு' எனத் தொகுத்தலாயிற்று. 'வான வில்லைக் குழைக்குந் தடக்கைத் திருத்தாதை' என்றது இந்திரனை. எய்த்தல் - அறிதல். இஃதிப் பொருட்டாதலை, 'மெய்யே யிவற்கில்லை வேட்டையின்மேன் மனமீட் டிவளும், பொய்யே புனத்தினை காப்ப திறைபுலியு ரனையாண், மையேர் குவளைக்கண் வண்டினம் வாழுஞ் செந்தாமரைவா, யெய்யே மெனினுங் குடைந் தின்பத்தேனுண் டெழி றருமே' என்னும் மணிவாசகப் பெருமான் பாடலானு முணர்க. திளைத்தவன் - அண்மைவிளி. (2)

33. உண்ணிலா வுவகைத் தடங்கடல் படிந்திட்ட
வும்பருஞ் செங்களம்பட்
டொண்பரிதி யுடல்கிழித் தோடுங் கடற்ரூனை
யொளிறுவா ளவுணர்குழுவும்
தெண்ணிலா மதிதுதற் றெய்வப் பிணைக்கள்வாய்த்
தேனமுது மழுதவாரித்
தெள்ளமுது முடனிருந் துண்ணப் பணித்திட்ட
செங்கைவேல் பைம்புனத்துப்

பண்ணுலா மழலைப் பசுங்கிளவி யெயினர்பொற்
பாவைவிழி வேலொடொப்புப்
பார்க்குந் தொறுந்தலை கவிழ்த்துநின் றவடிருப்
பவளத்து முத்தரும்புந்
தண்ணிலா வுக்கொண் சகோரமென நின்றவன்
சப்பாணி கொட்டியருளே
தையனு யிகமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே.

(இ - ள்.) உள் - மனத்தில், நிலாவு - நிலைபெற்ற, உவகை - களிப்பாகிய, தடம்கடல் படிந்திட்ட - பெருங்கடலில் மூழ்கின, உம்பரும் - தேவர்களும், செங்களம் பட்டு - போர்க்களத்தில் இறந்து, ஒள் - ஒட்பமாகிய, பரிதி உடல் - சூரியமண்டலத்தை, கிழித்து ஓடும் - கிழித்து விரைந்து செல்லுகிற, கடல்தானை - கடல்போலும் படையாகிய, ஒளிறுவாள் - ஒளிசெய்கிற வாட்படையையுடைய, அவுணர் குழுவும் - அவுணர் கூட்டமும், தெள்நிலாமதி-தெளிவாகிய நிலவையுடைய பிறைபோன்ற, நுதல் - நெற்றியையுடைய, தெய்வப்பிணைக்கள் - தெய்வப் பெண்களது, வாய் - வாயிலுண்டாகிய, தேன் அமுதும் - தேன்போலும் அமிர்தத்தையும், அமுதம்வாரி - பாற்கடலிற் பிறந்த, தெள் அமுதும் - தெளிவாகிய அமிர்தத்தையும், உடன் இருந்து உண்ண - கூடியிருந் துண்ணும்படி, பணித்திட்ட - கட்டளையிட்ட, செங்கைவேல் - செங்கை வேலானது, பைம்புனத்து - பசிய தினைப்புனத்தில், பண் உலவு - பண்கள் நடையாடுகிற, மழலை - மழலையாகிய, பசுங்கிளவி - பசிய சொற்களையுடைய, எயினர் பொன்பாவை - குறவரது பொற்பாவை போல்வாளாகிய வள்ளிநாயகியின், விழி வேலொடு ஒப்ப - கண்ணுகிய வேலொடொத்திருத்தலை, பார்க்குந் தோறும் - (முருகக் கடவுள்) நோக்குந் தோறும், தலைகவிழ்த்து நின்று - தலை குனிந்து நின்று, அவள் - அவளது (வள்ளிநாயகியினது), திருப்பவளத்து - திருப்பவளத்திலுள்ள, முத்து அரும்பும் - முத்துக்களி லுண்டாகிய, தண் நிலாவுக்கு - குளிர்ச்சியாகிய சந்திரிகைக்கு, ஒள் சகோரம் என நின்றவன் - ஒள்ளிய சகோரப் புட்போலெதிர்பார்த்து நின்றவனே, சப்பாணி—,தையலுகி—,(எ - று.)

உள், உம்பர் என்பன இடவாகுபெயர்கள். மாண்டவராது, உதிரத்தாற் செவந்து காட்டலால் போர்க்களம் செங்களம் எனப்பட்டது. போரில் வெந்நிடாதிறந்தவர் சூரியமண்டலங் கீண்டு சென்று வீரசுவர்க்கமடைந்து தெய்வப்பெண்களே அனுபவித்தலோடு அமுதமுண்பது மியல்பாதலால், 'செங்களம்பட் டொண்பரிதி யுடல்கிழித்தோடுங் கடற்றானை

யொளிறுவா ளவுணர் குழுவும், தெண்ணீலா மதிநுதற் றெய்வப் பிணக்கள்வாய்த் தேனமுது மமுதவாரித், தெள்ளமுது முடனிருந் தண்ணப் பணித்திட்ட செங்கைவேல்' என்றார். அவுணர் இடையறாது சர்வாவஸ்த்தைகளிலும் தற்கிழமைப் பொருள்போல வாளையுடைய ராதல் பற்றி, அவரை 'வாளவுணர்' என்றார். திருப்பவளம் - வாய் (அதரம்). முத்து - உவமையாகுபெயராய்ப் பல்லை யுணர்த்திற்று. தண்ணிலா என்றது புன்சிரிப்பை. நின்றவன் - அண்மைவிளி. (3)

34. மடநடைத் தெய்வக் குறப்பாவை திருவுருவின்
மயிலிளஞ் சாயலுநிலா
மணிவட மறப்புடைத் திறுமாந்த கனதன
வனப்புங் குறித்துநோக்கி

யிடுகிடைப் பாவிக் கினிப்பிழைப் பில்லைகொல்
எனத்திரு வுளங்குழைந்தாங்
கேந்திளங் கொங்கையை யிணைப்புயத் தேந்திநின்
றெல்லா வுறுப்புநிற்கக்

குடமூலைக் கேயிவள் குடிபிறப் புக்கியை
குணங்கிடைத் ததுகொலென்றக்
கோதைநெடு நாணெய்த வவயவங் கட்குள
குணகுணந் தனிதெரிக்கும்

தடமலர்க் கைத்தலஞ் சேந்தொளி துளும்பவொரு
சப்பாணி கொட்டியருளே
தையலை யகிமருவு தெய்வநா யகன்மகிலை
சப்பாணி கொட்டியருளே.

(இ - ள்.) மடநடை - இளநடையையுடைய, தெய்வம் - தெய்வத் தன்மை யமைந்த, குறப்பாவை - குறப்பெண்ணாகிய வள்ளிநாயகியின், திருவுருவில் - திருவுருவிலுள்ள, மயில் இளஞ் சாயலும் - இளமை யாகிய மயிற்சாயலையும், நிலாமணி வடம் அற - முத்துவடங்கள் அற்று விழும்படி, புடைத்து - புடைகொண்டு, இறுமாந்த - நிமிர்ந்த, கனதன வனப்பும் - கனதனங்களின் அழகையும், குறித்து நோக்கி - உற்று நோக்கி, இடுகு இடை பாவிக்கு - சிறுகிய இடையாகிய பாவிக்கு, இனி பிழைப்பு இல்லை என - இனிப் பிழைத்தலில்லையென்று, திருவுள்ளம் குழைந்து - திருவுளமெகிழ்ந்து, எந்து இளங்கொங்கையை - படாத

இளந்தனங்களே, இணைபுயத்து ஏந்தி நின்று - இருதோள்களாலும் தாங்கி நின்று, எல்லா உறுப்பும் நிற்க - எல்லா அவயவங்களும் நிற்க, குடமூலைக்கே - குடம்போலுந் தனங்களுக்கே, இவள் - இவளது, குடிப் பிறப்புக்கு இயைகுணம் - குடிப்பிறப்புக் கேற்ற குணம், கிடைத்தது என்று - உண்டாயிற்றென்று, அ - அந்த, கோதை - வள்ளிநாயகி, நெடுநாண் எய்த - பெருநாணடைய, அவயவங்கட்கு உள்ள - உறுப்புக் களுக்குள்ள, குணகுணம் - குணகுணங்களே, தனிதெரிக்கும் - தனித் தனியே தெரிவிக்கிற, தடமலர் - தாமரை மலர்போலும், கைத்தலம் - கைத்தலமானது, சேந்து - செவந்து, ஒளி துளும்ப - ஒளி ததும்ப, ஒரு சப்பாணி கொட்டியருளே—, தையனயகி—, (எ - று.)

இடுகுதல் - சிறுகுதல், கொல் - அசை, குடிப்பிறப்பு - குறக் குடிப்பிறப்பு, குடிப்பிறப்புக் கியைகுணம் - கொலை, குடமூலைக்கு இடையைக் கோறற் றொழிலுண்மையின், 'குடமூலைக்கே யிவள் குடிப் பிறப்புக் கியைகுணங் கிடைத்தது' என்றார். குணகுணம் - நற்குணம் தீக்குணம். சேந்து - செம்மை என்னும் பண்படியாகப் பிறந்த இறந்த கால வினையெச்சம். இது துளும்ப வென்னும் வினையையும், அது கொட்டியருள் என்னும் வினையையுங் கொண்டன. (4)

35. விண்ணெண் கடற்புவன முடவுப் படத்தேந்து
வேந்துபொலி பாந்தள்வைப்பும்
விரிநீர் வரைப்புமெழில் விஞ்சைய ரிருப்புமுகை
விண்டுநறை விரிமுண்டகக்
கண்ணன் நிருப்பதமு நான்முகக் கடவுள்பூங்
கஞ்சமுங் குலிசப்பிரான்
கற்பகக் காவுநின் றெண்டர்க டொழும்புக்கொர்
காணியா வைத்துமற்றத்
திண்ணென் றடக்கைவெஞ் சிலைவேடர் குடிகொண்ட
சீறூரு மூரூர்தொறும்
செந்தினைப் புனமூடு தண்சாரல் பிறவுமாம்
சீதனக் காணிபெற்றத்
தண்ணென் குறிஞ்சித் தலந்தலை யளிப்பவன்
சப்பாணி கொட்டியருளே
தையன யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே.

(இ - ள்.) விண் எண் - விண்ணுலகத்தாரும் மதித்தற்குரிய, கடல் புவனம் - கடல்சூழ்ந்த வுலகமுழுதும், முடவுபடத்து - வளைவாகிய தன் படங்களால், எந்து - தாங்குகின்ற, வேந்துபொலி - நாகராஜ னுகிய ஆதிசேடன் விளங்குகிற, பாந்தள் வைப்பும் - நாகலோகமும், விரிநீர் வரைப்பும் - கடல்சூழ்ந்த இவ்வுலகமும், எழில் விஞ்சையர் இருப்பும் - அழகாகிய வித்தியாதரலோகமும், முகைவிண்டு - மொட்டு விரிந்து, நறைவிரி - வாசனை வீசுகிற, முண்டகக் கண்ணன் - தாம ரைக் கண்ணனுகிய திருமாலின், திருப்பதமும் - அழகிய பதவியும், நான்முகக்கடவுள் - பிரமதேவனது, பூ கஞ்சமும் - அழகிய தாமரை மலர்த்தவிசும், குலிசப்பிரான் - வயிரவாளையுடைய தேவேந்திரனது, கற்பகக்காவும் - கற்பகச் சோலையும், நின்தொண்டர்கள் தொழும் புக்கு - உன் அடியாரது அடிமைத் திறத்துக்கு, ஓர் காணியா வைத்து - ஓர் காணியாட்சியாக வைத்துவிட்டு, அ - அந்த, திண் என் - திண் ணென்ற, தடக்கை - பெரிய கையில், வெஞ்சிலை - வெவ்விய வில்லை யுடைய, வேடர் குடிகொண்ட - வேடர் குடிகொண்டிருக்கிற, சிறு ஊரும் - சிற்றூர்களும், ஊர் ஊர்தொறும் - ஊரூர் தோறுமுள்ள, செந் தினைப் புனமூடு - செந்தினைப்புனம் நிறைந்துள்ள, தண்சாரல் பிறவும் ஆம் - தண்ணிய சாரல்களும் பிறவுமாகிய, சீதனக்காணிபெற்று - சீதனக் காணிகளாப்பெற்று, தண்ணென் குறிஞ்சித்தலம் - தண்ணென்ற குறிஞ்சி நிலத்தை, தலையளிப்பவன் - காப்பவனே, சப்பாணி—, தைய லுயகி—, (எ - று.)

விண் - இடவாகுபெயர், இதில் உயர்வு சிறப்பும்மை தொக்கது. பாந்தள் - பாம்பு. வைப்பு - உலகம். விண், பாந்தள் வைப்பு என்பவை கூறியொழிந்தமையின் விரிநீர் வரைப்பு இவ்வுலகத்தை யுணர்த்திற்று. கடலினும் விரிந்த நீரின்மையின் அதனை 'விரிநீர்' என்றார். 'விண் ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத், துண்ணின் றுடற்றும் பசி' என்ற திருக்குறளினும் விரிநீர் இப்பொருட்டாதல் காண்க. விண் என்பதை - ஓரணுகாண வோசை எனப் பொருள் கொண்டு கடலுக்கு அடையாக்கினும் அமையும். முண்டகக் கண்ணன் என்பதற்குச் செந் தாமரை மலர்போலுங் கண்களையுடையவன் என்பது பொருளாயினும், ஈண்டுத் 'திருமாலுக்கோ ரிடுகுறிப்பெயர் போன்று நின்றது. 'தாம வீழ்வார் மென்றோட்டியிலி னினிதுகொ, லாமரைக் கண்ணனுலகு' என்ற திருக்குறளினும் தாமரைக் கண்ணன் என்றது திருமாலுக்கோர் பெயராய் நிற்றல் காண்க. விண்ணுலகு முதலிய வெல்லாவற்றையும் தொண்டர்க்குக் காணியாட்சியாக்கி, வேடர் சிற்றூர் முதலியவற்றைச் சீதனக் காணியாகப் பெற்றுக் குறிஞ்சி நிலம் புரப்பவனே சப்பாணி கொட்டியருள் என முடிக்க. (5)

வேறு

36. கடலைச் சுவற வடித்து மிடித்துக்
கனவரை துகள்கண்டும்
கடிதிற் றிரிய வகுப்பதை யொப்பக்
காரவு ணக்கடலின்

உடலிற் பெருகிய குருதிக் கடல்பிண
வோங்கலொ டோங்கவமைத்
தொட்டிய வொட்டல ரிற்பிற கிட்டவர்
ஒழியப் பிறரையெலாம்

கடவுத் தாழியின் மத்தெறி தயிரிற்
றத்துதி ரப்புனலிற்
றசைகுடர் நிணமொடு மூளை குழம்பச்
சமர்விளை யாடல்செயும்

குடுமிச் சுடர்வடி வேலைத் தொட்டவ
கொட்டுக சப்பாணி
கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன்
கொட்டுக சப்பாணி.

(இ - ள்) கடலை - சமுத்திரத்தை, சுவற அடித்தும் - வற்றடித்தும், கனவரை - பெரிய மலையை, இடித்து துகள் கண்டும் - இடித்துப் பொடியாக்கியும், கடிதின் - விரைவாக, திரிய வகுப்பதை ஒப்ப - மீட்டும் வகுப்பதை நிகர்க்க, கார் அவுணக் கடலின் - கரிய அவுணக் கடலினது, உடலின் பெருகிய - உடம்பினின்றும் பெருகிய, குருதிக் கடல் - உதிரக் கடலானது, பிணம் ஓங்கலொடு ஓங்க - பிணமலைகளோடு உயர்ந்து தோன்ற, அமைத்து - அமையச் செய்து, ஒட்டிய ஒட்டலரில் - சேர்ந்த பகைவரில், பிறகிட்டவர் ஒழிய - பின்னிட்டவர் நீங்க, பிறரை யெல்லாம் - பிறரெல்லாரையும், தடவு தாழியில் - பெருந் தாழியில், மத்து எறி தயிரின் - மத்தினால் கடையப்பட்ட தயிர் போல, தத்து - தாவுகிற, உதிரப் புனலில் - உதிர நீரில், தசை - மாமிசம், குடர் - குடல், நிணமொடு - நிணத்தோடு, மூளை குழம்ப - மூளையுஞ் சேர்ந்து சேறாக, சமர்விளையாடல் செய்யும் - போர் விளையாடலைச் செய்கிற, குடுமி சுடர் வடிவேலை - நுனியில் ஒளி வீசுகிற வடிவேற் படையை, தொட்டவ - விடுத்தவனே, கொட்டுக சப்பாணி—, கொழி தமிழ் - செழித்த தமிழ் வழங்குகிற, வேதபுரி குமரேசன் - வேதபுரியில் வாழ்கின்ற குமரேசனே, கொட்டுக சப்பாணி—, (எ - று.)

கடலைச் சுவற வடித்து என்றது, கடல் சுவற வேல்விட்ட செய்தியைக் குறித்தது. கனவரை யென்றது கிரவுஞ்ச மலையை. இக்கடலுக்கும் மலைக்கும் பிரதியாக, அவுண ருதிரக் கடலையும், பிண மலையையும் வகுத்தானென்பது போதர, 'கடலைச் சுவற வடித்து மிடித்துக் கனவரை துகள்கண்டும், கடிதிற்றிரிய வகுப்பதை யொப்பக் காரவுணக் கடலி, னுடலிற் பெருகிய குருதிக் கடல் பிணவோங்கலொ டோங்க வமைத்து' என்றார். திரிய வென்பது மீட்டு மென்னும் பொருட்டு. பிறகிட்டவர் - வெந்கிட்டவர் (முதுகு காட்டினவர்). குமரேசன் - அண்மை விளி. (6)

37. சமரிற் பட்டவர் வெட்டிய பூதத்
தலைவர்க ணிற்பமுதற்
றாமரை நாயகன் வயிறு கிழித்துத்
தந்தொழி றலைநின்றாங்
கமரிற் குரிய மடக்கொடி யாரை
அலைத்தனர் பற்றியெயிற்
றவுண ரெனத்தமை யுணரார் கணவர்கள்
ஆர்ப்பில் வெடித்தபெருங்
கமரிற் குருதி பிலத்தை நிரப்பிடு
களமெதிர் கண்டினியக்
காரவு ணக்கடல் சூரொடு மாளக்
கடிதிற் றடிதியடற்
குமரக் கடவு ளெனப்பணி வேலவ
கொட்டுக சப்பாணி
கொழிதமிழ் வேத புரிக்குமு ரேசன்
கொட்டுக சப்பாணி.

(இ - ள்) சமரில்பட்டவர் - போரில் இறந்துபட்ட அவுணர்கள், வெட்டிய பூதத்தலைவர்கள் - (தங்களை) வெட்டிய பூதத்தலைவர்கள், நிற்ப - போர்க்களத்தில் நிற்க, முதல் - மூதல்வனுகிய, தாமரை நாயகன் - சூரியனது, வயிறு கிழித்து - நடுவிடத்தைக் கிழித்துக் கொண்டு (வீரசொர்க்க மடைந்து), தம்தொழில் தலை நின்றாங்கு - (அவுணராகிய) தங்கட்குரிய கொடுந்தொழிலை மேற்கொண்டது போல, அமரிற்கு உரிய - போர்க்களத்தி லிறந்து பட்டோர் யாவரேனும் அவர் அடைதற்குரிய, மடக்கொடியாரை - இளங்கொடி போல்வாராகிய அரம்பையரை, அலைத்தனர் பற்றி - வருத்திப்பற்றி, எயிறு -

பெரும் பற்கலையுடைய, அவுணர் என - அவுணர்கள் என்று, தம்மை உணரார் - (வீரசொர்க்கஞ் சென்ற அவுணர்) தங்கலை அவுணர் என்று அறியாதவர்களாகிய, கணவர்கள் - கொழுநர்கள், ஆர்ப்பின் - பேரொலியால், வெடித்த - வெடித்த, பெருகமரில் - பெரிய வெடிப்பின் வழியே சென்ற, குருதி - உதிரமானது, பிலத்தை நிரப்பிடு - பாதலத்தை நிறைக்கின்ற, களம் - போர்க்களத்தை, எதிர்கண்டு - எதிரிற் கண்டு, இனி - இனி, அ - அந்த, கார் அவுணக்கடல் - கரிய அவுணக்கடலானது, சூரொடுமாள - சூரனுடன் மாண்டொழியும்படி, கடிதின் - விரைவாக, தடிதி - வெட்டக்கடவை, அடல் - வெற்றியையுடைய, குமரக்கடவுள் - குமரக்கடவுளே, என - என்று சொல்லி, பணி - வணங்குதற் குரிய, வேலவ - வேலோனே, கொட்டுகசப்பாணி—, கொழி தமிழ்—, (எ - று.)

சமரம் - போர் என்னும் பொருடருவதோர் வடசொல், இது சமர் என ஈறு கெட்டு நின்றது. பட்டவர் தலைநின்று என இயையும். பிரிந்த கணவர் வருகை கண்ட கற்புடை மகளிர் முகமலர்தல்போல நென்னலிரவிற் பிரிந்துபோன சூரியன் வருகைகண்டு மலர்தலால், சூரியனைத் 'தாமரை நாயகன்' என்றார். கமர் - நிலவெடிப்பு. தேவ மகளிரை ஒருவரினொருவர் முந்தி வலிந்து பற்றினர் என்பார், 'அலைத்தனர்பற்றி என்றார்'. தடிதல் - வெட்டல். அச்சுமாறின் அறிவுமாறும் என்பது வழக்காதலின் அவுணர்களும் வீரசொர்க்கமடைந்த பிறகு, தாம் அவுணராதலை மறந்து தேவர்கட்கு ஆக்கம் வேண்டினர் என்பதை விளக்க 'காரவுணக் கடல் சூரொடு மாளக் கடிதிற் றடிதியடற் குமரக் கடவுள்' என்றார். கணவர்கள் - கணத்தவர்கள் எனினும் அமையும். அப்பொருட்கு அறியாதவர்களாகி எனப் பொருள் கொள்க. (7)

38. அற்ற வுடற்குறை யிற்ற முடித்தலை
அங்கைத் தலம்வைத்திட்
டாடு பறந்தலை யோடுதி ரப்புனல்
ஆறு கடத்துகெனும்
சிற்றல கைக்கொரு பேரல கைப்பெண்
தேரழி யக்கழியும்
திகிரிப் பரிசில் விடப்படு சுழியிற்
றெருமரல் மட்பகைஞன்
பற்றிய திரிகை திரித்து விடத்திரி
பரிசென வுஞ்சுழலும்
பம்பர மெனவும் வரும்படி யவுணர்
படக்கள வேள்விசெயாக்

கொற்ற மகட்புண ருஞ்சுடர் வேலவ
கொட்டுக சப்பாணி
கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன்
கொட்டுக சப்பாணி.

(இ - ள்) அற்ற உடற்குறை - அறுபட்ட வுடற்குறைகள், இற்ற முடித்தலை - வெட்டுண்டு வீழ்ந்த முடித்தலைகளை, அங்கைத்தலம் வைத்திட்டு - அகங்கையில் வைத்துக்கொண்டு, ஆடு - கூத்தாடுகிற பறந்தலை - போர்க்களத்தில், ஓடு - பெருகி யோடுகின்ற, உதிரப்புனல் ஆறு - குருதிநீர் யாற்றை, கடத்துக என்னும் - தாண்டுவிக்கவேண்டு மென்று வேண்டுகிற, சிறு அலகைக்கு - சிறு பேய்க்கு, ஒரு பேர் அலகைப் பெண் - ஒரு பெரிய பெண் பேயானது, தேர் அழிய - தேர் அழிந்துபோக, கழியும் - அதினின்றுங் கழன்று விழுந்த, திகிரி - சக்கர மாகிய, பரிசில் - தோணியை, படு சுழியில் விட - பொருந்திய சுழியில் செலுத்த, தெருமரல் - (அத்தோணி) சுழலுதல், மண்பகைஞன் - சூய வன், பற்றிய - தான்பிடித்த, திரிகை - திரிகையை, திரித்துவிட - சுழற்றிவிட, திரி - (அது) சுழலாநின்ற, பரிசு எனவும் - தன்மைபோல வும், சுழலும் - சுற்றுகின்ற, பம்பரம் எனவும் - பம்பரம் போலவும், வரும்படி - சுழலும் தன்மையை யடையவும், அவுணர்பட - அவுணர் கள் இறந்துபட, களவேள்வி செயா - களவேள்வி செய்து, கொற்ற மகள் - கொற்றமகளே, புணரும் - மணந்த, சுடர்வேலவ - ஒளிர்கின்ற வேற்படையை யுடையவனே, கொட்டுக சப்பாணி—, கொழி தமிழ்—, (எ - று.)

உடற்குறை - தலையற்றவுடல். முடித்தலை - முடியணிந்த தலை. கடத்துக எனும் என்பது கடத்து கெனும் எனத் தொகுக்கப்பட்டது. தெருமரல் என்பதற்குப் பகுதி தெருமா. கொற்ற மகள் - துர்க்கை. பரிசில் - வட்ட வடிவாகிய வோர் வகைத் தோணி, இது மூங்கிலகணி யாற் செய்யப்பட்டுப் புறத்துத் தோலான் மூடப்பட்டிருக்கும். இதனைத் தென்னாட்டிற் காவிரியாறு முதலியவற்றில் இந்நாளும் காணலாம். (8)

சந்த விருத்தம்

39. வளரிள வனமுலை மலைமக ளுக்கொர் தவப்பேறே
மறிதிரை பொருநிமிர் கருணை கொழித்த பெருக்காறே
அளியுமி னமுதெழு வெளியினில் வைத்த சுவைத்தேனே
அறமுது தவமொடு வளர வளர்த்திடு நற்றாயே

களிமயில் கடவிவி ணடைய முடுக்கிய புத்தேளே
கலைமறை யெனுமுரல் வரியளி மொய்த்த மலர்க்காவே
தெளிதமிழ் பழகிய மதவலி கொட்டுக சப்பாணி
தினகர புரிவரு தனிமுதல் கொட்டுக சப்பாணி.

(இ - ள்) வளர் - வளர்கின்ற, இளவனமுலை - இளமையாகிய அழகிய முலையையுடைய, மலைமகளுக்கு - மலையரையன் பெண்ணுக்கு, ஓர் தவப்பேறே - ஒப்பற்ற தவப்பயனே, மறிதிரைபொராநிமிர் - மடங்குகின்ற அலைகள் மோதவுயர்ந்த, கருணை கொழித்த - கருணைநீரெறிகின்ற, பெருக்கு ஆறே - வெள்ளப் பெருக்கை யுடைய நதியே, அளியும் - கனிந்த, இன் அமுது - இனிய அமிர்தமானது, எழுவெளியினில் - தோன்றின வெளியிடத்தில், வைத்த - வைக்கப்பட்ட, சுவை தேனே - சுவையையுடைய தேனே, அறம் - அறநெறியானது, முது தவமொடு வளர - பெருந்தவத்தோடு வளரும்படி, வளர்த்திடும் - வளர்க்கின்ற, நல்தாயே - நல்ல தாயே, களி மயில் கடவி - களிப்பை யுடைய மயிலைச் செலுத்தி, விண் அடைய முடுக்கிய - விண்ணுலக முழுதும் முடுக்கின, புத்தேளே - தெய்வமே, கலை மறை என்னும் - நூல்கள் வேதங்கள் என்று சொல்லப்படுகிற, முரல் வரி அளி மொய்த்தசத்திக்கிற வரிவண்டுகள் நெருங்கின, மலர்க்காவே - பூஞ்சோலையே, தெளிதமிழ் பழகிய - தெள்ளிய தமிழ் பயின்ற, மதவலி - மதவலியே, கொட்டுக சப்பாணி—, தினகரபுரிவரு - தினகரபுரியிலெழுந்தருளின, தனிமுதல் - ஒப்பற்ற முதல்வனே, கொட்டுக சப்பாணி—, (எ - று.)

மலைமகள் - பார்வதி. முடுக்குதல் - வேகமாய்ச் செல்லுதல். மதவலி - அண்மைவினி. மதவலி - மிக்கவலி ; அது ஈண்டு ஈறிலாவாற்றலுடையவன் என்னும் பொருட்டு. (9)

40. கனியொடு சுவையமு தொழுகிய சொற்பயி றத்தாய்வேள்
கணையொடு பிணையென வுலவு கடைக்கண் மடப்பாவாய்
நனைமலர் பொதுளிய வெழிலி தழைத்த குழற்கோதாய்
நளிர்புன மிசைவளர் கலபம் விரித்த மயிற்பேடே
எனவொரு குறமக ளடிமுடி வைத்தனை முத்தேவாம்
இறைவரு முறைமுறை பணிய விருக்கு மூதற்றேவே
கினவிடை யவரருண் மழவிடை கொட்டுக சப்பாணி
தினகர புரிவரு தனிமுதல் கொட்டுக சப்பாணி.

(இ - ள்) கனியொடு - கனிகளோடு, சுவை அமுது ஒழுகிய - சுவையையுடைய அமுதமொழுக, சொல் பயில் - மொழிகள் பயில்கின்ற,

தத்தாய் - கிளியே, வேள்கணையொடு - மன்மதபாணத்தோடு, பிணை என - பெண்மான்போல, உலவு - உலாவுகிற, கடைக்கண் - கட்கடையை யுடைய, மடப்பாவாய் - மடப்பாவையே, நனைமலர் பொதுளிய - குளிர்ந்த மலர்கள் நெருங்கின, எழிலி - மேகம்போல, தழைத்த - செழித்த, குழல் - கூந்தலையுடைய, கோதாய் - கோதையே, நளிர்புன மிசை - குளிர்ந்த புனத்தில், வளர் கலபம் விரித்த - வளர்ந்த கலாபத்தை விரித்த, மயில்பேடே - பெண் மயிலே, என - என்று சொல்லி, ஒரு குறமகள் - ஒரு குறப்பெண்ணின், அடி - பாதத்தை, முடிவைத்தனை - உன் திருமுடியில் வைத்துக்கொண்டு, முத்தேவு ஆம் - மும்மைத் தேவர்களாகிய, இறைவரும் - இறையவரும், முறைமுறை பணிய - முறைமுறையாக வணங்காநிற்க, இருக்கும் - எழுந்தருளி யிருக்கிற, முதல்தேமே - முதன்மையாகிய தெய்வமே, சினவிடையவர் அருள் - பகைவர்மீது கோபத்தையுடைய விடையை யுடையவராகிய சிவபெரு மான் ஈன்றருளின, மழவிடை - இளங்காளையே, கொட்டுகை சப்பாணி—, தினகரபுரி—, (எ - று.)

தத்தை - கிளி. அது ஆயுருபேற்றுத் தத்தா யென்றுயிற்று. வேள்கணை யென்றாயினும் கண்ணுக் குவமையாகப் புணர்க்கப் படலால் தாமரை நீலம் என்பவற்றைக் கொள்க. கலாபம் - கலபம் எனக் குறுகி நின்றது. குறமகள் - வள்ளிநாயகி. முத்தேவாமிறைவர் என்றது மும்மூர்த்திகளே. (10)

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

5. முத்தப் பருவம்

41. குருகு நாறு செந்தளிர்க்கைக்
கொடிநுண் ணுசுப்பிற் கோட்டிமயக்
குலப்பூங் கொம்பு நறவூழ்த்த
கொழுந்தா மரையோ டவிழ்ந்ததுழாய்ச்

சருகு நாறு முடைத்தலையின்
ரும நாறு திரடிண்டோட்
டாதை யாருங் கண்டுகண்டு
தடங்கண் களிப்பக் குரவுவிரிந்

தருகு நாறு திருமேனி
யந்தீங் குதலை மழலைகனிந்
தமுத மூறு பசுந்தேற
லசும்பு நாறத் தெய்வமண
முருகு நாறுஞ் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே.

(இ - ள்) குருகு நாறு - வளையல் பிரகாசிக்கிற, செந்தளிர்க்கை - செந்தளிர்போலுங் கையினையும், கொடிநுண் நுசுப்பின் - கொடி போலும் நுண்ணிய இடையினையுமுடைய, கோடு இமயம் குலம் பூங்கொம்பும் - சிகரங்களையுடைய இமயமலையிற் பிறந்த உயர்வாகிய பூங்கொடியும், நறவு ஊழ்த்த - தேனைச் சிந்துகிற, கொழுந்தாமரை யோடு - செழுந்தாமரை மலரோடு, அவிழ்ந்த - விரிந்த, துழாய் சருகு நாறும் - துளவச்சருகு மணக்கின்ற, முடைதலையின் தாமம் நாறு - மூடைத்தலை மாலைகள் நாறுகின்ற, திரள் திண் தோள் - திரண்ட திண்ணிய தோள்களையுடைய, தாதையாரும் - திருத்தந்தையாரும், கண்டுகண்டு - பார்த்துப் பார்த்து, தடம் கண் களிப்ப - பெருங் கண்கள் களிக்கும்படி, குரவு விரிந்து - குராமலர் விரிந்து, அருகும் - சமீபப் பிரதேசங்களிலும், நாறு - பரிமளிக்கிற, திருமேனி - திருமேனியில், அம் தீ குதலைமழலை கனிந்து - அழகிய இனிய குதலைமழலைகள் முதிர்ந்து, அமுதம் ஊறு பசு தேறல் - அமிர்தம்போலச் சுரக்கிற பசிய தேனைனது, அசும்புநாற - துளிக்க, தெய்வமணம் முருகு நாறும் - தெய்வ மணத்தையுடைய தேன் பரிமளிக்கிற, செங்கனிவாய் முத்தம் தருக - செங்கனிவாய் முத்தம் தந்தருள்வாயாக, முத்தமே—, மும்மைத்தமிழ் தேர் - முத்தமிழாராய்தற்கிடமாய, கந்தபுரி முருகா - கந்தபுரி முரு கனே, முத்தம் தருகவே—, (எ - று)

குருகுநாறு பூங்கொம்பு என்றது உமாதேவியை. நறவூழ்த்த தாதையார் என்றது சிவபெருமானே. அசும்புநாறல் ஒரு சொன்னீர்த் தாய்த் துளித்தவெனப் பொருடந்து நின்றது. தெய்வமண முருகு என்றது வாய்நீரை. கொம்பும் தாதையாரும் கண்டு களிப்பக் குரவுநாறு திருமேனி அசும்புநாற முருகுநாறும் வாய் என இயையும். மும்மைத் தமிழ் - முத்தமிழ் (மூன்று தமிழ், அவை இயல் இசை நாடகம் என் பன). 'தெரிமாண்டமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்புழிப் போல மும்மை யென்றது ஈண்டெண்ணின்கணின்றது. சிவபெருமான்

பிரம விஷ்ணுக்களின் சிரங்களே மாலையாகக் கோத்தணிபவ ராதலின் "தாமரையோ டவிழ்ந்ததுழாய்ச் சருகுநாறு முடைத்தலையின் ருமநாறு நிரள் நிண்டோள்" என்றார். முத்தப்பருவம் - முத்தங்கொள்ளும் பருவம். (1)

42. நறவு விரிந்த விரைத்தோட்டு
நளினத் தொட்டிற் றடமூலைப்பால்
நல்கி வளர்த்த கைத்தாயர்
நகைவாண் முகத்து மார்பகத்தும்
குறுமெ னடைய சிறுபசுங்காற்
குருதி ததும்ப வுதைந்துசில
குறும்பு செயத்தா ணேமெனமென்
கோல்கொண் டோச்சப் பெரும்புவனம்
நிறுவு மொருநின் பெருந்தன்மை
நினைந்தாய் போலக் கனிந்தமுது
நெக்குப் பசுந்தே னசும்பூற
நெடுவெண் ணிலவு விரிந்தகுறு
முறுவ லரும்புஞ் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே.

(இ - ள்.) நறவுவிரிந்த - தேன்விரிந்த, விரை தோடு - மணமுள்ள இதழ்களையுடைய, நளினத் தொட்டில் - தாமரைத் தொட்டிலில், தடம் மூலைப்பால் - பெரிய முலைப்பாலை, நல்கி வளர்த்த - ஊட்டி வளர்த்த, கைத்தாயர் - கைத்தாயரது, நகைவாள் முகத்தும் - நகையொளிகளுள்ள முகத்திலும், மார்பு அகத்தும் - மார்பினிடத்திலும், குறுமெல் நடைய - குறிய மெல்லிய நடையினையுடைய, சிறு பசுங்கால் - சிறிய பசிய காலில், குருதி ததும்ப உதைந்து - உதிரம் தளும்ப வுதைந்து, சில குறும்பு செய்ய - சில குறும்புகளைச் செய்ய, தாள் நோம் என - திருவடி நோமென்று, மெல் கோல் கொண்டு ஓச்ச - மெல்லிய கோலினாலடிக்க, பெரும் புவனம் - பெரிய புவனங்களையெல்லாம், நிறுவும் - நிலைபெறுத்துகிற, ஒரு - ஒப்பற்ற, நின் பெருந்தன்மை - உன் பெருந்தன்மையை, நினைத்தாய் போல - கருதினாற்போல, கனிந்து அமுது நெக்க - பழுத்து அமுது நெகிழ்ந்த, பசுந்தேன் - பசுந்தேனானது,

அசும்பு ஊற - தூளி சுரக்க, நெடு வெள் நிலவு விரிந்த - பெரிய வெண் ணிலா விரிந்த, குறுமுறுவல் அரும்பும் - புன்னகை யரும்புகிற, செங் கனிவாய்—, மும்மை—, (எ - று.)

கைத்தாயர் என்றது கார்த்திகை நாளாகிய அறுமீனை. இதனை "தீர்த்திகைக் கங்கைதன்னில் திகழ்சர வணத்தில்வந்த, மூர்த்திகைக் குழவியேபோல் முதற்புரி யாடலேக்கி, யார்த்திகை யுருத்தவள்ளத் தரிமுதலமரர் யாருங், கார்த்திகைத் தெரிவைமாரை விளித்திவை கழறலுற்றார்" என்றும், "சாற்றருஞ் சரவணத்தில் சண்முகத் தொருவ னாகி, வீற்றிருந் தருளுகின்ற விமலனேர் குழவிபோலத், தோற்றின னவனுக்குங்க டோணமூல யமுத மூட்டிப், போற்றுதிர் நாளுமென்ன நன்றெனப் புகன்று வந்தார்" என்றும் வருதல் காண்க. ஒச்சல் - அடித்தல். 'கனிந்தமுது நெக்குப் பசுந்தேன் அசும்பூற' என்றது வாய்நீர் ஊறுதலை. (2)

43. பொழியுங் கருணைப் பெருவெள்ளப்
புணரி பெருகி யலையெறியப்
பொங்கி யெழுந்த பெருங்காதற்
புளகம் போர்ப்பப் போதுசெயும்
விழியு மனமுங் குளிர்தூங்க
விரிநீர்ச் சடிலத் தொருவனிரு
வீணைக் குதவுந் திருச்செவிகள்
விருந்தாட் டயர விரைகொழித்து
வழியுங் கொழுந்தேன் பிழிந்திட்டு
மதுர வமுது குழைத்தூற்றும்
மழலை தழும்பப் பழமறையை
வடித்துத் தெளித்த வார்த்தையொன்று
மொழியும் பவளச் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே.

(இ - ள்.) பொழியும் - சொரிகின்ற, கருணை - கருணையாகிய, பெருவெள்ளம் - பெரும் பெருக்கையுடைய, புணரிபெருகி - கடல் பெருகி, அலை எறிய - அலைவீச, பொங்கி எழுந்த - பொங்கி மேலே யெழுந்த, பெருங்காதல் - பெருங்காதலாகிய, புளகம் போர்ப்ப

புளகம் மூட, போதுசெய்யும் - தாமரை மலர்போன்ற, விழியும் மனமும் - கண்ணும் மனமும், குளிர்தூங்க - குளிர்ச்சியடைய, விரிநீர் - விரிநீரைத் தரித்த, சடிலத்து - சடையையுடைய, ஒருவன் - ஒப்பற்ற வனுகிய சிவபிரானது, இருவீணைக்கு உதவும் - இரண்டு வீணைக்குக் கொடுக்கின்ற, திருச்செவிகள் - அழகிய செவிகள், விருந்தாட்டு அயர - விருந்தாடலைச் செய்ய, விரை கொழித்து - வாசனை வீசி, வழியும் - வழிகின்ற, கொழுதேன் பிழிந்திட்டு - செழுந்தேன் பிழிந்து, மதுரம் அமுது - இனிய அமிர்தத்தை, குழைத்து ஊற்றும் - குழைத்து வார்க்கிற, மழலை ததும்ப - மழலைச் சொற்கள் ததும்பாநிற்க, பழமறையை - புழமையாகிய வேதங்களை, வடித்து தெளித்த - வடித்துத் தெளிவிக்கப் பட்ட, வார்த்தை ஒன்று - ஒரு சொல்லை, மொழியும் - சொல்லிய, பவளம் செங்கனிவாய் - பவளம்போலுஞ் செங்கனிவாயின், முத்தந் தருக—, மும்மைத் தமிழ்தேர்—, (எ - று.)

புளகம் - மயிர்க்குச் செறிதல் (ரோமாஞ்சலி). 'பழமறையை வடித்துத் தெளித்த வார்த்தையொன்று' என்றது பிரணவார்த்தத்தை. இதனை, "உழன்மதில் சுட்ட தழல்நகைப் பெருமான் வணங்கிநின் றேத்தக் குருமொழி வைத்தோய்" என்னும் கல்லாடச் செய்யுள் வலியுறுத்தும். இருவீணைக் குதவுந் திருச்செவிகள் - தும்புரு நாரதர்களுடைய இரண்டு வீணைகளுக்குச் சாய்க்கிற திருச்செவிகள். இதனை இந்நூலாசிரியர், "பகருமிசை திசைபரவ இருவர்கள் பயிலு மியல்தெரி வெள்ளைத் தோட்டின" என்று மற்றைய பிள்ளைத் தமிழில் விரித்துக் கூறுதல் காண்க. கம்பள அசுவதரர் எனினுமாம். (3)

44. கலைப்பா னிறைந்த முதுக்குறைவிற்
கல்விச் செல்வர் கேள்விநலம்
கனியக் கனிய வழுதூறுங்
கடவுண் மறையு முதற்சங்கத்
தலைப்பா வலர்தீஞ் சுவைக்கனியுந்
தண்டே னறையும் வடித்தெடுத்த
சாரங் கனிந்தூற் றிருந்தபசுந்
தமிழு நாறத் தடங்கரைகொல்
அலைப்பாய் புனற்றெண் கடல்வைப்பு
மகிலாண் டமும்பன் முறையீன்றும்
அழகு முதிர முதிராவென்
னம்மை யமுது சூற்கொண்ட

முலைப்பா லறுஞ் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே.

(இ - ள்) கலைப்பால் - நூற்பகுதிகள், நிறைந்த - நிரம்பின, முதுக்குறைவின் - பேரறிவினையுடைய, கல்விச் செல்வர் - கல்வியாகிய செல்வமுடையவர்கள், கேள்விநலம் கனிய கனிய - கேள்விநலம் முதிர முதிர, அமுது ஊறும் - அமிர்தம்போலச் சுரக்கிற, கடவுள் - தெய்வத் தன்மை பொருந்திய, மறையும் - வேதங்களும், முதல் சங்கம் - முதற் சங்கத்திருந்த, தலைப்பாவலர் - முதற் பாவலர், தீ சுவை கனியும் - இன் சுவைக் கனியும், தண்தேன் நறையும் - குளிர்ந்த தேனும், வடித்து எடித்த - வடிகட்டி யெடித்த, சாரம் கனிந்து ஊற்றிருந்த - சாரம் பழுத்துச் சுரந்திருந்த, பசுந் தமிழும் - பைந்தமிழும், நாற - பரிமளிக்க, தடம்கரைகொல் - பெருங்கரையை யழிக்கிற, அலைபாய்புனல் - அலை யுருவாய்த் தாவுகிற நீரையுடைய, தெண்கடல் வைப்பும் - தெளிவாகிய கடல் சூழ்ந்த நிலவுலகையும், அகில அண்டமும் - (மற்றுமுள்ள) எல்லா அண்டங்களையும், பலமுறை ஈன்றும் - பலமுறை பெற்றும், அழகு முதிர - அழகானது மிகாநிற்க, முதிரா - தான் முதிராத, என் அம்மை - என் தாயினது, அமுது - அமிர்தமே, சூல்கொண்ட - சூல்கொண்டாற் போன்ற, முலைப்பால் நாறும் - முலைப்பால் மணக்கின்ற, செங்கனிவாய் முத்தந்தருக முத்தமே—, மும்மைத் தமிழ்தேர்—, (எ - று.)

ஊற்றிருத்தல் - சுரத்தல். கொல்லல் - அழித்தல். 'அழகு முதிர முதிராவென்னம்மை' என்றது உமாதேவியை. 'சூல்கொண்ட முலைப் பால்' என்பதைப் பால் சூல்கொண்ட முலையென மாற்றிக்கொள்க. தெய் வத்தன்மை யமைந்த வேதமுதலியவை மணக்கின்ற வுன் கனிவாயில் உமாதேவியின் முலைப்பால் மணக்க வொரு முத்தந் தந்தருள்க வென் பது கருத்து. மறையுந் தமிழு நாற முலைப்பாலூறுமென இயையும். (4)

45. புயலுண் டிருண்ட கொந்தளமும்
பொன்னங் குழையு மின்னகையும்
புளகம் பொதிந்த விளமுலையும்
புருவச் சிலையும் போர்த்தடங்கட்
கயலுங் கலப மயிலியலுங்
கன்னிப் புனத்தோர் பெண்ணமுதின்
காமர் நலனும் பன்னிரண்டு
கண்ணன் முகந்துண் டின்னமுதின்

இயலுஞ் சுவைநல் லவியொடுநீத்
தேக்கற் றிருந்தத் தாக்கணங்கின்
இழுமென் குதலை கனிந்தூறு
மிதழ்த்தேன் சுவைகண் டேமாப்பான்
முயலுங் குமுதக் கனிவாயான்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே.

(இ - ள்.) புயல் உண்டு - மேகம்போன்று, இருண்ட - இருண்டிருக்கிற, கொந்தளமும் - கூந்தலையும், பொன்னம் குழையும் - பொன்னினியன்ற குழையையும், இன் நகையும் - இனிய நகையையும், புளகம் பொதிந்த - புளகம் போர்த்த, இளமுலையும் - இளமையாகிய தனங்களையும், புருவச்சிலையும் - புருவமாகிய வில்லையும், போர் - போர்த்தொழிலையுடைய, தடம்கண் கயலும் - பெருங்கண்ணுகிய கயலையும், கலபம் - கலாபத்தையுடைய, மயில் இயலும் - மயிற்சாயலையும். காமர் நலனும் - அழகின் மிகுதியையும், பன்னிரண்டு கண்ணுல் - பன்னிரு கண்களாலும், முகந்து உண்டு - அள்ளியுண்டு, இன் அமுதில் இயலும் சுவை - இனிய அமிர்தத்திலுள்ள சுவையையும், நல் அவியொடு நீத்து - நல்ல அவியோடுவிட்டு, எக்கற்றிருந்த - எங்கியிருந்து, அ - அந்த, தாக்கணங்கின் - தாக்கணங்கினது, இழுமென்குதலை கனிந்து ஊறும் - இனிமையாகிய மெல்லிய குதலைச்சொற்கள் முதிர்தலாலுண்டாகிற, இதழ்தேன் சுவைகண்டு - அதராமிர்தத்தின் சுவையைக் கண்டு, எமாப்பால் முயலும் - செருக்கினுல் முயலுகின்ற, குமுதம் - செவ்வல்லி மலர்போன்ற, கனிவாய் முத்தந்தருக முத்தமே—, மும்மைத் தமிழ்தேர்—, (எ - று.)

புயலுண்டு என்பதில் உண்ணல் உவமையுருபின் பொருட்டு. அன்றிப் புயலை விழுங்கியெனினுமாம். கலாபம் - தோகை, அது கலபமெனக் குறுக்கல் பெற்றது. முகந்து கொண்டு என்றலு மொன்று. அவி - அவியுணவு. தாக்கணங்கு என்றது வள்ளிநாயகியை. எமாப்பு - மிகுகளிப்பு. (5)

வேறு

46. கோடுபடு கொங்கைக் குவட்டுக் கிளைத்திட்ட
கொடியிடைக் கடைசியர்குழாங்
குரவையிடு தழனியிற் கொண்டறிரை யத்தாவு
குழவுப் பகட்டுவாளை

சேடுபடு புத்தே ணிலத்துப் புனிற்றிளஞ்
சேதா வயிற்றுமூட்டச்
சேங்கன் றெனத்தடவு மடிமடை திறந்தூற்று
தீம்பால் சினைக்கற்பகத்
தேடுபடு தடமலர்த் தேனருவி யொடுசொரிந்
தேரியொடு கானிரம்ப
விழுதுபடு கழனியுந் தெய்வமண நாறவேன்
றின்சுவை முதிர்ந்துவிளையுங்
காடுபடு செந்நெல்பைங் கன்னனிகர் புள்ளூர
கனிவாயின் முத்தமருளே
கங்கைக்கு நெடியவன் றங்கைக்கு மொருமகன்
கனிவாயின் முத்தமருளே.

(இ - ள்.) கோடுபடு - யானைக் கொம்புபோன்ற, கொங்கைக் குவட்டுக்கு-தனமலைக்கு, இளைத்திட்ட - மெலிந்த, கொடி இடை - பூங் கொடிபோலும் இடையினையுடைய, கடைசியர் குழாம் - கடைசியர் கூட்டம், குரவையிடு தழனியின் - குரவைப்பாட்டுப் பாடுகிற சத்தத் திஞல், கொண்டல் திரைய - மேகங்கள் ஓரிடத்துச் சேர, தாவு - குதிக் கிற, குழவு - இளமை பொருந்திய, பகட்டு வாளை - பெரிய வாளைமீன் கள், சேடுபடு - பெருமைபொருந்திய, புத்தேள்நிலத்து - தெய்வலோகத் திலுள்ள, புனிறு - ஈன்றணிமையையுடைய, இளஞ்சேதா வயிற்று மூட்ட - இளமையாகிய சேதாவின்மடியில் முட்டுதலும், சேங்கன்று என - தனது சேங்கன்றெனவெண்ணி, தடவு - பெரிய, மடி - மடியி னின்றும், மடைதிறந்து ஊற்று - மடைதிறந் தொழுக்குகின்ற, தீம் பால் - இனியபாலானது, சினை - கிளைகளையுடைய, கற்பகத்து - கற்பகத் தருவிலுள்ள, எடுபடு - இதழ்களோடு கூடிய, தடமலர் - பெரிய மலரி லுள்ள, தேன் - தேனுனது, அருவியொடு சொரிந்து - அருவியாற்றோடு பொழியப்பட்டு, எரியொடு கால்நிரம்ப - எரிகளுடன் கால்வாய்களும் நிறைய, இழுதுபடு கழனியும் - சேறுபட்ட கழனிகளும், தெய்வமணம் நாற வென்று - தெய்வமணங் கமழப் பெற்று, இன்சுவை முதிர்ந்து விளை யும் - இனிய சுவைமிகுந்து விளையும், காடுபடு செந்நெல் - மிகுதியாகிய செந்நெற்ருள்கள், பைங்கன்னல் நிகர் - பசிய கரும்பை நிகர்க்கிற, புள்ளூர - புள்ளூரனே, கனிவாயின் முத்தம் அருள்—, கங்கைக்கும் நெடியவன் தங்கைக்கும் ஒரு மகன் - கங்காதேவிக்கும் திருமாலின் தங்கையாகிய உமாதேவிக்கும் ஒப்பற்ற புதல்வனே, கனிவாயின் முத்தமருளே—, (எ - று.)

கோடி பலபொருளொரு சொல்லாயினும் கொங்கைக் குவமையாகப் புணர்க்கப்படுதலால் ஈண்டியானைக், கொம்பென் றுரை யுரைக்கலா யிற்று. தழனியின் என்பதில் இன் ஐந்தனுருபு கருவிப்பொருட்டு. பகட்டுவாளை - ஆண்வாளை எனினுமாம். சேதா - நற்பசு, செந்நிறப்பசு வெனினும், அழகிய பசுவெனினு மொக்கும். காடுபடுதல் - மிகுதல். மகன் - அண்மைவிளி. (6)

47. துளிதூங்கு மழைமுகிற் படலங் கிழிக்கும்
துகிற்கொடிகள் சோலைசெய்யத்
தோரண முகப்பிற் றவழ்ந்தேறு கலைமதித்
தோற்றத்தை யறுகான்மடுத்
தளிதூங்கு தேனிரு லிதுதம்மின் வம்மினென்
றழிநரு வார்ந்துநிற்கு
மந்நலார் கைகூப்ப வாடவர் பிழிந்தூற்று
மளவிலப ராதமிதெனு
வொளிதூங்கு மூகமதிக் கொப்பென்கி லேன்விடுதி
ருயிரொன்று மெனவிடலுமவ்
வுடுபதிக் கடவுணற வுண்டமற் றவரினு
முய்ந்தோ மொழிந்தோமெனுக்
களிதூங்கு மாடமலி கந்தபுரி வருமுருக
கனிவாயின் முத்தமருளே
கங்கைக்கு நெடியவன் றங்கைக்கு மொருமகன்
கனிவாயின் முத்தமருளே.

(இ - ள்.) துளிதூங்கும் - துளித்தலேப் பொருந்திய, மழை - குளிர்ச்சியை யுடைய, முகில்படலம் கிழிக்கும் - மேகக் கூட்டத்தைக் கிழிக்கிற, துகில் கொடிகள் - கொடியாடைகள், சோலை செய்ய - சோலை நிழலைச்செய்ய, தோரண முகப்பில் - தோரணங்கட்டின முகப் பின்மேல், தவழ்ந்து ஏறு - தவழ்ந்தேறுகின்ற, கலைமதி தோற்றத்தை - கலைகள் நிறைந்த சந்திரோதயத்தை, அறுகால் மடுத்து - ஆறு கால்களை யும் பதித்து, அளிதூங்கு - வண்டுகள் உறங்குகிற, தேன் இரு இது - தேன் கூடாகிய இதனை, தம்மின் - தாருங்கள், வம்மின் - வாருங்கள், என்று - என்று சொல்லி, அழி - அறிவழிதற் கேதுவாகிய, நரு - கள்ளை, ஆர்ந்து நிற்கும் - குடித்துநிற்கிற, அந்நலார் - மாதர்கள், கை கூப்ப - கைகுவித்து வணங்க, ஆடவர் - புருஷர்கள், பிழிந்து ஊற்றும்

அளவில் - (சந்திராஞ்சிய தேன் அடையை) பிழிந்து வார்க்கும்பொழுது, இது அபராதம் எனு - இது அபராதமென்று, ஒளி தூங்கும் - ஒளி தங்கிய, முகமதிக்கு - (மாதர்களது) முகமாகிய சந்திரனுக்கு, ஒப்பு என்கிலேன் - (யான்) நிகரென்று சொல்லேன், உயிர் ஒன்றும் விடுதிர் என - உயிரொன்றை மாத்திரம் விடுங்களென்று (சந்திரன்) வேண்ட, விடலும் - (அவ்வாறே அப் புருடர்கள்) விட்டவுடன், அ - அந்த, உடுபதி கடவுள் - சந்திரன், நறவுண்ட - கள்ளுண்ட, அவரினும் - அவரிடத்தினின்றும், உய்ந்தோம் ஒழிந்தோம் எனு - உய்ந்தொழிந்தோமென்று, களி தூங்கு - களிப்புக் கொள்ளுதற்குரிய, மாடம்மலி - மாடங்கள் மிகுந்த, கந்தபுரிவரும் - கந்தபுரியி லெழுந்தருளிய, முருகா கனிவாயின் முத்தமருள்—, கங்கைக்கு—, (எ - று.)

ஆர்தல் - குடித்தல். உடுபதி - நக்ஷத்திர நாயகன். உய்ந்தோம் - முற்றெச்சம். அபராதம் - குற்றம். எனு - செய்யாவென்னும் வாய்பாட்டிறந்த கால வினையெச்சம். மற்றவர் என்பதில் மற்று அசை. (7)

48. பூமரு வுயிர்க்குங் கருங்கொந் தளத்துவிரி
பூந்துகட் படலமுமணம்
பொங்கிய நறும்புகைப் படலமுங் காலமழை
பொழிமுகிற் படலஞ்செயத்
தாமரை முகச்சோதி யெழவெழுஞ் சிறுமுறுவ
றண்ணிலவு செயவெயில்செயத்
தழன்மணிக் கலனக னிதம்பமொடு வெம்முலை
தடங்கடலு மலையுஞ்செயத்
தேமரு குழற்கோதை மயிலனீர் கோகிகச்
செம்மலென வேறுபுவனஞ்
செயவும்வல் லீரென மணந்திடை தணந்தவர்சொல்
செஞ்சொற் பசுங்கிளிசொலக்
காமரு மனங்குழையு மாதர்பயில் வேளூர
கனிவாயின் முத்தமருளே
கங்கைக்கு நெடியவன் றங்கைக்கு மொருமகன்
கனிவாயின் முத்தமருளே.

(இ - ள்.) பூமரு உயிர்க்கும் - மலர்கள் மணத்தை வீசுகிற, கருங்கொந்தளத்து - கருங்கூந்தலில், விரி - விரிந்த, பூ துகள் படலமும் - மலர்த் துகட் கூட்டமும், மணம் பொங்கிய - மணமிகுந்த, நறுபுகை

படலமும், நறிய புகைக் கூட்டமும், காலமழை பொழி - பருவ மழை பொழிகிற, முகில் படலம் செய - மேகத் தொகுதியை நிகர்க்க, தாமரை முகம் சோதி எழ - தாமரை மலர்போலும் முகவொளி யெழுதலும், எழும் - தோற்றுகிற, சிறுமுறுவல் - புன்சிரிப்பானது, தண் நிலவு செய்ய - குளிர்ந்த நிலவைத்தோற்றுவிக்க, தழல் மணிக்கலன் - நெருப்புப் போலும் மணிக்கலன்கள், வெயில் செய - வெயிலை யுண்டாக்க, அகல் - அகன்ற, நிதம்பமொடு - நிதம்பத்துடன், வெம்முலை - விருப்பத்துக் கேதுவாகிய தனங்கள், தடம் கடலும் மலையும் செய - முறையே பெரிய கடலையும் மலையையும் போன்றிருக்க, தேமரு - மணம்பொருந்திய, குழல் - ஐம்பாலின், கோதை - கூந்தலையுடைய, மயில் அன்னீர் - மயிலை நிகர்ப்பவரே, கோசிகன் செம்மல் என - விசுவாமித்திரன்போல, வேறுபுவனம் - வேறுகிய வுலகங்களை, செயவும் வல்லீர் என - உண்டாக்கவும் வல்லீரென்று, மணந்து இடை தணந்தவர் - கூடி இடையே பிரிந்தவர்கள், சொல் - சொல்லுகிற, செஞ்சொல் - செவ்விய சொற்களை, பசுங்கிளிசொல - பைங்கிளிகள்சொல்ல, காமர் - அழகிய, மனங் குழையும் - மனமுருகாநின்ற, மாதர் பயில் - மாதர்கள் சஞ்சரிக்கிற, வேளூர - வேளூரனே, கனிவாயின் முத்தம் அருளே—, கங்கைக்கு—, (எ - று.)

கொந்தளத்து விரியென்றதனுன் முடித்தபோது போதா யிருந்த தென்பது விளங்கிற்று. காலமழை - பெய்யவேண்டும் பருவத்துப் பெய்யு மழை. தழல் என்னும் அடையால் மணி என்பது மாணிக்க முதலிய செம்மணிகளைக் குறித்தது. நிதம்பமொடு வெம்முலை தடங் கடலு மலையுஞ் செய என்றது முறை நிரனிறை. கோசிகன் செம்மல் - கோசிக முனிவன் மகனுகிய கௌசிகன். காமரு என்பதில் உகரஞ் சாரியை. வேளூர் என்பது புள்ளிருக்கு வேளூரை ; இது சடாயுவும் வேதமும் மன்மதனும் பூசித்த காரணத்தால் வந்த பெயர். (8)

சந்த விருத்தம்

49. மதியு நதியு மரவும் விரவு
மௌலி யொருவன் மூக்கணும்
வனச முகமு மகமு மலர
மழலை யொழுகு சொற்சொலும்
புதல்வ விமய முதல்வி யருள்செய்
புனித வமரர் கொற்றவன்
புதல்வி தழுவு கொழுந குறவர்
சிறுமி குடிகொள் பொற்புய

கதிரு மதியு மொளிர வொளிரு
மொளிய வளிய கற்பகக்
கனியி னினிய வுருவ பருவ
மழையி னுதவு கைத்தல
முதிரு மறிவி லரிஞ ருணரு
முதல்வ தருக முத்தமே
முனிவர் பரவு பரிதி புரியின்
முருக தருக முத்தமே.

(இ - ள்.) மதியும் - சந்திரகண்டமும், நதியும் - ஆகாய கங்கையும், அரவும் - பாம்பும், விரவும் - கலந்திருக்கப்பெற்ற திருமுடியையுடைய, ஒருவன் - ஒப்பற்றவனுகிய சிவபெருமானது, முக்கணும் - மூன்று கண்களும், வனசம் முகமும் - தாமரை மலர்போன்ற முகமும், அகமும் - திருவுள்ளமும், மலர - விகசிக்கும்படி, மழலைமுகு - மழலைத் தன்மை யொழுகாநின்ற, சொல் சொல்லும் - சொற்களைச் சொல்லுகிற, புதல்வ - புதல்வனே, இமயம் - இமயமலையி லவதரித்த, முதல்வி - தலைவியாகிய உமாதேவி, அருள்செய் - ஈன்றருளின, புனித - பரிசுத்தனே, அமரர் கொற்றவன் - தேவேந்திரனது, புதல்வி - மகளாகி தெய்வயானை யானவள், தழுவு - அணைகின்ற, கொழுந - கணவனே, குறவர்சிறுமி - குறப்பெண்ணுகிய வள்ளிநாயகி, குடிகொள் - குடிகொண்டிருக்கிற, பொன்புய - அழகிய தோள்களையுடையவனே, கதிரும் மதியும் ஒளிர - சூரியனும் சந்திரனும் ஒளிசெய்ய, ஒளிரும் - விளங்குகிற, ஒளிய - ஒளியை யுடையவனே, அளிய கற்பகக் கனியின் - கனிந்த கற்பகக் கனியினும், இனிய வுருவ - இனிதாகிய திருவுருவமுடையவனே, பருவமழையின் - பருவ மழைபோல, உதவு - கொடுக்கிற, கைத்தல - கரதலத்தை யுடையவனே, முதிரும் அறிவின் - பேரறிவையுடைய, அறிஞர் உணரும் - ஞானிகள் அறிதற்குரிய, முதல்வ - முதல்வனே, தருக முத்தம் - முத்தம் தருக, முனிவர்பரவு - முனிவர் வழிபடுதற் கிடமாகிய, பரிதிபுரியில் - பரிதிபுரியி லெழுந்தருளிய, முருக - முருகனே, முத்தம் தருக —, (எ - று.)

குடிகோடல் - எஞ்ஞான்றும் இடையறுது தழுவிக்கொண்டேயிருத்தல். சூரிய சந்திரர்கட் கந்தர்யாமியா யிருந்து அவரை விளங்குவிப்போ னுதலால், 'கதிருமதியு மொளிர வொளிரு மொளிய' என்றார். ஒளிய என்பதற்கு ஒள்ளியனேயென் றுரைப்பினுமாம். பருவமழையின் என்பதில் இன் ஐந்தாவதனுருபுப் பொருட்டு. முனிவர் - மாநசிலர் (கடவுளை யிடையறுது சிந்திப்பவர்.) 'கற்பகக்கனியி லினிய வுருவ

என்பதற்கு கற்பகக் கனியினும் இனிமையானவனே ; அழகிய உருவம் வாய்ந்தவனே என்றுரைப்பினும் பொருந்தும். (9)

50. வடிவி னழகு மெழுத வரிய
புயமு நறிய செச்சையு
மருமம் விரவு குரவு மரையின்
மணியு மணிகொள் கச்சையுங்
கடவு மயிலு மயிலு மொழுகு
கருணை வதன பத்மமுங்
கமல விழியும் விழியு மனமு
மெழுதி யெழுதி நித்தலு
மடிக ளெனவு னடிகள் பணியு
மடிய ரலது மற்றும்வே
றமரர் குழுவு மகில மறையு
மரியு மயனு மூற்றுநின்
முடியு மடியு முணர வரிய
முதல்வ தருக முத்தமே
முனிவர் பரவு பரிதி புரியின்
முருக தருக முத்தமே.

(இ - ள்.) வடிவின் அழகும் - உன் வடிவழகும், எழுத அரிய புயமும் - எழுதுதற்கரிதாகிய தோள்களும், நறிய செச்சையும் - நறுவிய செச்சைமலர் மாலையும், மருமம் விரவும் - திருமார்பிற் பொருந்திய, குரவும் - குரவமலர் மாலையும், அரையில் மணியும் - திருவரையிற் கட்டப்பட்ட மணியும், அணிகொள் கச்சையும் - அழகைக்கொண்ட கச்சையும், கடவும் மயிலும் - (உன்னுல்) செலுத்தப்படுகிற மயிலும், அயிலும் - வேலும், ஒழுகுகருணை - ஒழுகாநின்ற கருணையையுடைய, வதனபத்மமும் - முகத்தாமரையும், கமலவிழியும் - தாமரைமலர்போலுங் கண்களும், விழியும் மனமும் - (அடியார்கள்) தமது கண்ணிலும் மனத்திலும், எழுதியெழுதி - பலகாலெழுதி, நித்தலும் - நாள்தோறும், அடிகள் என - சுவாமிகளே யென்று, உன் அடிகள் பணியும் - உன் திருவடிகளே வழிபடுகிற, அடியர் அல்லது - அடியார்களேயன்றி, மற்றும் வேறு அமரர் குழுவும் - மற்றுமுள்ள வேருகிய தேவர்கூட்டமும், அகிலமறையும் - எல்லா வேதங்களும், அரியும் - திருமாலும், அயனும் - பிரமனும், முற்றும் - முழுதும், நின் - உனது, முடியும் அடியும் - தலையையுங்

காலையும், உணர அரிய - அறிதற்கரிய, முதல்வ - முதல்வனே, தருக முத்தமே—, முனிவர்—, முத்தமே—, (எ - று.)

செச்சை குரவு என்பன முதலாகுபெயர்களாய் அவற்றின் மலர் களை யுணர்த்தி, அம்மலர்கள் கருவியாகுபெயர்களாய் அவற்றுனியன்ற மாலைகளை யுணர்த்தினமையால் இருமடி யாகுபெயர்கள். மணிகொள் கச்சையும் எனப் பிரித்து மாணிக்கத்தைக் கொண்டிருக்கிற பாப்புக் கச்சை யெனினுமாம். பதுமவதனம் என்னுது வதனபதுமம் என்றதனால் பதுமத்தின்மேல்வி பெறப்பட்டது. விழியுமனமுமெழுதி யென்றது இடையருது சேவித்தலையும் சிந்தித்தலையுங் குறித்தது. அடிகள் இரண்டனுள் முன்னையது அண்மைவிளி. (10)

முத்தப்பருவம் முற்றிற்று

6. வருகைப் பருவம்

51. செம்பொற் கருங்கழ லரிக்குரற் கிண்கிணி
சிலம்பொடு கலின்கலினெனத்
திருவரையி லரைமணி கிணின்கிணி னெனப்பொலந்
திண்டோளின் வளைகலிப்ப

அம்பொற் பகட்டுமார் பிற்சன்ன வீரமும்
ஆரமுந் திருவில்வீச
அணிமகர குண்டலம் பரிதிமண் டலமென்ன
அலர்கதிர்க் கற்றைசுற்றப்

பைம்பொற் சுடர்ச்சுட்டி கட்டுசூ ழியமுடன்
பட்டமொளி விட்டெறிப்பப்
பங்கய மலர்ந்ததிரு முகமண் டலந்தொறும்
பனிமுறுவ னிலவரும்பக்

கும்பப் படாமுலை மலைப்புதல்வி செல்வக்
குமாரநா யகன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே,

(இ - ள்.) செம்பொன் - செம்பொன்னுற் செய்யப்பட்ட, கருகழல் - பெரிய கழலிற்பெய்த, அரி - பருக்கைக் கற்களாகிய, சுரல் - சத்தத்தை யுடைய, கிங்கிணி - கிங்கிணிகள், சிலம்பொடு - சிலம்புகளுடன், கலின் கலின் என - கலின் கலின் என்றொலிக்க, திருஅரையில் - திருவிடை யில், அரைமணி - உடைமணி, கிணின் கிணின் என - கிணின்கிணின் என்றொலிக்க, பொலம் - பொன்மயமாகிய, திண் தோளில் - திண் புயங்களில், வளை கலிப்ப - வாகுவலயங்கள் சத்திக்க, அம்பொன் - அழ கிய பொன்னிறமுள்ள, பகடுமார்பில் - விசாலமாகிய திருமார்பில், சன்னவீரமும் ஆரமும் - சன்னவீரமும் ஆரமும், திருவில்வீச - அழகிய ஒளியைவீச, அணி - அணியப்பட்ட, மகரகுண்டலம் - மகரகுண்டலங் கள், பரிதிமண்டலம் என்ன - சூரியமண்டலம்போல, அலர் - பரந்த, கதிர் கற்றை சுற்ற - ஒளிப்பிழம்பு சூழ, பைம்பொன் - பசும் பொன்னு லியன்ற, சுடர் சுட்டி - ஒளியையுடைய சுட்டியானது, கட்டு - கட்டப் பட்ட, சூழியமுடன் - சூழியத்தோடு, பட்டம் - நெற்றிப்பட்டமானது, ஒளிவிட்டு எறிப்ப - ஒளிவிட்டு வீச, பங்கயம் மலர்ந்த - தாமரை மலர் போல மலர்ந்த, திருமுகமண்டலந்தொறும் - திருமுக மண்டலந்தோறும், பனிமுறுவல் - குளிர்ந்த முறுவலாகிய, நிலவு அரும்ப - நிலாவுண்டாக, கும்பம் - குடம் போன்ற, படா முலை - சாயாத் தனங்களையுடைய, மலைப் புதல்வி - மலைமகளுக்கு, செல்வக் குமாரனாயகன் வருக - செல்வக் குமார னாகிய இறைவன் வருக, குரவு கமழ்தரு - குராமலர் மணக்கின்ற, கந்த புரியில் அருள் குடிகொண்ட - கந்தபுரியில் அருளே உருவாகக் குடி கொண்டிருந்தாற் போன்ற, குமர - குமாரக் கடவுளே, குருபரன் - மேலான ஆசிரியனே, வருக—, (எ - று.)

செம்பொற் கருங்கழல் முரண்டொடை. திருவரையி லரைமணியை உடைமணியென்பர். "உடைமணி கட்டிச் சிறுதேருருட்டி யுலாத்தரு மிந் நடைமணியைத் தந்தபின்னர்" என்னூர் மணிவாசகரும். சன்ன வீரம் - வென்றிமாலை. மகர குண்டலம் - மகரமீன் வடிவாகச் செய்யப் பட்டதோர் குண்டல விசேடம். நிலவு - சந்திரிகை. மலைப்புதல்வி - பார்வதி. குரவு கமழ்தரு கந்தபுரியாதலால், குமரகுருபரற்கு விருப்புறு திருப்பதியாயிற்றென்க. என கலிப்ப வீச சுற்ற எறிப்ப அரும்ப வருக என முடிக்க ; வருகைப் பருவம் - வருகையைப் விரும்பிய பருவம். (1)

52. மழவுமுதிர் கனிவாய்ப் பசுந்தேறல் வெண்டுகின்
மடித்தல நினைப்பவம்மை
மணிவயிறு குளிரத் தவழ்ந்தேறி யெம்பிரான்
மார்பினிற் குரவையாடி

முழவுமுதிர் துடியினிற் சிறுபறை முழக்கியனல்
மோலிநீர் பெய்தவித்து
மூளமதியை நெளியரவின் வாய்மடுத் திளமானின்
முதுபசிக் கறுகருத்தி
விழவுமுதிர் செம்மேனி வெண்ணீறு தூளெழ
மிகப்புழுதி யாட்டயர்ந்து
விரிசடைக் காட்டினின் றிருவிழிகள் சேப்பமுழு
வெள்ளநீர்த் தூளயமாடிக்
குழவுமுதிர் செவ்விப் பெருங்களி வரச்சிறு
குறும்புசெய் தவன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே.

(இ-ள்.) மழவுமுதிர் - இளமை மிகுந்த, கனிவாய் - கனிவாயினின்றும் வடிகிற, பசுந்தேறல் - பசிய தேனாகிய, வெள்துகில் - வெள்ளாடை யணிந்த, மடித்தலம் - மடியிடத்தை, நனைப்ப - நனைக்க, அம்மை - இறைவியின், மணிவயிறுகுளிர - அழகாகிய வயிறு குளிர்ச்சியடைய, தாழ்ந்து ஏறி - தாவி ஏறி, எம்பிரான் மார்பினில் - இறைவனது மார்பினிடத்தே, குரவையாடி - குரவைக் கூத்தாடி, முழவுமுதிர் - முழவொலி மிகுந்த, துடியினின் - துடியினிடத்தே, சிறுபறைமுழக்கி - சிறுபறை முழங்கச்செய்து, அனல் - நெருப்பை, மோலிநீர்பெய்து அவித்து - சடைநீரைச் சொரிந்து அவித்து, மூளமதியை - பிறையை, நெளி - நெளிகின்ற, அரவின்வாய் மடித்து - பாம்பின் வாயிலிட்டு, இளமானின் - மான்கன்றின், முதுபசிக்கு - பெரும்பசிக்கு, அறுகு அருத்தி - அறுகையுண்பித்து, விழவுமுதிர் - அழகுமிகுந்த, செம்மேனி - செம்மேனியில், வெண்ணீறு தூள் எழ - வெண்ணீற்றுத் துகளெழும்படி, மிக - மிகுதியாக, புழுதியாட்டு அயர்ந்து - புழுதியாடல் செய்து, விரிசடைக் காட்டில் - விரிந்த சடாடவியில், நின் - உனது, திருவிழிகள் - திருக்கண்கள், சேப்ப - செவக்க, முழுவெள்ளநீர் - முழுப்பெருக்கு நீரில், தூளயம் ஆடி - மூழ்கி, குழவு முதிர் செவ்வி - இளமை முதிர்கின்ற பருவத்தில், பெருங்களிவர - பெருமகிழ்ச்சியுண்டாக, சிறு குறும்பு செய்தவன் - சிறு குறும்புகள் செய்தவனே, வருக —, குரவு —, வருக —, (எ - று.)

அனல் - நெருப்பு, (மழுவாகிய நெருப்பு). மோலிநீர் - சடையிலுள்ள கங்கைநீர். குறும்பு செய்தவன்; குமாகுருபரன் அண்மைவிளிகள்.

எறி ஆடி முழக்கி அவித்து மடித்து அருத்தி அயர்ந்து ஆடி குறும்பு செய்தவன் வருக என முடிக்க. (2)

53. இருளற விமைக்குநின் றிருவுருவி னலர்சோதி
இளஞாயி றெனமுகையவிழ்ந்
தேடுவிரி தாமரைக் காடுமுகிழ் நகைநில
வெறிப்பவலர் குமுதவனமும்
கரைபுரள வலைமோது கடலைக் கலக்குமழ
களிறென வுழக்கியொருநின்
கண்மலர்கள் செம்மலர்க ளாகமோ கப்பெருங்
கலவியங் கடலின்மூழ்கும்
வெருளின்மட நோக்கினீ ரரமகளி ருடனுடும்
விளையாட் டெனத்திரைபொரும்
வெள்ளநீர்ச் சரவணப் பொய்கையந் துறையினீள்
வீரர்க ளெனுங்கோளரிக்
குருளைக ளொடும்புனல் குடைந்துவிளை யாடிய
குமாரநா யகன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே.

(இ - ள்.) இருள் அற - இருளொழியும்படி, இமைக்கும் - பிரகாசிக்கிற, நின் திருவுருவின் - உன் திருவுருவத்தின், அலர் சோதி - பரந்த வொளியை, இளஞாயிறு என - இளஞ்சூரியனென் றெண்ணி, முகை அவிழ்ந்து - மொட்டு விரிந்து, எடுவிரி - இதழ்களலர்ந்த, தாமரைக்காடு - தாமரை மலர்க்காடும், முகிழ் நகை - குறுநகையாகிய, நிலவு எறிப்ப - நிலாவீசுதலால், அலர் - மலர்ந்த, குமுதவனமும் - குமுதமலர்க்காடும், கரைபுரள - கரை புரளும்படி, அலைமோது - அலைமோதுகிற, கடலை - சமுத்திரத்தை, கலக்கும் - கலக்குகின்ற, மழகளிறு என உழக்கி - இளங்களிறுபோலக் கலக்கி, ஒரு - ஒப்பற்ற, நின் கண்மலர்கள் - உன் கண்மலர்களானவை, செம்மலர்கள் ஆக - செவ்வந்த மலர்களாகும்படி, மோகம் - மோகமாகிய, பெரு - பெரிய, கலவிகடலில் மூழ்கும் - கலவிக் கடலின்கண் மூழ்காநின்ற, வெருளின் - வெருட்சியோடு கூடிய, மடநோக்கின் - மடநோக்கினையுடைய, நீரரமகளிருடன் - நீரரமகளிரோடு, ஆடும் - ஆடுகின்ற, விளையாட்டு என - விளையாட்டுப்போல, திரைபொரும் - அலைகள் மோதா நின்ற, வெள்ளநீர் - பெருக்கு நீரை

யுடைய, சரவணப் பொய்கை துறையில் —, நீள் வீரர்கள் என்னும் - பெரிய வீரர்களென்கிற, கோளரி குருளைகளொடும் - சிங்கக்குட்டிகளோடும், புனல் குடைந்து விளையாடிய - நீர் குடைந்து விளையாடின. குமார நாயகன் வருக —, குரவு —, வருக —, (எ - று.)

இமைத்தல் - ஒளிசெய்தல். குமுதம்-அல்லி. செம்மலர்களாக வென்றது செவக்க வென்றபடி. கலவி - புணர்ச்சி. குருளை - குட்டி, இதமரபு, "சிங்கக் குருளைக் கிடுதீஞ்சுவையூன்" என்னும் மஹாகவியும். கலவிக்கடலில் நீராமகளிரோடாடல் போலச் சரவணப் பொய்கையில் வீரர்களோடாடல் செய்த குமார நாயகன் வருகவென முடிக்க. (3)

54. கட்டுண்ட படர்சடைக் காட்டெம்பி ரான்வைத்த
கலைமதியொ டையநீயக்
கவுரிதிரு முடியினித் திலமிட் டிழைத்திட்ட
கதிரிளம் பிறையிணைப்பத்
தெட்டுண்ட போன்முழுத் திங்களென் றேக்கறுஞ்
செழுமணிச் சூட்டுமோட்டுச்
செம்பாம்பு பைவிரித் தாடுதலு மோடிநின்
சிறுநறுங் குஞ்சிக்கிடும்
மட்டுண்ட பைங்குழைக் காந்தளென் றணையவம்
மாசுணம் வெருண்டோடலு
மணிமுடியி னகுதலையை மற்றெமை நகைத்தியால்
மலரவன் றலைநீமுனம்
குட்டுண்ட தறியாய்கொ லெனவித முதுக்கும்
குமாரநா யகன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே.

(இ - ள்.) கண்டுண்ட - கட்டுப்பட்ட, படர் சடைக்காட்டு - பரந்த சடைக்காட்டில், எம்பிரான் வைத்த - எம்பெருமான் வைத்த, கலைமதியொடு - மதிக்கலையோடு, ஐய - ஐயனே, நீ —, அ - அந்த, கவுரி - உமாதேவியின், திருமுடியில் - திருமுடியின்கண், நித்திலம் இட்டு இழைத்திட்ட - முத்துக்களாற் செய்யப்பட்ட, கதிர் இளம்பிறை இணைப்ப - ஒளியையுடைய இளம்பிறையைப் பொருத்த, தெட்டுண்ட முழுத்திங்கள் என்று - தெளிந்த பூர்ண சந்திரனென்று, ஏக்கறும் - ஏங்குகிற, செம்மணி - மாணிக்கத்தோடு கூடிய, சூட்டு - உச்சியையும், மோடி - பெருமையையுமுடைய, செம் பாம்பு - செம்பாம்பானது,

பை விரித்து ஆடுதலும் - படம் விரித்தாடுதலும், ஒடி—, நின் - உனது, சிறு நறு குஞ்சிக்கு இடம் - சிறிய நறிய குஞ்சியிலிட்ட, மட்டுண்ட - தேனுண்டு கூடிய, பை குலை காந்தள் என்று அணைய - பசிய குலைகளையுடைய காந்தட்டுப்பென்று சேர, அ - அந்த, மாசுணம் வெருண்டு ஓடலும் - பாம்பானது அஞ்சியோடுதலும், மணிமுடியில் - அழகாகிய சடையில், நகுதலையை - சிரித்துக்கொண்டிருக்கிற தலையை, எம்மை நகைத்தி - எம்மைநோக்கிச் சிரிக்கின்றனை, ஆல்-ஆதலால், மலரவன்தலை - பிரமன் தலையே, நீ முன்னம் குட்டுண்டது அறியாய் கொல் - நீ முற்காலத்தில் குட்டுப்பட்டதை யறிந்திலைபோலும், என - என்று, இதழ் அதுக்கும் - உதட்டை யதுக்குகிற, குமார நாயகன் வருகவே—, குரவு—, வருக—, (எ - று.)

அறுகு ஆத்தி பாம்பு முதலியவற்றிற் கிடமாயிருத்தலால் சடையினைக் காடென்றும், இவையாவு மடங்குதற் குரிய பரப்பினையுடைத்தாதலால் படர்சடையென்றும் கூறினர். ''வெள்ளந்தாழ் வீரிசடையாய்'' என்றும், ''புயலன்றலர் சடையேற்றவன்'' என்றும் மேலோர் கூறுதலுங் காண்க. கவுரி - கவுர நிறமுள்ளவள். 'நித்திலமிட் டிழைத்திட்ட கதிரிளம் பிறை' யென்றது திருமுடியிலணியு மோராபரண விசேஷத்தை. போல் - அசை ; போலும் என்னும் மகரக் குறுக்கமாய் ஒப்பில் போலியாய் வந்த தெனினுமாம். செம்பாம்பு - கேது. காந்தள் - முதலாகு பெயர். மலரவன் றலை அண்மைவிளி; மலரவன் றலை நீ யென்பதற்கு மலரவன் றலையாகிய நீயென் றுரைப்பினுமாம். இதழதுக்குதல் - உதட்டை மேற்பல்லால் அமுக்குதல். (4)

55. அங்கைத் தலத்தம்மை செங்கண் புதைத்தற்
கடங்காமை யாலெம்பி ரா
னலர்விழிகள் பொத்தலு மிருட்படல மூடவுள்
ளஞ்சிநின் றேங்கவேங்கிச்
செங்கைத் தலங்கொண் டெடுத்தணைப் பாட்குந்
திருத்தாதை யார்க்குமுத்தந்
திருமுகமொ ராறுங் கொடுப்பக் கதுப்பிற்
றெறித்துமுத் தந்தருகெனுங்
கங்கைக்கு நல்கா தெழுந்தலறி யோடலுங்
கண்ணீர் துடைத்தெடுத்துக்

கான்மலரு நீவித்தன் மார்புற வணைக்குமக்
கவுமாரி யருண்மாரியிற்

கொங்கைக் குடங்கொட்டு பாலருவி யாடுங்
குமாரநா யகன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே.

(இ - ள்.) அம்மை செங்கண் - இறைவியின் செவந்த கண்களே, அங்கைத்தலத்து - அங்கைத்தலத்தால், புதைத்தற்கு அடங்காமையால் - மூடற்கடங்காமையினால், எம்பிரான் அலர்விழிகள் பொத்தலும் - எம் பிரானது பரந்த கண்களைப் பொத்துதலும், இருள் படலம் மூட - இருட் கூட்டம் மூடிக்கொள்ள, உள் அஞ்சி நின்று எங்க - மனமஞ்சி யழாநிற்க, எங்கி - இரங்கி, செங்கைத்தலம்கொண்டு - செங்கைத் தலத்தால், எடுத்து அணைப்பாட்கும் - எடுத்தணைத்துக்கொள்பவளாகிய வுமாதேவிக் கும், திருத்தாதையார்க்கும் - திருத்தந்தையாராகிய சிவபிரானுர்க்கும், திருமுகம் ஓராறும் - ஆறு திருமுகங்களும், முத்தம் கொடுப்ப - முத்தங் கொடாநிற்க, கதுப்பில்தெறித்து - கண்ணத்திலறைந்து, முத்தம் தருக என்னும் - முத்தம் தருகவென்கிற, கங்கைக்கு - கங்காதேவிக்கு, நல் காது - கொடாமல், எழுந்து அலறி ஓடலும் - எழுந்தலறிக்கொண் டோடுதலும், கண்ணீர்துடைத்து எடுத்து—, கால்மலரும்நீவி - திருவடி மலரையும் தடவி, தன் மார்பு உற அணைக்கும் - தன் மார்பிற் பொருந்த அணைக்கின்ற, அ - அந்த, கவுமாரி - உமாதேவியாரின், அருள்மாரியின் - அருள் மழைபோல, கொங்கைக்குடம் கொட்டு - அவளுடைய தனக் குடங்கள் கொட்டுகிற, பால் அருவி ஆடும் - பாலருவியில் விளையாடு கின்ற, குமாரநாயகன் வருக—, குரவு,—, வருக—, (எ - று.)

அம்மைவிழிகள் ''பேசத் திருவார்த்தையிற் பெருநீளம் பெருங் கண்களே'' ''அம்பஞ்சியா வம்புகமிக நீண்டரி சிந்து கண்ணுள்'' ''ஓரோ குடங்கைப் பெரியனகெண்டைக் குலமிவையோ வந்துபோகின்றவே'' என்றற் றொடக்கத்தன்வற்றிற் கூறப்படுவதுபோல மிகப் பெரியவாத லால், 'அங்கைத் தலத்தம்மை செங்கண் புதைத்தற் கடங்காமையால்' என்றார். இறைவன் விழிகளாயிருப்பன மூச்சுடர்களாதலாலும், அவை புதைக்கப்படுதலும் இருட்படல மூடுத லியல்பாதலாலும், 'எம்பிரானலர் விழிகள் பொத்தலு மிருட்படலமூட' என்றார். கதுப்பு - கன்னம். தெறித்தல் - அறைதல். மலர்க்கால் என்னுது - கான்மலர் என்றமை யால் மலரினுஞ் சிறந்தது காலென்ற தாயிற்று. நீவல் - துடைத்த லெனினுமாம்.

(5)

வேறு

56. பைந்தண் கமல வட்டவணைப்
பாவை யனையார் பூவிரியும்
பசுமென் குழற்கூட் டகிற்புகையின்
படல மூட முடைநறவின்

கந்தம் பொதிந்த செந்துவர்வாய்க்
கடைசி மகளிர் செந்நெலைப்பைங்
கன்ன லெனவுங் கன்னலைப்பூங்
கமுக மெனவுங் கடைக்கூடாத்

தந்தங் கருத்துக் கமைந்தபடி
சாற்றிச் சாற்றி முழுமாயச்
சலதி மூழ்கித் தடுமாறுஞ்
சமயத் தவர்போற் றலைமயங்கு

மந்தண் பழனக் கந்தபுரிக்
கரசே வருக வருகவே
யருளா னந்தக் கடற்பிறந்த
வமுதே வருக வருகவே.

(இ - ள்.) பைந்தண் - பசுமையும் குளிர்ச்சியுமுள்ள, கமலம் - தாமரை மலராகிய, வட்டம் அணை - வட்ட வணையிலுள்ள, பாவை அனையார் - பிரதிமைபோலுந் திருமகளே நிகர்த்தமாதர், பூவிரியும் - மலர்கள் மலர்கின்ற, பசுமெல் குழற்கு ஊட்டி - பசிய மெல்லிய கூந்தலுக்கு ஊட்டுகிற, அகில்புகையின் படலம் மூட - அகிற் புகைக்கூட்டமானது மூடாநிற்க, முடைநறவின் - முடைநாற்றம் பொருந்திய கள்ளினது, கந்தம் பொதிந்த - நாற்றம் பொருந்திய, செந்துவர்வாய் - செவந்த பவளம் போலும் அதரத்தையுடைய, கடைசி மகளிர் - கடையர், செந்நெலை - செந்நெற்பயிரை, பைங்கன்னல் எனவும் - பசிய கரும்பு என்றும், கன்னலை - கரும்பை, பூ கமுகம் எனவும் - பொலிவாகிய கமுக மரங்களெனவும், கடைக்கூடா - முடிவு பெறாத, தம் தம் கருத்துக்கு அமைந்தபடி - தத்தம் மனத்தில் தோன்றினவண்ணம், சாற்றி சாற்றி - சொல்லிச் சொல்லி, முழுமாயச் சலதிமூழ்கி - முழுமாயக் கடலில் முழுகி, தடுமாறும் - தடுமாறுகிற, சமயத்தவர்போல் - சமயவாதிகள் போல, தலை மயங்கும் - தடுமாறுகிற, அம்தண் பழனம் - அழகிய குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த, கந்தபுரிக்கு அரசே - கந்தபுரிக் கரசனே,

வருக வருக—, அருளானந்தக் கடற்பிறந்த அமுதே - அருளோடு கூடிய ஆனந்த சாகரத்திற் ரோன்றிய அமிர்தமே—, வருக வருக—, (எ - று.)

ப்பந்தண் கமலவட்ட வணையென்னும் அடையால் பாவை திரு மகளே யுணர்த்திற்று. பூவிரியும் பசுமென் குழல் என்றமையால் அணி யும்போது போதா யிருந்த தென்பது பெறப்பட்டது. கந்தம், சுகந்த துர்க்கந்தங்க ளிரண்டையு முணர்த்துமாயினும், ஈண்டு முடை நறவின் கந்தம் என்றமையால் துர்க்கந்தத்தையே பெரும்பாலுங் குறிக்கு நாற்ற மென் றுரைக்கப்பட்டது. கடைசி மகளிர் கள்ளுண்ட பெருங்களிப் பானும், புகைப்படல மூடலானும் செந்நெலைக் கன்னலெனவும், கன்ன லைக் கழுகுமெனவுந் தலைமயங்குவாராயின ரென்க. 'கடைக்கூடாத் தந்தங் கருத்துக் கமைந்தபடி சாற்றிச் சாற்றி முழுமாயச் சலதி மூழ்கித் தடு மாறுஞ் சமயத்தவர்போல் முடை நறவின் கந்தம் பொதிந்த செந்துவர் வாய்க் கடைசிமகளிர் தலைமயங்கு மந்தண்பழனக் கந்தபுரிக் கரசே வருக' என முடித்துக்கொள்க. ''சமய வாதிக டத்தமதங்களே யமைவ தாக வரற்றி மலைந்தனர்'' ''சமயவா திகளெலாந் தந்தெய்வ மென்தெய்வ மென் றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது'' என்றற் ரொடக்கத் தான்ரோர் திருவாக்குக்களானுஞ் சமயத்தவர் இழித்துக் கூறப்பட்டிருத்தல் காண்க. அருளானந்தக் கடல் என்றது சிவபெரு மானை ; ''ஆனந்தமா கடலாடு சிற்றம்பலம்'' என்ரூர் மணிவாசகப் பெருமானுரும். (6)

57. வள்ளைக் குழையிற் ரூவடிபோ
மடமா ளைக்கிற் கடைசியர்கண்
மாலைக் குழல்வண் டோலமிட
மடுவில் வெடிபோம் வரிவாளை

பள்ளத் திருடுங் கழுவநீர்ப்
பரப்பென் றகல்வான் மிசைத்தாவப்
பாகீ ரதித்தீம் புனல்கிடைத்த
பரிசு வீட்டின் பயன்றுய்க்கு

முள்ளக் கருத்தாற் பிறிதொன்றை
யுண்மைப் பொருளென் றுள்ளவுந்த
முணர்விற் றெய்வங் கடைக்கூட்ட
வுறுதி கிடைத்த படிபோலு

மள்ளற் பழனப் புள்ளூருக்
கரசே வருக வருகவே.
யருளா னந்தக் கடல்பிறந்த
வமுதே வருக வருகவே.

(இ - ள்.) வள்ளை - வள்ளைத்தண்டு போன்ற காதிலணிந்த, குழையில்-குழைமீது, தாவடிபோம் - போர் செய்யப்போகிற, மடமான் நோக்கின் - மடமாந்ளோக்கத்தையுடைய, கடைசியர்கள் - கடைசி மகளிர்களுடைய, மாலை - பூமாலை யணிந்த, குழல் - கூந்தலில் மொய்த்த, வண்டு - வண்டுகள், ஒலமிட - சத்திக்க, மடுவில் - மடுக்களினின்றும், வெடிபோம் - துள்ளி யெழுகிற, வரிவாளை - நீண்ட வாளைமீன்கள், பள்ளத்து - ஆழத்தையுடைய, இருள் தூங்கு - இருள்தங்கிய, அழுவம் நீர்பரப்பு என்று - கடனீர்ப் பரப்பென்று, அகல் - அகன்ற, வான்மிசை தாவ - ஆகாயத்தின் மேற் குதிக்க, பாகீரதி - ஆகாய கங்கையின், தீ புனல்கிடைத்த - இனியநீர் கிடைத்த, பரிசு - தன்மையானது, வீட்டின் பயன் துய்க்கும் - வீட்டின் பயனை நுகர்கின்ற, உள்ளக் கருத்தால் - மனக்கருத்தால், பிறிது ஒன்றை - வேறொன்றை, உண்மைப்பொருள் என்று - மெய்ப்பொருளென்று, உள்ளவும் - நினையா நிற்கவும், தம் உணர்வில் தெய்வம் - தமதறிவிலுள்ள தெய்வமானது, கடைக்கூட்ட - முற்றுவிக்க, உறுதி - உறுதிப்பொருளானது, கிடைத்தபடி போலும் - கிடைத்த தன்மையை நிகர்க்கின்ற, அள்ளல் பழனம் - சேற்றையுடைய வயல்கள் சூழ்ந்த, புள்ளூருக்கு அரசே—, வருக வருக—, அருளானந்தக் கடற்பிறந்த அமுதே—, வருக வருக—, (எ - று.)

வள்ளை - உவமையாகுபெயர். குழை - காதணி. தாவடி - போர். "தாவடி வந்திப்படி யெனதாவி தளர்வித்தவே" என்றார் பிறரும். கள் மாலைக்கு உழல் எனப் பிரித்து, தேனின் பொருட்டுப் பூமாலையி லுழல்கின்ற என்று உரைப்பினுமாம். வெடிபோதல் - ஒரு சொல், துள்ளி வெளிப்படுத லென்பது பொருள். பகீரதனு லிவ்வுலகத்துக் கொணரப் பட்டமையால் கங்கையைப் பாகீரதி யென்பர் வடநூலார். வீடு - முக்தி. பிறிதொன்று - வேறொரு தெய்வம். புள்ளூர் - சடாயுபுரம். (7)

58. நஞ்சிற் றோய்த்துக் கொலைதீற்று
நயன வேலுங் கரும்புருவ
நாமச் சிலையு மகலல்கு
னகுபொற் றேரு மிகல்கடந்து

வஞ்சிக் கொடிநுண் ணிடைசாய்த்து
மதர்த்துக் களித்த மால்களிறு
மற்றும் படைகள் பற்பலவும்
வகுத்துக் கொண்டு மடலவிழ்ந்த

கஞ்சத் தவிசிற் றிருவன்னூர்
கடலந் தானைக் கைகிமிரக்
காமன் படைவீ டெனப்பொலியுங்
காட்சி யானு மப்பெயரிட்

டஞ்சொற் றமிழோர் புகழ்வேளூர்க்
கரசே வருக வருகவே
யருளா னந்தக் கடற்பிறந்த
வமுதே வருக வருகவே.

(இ - ள்.) நஞ்சில் தோய்த்து - விடத்தில் தோய்த்து, கொலைதீற்றும் - கொலையுசிய, நயனம் வேலும் - கண்களாகிய வேற்படைகளையும், கருபுருவம் சாமச்சிலையும் - கரிய புருவமென்னும் பெயரையுடைய வில்லினையும், அகல் அல்குல் நகுபொன்தேரும் - அகன்ற அல்குலாகிய விளங்குகின்ற பொற்றேரினையும், இகல் கடந்து - பகைவரை வென்று, வஞ்சிக்கொடி நுண் இடை சாய்த்து - வஞ்சிக்கொடிபோலும் நுண்ணிய இடையை வருத்தி, மதர்த்து களித்த - மதர்த்துக் களித்திருக்கிற, மால் களிறும் - மத மயக்கத்தையுடைய யானைகளையும், மற்றும் படைகள் பற்பலவும் - மற்றுமுள்ள படைகளாகிய பற்பலவற்றையும், வகுத்துக் கொண்டு - ஏற்படுத்திக்கொண்டு, மடல் அவிழ்ந்த - இதழ்விரிந்த, கஞ்சம் தவிசில் - தாமரை மலர்ப்பீடத்தில் வீற்றிருக்கிற, திரு அன்னூர் - இலக்குமியை நிகர்ப்பவராகிய மாதரென்கிற, கடல்தானை - சேனை சமுத்திரமானது, கைகிமிர - மிக்குவர, காமன் படைவீடு என - மன்மதனது படைவீடென்று சொல்லும்படி, பொலியும் காட்சியானும் - விளங்குகிற தோற்றத்தாலும், அப்பெயர் இட்டு - அந்தப் பெயரையே யிட்டு, அம்சொல் தமிழோர் - அழகிய சொல்லிலக்கணம்வல்ல தமிழ் நூலோர், புகழ் - புகழ்கின்ற, வேளூர்க்கு அரசே—, வருக வருக—, அருளானந்த—, வருக—, (எ - று.)

தோய்த்தல் - நனைத்தல். மால்களிறு என்றது தனத்தை. கஞ்சம் - நீரிற்றோன்றுவது. இஃது இங்குக் கஞ்சத்தவிசிற் றிருவென்றமையால் செந்தாமரைக்காயிற்று. கைகிமிர்தல் - ஒரு சொன்னீர்மைத்து. காமன்

படைவீடாய்த் தோன்றுங் காட்சியால் இதற்கு வேளூர் எனப் பெயர் கூறுவர் தமிழரென்பது கருத்து. வேள் - விருப்பத்தை யுண்டாக்குவோன். காமன் என்னும் வடசொற்கு மிதுவே பொருளென் றுணர்க.

சந்த விருத்தம்

59. உலகு குளிர வெமது மதியி
லொழுகு மமுத கிரணமே
யுருகு மடிய ரிதய நெகிழ
வுணர்வி லெழுந வுதயமே

கலையு நிறையு மறிவு முதிர
முதிரு மதுர நறவமே
கழுவு துகளர் முழுக நெடிய
கருணை பெருகு சலதியே

யலகில் புவன முடியும் வெளியி
லளியு மொளியி னிலயமே
யறிவு ளறிவை யறியு மவரு
மறிய வரிய பிரமமே

மலையின் மகள்கண் மணியை யணைய
மதலை வருக வருகவே
வளமை தழுவு பரிதி புரியின்
மருவு குமரன் வருகவே.

(இ - ள்.) உலகுகுளிர - உலகம் குளிரும்படி, எமது மதியில் - எம தறிவில், ஒழுகும் - ஒழுகாநின்ற, அமுதகிரணமே - சந்திரனே, உருகும் - உருகாநின்ற, அடியர் - அடியார்களுடைய, இதயம் நெகிழ - இருதய மானது நெகிழும்படி, உணர்வில் எழும் - அறிவினிடத்துத் தோன்றுகிற, நல் உதயமே - நல்ல சூரியனே ; கலையும் - நூல்களும், நிறையும் - நிறையும், அறிவும் - உணர்வும், முதிர - முதிரும்படி, முதிரும் - முதிர்கிற, மதுரம் நறவமே - இனிய தேனே, கழுவு துகளர் - குற்றமற்ற ஞானியர், முழுக - முழுகும்படி, நெடிய கருணைபெருகு - பெரிய கருணைநீர் பெருகுகின்ற, சலதியே - கடலே, அலகு இல் புவனம் - அளவில்லாத புவனங்கள் யாவும், முடியும் வெளியில் - முடிகின்ற வெளியிடத்தில், அளியும் - முதிர்ந்த, ஒளியின் நிலயமே - ஒளிக்குப் பிறப்பிடமே, அறிவு உள் அறிவை - அறிவுக் கறிவாயிருப்பதை, அறியுமவரும் - அறிகிறவராகிய

ஞானியரும், அறிய அரிய - அறிதற்கரிதாகிய, பிரமமே—, மலையின் மகள் - மலைமகளது, கண்மணியை அனைய - கண்மணியை நிகர்த்த, மதலை - புதல்வனே, வருக வருக—, வளமைதழுவு - வளங்கள் யாவும் பொருந்திய, பரிதிபுரியில்—, மருவு - எழுந்தருளிய, குமரன்-குமரனே, வருக வருக—, (எ - று.)

துகள்கழுவினுரைக் கழுவுதுகளர் என்றார். இது வடமொழியில் கதகல்மஷர், ஜிதேந்த்ரியர் என்பன போல்வது. இதை யடியொற்றித் தமிழறிஞரும், பவங்கடந்தவர் என்றற்கு "கடக்கும் பவத்தர்" என்றும், பற்றுவிட்டவர் என்றற்கு, "விட்டபற்றினர்" என்றும் கூறுதல் காண்க. நிலயம் - பிறப்பிடம். "உணர்ந்தார்க் குணர்வரியோன்" "உலகெலா முணர்ந்தோதற் கரியவன்" என இறைநிலையுணர்ந்த மேலோர் கூறுதலான், 'அறிவு எறிவை யறியுமவரு மறிய வரிய பிரமமே' என்றார். சூரியன் பூசித்த திருப்பதி யாதலால், பரிதிபுரி யென் றிதற்குப் பெயர் வழங்கும். (9)

60. இழுமெ னருவி சொரியு மிமய
முதல்வி புதல்வன் வருகவே
யியலு நடையும் வடிவு மழகு
மெழுத வரியன் வருகவே

யொழுகு கருணை முழுகு கமல
வதனன் வருக வருகவே
யொருவ னிருவ ரொடுகை தொழுந
லுபய சரணன் வருகவே

விழுது விடுவெ ணிலவு பொழியு
நகையன் வருக வருகவே
விளரி பயிலு மளியு ஞிமிறும்
விரவு குரவன் வருகவே

மழலை முதிர முதிரு மதுர
வசனன் வருக வருகவே
வளமை தழுவு பரிதி புரியின்
மருவு குமரன் வருகவே.

(இ - ள்.) இழுமென் அருவி - இழுமென்னும் அருவிகளை, சொரியும் - சொரிகின்ற, இமய முதல்வி - இமயமலையிற் பிறந்த முதல்வியின், புதல்

வன் - புதல்வனே, வருக—, இயலும் நடையும் வடிவும் அழகும் - இயலையும் நடையையும் வடிவையும் அழகையும், எழு - எழுதுதற்கு, அரியன் - அரியனனவனே, வருக—, ஒழுகு கருணை - ஒழுகாநின்ற கருணைவெள்ளத்தில், முழுகு - மூழ்கி யிருக்கிற, கமலவதனன் - கமலமுகனே, வருக—, ஒருவன் - ஒப்பற்றவனுகிய சிவபிரான், இருவரொடு - பிரமவிட்டுணுக்களாகிய இருவரோடு, கைதொழும் - கை குவித்து வணங்குகிற, நல் - நன்மையைத் தருகிற, உபயசரணன் - இரு சரணனே, வருக—, விழுதுவிடு - விழுதுவிட்ட, வெள்நிலவு பொழியும் - வெண்ணிலவைச் சொரிகின்ற, நகையன் - நகையை யுடையவனே, வருக வருக—, விளரிபயிலும் - விளரியைப் பழகுகிற, அளியும் ஞிமிறும் - கருவண்டும் பொன் வண்டும், விரவு - கலந்து வாழ்கின்ற, குரவன் - குராமலர் மாலையை யுடையவனே, வருக—, மழலை முதிர - மழலை முதிராநிற்க, முதிரும் - முதிர்கின்ற, மதரம் - இனிமையாகிய, வசனன் - சொல்லையுடையவனே, வருக வருக—, வளமைதழுவு பரிதிபுரியின்,—மருவு—, வருக—, (எ - று.)

விளரி - ஏழிசையிலொன்று. அது நெஞ்சிற் பிறப்பது, யாழோசையெனினுமாம். புதல்வன், அரியன், வதனன், சரணன், நகையன், குமரன், வசனன் என்பன அண்மைவிளிகளாதலால் இயல்பாயின. முழுகு என மேல்வருதலால் கருணை வெள்ளமாக்கி யுரைக்கப்பட்டது.

வருகைப்பருவம் முற்றிற்று



7. அம்புலிப் பருவம்

ஆசிரிய விருத்தம்

61. மண்டலம் போற்றுருவ மமுதமய மாய்முழு
மதிக்கடவு ளெனவருதலால்
வானுறு தலைமடுக் கப்பொங்கு மானந்த
மாக்கட லிடைத்தோன்றலாற்

றண்டலில் கொடிச்சிவாய்க் குமுதம்விள் ளக்கரத்
தாமரை முகிழ்த்திடுதலாற்
சகலபுவ னத்திலு முயிர்ப்பயிர் தழைப்பநற்
றண்ணளி சுரந்திடுதலாற்

முண்டமதி நதியொடு பொதிந்தவே ணிப்பரஞ்
சோதிகட் பொறியாதலாற்
றோன்றலிவ னின்னையொத் துளனி னினக்குமொரு
துணையிவன் போலில்லைகா

ணண்டரண் டத்தொடகி லாண்டம் படைத்தவனெ
டம்புலீ யாடவாவே
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே.

(இ - ள்.) மண்டலம்போற்று உருவம் - எல்லாவுலகங்களும் வணங்குதற்குரிய வடிவமானது, அமுதமயமாய் - அமிர்த ரூபமாய், முழுமதிக் கடவுள் என வருதலால் - முற்றறிவுடைய தெய்வம் என வருதலாலும், வான்ஆறு தலைமடிக்க பொங்கும் - வானுறு தலைமடித்தலாற் பொங்குகிற, ஆநந்தமாக் கடலிடை தோன்றலால் - சிவபெருமானிடத்தில் தோன்றுதலால், தண்டல் இல் - தடையில்லாத, கொடிச்சிவாய் - குறத்திவாயாகிய, குமுதம் விள்ள - குமுதமலர, கரத்தாமரை முகிழ்த்திடுதலால் - கையாகிய தாமரையைக் கூப்புதலால், சகல புவனத்திலும் - எல்லாவுலகங்களிலும் உள்ள, உயிர்பயிர் தழைப்ப - உயிர்களாகிய பயிர்கள் செழிக்க, நல்தண்ணளி சுரந்திடுதலால் - நல்ல கிருபையைத் தோற்றுவிக்கின்றமையாலும், தண்டம் மதி நதியொடு பொதிந்த - சந்திரகண்டத்தை நதியோடு அணிந்த, வேணி - சடாபாரத்தையுடைய, பரஞ்சோதிகட் பொறி ஆதலால் - சிவபெருமானுடைய கட்பொறியாய் விளங்குதலால், தோன்றல் இவன் - தோன்றலாகிய இவன், நின்னை ஒத்து உளன் ஆல் - உன்னை நிகர்த்திருக்கிறானதலால், நினக்கும் - உனக்கும், இவன்போல் - இவனைப்போல, ஒருதுணை இல்லை - ஒரு சகாயமில்லை, (ஆதலால்) அண்டர் அண்டத்தொடு - தேவலோகத்தோடு, அகில அண்டம் படைத்தவனொடு - எல்லா வுலகங்களையும் படைத்தவனாகிய இவனுடன், அம்புலீ - சந்திரனே, ஆடவா - வீளையாட வருவாயாக, அழகுபொலி - அழகானது மிக்கு விளங்குகிற, கந்தபுரி தழையவரு - கந்தபுரி செழிக்க எழுந்தருளிய, கந்தனுடன்—, அம்புலீ யாடவா—, (எ - று.)

இந்தப்பருவம் சந்திரனை நோக்கிச் சதுருபாயத்தாலு மழைத்தாகக் கூறப்படுதல் கவி மரபாதலால், அவ்வுபாயங்களை அவ்வச்செய்யுட்களின் கீழ்க் குறித்திருத்தல் காண்க. சதுருபாயம் - நால்வகை யுபாயங்கள். அவை,— சாமம் பேதம் தானம் தண்டம் என்பன; அவற்றுள்

சமப்படுத்திக் கூறல் சாமமென்றும், வேறு படுத்திக்கூறல் பேதமென்றும், வேண்டியதொன்றைக் கொடுத்துக் கூறல் தானமென்றும், தண்டிப்பதாகக் கூறல் தண்டமென்றுங் கூறப்படும். இவை இப் பருவத்தின் செய்யுட்களின் கீழ்க் குறித்தும் ; ஆண்டுக் கண்டுகொள்க. மண்டலம் இடவாகு பெயர்.

சந்திரன்—அமுதகிரணஞ்ய் முழுமதிக் கடவுள் என வருதலால்.

குமரன்—மோக்கவடிவாய் முற்றறிவுடைய தெய்வம்.

சந்திரன் — வான் ஆறு தலைமடக்கப் பொங்குமானந்த மாக்கடலிடைத் தோன்றலால் - மேன்மையாகிய நதிகள் வந்து கலத்தலால் பொங்குகிற பெரிய சங்கங்கள் தவழ்கிற அழகிய கடலிடையில் தோன்றுதலால்.

குமரன் — ஆகாயகங்கை முடியிற் பொருந்தலால் களிக்கின்ற சிவபிரானிடத் தவதரித்தலால்.

சந்திரன் — கொடிச்சிவாய் குமுதம்விள்ள, கரத்தாமரை முகிழ்த்திடுதலால் - கொடியின்கட் குமுதமலர ஒளியுள்ள தாமரை குவிதலால்.

குமரன் — வேடிச்சி வாயாகிய குமுதம் விரியக் கைத்தாமரை கூப்புதலால்.

சந்திரன் — உயிர்ப்பயிர் தழைப்ப நல் தண்ணளி சுரந்திடுதலால் - உயிருள்ள பயிர்கள் செழிக்க நல்ல ஒளிர்ச்சி சுரத்தலால்.

குமரன் — உயிர்களாகிய பயிர்கள் செழிக்க நற்கருணை சுரத்தலால்.

சந்திரன் — துண்டமதிநதியொடு பொதிந்த வேணிப் பரஞ்சோதிகட் பொறியாதலால் - சந்திரகண்டம் கங்கையாற்றோடு பொருந்திய சடையையுடைய சிவபிரானது கண்ணுகிய பொறி யாதலால்.

குமரன் — கண்ணிற்றோன்றின தீப்பொறி யாதலால்.

தோன்றல் - பெருமையிற் சிறந்தோன். அண்டர்-தேவர். ஆனந்த மாக்கடல் - சிவபிரான், இஃது "ஆனந்தமாக்கடலாடு சிற்றம்பலம்" என்னும் மணிவாசகர் திருவாக்கினு லினிது விளங்கும். (1)

62. சொற்றரு பெரும்புலவர் கலியமுது கொளவிருந்
தோகைமேல் கொண்டருளினுய்
தோற்றிமுன் பொங்கிமலி போலவலி மோதுமச்
சோதிவே லெயுமுகந்தாய்

குற்றமில் குணத்தைக் குறித்தவிர வலர்முகங்
கோடா தளித்தல்செய்தாய்
கோகனக நாயகன் வரக்கூ விடுங்குக்
குடங்கொடிய தாகவைத்தா

யுற்றிடு மிதழ்க்குமுதம் விண்டுதண் டேனெழுக
வொளிநிலா நகைமுகிழ்த்தா
யுன்செய்கை யெம்பிரான் றன்செய்கை போலுமா
லுனையுமிவ ளெவ்வாதிரா

னற்பொதி களத்தவ னளித்தகும ரேசனுட
னம்புலீ யாடவாவே
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே.

(இ - ள்.) சொற்றரு பெரும்புலவர் கலைஅமுது கொளவிருந் தோகைமேல் கொண்டருளினாய்,—

சந்திரன் — புகழ்பெற்ற பெருந்தேவர் கலையமிர்தத்தைக்கொள்ள விருந் துவகையைக் கொண்டருளினை.

குமரன் — சொன்மாலைசூட்டுகிற பெரிய புலவராகிய நக்கீரரது கலைச் சுவையாகிய அமுதைக்கொள்ளப் பெரிய மயிலின்மீ தெழுந் தருளினை.

தோற்றிமுன்பொங்கி மலைபோல வலைமோது மச்சோதி வேலையு முகந்தாய்,—

சந்திரன் — எதிரே தோன்றிப் பொங்கி மலைபோல் அலைமோதுகிற அந்த வொளியுள்ள கடலையும் உவந்தனை.

குமரன் — (அன்பர்க்கு) எதிரே தோன்றிச், சீறிய கிரவுஞ்ச மலையைப் போலச் சமுத்திரத்தையும் (வருணன்விட்ட கடலைக் கெடுக்கிற) அந்த வொளியுள்ள வேற்படையையும் விரும்பினை.

குற்றமில் குணத்தை குறித்த விரவலர் முகங் கோடாதளித்தல் செய்தாய், —

சந்திரன் — குற்றமில்லாத குணத்தை யுடைய இராமலர்களின் முகங் கோடாது காத்தனை.

குமரன் — குற்றமற்ற குணத்தையுடைய ஞானியரிடத்தில் நடுவு நிலை யாய் நின்று அவர்களைக் காத்தருளினை.

கோகநக நாயகன் வரக்கூவிடுங்குக்குடம் கொடியதாக வைத்தாய்,—

சந்திரன் — சூரியன்உதிக்க கூவுகிற சேவற்கோழியைக் கொடிதாக வைத்தனை.

குமரன் — சூரியன் உதிக்கக் கூவுகிற சேவற்கோழியைத் துவசமாக வமைத்துக் கொண்டனை.

உற்றிடும் இதழ்க்குமுதம் விண்டு தண்தேன் ஒழுக ஒளிநிலா நகை முகிழ்த்தாய்,—

சந்திரன் — மிக்க இதழ்களையுடைய குமுதங்கள் வெடித்துக் குளிர்ந்த தேனொழுகும்படி ஒளிநிலாவைத் தோற்றுவித்தாய்.

குமரன் — பொருந்திய இதழாகிய குமுதமலர் விரிந்து தேன் ஒழுகா நிற்க ஒளிநிலாவாகிய புன்முறுவலைச்செய்தாய். (ஆதலால்) உன் செய்கை யெம்பிரான்றன் செய்கை போலுமா லுனையு மிவ ளெவ் வாதிரான் - உன் செய்கைக ளெல்லாம் எம்பெருமானது செய்கை களை யொத்திருக்கின்றன ; ஆதலால், இவன் உன்னையும் ஒவ்வா திரான். அல் பொதி - இருள் பொதிந்துள்ளதைப் போல் மிக்க கருநிறத்துடன் விளங்குகிற, களத்தவன் - கண்டத்தை யுடையவ னாகிய சிவபிரான், அளித்த - பெற்ற, குமரேசனுடன் - குமாரக் கடவுளோடு, அம்புலீ யாடவா—, அழகு பொலி—, யாடவா—, (எ - று.)

புலவர்-தேவர்க்கும் கற்றறிந்தார்க்கும் பெயர். ஓகை-உவகை யென் பதன் மரூஉ. தோகை-சினையாகுபெயர். இராமலர் - குமுத முதலாயின. கொடிதாகவைத்தல் - விரகிகளுக்குக் கொடிதா யிருக்கச் செய்தல். இதழ் - சந்திரனுக்குப் பூவிதழும், குமரனுக்கு வேடிச்சியிதழும். இவ் விரண்டு செய்யுளும் சாமோபாயத்தாற் கூறப்பட்டன. (2)

63. கங்கைமுடி யடிகட்கொர் கண்ணு யிருத்தியக்
கண்ணினுண் மணியிவன்காண்
கலைகள்சில நிறைதிபின் குறைதியிவ னென்றுமொண்
கலைமுழுது நிறையநின்ரு

னெங்குமிர வோனெனைத் திரிதியிவ னடியவ
ரெவர்க்குமிர வினையொழித்தா
னிருநிலத் தங்குரிக் கும்பயிர் வளர்த்தியிவ
னெவ்வுயிரும் வாழச்செய்தான்

பொங்கமுத மழுதா சனர்க்குதவி னியிவன்
புத்திமுத் தியுமளித்தான்
புவனம் படைத்தவிவ னின்னின்மிக் கானெனப்
புகல்வதோர் பொருளன்றுகா
ணங்கண்மறை யோலிட் டரற்றநின் றவனுட
னம்புலீ யாடவாவே
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே.

(இ - ள்.) நீ - சந்திரனுகிய நீ, கங்கைமுடி அடிகட்கு - கங்கையைச் சிரோபூஷணமாக முடித்துக்கொண்ட சிவபெருமானுக்கு, ஓர் கண்ணாய் இருத்தி - ஒரு கண்ணுயிருக்கிறாய், இவன் - குமரனுகிய இவன், அ கண்ணினுள்மணி - அந்தக் கண்ணுள்ளே மணியாயிருக்கிறான், கலைகள் சில நிறைதி பின் குறைதி - நீ சில நாள் கலைகள் நிறைகிறாய் பின்னே குறைகிறாய், இவன்—, என்றும் - எந்நாளும், ஒண்கலை முழுதும் நிறைய நின்றான் - ஒட்பமாகிய கலைகளெல்லாம் நிறைய நிற்கிறான், எங்கும் இரவோன் எனத் திரிதி - நீ எவ்விடத்தும் இரவோனென்று சொல்லும் படி திரிகிறாய், இவன்—, அடியவர் எவர்க்கும் - அடியார் யாவர்க்கும், இரவினை ஒழித்தான் - இரவைத் தவிர்த்தான், இருநிலத்து அங்குரிக்கும் பயிர் வளர்த்தி - நீ பெரிய நிலத்தில் முளைக்கிற பயிர்களை வளர்க்கிறாய், இவன் எவ்வுயிரும் வாழச்செய்தான் - இவன் எல்லாவுயிர்களையும் வளர்த்தான், பொங்கு அமுதம் அமுதாசனர்க்கு உதவினாய்-நீ விளங்குகிற அமிர்தத்தைத் தேவர்களுக்குக் கொடுத்தாய், இவன் புத்திமுத்தியும் அளித்தான்-இவன் புத்தி முத்திகளையுங் கொடுத்தான், புவனம்படைத்த இவன்-உலகங்களைப் படைத்த இவன், நின்னின் மிக்கான் என - உன்னினும் மேலானவனென்று, புகல்வது - சொல்லுவது, ஓர் பொருள் அன்று - ஒரு பொருளல்ல, அம்கண்மறை ஒலிட்டு அரற்ற நின்றவனுடன் - அழகிய அறிவைத் தருகிற வேதங்களும் முறையிட்டரற்றும்படி நின்றவனோடு, அம்புலீ யாடவாவே—, (எ - று.)

கங்கைமுடி யென்பதற்குக் கங்கையை முடியிலுடையவெனினுமாம். சந்திரனுக்குக் கலை கூறுகளும், குமரனுக்குக் கலை வேதாகம புராணேதிஹாஸாதிகளும். இரவோன் - சந்திரனைக் குறிக்குங்கால் இரவினை யுண்டாக்குவோனென்றும், குமரனைக் குறிக்குங்கால் இரவு எற்குந் தொழிலென்றும், அறியாமையாகிய இருளென்றும் கொள்க. அங்குரித்தல் - முளைத்தல். அமுதாசனர் - அமுத அசனர் எனப் பிரிக்க. அமிர்தத்தை யுணவாகவுடையவர் என்பது பொருள். புத்தி - நுகர்தற்குரிய

இகபோகங்கள், முத்தி - வீடு, இவ்விரண்டும் புக்திமுக்தி என்னும் வட சொற்றிரிபு. நின்னின் என்பதில் இன் என்னுமைந்தனுருபு உறழ்பொருளது. அங்கண் என்பதற்கு அழகிய காண்டம் முதலிய வுறுப்புக்களெனினுமாம். மறை யென்பதற்கு அறமுதலிய நாற்பயனையுந் தன்னுள்ளே மறைத்திருப்பதென்றும், அந்தணர்க்கன்றி யேனையர்க்கு அதிகரிக்கத் தகாததென்று மறுக்கப்பட்டதென்றும் பொருள் கூறுவர். ஓலமிட் டென்பது ஓலிட்டெனத் தொகுத்தது. மறையோலிட்டாற்ற லெற் றுக்கெனின், இக் குமரன் பெருமை தமக்கெட்டாமையா னென்க. "அல்லையீதல்லையீதென மறைகளு மன்மைச் சொல்லினுற் றுதித்திலைக் கும்" என்று பிறரு மிவ்வாறு கூறுதல் காண்க. (3)

64. பாயிருட் போதத் திருட்டன்றி யகவிருட்
படலங் கிழிப்பதுணராய்
பனிவிசும் பிற்பொலிவ தொன்றலாற் புவனப்
பரப்பெலாம் பொலிவதோராய்
சேயிதழ்க் குமுதந் திறப்பதல் லாதுளத்
திருமலர் திறக்கவறியாய்
சிறைவிரி சகோரப்பு ளன்றியெவ் வுயிருந்
திலைத்தின்ப மாரச்செயாய்
நீயிவற் கொப்பன்மை செப்புவதெ னிப்பரிசி
னின்பெருந் தவமென்சொல்கே
னெடியவன் மூதற்றேவர் குறுகிநிற் பவுமூனை
நினைத்தழைத் தருளினன்கா
ணுயிர மறைக்குமொரு பொருளா யிருப்பவனெ
டம்புலீ யாடவாவே
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே.

(இ - ள்.) பாய் இருள்போதத்து இருட்டு அன்றி - பரவிய இராக் காலத்து இருட்டையன்றி, அகம் இருள் படலம் கிழிப்பது உணராய் - உள்ளிருட்டொகுதியைக் கீள்வ தறிந்திலை, பனி விசும்பில் பொலிவது ஒன்று அலால் - குளிர்ச்சி பொருந்திய ஆகாயத்தில் விளங்குவ தொன்றையன்றி, புவனப் பரப்பு எல்லாம் பொலிவது ஓராய் - உலகப் பரப்பு முழுதும் விளங்குத லறிந்திலை, சே இதழ் குமுதம் திறப்பது அலால் - செவ்விதழ்களையுடைய குமுதமலரை விரிப்பதல்லாமல், உள்

ளத் திருமலர் திறக்க அறியாய் - இதயமாகிய அழகிய தாமரைமலரை விரிக்க வறிந்திலை, சிறைவிரி சகோரப்புள் அன்றி - சிறை விரிக்கிற சகோரப் பறவையன்றி, எவ்வுயிரும் திளைத்து இன்பம் ஆரச்செயாய் - எல்லாவுயிர்களும் பேரின்பம் நுகரச்செய்திலை, இவற்கு ஒப்பு அன்மை - இக்குமாரநாயகனுக் கொப்பல்லாமையை, செப்புவது என் - சொல்லுவ தென், இப் பரிசில் - இந்தத் தன்மையில், நின் பெருந்தவம் என் சொல் கேன் - உனது பெரிய தவப்பயன் யாதென்று சொல்வேன், நெடியவன் முதல் தேவர் - நெடியோன் முதலிய தேவர்கள், குறுகி நிற்பவும் - கிட்டி நிற்கவும், உன்னை நினைத்து அழைத்தருளினன் - உன்னை நினைத்துத் தன்னுடன் விளையாடுமாறு அழைத்தருளினன், ஆயிரமறைக் கும் - ஆயிர வேதங்களுக்கும், ஒரு பொருளாயிருப்பவனெடு - ஒப்பற்ற பொருளா யிருப்பவனெடு, அம்புலீ யாடவாவே—, (எ - று.)

பொழுதென்று பொருள்படும் போதென்னுஞ் சொல் அத்துச் சாரியை பெற்றுப் போதத்தென நின்றது. உள்ளிருள் - அஞ்ஞான விருள். ஓர்தல் - அறிதல். நெடியவன் - திரிவிக்கிரமனுய் நீண்டவன் (திருமால்). ஆயிரம் - ஈண்டுப் பலவென்னும் பொருட்டு. இவை யிரண்டு செய்யுளானும் பேதோபாயங் கூறப்பட்டது. (4)

65. தருமன்னு பொன்னுலகு மண்ணுலகு மொக்கத்
தலைத்தலை மயங்கத்தொகுஞ்
சன்னிதி யடைந்தவர்கள் பையுணேய் மூற்றுந்
தவிர்ந்தக மகிழ்ந்துதவிராக்
கருமன்னு மூழிப் பெரும்பிணியு மாற்றிடுதல்
கண்டனே யிருத்தியானின்
கயரோக முடன்முயற் கறையுந் துடைத்திடக்
கருதிடுதி யேலெம்பிரான்
றிருமுன்ன ரள்ளியிடு வெண்சாந்து மற்றைத்
திருச்சாந்து நிற்கவற்றுச்
சித்தாமிர் தத்தடத் தீர்த்தத் துறைக்குறுங்
திவலையொன் றேயமையுமா
லருவென்ன வுருவென்ன வன்றென்ன நின்றவனெ
டம்புலீ யாடவாவே
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தணுட
னம்புலீ யாடவாவே.

(இ - ள்.) தரு மன்னு பொன் உலகும் - கற்பகத் தரு நிலை பெற்றிருக்கிற வானுலகும், மண் உலகும் ஒக்க - மண்ணுலகும் ஒத்திருக்கும் படி, தலைத்தலை - இடமிடந்தோறும், மயங்க - தலைமயங்க, தொகும் - கூடுகிற, சந்நிதி அடைந்தவர்கள் - (இவனது) சந்நிதியைச் சேர்ந்தவர்களுடைய, பையுள் நோய் முற்றும் - (பிறவித்) துன்பமுழுதும், தவிர்த்து - நீங்கி, அகம் மகிழ்ந்து - மன மகிழ்ந்து, தவிரா - நீங்காத, கருமன்னும் - கருப்பத்தில் நிலைபெற்ற, ஊழி பெரும்பிணியும் - ஊழிப் பெருநோயும், பாற்றிடுதல் - ஒழித்திடுதலை, கண்டனை இருத்தி ஆல் - கண்டிருக்கிறமாதலால், நின் கயரோகமுடன் - உன்னுடைய கூய ரோகத்தோடு, முயல் கறையும் - முயற்களங்கமும், துடைத்திட - ஒழித்துக்கொள்ள, கருதிடுதியேல் - நினைப்பையாயின், எம்பிரான் - எம்பெருமானது, திருமுன்னர் - சந்நிதிக்கெதிரே, வெண்சாந்து - வெண்ணீற்றை, அள்ளி இடு - அள்ளித் தரித்துக்கொள், திருச்சாந்து நிற்க - வெண்ணீறு நிற்க, வற்ரு - வடியாத, சித்தாமிர்தம் - சித்தாமிர்தமென்கிற, தடத்தீர்த்தத் துறைக்கு உறும் - பெருமையுள்ள தீர்த்தத் துறையிற் பொருந்திய, நிவலை ஒன்றே அமையும் - தூளியொன்றே போதும், ஆல் - ஆதலால், அரு என்ன - அருவெனவும், உரு என்ன - உருவெனவும், அன்று என்ன - (இவ்விரண்டும்) அன்றெனவும், நின்றவனெடு - நின்றவனுகிய குமாரக்கடவுளோடு, அம்புலீ யாடவாவே —, அழகு பொலி —, வாவே —, (எ - று.)

தரு - பஞ்சதருக்க ளெனினுமாம். அவை யாவன - அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பன. தேவலோகம் பொன்மயமா யிருத்தலால், அதனைப் பொன்னுலகு என்ருர். உன் கயரோகமும் முயற்கறையும் ஒழிய வேண்டுவையாயின் இவன் சந்நிதியின் வெண்ணீற்றை யள்ளித் தரித்துக்கொள், சித்தாமிர்தத் தீர்த்தத் தொரு தூளியை யள்ளி யுன் உடல் மேல் தெளித்துக்கொள் என்பது கருத்து. அள்ளியிடு = வினைமுற்று. (5)

66. ஒழியாத புவனத் துயிர்க்குயிர தாய்நிற்ப
தொருதெய்வ முண்டெனவெடுத்
துரையா லுணர்த்துவதை யொழியவெவ ரெவர்கட்கும்
ஊன்கண் ணுளக்கண்ண தாம்
விழியாக முன்னின்று தண்ணளி சுரந்தவர்கள்
வேண்டிய வரங்கொடுப்பான்
மெய்கண்ட தெய்வமித் தெய்வமல் லாற்புவியில்
வேறில்லை யென்றுணர்தியாற்

பொழியாத புயறங்கு புவனமூந் திசைமுகப்
புத்தேள் பெரும்புவனமும்
பொன்னுலகு மண்ணுலகு மெவ்வுலகு வேண்டினும்
பொருளன் றிவற்குமற்ற

அழியாத வீடுந் தரக்கடவ னிவனுடன்
அம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரீ தழையவரு கந்தனுடன்
அம்புலீ யாடவாவே.

(இ - ள்.) ஒழியாத - தொலையாத, புவனத்து - புவனங்களிலுள்ள, உயிர்க்கு - உயிர்களுக்கு, உயிர்ஆய் நிற்பது - உயிராய் நிற்பதாகிய, ஒரு தெய்வம் உண்டு என - ஒரு தெய்வமுண்டென்று, உரையால் எடுத்து உணர்த்துவதை ஒழிய - சொல்லால் எடுத்தறிவிப்பதை யொழிய, எவர் எவர்கட்கும் - எவ்வெவர்களுக்கும், ஊன்கண் - மாமிசக் கண், உள்ளக்கண்ஆம் வழியாக - மனத்தின்கண்ணிருக்கிற கண்ணுக, முன்நின்று - எதிர்நின்று, தண்ணளி சுரந்து - கருணைசுரந்து, அவர்கள் வேண்டிய - அவர்கள் விரும்பின, வரம்கொடுப்பான் - வரங்களைத் தந் தருள்வான், புவியில் - இவ்வுலகத்தில், இ தெய்வம் அல்லால் - இந்தத் தெய்வமன்றி, மெய்கண்ட தெய்வம் - மெய்கண்ட தெய்வமானது, வேறு இல்லை என்று உணர்தி - வேறில்லையென் றறிவாயாக, பொழி யாத புயல்தங்கு புவனமும் - விஷ்ணுலோகமும், திசைமுகப் புத்தேள் பெரும் புவனமும் - பிரமனது பெரிய வுலகமும், பொன் உலகும் - சுவர்க்கலோகமும், மண்ணுலகும் - மத்தியலோகமும் (ஆகிய இவற்றுள்), எவ்வுலகு வேண்டினும் - எவ்வுலகம்பெற விரும்பினாலும், இவற்கு - இவனுக்கு, பொருள் அன்று - ஒருபொருளன்று, மற்ற - (இவ்வுலகங் களின்) வேறாகிய, அழியாத வீடும் - கெடாத முத்தியையும், தரக் கடவன் - தந்தருளவல்லன், (ஆதலால்) இவனுடன் - இவனோடு, அம்புலீ யாடவாவே—, (எ - று.)

மேகவண்ணனாதலால் திருமாலைப் பொழியாதபுயல் என்றார். இது உவமை யாகுபெயர். வீடு - முத்தி. இதனை நிற்றும்மை உயர்வு சிறப்பு; இறந்தது தழீஇயதுமாம். அழியாதவீடும் என்றமையால் மேற் கூறப் பட்ட வுலகங்கள்யாவு மழிவனவென்பதும் பெறப்பட்டது. இவை யிரண்டு செய்யுளானும் தானோபாயங் கூறப்பட்டது. (6)

67. நெட்டுடற் பைங்கட் கரும்பேய்கள் செம்மயிர்
கிரைத்தூணம் வீக்கியார்த்து
நிற்குங் குறட்பூத மொன்றினை விடுத்துடலின்
நெடியபழு வென்புநெரியக்

கட்டெனப் பிடியெனக் கொடிறுடைத் தடியெனக்
கணநாதர் கடுகமுடுகிக்
கடல்வாய் திறந்தெனப் பிலவாய் திறந்தலறு
காட்சிநீ காணுயலை

மட்டுடைத் தூறுந் தடங்கமலன் முதலியோர்
வாய்புதைத் தஞ்சிநிற்ப
வருகென் றழைத்திடவும் வாரா திருத்தியால்
மற்றிவன் முனிந்தாலுனக்

கட்டதிக் கினிலுமொரு திக்கிலையெ மையனுடன்
அம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ யாடவாவே.

(இ - ள்.) நெடி உடல் - நெடியவுடம்பையும், பைகண்-பசிய கண் களையுமுடைய, கருபேய்கள் - கரிய அலகைகள், செம்மயிர் நிரை - செம்மயிர் வரிசையை, தூணம் - தூணில், வீக்கி - கட்டி, ஆர்த்து நிற்கும் - ஆரவாரித்து நிற்கிற, குறட்பூதம் ஒன்றினை விடுத்து - குறும் பூதமொன்றை யேவி, உடலில் - உடம்பிலுள்ள, நெடிய பழு என்பு நெரிய - நெடுகிய பழுவெலும்பு நெரியும்படி, கட்டு என - கட்டென் றும், பிடி என - பிடியென்றும், கொடிறு உடைத்து அடி என - கபோ லத்தையுடைத்து அடியென்றும், கணநாதர் கடுக-கணநாதர் கடுகுதலும், முடுகி - விரைந்து, கடல்வாய் திறந்தென - கடலான்து வாய்திறந்தாற் போல, பிலவாய் திறந்து அலறு - குகைபோலும் வாயைத் திறந்தலறு கிற, காட்சி - காட்சியை, நீ காணுய் அல்லை - நீ பாராயல்லை, மட்டு - தேனுனது, உடைத்து - முறுக்குடைத்து, ஊறும் - சுரக்கிற, தடம்கம லன் முதலியோர் - பெரிய தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமன் முத லானவர், வாய்புதைத்து - வாய்பொத்தி, அஞ்சி நிற்ப - பயந்து நிற்க, வருக என்று அழைத்திடவும் - (உன்னை) வாவென்றழைக்கவும், வாராது இருத்தி - வராமலிருக்கிறாய், ஆல் - ஆதலால், இவன் முனிந்தால் - இவன் வெகுள்வானுயின், உனக்கு - நினக்கு, அட்டதிக்கினிலும் -

எட்டுத்திசையிலும், ஒரு திக்கு இல்லை - ஒரு புகலிடமில்லை, (ஆதலால்) எம் ஐயனுடன் - எமதிறைவனுகிய குமரனோடு, அம்புலீ யாடவாவே —, அழகுபொலி —, (எ - று.)

பழுவெலும்பு - விலாவெலும்பு. கொடிறு - கன்னம். காணு யிலை யென்றது கண்டேயிருக்கிறுயென்றவாறு. பிரமன் முதலியோர் வாய் புதைத்து நிற்க உன்னிடத்துக் கருணையாலுன்னை யழைத்தான்; நீ வாராதிருப்பின் இவன் முனிவான்: அப்போது உனக்குப் புகலா யிருந்து உன்னைக் காப்பவ ரொருவரு மிலர்; ஆதலால், இவனுட னுடவா வென்பது கருத்து. (7)

68. குன்றைத் திறந்திட்ட குடுமிவேல் சூருயிர்
குடித்திட விடுத்துநின்றுன்
குண்டிகைக் கள்வனைக் குடுமித் தலைப்பசுங்
குருதிபொங் கப்புடைத்தான்

இன்றைக் குழந்தையென் றெண்ணுது குலிசன்முதல்
எண்மரும் பிறருமொருஞான்
றெதிர்நின் றுடற்றியவர் பட்டபா டறியா
திருத்தியலை யதுகிடக்க

மூன்றக்கன் வேள்விக் களங்கொலைக் களமென்ன
முடியமரர் மொத்துண்டநாள்
முழுமதிக் கடவுணீ யவமதிப் புண்டதை
மொழிந்திடக் கடவதன்றுல்

அன்றைக் கணக்கின்றும் வந்திருக் கின்றதினி
அம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ யாடவாவே.

(இ - ள்.) குன்றம் திறந்திட்ட - மலையைப் பிளந்திட்ட, குடுமி வேல் - தனியையுடைய வேற்படையை, சூர் உயிர் குடித்திட - சூரனு யிரை யுண்ணும்பொருட்டு, விடுத்து நின்றுன் - ஏவி நின்றுன், குண் டிகை கள்வனை - பிரமனை, குடுமித்தலை - குடுமித் தலையில், பசுங்குருதி பொங்க புடைத்தான் - பச்சுதிர மொழுகக் குட்டினுன், இன்றை குழந்தை யென்று எண்ணுது - இன்று பிறந்த குழந்தையென்று நினையா மல், குலிசன் முதல் - இந்திரன் முதலாகிய, எண்மரும் - அட்டதிக்குப்

பாலகரும், பிறரும் - மற்றுள்ளாரும், ஒரு ஞான்று - ஒருநாள், எதிர்நின்று உடற்றி - எதிர்நின்று போர்செய்து, அவர் பட்டபாடு - அவர்கள் பட்ட பாட்டினை, அறியாது இருத்தி அல்லை - நீ அறியாமலிருக்கிறாயல்லை, அது கிடக்க - அது நீற்க, முன் - முற்காலத்தில், தக்கன் - தக்கனது, வேள்விக்களம் - வேள்விக்களமானது, கொலைக்களம் என்ன - கொலைக் களமென்று சொல்லும்படி, முடி அமரர் - முடியையுடைய தேவர், மொத்துண்ட நாள் - அடியுண்ட நாளில், முழுமதிக்கடவுள் - பூர்ண சந்திரனே, நீ அவமதிப்பு உண்டதை - நீ அவமானப்பட்டதை, மொழிந் திடக் கடவது அன்று ஆல் - சொல்லக்கடவதன்றுதலால், அன்றைக் கணக்கு இன்றும் வந்திருக்கின்றது —, இனி —, அம்புலீயாட வாவே —, (எ - று.)

குன்றமென்றது கிரவுஞ்ச மலையை. குண்டிகை - கமண்டலம். வேதப்பொருளே யுணராது எல்லாம் உணர்ந்தவன்போல் தருக்குற்று நடித்தவனுதலின் பிரமனைக் 'கள்வன்' என்றார். குலிசம் - வயிரப் படை ; அதனை யுடையவனுதலால் இந்திரனைக் குலிசன் என்றார். உடற்றி யென்பதிற் பகுதி உடற்று. பாடு - துன்பம். களம் - இடம். கணக்கு என்பது ஈண்டு நிலைமை என்னும் பொருள் தந்து நின்றது. (8)

69. தள்ளும் பவக்கட லுழக்குமெனை முத்தித்
தடங்கரை விடுப்பவனுனைத்
தலையளிப் பான்வர வழைப்பவும் வராவிடிற்
றண்ணளி சுரந்துகருணை

வெள்ளங் கொழிக்குங் கடைக்கண் சிவப்பவிவன்
வெகுளாது விடினுமழுது
விழிசிவப் பக்காணி னிரவிபகை சாய்த்தவிள
வீரன் பொறுப்பானலன்

கள்ளம் பழுத்தகட் கடைசியர் சிரூர்திரைக்
காவிரித் தண்டுறைதொறும்
கதிர்நித் திலங்குவி மணற்குன்ற மேறியக்
கலைமதிக் கலசவமுதை

அள்ளுந் தடம்பணைச் சோணை னிவனுடன்
அம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ யாடவாவே.

(இ - ள்.) தள்ளும் - தள்ளப்பட்ட, பவக்கடல் உழக்கும் என்னை - பிறவிக்கடலில் வீழ்ந்து வருந்துகிற என்னை, முத்தி - மோக்கமாகிய, தடம்கரை - பெருங்கரையில், விடுப்பவன் - செலுத்துபவன், உன்னை - உன்னையும், தலையளிப்பான் - தலையளி செய்வானும், வரவழைப்பவும் - வரவழைக்கவும், வராவிடின் - வரா விட்டால், தண்ணளிசுரந்து - தண்ணளிசுரந்து, கருணைவெள்ளம் கொழிக்கும் - கருணைவெள்ள மெறிகிற, கடைக்கண் சிவப்ப - கடைக்கண் சிவக்கும்படி, இவன் வெகுளாது விடினும் - இவன் முனியாவிடினும், அழுதுவிழி சிவப்பக்காணின் - அழுது கண் சிவக்கக் கண்டால், இரவிபகை சாய்த்த - பானுகோபனைக் கொன்ற, இளவீரன் - இளையவீரன், பொறுப்பான் அல்லன் - பொறுப் பவனல்லன், கள்ளம்படைத்த கண் - கள்ளத்தைப் பெற்றிருக்கிற கண்களையுடைய, கடைசியர் - கடைசியாது, சிறார் - மக்கள், திரை - அலைகளையுடைய, காவிரி - காவிரியாற்றின், தண்துறைதொறும் - குளிர்ந்த துறைதோறும், கதிர்-ஒளியுள்ள, நித்திலம் குவி - முத்தினைக் குவிக்கப்பெற்ற, மணல்குன்றம் ஏறி - மணற்குன்றின் மீதேறி, அ - அந்த, கலைமதி - கலைமதியாகிய, கலச அமுதை - கலசத்திலுள்ள அமிர்தத்தை, அள்ளும் - அள்ளிக்கோடற்குரிய, தடம்பணை - பெரிய வயல்கள் சூழ்ந்த, சோணுடன் இவனுடன் - சோணாடனைய இவனோடு, அம்புலீ யாடவாவே—, அழகுபொலி—, (எ - று.)

தலையளி - ஒருசொல், கருணையென்பது பொருள். இரவிபகை சாய்த்த வீரவீரன் - வீரவாகு. கள்ளம் - ஆடவரை மயக்கும் வஞ்சத் தொழில். கலசம் - கலயம். கலைமதி - பூர்ணசந்திரன். (9)

70. தன்னெத்த தெய்வச் சிறாருமிள வீரரும்
தாணிழற் கீழ்நிற்பவிச்
சகதண்ட மண்டல மடுக்கழியு நாளமரர்
தமையழக் காண்பவனிவன்

நின்னைப் பொருட்படுத் தொருவிரற் றலைசுட்டி
நீள்கழற் றாளுதைந்து
நெடுமலர்க் கண்பிசைந் தழுதழு தழைத்தனன்
நினக்கிதில் வியப்பில்லைகாண்

பின்னற் றிரைச்சுர நதித்தண் டுறைத்தேவர்
பேதைக் குழாங்களென்னப்

பெருகுந் தடம்புனற் காவிரிப் பூவிரி
பெருந்தண் டுறைச்சிறைவிரித்
தன்னக் குழாந்திரைத் தாடுசோ ணைடனுடன்
அம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ யாடவாவே.

(இ - ள்.) தன் ஒத்த - தன்னை நிகர்த்த, தெய்வச்சிறுரும் - தெய்வச் சிறுவரும், இளவீரரும் - இளையவீரரும், தாள் நீழல் கீழ் நிற்ப - திருவடி நிழலின் கீழே நிற்க, இ - இந்த, சகத் அண்டம் மண்டலம் - சகமும் தேவருலகமும் மற்றை யுலகங்களும், அடுக்கு அழியும் நாள் - நிலை குலையு நாளில், அமரர்தமை - தேவரை, அழக் காண்பவன் - அழக் காண்போனுகிய இவன், நின்னை பொருள் படித்து - உன்னை யொரு பொருளாக்கி, ஒரு விரல் தலை சுட்டி - ஒருவிரலி னுனியாற் சுட்டி, நீள்கழல் - நீண்ட கழலை யணிந்த, தாள் உதைந்து - காலுதறி, நெடு மலர் கண் பிசைந்து - நீண்ட கமலம்போலும் கண்ணைப் பிசைந்து, அழுது அழுது அழைத்தனன்—, நினக்கு இதில் வியப்பு இல்லை - உனக்கு இதில் ஒரு வியப்பில்லை, பின்னல் - (ஒன்றேடொன்று) பின்னவிடுகிற, திரை - அலைகளோடு கூடிய, சுரநதி - தேவநதியின், தண் துறை - தண்ணிய துறையில், தேவர் பேதை குழாங்கள் என்ன - தெய்வப் பெண்களுடைய கூட்டங்கள்போல, பெருகும் - பெருகி வருகிற, தடம்புனல் - நீர்ப்பெருக்கையுடைய, காவிரி - காவிரியாற்றின், பூவிரி பெருதண் துறை - மலர்கள் விரிந்த பெருங்குளிர்த் துறைகளில், அன்னக்குழாம் - அன்னப்புட் குழாங்கள், திரைத்து ஆடி - மூழ்கி விளையாடுகிற, சோணைடனுடன் - சோணைடனேடு, அம்புலீ யாட வாவே—, அழகு பொலி—, வாவே—, (எ - று.)

இளவீரர் - வீரவாகுதேவர் முதலியோர். சகத்துச் - தோன்றியழிதன் மாலையதாகிய பிரபஞ்சம். வியப்பு - அதிசயம். கவேர ராஜ புத்ரி யாதலால் காவேரியெனற்பாலது காவிரியென வழங்கப்படுகின்றது. இவை நான்கு செய்யுளாலும் தண்டோபாயம் கூறப்பட்டது. (10)

அம்புலிப் பருவம் முற்றிற்று

8. சிற்றிற் பருவம்

71. குறுமென் னடையு நெடுவெணிலாக்
கோட்டு நகையும் வாட்டடங்கண்
குளிர முகந்துண் டொளிர்சுட்டிக்
குஞ்சி திருத்தி நறுங்குதலை

முறுகு நறைத்தேன் கனிபவள
முத்துண் டுச்சி மோந்துகொண்டுன்
முகமுந் துடைத்து விளையாட
முன்றிற் புறத்துப் பொன்றதும்பி

இறுகும் புளகக் கும்பமுலை
யெம்பி ராட்டி விடுத்ததுமற்
றிளையார் மறுக மறுகுதொறும்
இடுக்கண் செயற்கோ வெந்தாய்நின்

சிறுகிண் கிணிச்செஞ் சீறடியாற்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ - ள்.) குறுமெல் நடையும் - குறுகிய மெல்லிய நடையினையும், நெடுவெள்நிலாகோட்டு நகையும் - நெடிய வெண்ணிலவைச் செய்கிற நகையினையும், வாள்தடம் கண்குளிர - வாள்போலும் பெரிய கண்கள் குளிரும்படி, முகந்து உண்டு - அள்ளி யுண்டு, ஒளிர் - பிரகாசிக்கிற, சுட்டி - சுட்டியோடு, குஞ்சி திருத்தி - குடுமியைத் திருத்தி, நறு குதலை முறுகு - நல்ல குதலை முதிர்கின்ற, நறைதேன் - மணத்தை யுடைய தேன்போன்ற, கனிபவளம் - கனிந்த திருப்பவளத்தை, முத் துண்டு - முத்தமிட்டு, உச்சி மோந்துகொண்டு - உச்சியை மோந்து, உன் முகமும் துடைத்து - உன் திருமுகத்தையும் துடைத்து, விளையாட - விளையாடும்பொருட்டு, முன்றில்புறத்து - முன்றிற் புறத்தே, பொன் றதும்பி இறுகும் - தேமல்படர்ந்து இறுகிய, புளகம் - புளகம்போர்த்த, கும்பம்முலை - குடம்போன்ற தனங்களையுடைய, எம்பிராட்டி விடுத்தது - எம்பெருமாட்டி யனுப்பினது, இளையார் மறுக - இளஞ்சிறுமியர் வருந்த, மறுகுதொறும் - தெருத்தோறும், இடுக்கண் செயற்கோ - துன்

பஞ் செய்யத்தாளே, எந்தாய் - எந்தையே, நின் - உனது, சிறு கிண் கிணி - சிறிய கிங்கிணி யணிந்த, செம்சீறடியால், செவந்த சிற்றடி யினல், சிறியேம் சிற்றில் சிதையேல் - சிறியேங்களுடைய சிறுவீட்டை யழிக்காதை, செந்நெல் பழனம் - செந்நெல் வயல்கள் சூழ்ந்த, புள்ளூரா—, சிறியேம்—, (எ - று.)

குறுமென்னடை - தளர்நடை. திருத்தல் - ஒப்பனை செய்தல். கனி பவளம் என்றது திருவாயை. எம்பிராட்டி - உமாதேவி. எம்பிராட்டி யுன்னை யொப்பனைசெய்து வீதியில் விடுத்தது விளையாடற்கேயன்றி யெம்போல்வாரது சிற்றிலைச் சிதைத்தற்கன் றுதலால் இது செய்யாதை யென்பது கருத்து. சிற்றிற் பருவமென்பது சிறுமியர் வண்டலாடுஞ் சிற்றிலைச் சிதைக்கும் பருவமென்று கொள்க. (1)

72. கொழுநாண் மலர்க்கற் பகமுநறைக்
குரவு நாறு நறுங்குஞ்சிக்
கோமான் மகனே நங்கள்குலக்
கொழுந்தே யென்று குறையிரந்து
தொழுவா னவர்த்த முடிசூட்டுஞ்
சோதி முடியிற் றுகளெழுநின்
றுணைத்தாள் வண்டற் றுறைப்புழுதித்
தூளி படினும் படுகசுடர்க்
கழுவா மணியு நிலவுவிரி
கதிர்நித் திலமு முமையம்மை
கண்ணி லுறுத்த வடிகேணின்
காலி லுறுத்தல் கடனன்றுற்
செழுநான் மறையின் பெருஞ்செல்வச்
செருக்கே சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ - ள்.) கொழு - செழிய, நாள் - புதிய, மலர்கற்பகமும் - கற்பக மலரும், நறைகுரவும் - மணம் பொருந்திய குராமலரும், நாறும் - பரிமளிக் கிற, நறுங்குஞ்சி - அழகியகுடுமியையுடைய, கோமான் மகனே - இறைவன் மகனே, நங்கள் குலக்கொழுந்தே - எங்கள் குலக்கொழுந்தே, என்று - என்றுசொல்லி, குறையிரந்து - குறைகூறியிரந்து, தொழு - வணங்குகின்ற, வானவர்தம் - தேவர்களுடைய, முடிசூட்டும் - முடிகளைத் தரிக்கச் செய்

கிற, சோதி முடியில்-ஒளியுருவனுகிய சிவபிரானது திருமுடியில், துகள் எழ - துகளெழும்படி, நின்துணைத்தாள் - உன் இரண்டு திருவடிகளும், வண்டல் துறை-வண்டல் விளையாடுமிடத்திலுள்ள, புழுதிதூளி படினும்-புழுதியாகிய தூளிபட்டாலும், படுக - படட்டும், சுடர் - ஒளியையுடைய, கழுவாமணியும் - சுத்தப்படுத்தாத இரத்தினமும், நிலவுவிரி - நிலாவிரி கின்ற, கதிர்நித்திலமும் - ஒளியுள்ள முத்தும், உமையம்மை - உமை யம்மையின், கண்ணில் உறுத்த - கண்ணி லுறுத்தும்படி, அடிகேள் - சுவாமீ, நின்காலில் உறுத்தல் - உன் திருவடியி லுறுத்துதல், கடன் அன்று ஆல் - முறைமையன் றுதலால், செழுநால் மறையின் - செழுமை யாகிய நால் வேதத்தின். பெருஞ்செல்வச் செருக்கே - பெருஞ் செல்வக் களிப்பே, சிற்றில் சிதையேல்—, செந்நெற் பழனப்—, (எ - று.)

கோமான் - சிவபிரான். கோமான்மகன் - ஒருசொல்லாய்க் கந்த வேளைக் குறித்தது. கற்பக மலரும் குராமலரும் நாறுதல் கந்தவேள் குஞ்சியி லெனக் கொள்க. யாமிழைத்து விளையாடுஞ் சிற்றிலைச் சிதைக் குங்கால் அங்குள்ள மணியும்முத்தும் உன் திருவடியிலுறுத்தும், அவை யுறுத்தல் உன் திருத்தாயாகிய வுமாதேவியின் கண்ணி லுறுத்தல் போலும்; ஆதலால், அது செய்யா தொழிதி யென்பது கருத்து. (2)

73. வழிக்குப் புறம்பா யாமிழைத்த
வண்டன் மனையவ் வசுரேசன்
வான்கூட் டுண்பா னடுக்கடலில்
வகுத்த நகரென் றிகழாமே

கொழிக்குஞ் சிறுமுற் றிலில்வாரிக்
கொடுவந் தடியே மனைமுன்றிற்
குவியா நின்ற மணிக்குவையக்
குருகு பெயர்க்குன் றமுமன்றூற்

சுழிக்குண் டகழி வாய்மடுப்பச்
சுடர்வால் வளைத்தெண் டிரைக்கரத்தாற்
சுரபி சொரிபான் மடையடைத்த
சோற்றினெடுங் கலந்தூட்டிச்

செழிக்குந் தடங்கா விரிநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ - ள்.) வழிக்கு புறம்பாய் - வழிக்கு ஒதுக்கமாக, யாம் இழைத்த - நாங்கள் செய்த, வண்டல் மனை - வண்டல்வீடு, அ - அந்த, அசுரேசன் - அசுரர்கோன், வான் - விண்ணுலகை, கூட்டுண்பான் - கொள்ளை கொண்டுண்ண, நடுக்கடலில் - கடனடுவே, வகுத்த நகர் என்று - ஏற்படுத்தின நகரமென்று, இகழாமே - இகழாமல், கொழிக்கும் சிறுமுற்றிலில் வாரி - கொழித்தற்குரிய சிறு சுளகில் வாரி, கொடுவந்து - கொணர்ந்து, அடியேம் - அடியேங்களுடைய, மனைமுன்றில் - வீட்டு முற்றத்தில், குவியாநின்ற மணிக்குவை - குவிக்கிற மணிக்குவியல், அ - அந்த, குருகுபெயர் குன்றமும் அன்று - புட்பெயரையுடைய மலையுமன்று, ஆல் - ஆதலால், சுழிகுண்டு - சுழிகளோடுகூடி ஆழ்ந்திருக்கிற, அகழிவாய் மடுப்ப - அகழியினிடத்து விழ, சுடர் வால்வளை - ஒளிர்கின்ற வெள்வளையை யுடைய, தெள்திரை காத்தால் - தெளிவாகிய அலைக ளென்கிற கைகளால், சுரபி சொரிபால் - பசுக்கள் பொழிகின்ற பாலானது, மடை அடைத்த - மடைகளை யடைத்துக் கொண்ட, சோற்றினுடனே கலந்து ஊட்டி - சோற்றோடு கலந்து உண்பித்து, செழிக்கும் - தழைக்கிற, தடம்காவிரி நாடா - பெரிய காவிரி நாடனே, சிறியேம்—, செந்நெற் பழனப்—(எ - று.)

அசுரேசன் என்றது சூரபன்மனை. கூட்டுண்பான் என்பதில் பான் செயவென்னும் வாய்பாட்டு வினையெச்ச விகுதி. நடுக் கடலில் வகுத்தநகர் - மகேந்திரம். சுளகு - முறம். குருகுபெயர்க் குன்றம் கிரவுஞ்ச மலை. சோறு - தாழை மலர் முதலியவற்றின் சோற்றை. வால்வளை - வெள்ளிய சங்கு எனவும், வாலிய வளையலெனவும், நீருக்கும் கைக்கும் பொருந்த வுரைத்துக்கொள்க. செழிக்கும் என்னும் பெயரெச்சம் காவிரி நாடு என்னும் பெயர்கொண்டு முடிந்தது; செழிக்குந் தடங்காவிரி நாடா வென்பதற்குச் செழிக்கின்ற பெரும் பொழில்கள் விரிந்த நாடா வெனினுமாம். (3)

74. மூரிக் களிறே மழவிடையோ
மூடுகிற் றெனைப்பார்த் தழியுனது
முகத்தி னழகெம் வடிக்கண்ணுல்
மொண்டுண் டனம்யா மென்றுமிகப்

பாரித் தோங்கிப் பூரித்த
பைம்பொற் புயத்தைக் கண்ணேறு
பட்டே மெனவு மடிகள்பகை
பாராட் டுவதோர் பண்பன்றுல்

வேரிக் கொழுந்தாற் றிளம்பாளை
விரிபூங் கமுகும் பால்பாயும்
வேழக் கரும்பு மிருட்பிழம்பை
விழுங்கிக் கக்குஞ் சுடர்ப்பரிதித்
தேருக் கெழில்செய் சோணாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ - ள்.) மூரிகளிறே - வலிமைபொருந்திய யானையோ, மழ விடையோ - இளமைபொருந்திய இடபமோ, முடுகிற்று என - முடுகி வந்ததென்று, பார்த்துழி - பார்த்தபோது, உனது முகத்தின் அழகு - உனது முகத்தழகை, எம் வடிக்கண்ணுல் - எமது வடிக்கண்ணிணுல், யாம் மொண்டு உண்டனம் என்று - யாம் முகந்துண்டோமென்று, மிக பாரித்து - மிகு பொறையுடைத்தாய், ஓங்கி பூரித்த - உயர்ந்து பருத்த, பைம்பொன் புயத்தை - பசும்பொன் மலைபோலும் திருத்தோள்களை, கண்ணேறு பட்டேம் எனவும் - கண்ணெச்சிற் பட்டோமென்றும், அடிகள் - சுவாமீ, பகை பாராட்டுவது - பகை பாராட்டுதல், ஓர் பண்பு அன்று - ஒரு நற்குணமன்று, ஆல் - ஆதலால், வேரி - வாசனையுள்ள, கொழும்தாற்று - செழுமையாகிய தாறுகளையுடைய, இளம்பாளை விரி - இளம்பாளைகள் விரிந்த, பூகமுகும் - பொலிவாகிய கமுகமரங்களும், பால்பாயும் வேழக்கரும்பும் - பால் பெருகிப் பாய்கிற வேழக் கரும்பு களும், இருள் பிழம்பை - இருட்கூட்டத்தை, விழுங்கி கக்கும் - விழுங்கி யுமிழ்கின்ற, சுடர் - காந்தியையுடைய, பரிதி தேருக்கு - சூரியனது தேருக்கு, எழில்செய் - அழகு செய்கிற, சோணாடா - சோணாடனே, சிறியேஞ்—, (எ - று.)

வடி - மாவடுவகிர், இது "வடிக்கணிவை" என்னு முதற் குறிப் பினையுடைய திருச்சிற்றம்பலக் கோவைச் செய்யு ளுரையா லினிது விளங்கும். கண்ணெச்சிற்படல் - திருஷ்டிபடல் பால். - சாறு. வேழக் கரும்பு-ஒருவகைக் கரும்பு, வேழக்கரும்பு - மூங்கிலோடு கரும்பும் என் றுரைப்பினுமாம். கமுகு கரும்பு என்பன பரிதித்தேருக் கெழில்செய் என்றதனால் இவை சூரியமண்டலத்தளவு முயர்ந்திருக்கின்றன வென் பது பெறப்பட்டது. (4)

75. பொன்னங் கொடிபோ னுடங்குமிடைப்
புத்தேண் மகளிர் விளையாடப்

புனைமா ளிகையுஞ் சூளிகையும்
புதுக்கிக் கொடுத்தாய் பொதுஞானம்

மெய்ந்நின் றவருள் விழிப்பாவை
விளையாட் டயர வழியாத
வீடுங் கொடுத்தா யெம்மனையும்
விடுத்துச் சென்றூன் மிகையுண்டோ

பின்னுந் திரைத்தீம் புனற்கங்கைப்
பேராற் றூற்று நறைக்கோட்டுப்
பெருங்கற் பகத்தின் கழுத்தொடியப்
பிறழும் வாளைப் பகடுதைத்த

தென்னம் பழம்வீழ் சோணாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ - ள்.) பொன்அம் கொடிபோல் - பொன்னனியன்ற அழகிய கொடிபோல், நுடங்கும் - துவளாநின்ற, இடை - இடையையுடைய, புத்தேள்மகளிர் விளையாட - தேவமாதர் விளையாடும் பொருட்டு, புனை மாளிகையும் - அலங்கரிக்கப்பட்ட மாளிகைகளும், சூளிகையும் - கோபுரங்களும், புதுக்கி கொடுத்தாய் - புதுக்கித் தந்தாய், பொதுஞான மெய்ந்நின்றவர் - பொதுவாகிய மெய்யறிவோடு நின்றவரது, உள்விழிபாவை - உட்கண்பாவை, விளையாட்டு அயர - விளையாடலைச் செய்ய, அழியாத வீடும் கொடுத்தாய் - கெடாத வீட்டையும் தந்தாய், எம்மனையும் விடுத்து சென்றூல் - எங்கள் வீட்டையும் விட்டுப் போனால், மிகை உண்டோ - குற்ற முண்டாமோ, பின்னும் - பின்னவிடுகிற, திரை - அலைகளையும், தீம்புனல் - இனிய நீரைமுடைய, கங்கை - கங்கையாகிய, பேர் ஆற்று - பெரிய யாற்றில், ஊற்று - ஊற்றினையுடைய, நறை - தேனைப் பொருந்திய, கோட்டு - கிளைகளோடு கூடிய, பெருங் கற்பகத்தின் - பெரிய கற்பகமரத்தின், கழுத்து ஒடிய - கழுத்து முறியும்படி, பிறழும் - துள்ளுகிற, வாளைப்பகடு - வாளைப் பகடுகளால், உதைத்த - மோதப்பட்ட, தென்னம்பழம்வீழ் - தென்னம் பழங்கள் விழுகின்ற, சோணாடா - சோணாடனே, சிறியேம்—, சிதையேல்—, செந்நெற்—, (எ - று.)

புத்தேண்மகளிர் விளையாட மாளிகை முதலிய புதுக்கிக் கொடுத்தாய் என்றது விண்குடியேற்றினமையைக் குறித்தது. ஞானமெய்

நின்றவர் - மெய்யுணர்வோடு நின்றவராகிய ஞானியர். மெய்யுணர்வில் விழிப் பயனின்றென்பது தோன்ற இவரைப் பொதுஞான மெய்நின்ற வர் என்றார். "ஐயறிவறிந்தவை யடங்கினர்களேனும், மெய்யறிவிலாத வர்கள் வீடதுபெறாரே" என்றார் பிறரும். அழியாதவீடு - முத்தி. "பெருங் கற்பகத்தின் கழுத்தொடிய தென்னம்பழம்வீழ் சோணாடா என்றமையால், சோணாட்டுத் தென்னமரங்கள் கற்பகமரத்தினு மூயர்ந் திருக்கின்றன வென்ப தினிது விளங்கும். (5)

76. கானக் குறப்பெண் குடியிருந்த
கன்னிப் புனத்துத் தினைமாவும்
கமழ்தேன் றெளிவு மூண்டுசுவை
கண்டா யென்றே மதுவல்லால்

மீனத் தடங்க ணவண்மிச்சில்
மிசைந்திட் டதுவு நசைமிக்கு
விரைத்தீங் குழுதத் தமுதடிகள்
விருந்தா டியதும் விண்டோமோ

கூனற் பிறையின் கோடுரிஞ்சுங்
கொடிமா டத்து வெயில்விரிக்கும்
குருமா மணியாற் சுரநதியிற்
கொழுந்தா மரைகண் மூறுக்குடைந்து

தேனக் கலருஞ் சோணாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ - ள்.) கானம் - காட்டில் வாழ்கின்ற, குறப்பெண் குடி யிருந்த - குறப்பெண்ணனவள் குடியிருந்த, கன்னிப்புனத்து - இளம் புனத்தில், தினைமாவும், - கமழ் - மணக்கின்ற, தேன் தெளிவும் - தேனின் தெளிவையும், உண்டு - நுகர்ந்து, சுவை கண்டாய் என்றேம் - சுவைகண்டனை யென்றனம், அது அல்லால் - அதுவேயன்றி, மீனத் தடங்கண் - மீன்போலும் பெருங் கண்களையுடைய, அவள் - அவளது, மிச்சில் மிசைந்திட்டதுவும் - எச்சில் தின்றதையும், நசைமிக்கு - ஆசை மிகுந்து, விரை - மணங் கமழ்கின்ற, தீங்குழுதத்து - இனிய குமுதமல ரின், அமுது - அமிர்தத்தை, அடிகள் - சுவாமிகள், விருந்தாடியதும் -

விருந்துண்டதையும், விண்டோமோ - சொன்னோமோ, கூனல் - வளை வாகிய, பிறையின் கோடு உரிஞ்சும் - பிறைநுனி யுரிஞ்சுகின்ற, கொடி மாடத்து - கொடிகள் கட்டிய மாடங்களின்மேல், வெயில் விரிக்கும் - வெயில் பரப்புகிற, குருமாமணியால் - ஒளியுள்ள பெரிய மணிகளால், சுரநதியில் - கங்கையாற்றிலுள்ள, கொழுதாமரைகள் - செழிய தாமரைகள், முறுக்கு உடைந்து - முறுக்கவிழ்ந்து, தேன்நக்கு அலரும் - தேனோடு விளங்கி மலர்கிற, சோணடா—, சிறியேம் —, (எ - று.)

கானக் குறப்பெண் என்றது வள்ளிநாயகியை. விரைத் தீங் குழுதம் என்றது அவளதரத்தை, விருந்தாடியது - சுவைத்தது. குரு மாமணி - மாணிக்கம்; இதனொளி வெயில்போறலால் இதனால் வான் யாற்றுத்தாமரைகள் மலர்வன வாயின. குறப்பெண்கொடித்த தேனுந் தினைமாவு முண்டனை யென்றதன்றி நீ யவளைச்சி லுண்டதும் அதரஞ் சுவைத்ததுஞ் சொன்னே மல்லேம். அங்ஙனமாக நீ யெமது சிற்றில் சிதைத்த லடா தென்பது கருத்து. (6)

77. பிள்ளை மதிச்செஞ் சடைச்செருகும்
பெருமா னுர்க்கு மூலகேழும்
பெற்ற தாய்க்கு நீயருமைப்
பிள்ளை யெனினெம் பேராய

வெள்ள மமைத்த சிறுசோறு
வேண்டி னிடுகே மலதெளியேம்
விளையா டிடத்துச் சிறுகுறும்பு
விளைத்தாற் பொறுக்க விதியுண்டோ

கள்ள விழிச்சூ ரரமகளிர்
காமன் கொடியேற் றெனவியப்பக்
கற்ப தருவிற் படர்ந்தேறும்
காமர் கொடிச்செங் கயல்பாயும்

தெள்ளு புனற்கா விரிநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ - ள்.) பிள்ளைமதி - இளஞ்சந்திரனை, செஞ்சடை செருகும் - செவந்த சடையிற் செருகுகிற, பெருமானுர்க்கும் - சிவபெருமானுர்க்கும்,

உலகு ஏழும் - ஏழுலகத்தையும், பெற்றதாய்க்கும் - ஈன்ற தாயாகிய உமாதேவியார்க்கும், நீ அருமைபிள்ளை யெனில் - நீ யருமைப் பிள்ளையானால், எம் - எமது, பேர் ஆயவெள்ளம் அமைத்த - பெரிய ஆயவெள்ளத்தால் அமைக்கப்பட்ட, சிறுசோறு - சிறுசோற்றை, வேண்டில் - வேண்டினால், இடுகேம் அலது - படைக்கிறேம் அன்றி, எளியேம் விளையாடு இடத்து - எளியேங்கள் விளையாடுமிடத்தில், சிறுகுறும்பு விளைத்தால் - சிறுகுறும்புகள் செய்தால், பொறுக்க விதி உண்டோ - பொறுக்கச் சட்டமுண்டோ, கள்ளம்விழி - வஞ்சம் பயின்ற கண்களையுடைய, சூர் - அச்சத்தை விளைக்கிற, அரமகளிர் - தெய்வமாதர்கள், காமன் கொடியேற்று என - மன்மதத் துவஜாரோஹண மென்று, வியப்ப - வியக்கும்படி, கற்பதருவில் படர்ந்து ஏறு - கற்பகமரத்தின் மேற் படர்ந்தேறுகிற, காமர்கொடி - காமர் வல்லிக்கொடிமேல், செங்கயல்பாயும் - செவந்த கயல்மீன்கள் பாயாநின்ற, தெள்ளுபுனல் - தெளிந்த நீரையுடைய, காவிரிநாடா - காவிரிநாடனே, சிறியேம் சிற்றில் சிதையேலே—, (எ - று.)

பிள்ளைமதி - ஒற்றைக்கலையாகிய சந்திரன். சிறுசோறு - சிறுமியர் விளையாட்டுக்குச் சமைக்குஞ் சோறு. குறும்பு - சிறு தீங்கு. கொடியேற்று - கொடியேற்றம். கள்ளவிழிச் சூரமகளிர் காமன் கொடியேற்றென வியப்பக் கற்பதருவிற் படர்ந்தேறுங் காமர்கொடிச் செங்கயல் பாயுந் தெள்ளுபுனற் காவிரிநாடா என்றமையால் சோணாட்டு நீர்வளச் சிறப்பு விளங்காநின்றது. (7)

78. மடல்வா யவிழ்ந்த குழற்பேதை
ஒருத்தி திருத்தும் பகிரண்ட
மணற்சிற் றிலையோர் கணத்தின்கண்
மட்டித் தாடு மைந்தனருள்

விடலாய் தமியேஞ் சிற்றின்முற்றும்
விளையாட் டாக வொருநீயும்
வீட்டா நிற்பத் தொடங்கினையால்
வித்து மூளையும் வேறன்றே

கடமா மருப்புஞ் சுடர்மணியுங்
கதிர்ந்தித் திலமு மகளிர்முலைக்
களபத் தொடுகுங் குமச்சேறும்
கரைத்து விடுத்தக் கடற்குட்டம்

திடராச் செயுங்கா விரிநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ - ள்) மடல் வாய் அவிழ்ந்த - பூமடல்கள் வாய்விரிந்த, குழல் - கூந்தலையுடைய, பேதை ஒருத்தி - பேதைப்பெண்ணொருத்தி, திருத்தும் - திருத்துகிற, பகிரண்டம் - பகிரண்டங்களாகிய, மணல் சிற்றில - மணற் சிறுவீட்டை, ஓர் கணத்தின்கண் - ஒரு கணப்பொழுதில், மட்டித்து ஆடும் - அழித்தாடுகிற, மைந்தன் - வலியோனுகிய சிவபிரான், அருள் - ஈன்றருளின, விடலாய் - விடலையே, தமியேம் - தமியேங்களது, சிற்றில் முற்றும் - சிற்றில் முழுதும், விளையாட்டாக - திருவிளையாடலாக, ஒரு நீயும் - ஒப்பற்ற நீயும், வீட்டாநிற்ப - அழிக்க, தொடங்கினை - ஆரம்பித்தாய், ஆல் - ஆதலால், வித்தும் மூலையும் வேறு அன்றே - வித்தும் மூலைக்குஞ் செடியும் வேறல்லவே, கடமா மருப்பும் - மதயானைக் கொம்புகளையும், சுடர்மணியும் - ஒளியுள்ள மணிகளையும், கதிர் நித்திலமும் - பிராகாசமுள்ள முத்துக்களையும், மகளிர் மூலை - மாதர் மூலையிற் பூசப்பட்ட, களபத்தொடு-கலவைச்சாந்துடன், குங்குமச்சேறும்-குங்குமக் குழம்பையும், கரைத்துவிடித்து - கரைத்துவிட்டு, அ - அந்த, கடல்குட்டம் - கடற் பள்ளத்தை, திடர்ஆ செய்யும் - (மே)டாகச் செய்கிற, காவிரி நாடா - காவிரிநாடனே, சிறியேஞ் சிற்றில் சிதையேலே—, (எ - று.)

மடல்வாயவிழ்ந்த குழற்பேதை யொருத்தி யென்றது உமாதேவியை. மைந்து - வலி, அதனையுடையவனுதலால் சிவபெருமானை 'மைந்தன்' என்றார். இவனுக்கு வலியாவது எல்லாம்வல்ல பேராற்றல். மட்டித்தல் - அழித்தல். வித்துமூலையும் வேறுகாமைபோல் நீயும் உன் தந்தைசெயலை மேற்கொண்டா யென்பது கருத்து. (8)

79. வாமாண் கலைப்பே ரகலல்குல்
மடமா னேக்கி னரமகளிர்
மகிழ்பூத் திருப்பப் புத்தேட்கு
வந்த விடுக்கண் மாற்றினையால்

கோமா னினக்கப் பெருந்தேவர்
குலமே யன்றி யடியேமும்
குற்றே வலுக்கா மகம்படிமைக்
குடியாக் கொண்டாற் குறையுண்டோ

காய்மாண் குலைச்செவ் விளநீரைக்
கடவுட் சாதி மடநல்லார்
கதிர்ப்பூண் முலையென் றேக்கறப்பைங்
கமுகு நகைவாண் முத்தரும்பும்
தேமாம் பொழிற்றீம் புனலூடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ - ள்.) வாமம் மாண்கலை - அழகு மாட்சிமைப்பட்ட மேகலையை யணிந்த, பேர் அகல் அல்குல் - பெரிய அகன்ற அல்குலையும், மடமான் நோக்கின் - மடமானின் நோக்கத்தையுமுடைய, அரமகளிர் - தெய்வ மாதர், மகிழ்பூத்திருப்ப - மகிழ்ச்சிகொண்டிருக்க, புத்தேட்கு வந்த - தேவர்களுக்கு நேர்ந்த, இடுக்கண் மாற்றினை - துன்பத்தையொழித்தனை, ஆல் - ஆதலால், கோமான் - பெருமானே, நினக்கு - உனக்கு, அ - அந்த, பெரு தேவர் குலமே யன்றி - பெரிய தேவர் கூட்டமே யன்றி, அடியேமும் - அடியேங்களும், குற்றேவலுக்கு ஆம் - குற்றேவலுக் காகிற, அகம்படிமைக்குடி ஆ கொண்டால் - அகம்படிமைக் குடிகளாகக் கொண்டால், குறைஉண்டோ - குறையுளதோ, காய்மாண் - காய்கள் மாட்சிமைப்பட்ட, குலை செவ்விளநீரை - குலையாகிய செவ்விள நீர்களை, கடவுள்சாதி - தேவகுலத்திலுதித்த, மட நல்லார் - இளமாதர், கதிர்பூண் முலையென்று - (தமது) ஒளியுள்ள ஆபரணங்களணிந்த முலையெனக் கருதி, எக்கற - எக்கற்றுநிற்க, பை கமுகு - பசிய கமுகமரங்கள், நகை வாள் முத்து அரும்பும் - நகையாகிய ஒளியுள்ள முத்துக்களை யரும்புகிற, தேமாம் பொழில் - தேமாஞ் சோலைகள் சூழ்ந்த, தீ புனல் நாடா - இனிய நீர் நாடனே, சிறியேஞ் சிற்றில் சிதையேலே —, (எ - று.)

வாமம் - வாம் எனத் தொகுக்கப்பட்டது. மேகலை - மாதரிடை யணியிலொன்று. இஃது எழ்கோவையுள்ளது. [குற்றேவல் - சிறுபணி விடை. அகம்படிமை - அடைப்பையேந்தல் முதலியபோல்வது. அகம்படிமைக் குடி - உள்வேலை செய்யுங் குடும்பம். காய்மாண் குலைச்செவ்விளநீரைக் கடவுட்சாதிமட நல்லார் கதிர்ப்பூண் முலையென்றேக்கறப் பைங்கமுகு நகைவாண் முத்தரும்பும் என்றதனால் தெய்வப்பெண்களது பேதை மையை நோக்கிக் கமுகு நகைக்கின்ற தென்பது பெறப்பட்டது. ஏக் கறல் - வாடல். (9)

80. கருவீற் றிருந்த பெருங்கருணைக்
கடைக்கண் பொழிய வீற்றிருக்கும்

கடவு ணீயே பகிரண்டம்
கண்டா யெனின்வண் டடைகிடப்ப
மருவீற் றிருந்த குழன்மகளிர்
வண்டற் றுறைக்கு மணற்சிற்றில்
மனைகோ லுவது மற்றடிகேள்
வகுக்குந் தொழிற்கு மாறன்றே
குருவீற் றிருந்த மணிமாடக்
கொடிமா நகரந் தொறுமலர்ந்த
கொழுந்தா மரைப்பூங் கோயிலிற்பல்
கோடி யுருவங் கொண்டுசெழுந்
திருவீற் றிருந்த சோணைடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ - ள்.) கரு வீற்றிருந்த - கருப்பங்கொண்டு வீற்றிருந்த, பெருங் கருணை - பெருங்கருணை மழையை, கடைக்கண் பொழிய - கடைக்கண் சொரியும்படி, வீற்றிருக்கும் - எழுந்தருளியிருக்கிற, கடவுள்நீயே - கடவுளாகிய நீயே, பகிரண்டம் கண்டாய் எனின் - பகிரண்டங்களையுண்டாக்கினையென்றால், வண்டு அடைகிடப்ப - வண்டுகள் அடைகிடக்கும்படி, மருவீற்றிருந்த - மணம்தங்கிய, குழல் - கூந்தலையுடைய, மகளிர் - மாதர்கள், வண்டல் துறைக்கு - வண்டல் விளையாடிடத்துக்கு, மண்சிற்றில் மனைகோலுவது - மணற்சிறுவீடு கோலுவது, அடிகேள் வகுக்கும் தொழிற்கு மாறு அன்றே - சுவாமிகள் படைக்குந் தொழிற்கு விரோதமன்றே, குரு வீற்றிருந்த - நிறந் தங்கிய, மணி மாடக்கொடி - மணிகள் பதித்த மாளிகைக்கொடிகள் கட்டிய, மா நகரம்தொறும் அலர்ந்த - பெரிய நகரந்தோறும் விரிந்த, கொழு தாமரைப் பூ கோயிலில் - செழுமையாகிய தாமரைமலராகிய கோயிலில், பல்கோடி உருவம் கொண்டு அநேககோடி யுருவுகொண்டு, செழு திரு வீற்றிருந்த - செழுமையாகிய திருமகள் வீற்றிருக்கிற, சோணைடா - சோணைடனே, சிறியேஞ் சிற்றில் சிதையேலே---, (எ - று.)

பொழியவென மேல்வருதலால் கருணை மழையாக்கி யுரைக்கப் பட்டது. மரு - மலர்மணமும் இயற்கைமணமும். யாம் சிற்றில் கோலுதல் நீ பகிரண்டம்வகுக்குந் தொழிற்கு மாறன்றுதலால் எம் சிற்றில் சிதைத்த லுனக் கடாதென்பது கருத்து. (10)

சிற்றிற்பருவம் முற்றிற்று

9. சிறுபறைப் பருவம்

81. ஊற்றும் பசுந்தே னுவட்டநெட் டிதழ்விரியும்
ஒண்காந்தண் முச்சியுச்சி
ஒருவனீ மும்முதற் கடவுளு மிளைப்பாற
உலகெலாந் தலையளித்துப்
போற்றுந் திறத்தினப் பழமறைக் கிழவன்
புரிந்தபகி ரண்டங்கடாம்
புதுக்குவ கடுப்பநெடு வெளிமுகட் டுக்குவிரி
புதுநிலாக் கற்றையிட்டுத்
தூற்றும் பெயர்க்கரு முகிற்படாத் தையும்வெண்
டுகிற்படா மாக்கிவீக்கித்
தொடுகடற் புவனப் பெருந்தட்டொ டண்டச்
சுவர்த்தலத் துக்கும்வெள்ளை
தீற்றுஞ் சுதைத்தவள மாடமலி வேளூர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே.

(இ - ள்.) ஊற்றும் பசுந்தேன் - ஒழுக்குகிற பசிய தேனுனது, உவட்ட - தளும்ப, நெடு இதழ் விரியும் - நெடிய இதழ்கள் விரிகிற, ஒள் காந்தள் - ஒட்பமாகிய காந்தள்மலரைமுடித்த, முச்சி உச்சி - முச்சியைக்கொண்ட உச்சியையுடைய, ஒருவன் நீ - ஒப்பற்றவனுகிய நீ, மும்முதல் கடவுளும் இளைப்புஆற - மும்முதற் கடவுளும் இளைப் பொழியும்படி, உலகு எல்லாம் தலையளித்து - எல்லா வுலகங்களையும் கருணைசெய்தருளி, போற்றும் திறத்தின் - காப்பாற்றுந் தன்மையால், அ - அந்த, பழமறை கிழவன் - பழமறைக் கிழவனுகிய பிரமன், புரிந்த - படைத்த, பகிரண்டங்கள் - பகிரண்டங்களை, புதுக்குவ கடுப்ப - புதுக்கு வனவற்றை நிகர்க்க, நெடுவெளி முகட்டுக்கு - பெருவெளி முகட்டுக்கு, விரி புதுநிலா கற்றையிட்டு - விரிந்த புதுநிலவின் கற்றையை யமைத்து, தூற்றும் - சிதறுகிற, கருமுகில் - கரிய மேகமாகிய, படாத்தையும் - ஆடையையும், வெள்முகில்படாம் ஆக்கி - வெள்ளாடையாகச் செய்து,

வீக்கி - கட்டி, தொடு - தோண்டப்பட்ட, கடல் - கடல் சூழ்ந்த, புவனம் - உலகமாகிய, பெருதட்டொடு - பெரிய தட்டினனே, அண்டச் சுவர்த்தலத்துக்கும் - அண்டச் சுவராகிய இடத்தினுக்கும், வெள்ளை தீற்றும் - வெள்ளை தீற்றுகிற, சுதை - சுண்ணச் சாந்தமைந்த, தவள மாடம் - வெண்மாடங்கள், மலி - மிக்கு விளங்குகிற, வேளூர - வேளூ ரனே, சிறுபறை முழக்கி யருள் - சிறுபறை முழக்கி யருள்வாயாக, தென்கலைக்கும் - தென் மொழிக்கும், பழைய வடகலைக்கும் - பழமை யாகிய வடமொழிக்கும், தலைவ - முதல்வனே, சிறுபறை முழக்கி யருள் —, (எ - று.)

முச்சி - ஐவகைமயிர்முடியினென்று. இதனை உச்சிக் கொண்டை யென்பர். மும்முதற் கடவுள் - முதன்மையுள்ள முத்தேவர். இவர் உலகை அளித்தளித் தழிப்பவர், இவரது முத்தொழிலுங் குமரவேள் மேற்கோடலால் அவரினப்பாறின ரென்பார், "மும்முதற் கடவுளு மினப்பாற வுலகெலாந் தலையளித்துப் போற்றுந் திறத்தின்" என்றார். கிழவன் - உரியவன், விருத்தன். கடித்தல் - நிகர்த்தல். படாம் - ஆடை. வீக்குதல் - கட்டுதல். அண்டச்சுவர் - சக்ரவாளகிரி. சிறு பறைமுழக்கல் - சிறுபறை யடித்தல். மும்முதற் கடவுளுமினப்பாற இவர் உலகெலாந் தலையளித்த தெஞ்ஞான்றெனின், பிரமன் தலையிற் குட்டிச்சிறையிட்ட ஞான்றென்க. சிறுபறைப் பருவம் - சிறுபறை கொட்டுதலைத் தெரிவிக்கும் பருவம். (1)

82. விளக்கும் பெரும்புவன மொக்கக் கரைத்தகடை
வெள்ளஞ் சுருங்கவீங்கி
வேதண்ட மெட்டினெடு மூதண்ட கூடத்தும்
விளையாடி யுலகமேழும்
வளக்குங் கருங்கடல் பெரும்புறக் கடலொடும்
வாய்மடுத்தெதி ரெடுப்ப
வருபுனற் காவேரி வளநாட நாடொறு
மதிக்கடவு ளேறியேறி
இளக்கும் பளிக்கறை மூயற்கறை யறக்காலும்
இளநிலா வெள்ளமூழ்கி
எறிதிரைப் பாகீ ரதிப்புனல் குடைந்திடும்
இடைக்கொடி நகிற்கொடியெனத்

திலைக்கும் துகிற்கொடி முகிற்கொடிசெய் வேளூர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே.

(இ - ள்.) விளைக்கும் - உண்டாக்கப்பட்ட, பெரும் புவனம் ஒக்கக் கரைத்த - பெரிய உலகங்க ளெல்லாவற்றையும் சேரக்கரைத்த, கடை வெள்ளம் சுருங்க - ஊழிப்பெருக்கும் சுருங்கும்படி, வீங்கி - பொங்கி, வேதண்டம் எட்டினொடு - அஷ்டகுலகிரிகளோடு, மூதுஅண்ட கூடத்தும் - பழமையாகிய அண்டமுகட்டினும், விளையாடி—, உலகம் எழும் வளைக்கும் - எழுலகங்களையும் வளைக்கின்ற, கருங்கடல் - கருங்கடலானது, பெரும்புறக் கடலொடும்—, வாய்மடித்து - கலந்து, எதிரெடுப்ப - எதிர்த்துவர, வரு புனல் - ஒழுகாநின்ற நீரையுடைய, காவேரி - காவிரியாறுசூழ்ந்த, வளநாட - வளநாடனே, நாள்தோறும்—, மதிக்கடவுள் ஏறி ஏறி - சந்திரன் ஏறியேறி, இளைக்கும் - இளைத்தற்குரிய, பளிக்கு அறை - பளிக்கறைகள், முயல்கறை அற - முயற்களங்கமொழிய, காலும் - உமிழ்கின்ற, இளநிலாவெள்ளம் மூழ்கி - இளநிலாப் பெருக்கில் படிந்து, எறி திரை - வீசுகின்ற அலைகளையுடைய, பாகீரதிப்புனல் குடைந்திடும் - கங்கைநீரில் மூழ்குகின்ற, இடைக்கு ஒடி - இடையை யொடிக்கிற, நகில்கொடியென - முலைக்கொடிகள்போல, நிலைக்கும் - நிறைந்த, துகில்கொடி - துகிற்கொடிகள், முகிற்கு ஒடிசெய் - மேகங்களை யொடிக்கிற, வேளூர—, சிறுபறை—, (எ - று.)

அஷ்டகுலகிரிகள் - கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம் என்பன. இடைக்கு - முகிற்கு என்பன உருபுமயக்கம். ஒடிசெய் - ஒருசொல், ஒடித்தலைச் செய்கிற வெனினுமாம். "முயற்கறை அற - சந்திரன் முயலாகிய தன் களங்கம் மறையும்படி, பளிக்கறை காலும் நிலா வெள்ளம், இடைக்கொடி நகிற் கொடி - இடையாகிய கொடியையும் நகிலையும் உடையகொடி போன்ற பெண். துகிற் கொடிக்கு நகிற்கொடி உவமை. துகிற்கொடிமேக மண்டலத்தை யளாவி அம்முகிலைக் கோத்துநின்று முகிற்கொடியாயிற்று. துகிற்கொடி - எழுவாய்." (2)

83. இருளுந் தரங்கக் கருங்கடன் முகட்டேழும்
இளம்பிறை முயற்குழந்தைக்
கேறவிடு மோடமென வான்மீன் றடந்திரை
எடுத்தெறியு நெடுமீனெனத்

தரளம் பதிந்திட்ட மணிமுறுவ லவரோடு
தருநிழற் செல்வருய்க்கும்
தமனிய விமானமும் வெயிற்கதிர்ப் போர்வையான்
தனியாழி திசையுருட்ட
உருளுங் கொடித்தேரும் வீற்றுவீற் றெழில்புனைந்
தோட்டுபொற் றெப்பமென்ன
உலகேழு மலையெட்டு மொழுகுகதிர் விழுதுவிடும்
ஒண்ணிலாப் புணரிகோப்பத்
திரளும் பளிக்குமா டங்கள்பொலி வேளுர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே.

(இ - ள்.) இருளும் - இருளாகின்ற, தரங்கம் - அலைகளையுடைய, கருங்கடல் முகட்டி எழும் - கருங்கடல் முகட்டி லெழுகின்ற, இளம் பிறை - இளம்பிறையானது, முயல் குழந்தைக்கு - முயலாகிய குழந் தைக்கு, ஏறவிடும் ஓடம் என - ஏறவிடுகிற வோடம்போலவும், வான் மீன் - வான்மீன்கள், தடம்திரை - பேரலைகளால், எடுத்தெறியும் - எடுத்து வீசப்பட்ட, நெடுமீன் என - நெடுமீன்கள் போலவும், தரளம் பதிந்திட்ட - முத்துக்கள் பதிந்தாற்போன்ற, மணி முறுவலவரோடு - அழகிய பல்லையுடையமாதருடன், தருநிழல் செல்வர் உய்க்கும் - கற்பகத்தருவினிழலில் வாழ்கின்ற செல்வராகிய தேவர்கள் செலுத்து கிற, தமனிய விமானமும் - பொன் விமானமும், வெயில்கதிர் போர்வை யான் - வெங்கதிர்ப் போர்வையையுடையவனுகிய சூரியன், தனிஆழி - ஒற்றையாழியை யுடையதாய், திசை உருட்ட உருளும் - எல்லாத் திசைகளினும் உருட்ட வுருளாகின்ற, கொடித்தேரும் - கொடிகள் கட் டின தேரும், வீற்று வீற்று எழில்புனைந்து - வெவ்வேருகிய அழகு பெற்று, ஓட்டி - ஓட்டப்படுகிற, பொன் தெப்பம் என - பொற்றெப்பம் போலவும், உலகு ஏழும் - ஏழுலகத்தினும், மலையெட்டும் - மலை யெட் டினும், ஒழுகுகதிர் - ஒழுகாகின்ற கிரணங்கள், விழுதுவிடும் - விழுது விடுகிற, ஒள் நிலாப் புணரிகோப்ப - ஒள்ளிய நிலாக்கடல் கோத்துக் கொள்ள, திரளும் - திரண்ட, பளிக்கு மாடங்கள் —, பொலி - விளங்கு கிற, வேளுர —, சிறுபறை —, (எ - று.)

முகடு - உச்சி. தமனியம் - தபனியம் என்னும் வடமொழித் திரிபு பளிங்கு - பளிக்கு என வலித்தலாயிற்று. (3)

84. மொய்ம்பிற் பெரும்புவன மொக்கச் சுமக்கின்ற
மோட்டாமை முதுகுளுக்க
மூடவுப் படங்கிழிந் தரவரசி ஞயிர
மூடித்தலையு மூளைபொங்கக்

கம்பக் கடாயானை யெட்டும் பிடர்த்தலை
கழுத்தொடு முரிந்துகவிழக்
கதிர்மணிச் சூட்டுநெட் டரவெட்டும் வடவைக்
கடுங்கனற் கண்பிதுங்க

அம்பொற் றடம்புரிசை யெழுபெருந் தட்டுருவி
அண்டகூ டத்தளவலால்
அவரவர் வழங்குதற் கிடுதலைக் கடையென
அடுக்கேழு நிலையேழுமாம்

செம்பொற் றிருக்கோ புரங்கள்பொலி வேஞர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே.

(இ - ள்.) மொய்ம்பின் - வலியினால், பெரும் புவனம் - பெரிய புவனங்களை, ஒக்கச் சுமக்கின்ற - ஒருசேரச் சுமக்கிற, மோடு ஆமை - பெரிய ஆமையானது, முதுகு உளுக்க - முதுகு நெளியவும், மூடவு - வளைவாகிய, படம் கிழிந்து - படம் கிழிபட்டு, அர அரசின் - ஆதிசேடனது, ஆயிர முடித்தலையும் - ஆயிர முடித்தலைகளும், மூளை பொங்க - மூளை கொதிக்கவும், கம்பம் - கட்டுத்தறியிற் கட்டப்படுகிற, கடாயானை எட்டும் - மதங்கொண்ட அஷ்டதிக்கயங்களும், பிடர்த்தலை கழுத்தொடு முரிந்து கவிழ - பிடர்த்தலையானது கழுத்துட னொடிந்து கவிழ்ந்து விழவும், கதிர்மணி - ஒளியுள்ள மாணிக்கத்தை, சூட்டு - உச்சிக்கொண் டையிலுடைய, நெடு அரவு எட்டும் - நெடியவாகிய அஷ்ட நாகங்களும், வடவை கடுங் கனல் - வடவையாகிய கடுந் தீயினையுடைய, கண் பிதுங்க - கண்கள் பிதுங்கவும், அம்பொன் - அழகிய பொன்னினாற் செய்யப் பட்ட, தடம்புரிசை - பெரிய மதிலானது, எழுபெருந்தட்டு உருவி - எழாகிய பெருந்தட்டுக்களை யூடுருவி, அண்டகூடத்து-அண்ட முகட்டில், அளவலால் - சேர்தலால், அவரவர் - அவ்வவ்வுலகத்தார், வழங்குதற்கு - சஞ்சரிப்பதற்கு, இடு - அமைக்கப்பட்ட, தலைக்கடை யென - தலைக் கடை யென்னும்படி, அடுக்கு எழும் - எழடுக்கும், நிலை எழும் - எழ்

நிலையும், ஆம் - ஆகிய, செம்பொன் - செம்பொன்னனியன்ற, திருக் கோபுரங்கள் - அழகிய கோபுரங்கள், பொலி - விளங்காநின்ற, வேளூர - வேளூரனே, சிறுபறை—, (எ - று.)

மொய்ம்பு - வலி. கம்பம் - சாதியடை. அஷ்டநாகங்களாவன - வாசுகி, அநந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன் என்பன. இவை முறையே கிழக்கு முதலெண் டிசைகளைத் தாங்குவதன்றி, இவற்றினுடனே சேடன் பூமியைச் சுமவாநிற்பன். இந்நாகங்களும் காசிபனுக்கும் அவன் மனைவியாகிய கத்துருவுக்கும் பிறந்தன. அஷ்டதிக்கயங்களாவன - ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்ரதீபம் என்பன. இவை முறையே கிழக்கு முதலிய வெண்டிசைகளினு நிலந்தாங்கி நிற்பன. இவற்றிற்கு முறையே பிடியானைகளாவன - அப்ரமை, கபிலை, பிங்கலை, அநுபமை, தாமிரபர்ணி, சுதந்தி, அஞ்சனை, அஞ்சனாவதி என்பன. (4)

85. தரிக்குஞ் சுடர்ப்பரிதி முழுமதிக் கடவுளொடு
தடமதில் கடந்தகநகர்
சாரவரி தாற்புவன கோடிகட் கொளிசெயச்
சதுமுகன் கற்பந்தொறும்

விரிக்கின்ற விருசுடரு மொருவழித் தொக்கென
வியன்கதிர்ப் படலமூடி
வீங்கிருள் விழுங்குசெம் மணிமாட நிரையுமொளி
விளைபசுங் கதிர்வெண்புரி

புரிக்குஞ் செழுந்தரள மாடமும் வெயிலினொடு
பொழிநிலாப் போர்ப்பமுற்றும்
போதுதெரி யாமையிற் குமுதமொடு சதவிதழ்ப்
போதுமே யிருபோதையும்

தெரிக்குந் தடம்பணை யுடுத்ததமிழ் வேளூர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே.

(இ - ள்.) தரிக்கும் சுடர் - தரிக்கின்ற காந்தியையுடைய, பரிதி - சூரியன், முழுமதிக் கடவுளொடு - பூர்ண சந்திரனோடு, தடமதில்

கடந்து - பெரிய மதிலைத்தாண்டி, அகநகர் - நகரினுள்ளே, சார - சேர, அரிதால் - அருமையாதலால், புவனகோடிகட்கு - அண்டகோடிகளுக்கு, ஒளிசெய்ய - ஒளியைத் தரும்பொருட்டு, சதுர்முகன் - நான்முகனாகிய பிரமன், கற்பம்தொறும் - கற்பங்கடோறும், விரிக்கின்ற இருசுடரும் - படைக்கின்ற இருசுடர்களும், ஒருவழி தொக்கென - ஒரிடத்திற் கூடினாற்போல், வியன் - பெரிய, கதிர்படலம் மூடி - ஒளித்தொகுதியை மூடி, வீங்கு - அதிகரித்த, இருள் - இருட்டை, விழுங்கு - விழுங்குகிற, செம்மணி - செம்மணிகள் பதிந்த, மாட நிரையும் - மாளிகை வரிசையும், ஒளிவீசு - ஒளியுண்டாகிற, பசுங்கதிர் - பசிய கிரணத்தையுடைய, வெள்புரி - வெண்சங்குகள், புரிக்கும் - ஈனுகின்ற, செழுதாள மாடமும் - செழிய முத்துமாளிகைகளும், வெயிலினொடு பொழிநிலாபோர்ப்ப - (முறையே) வெயிலினுடன் சொரிகின்ற நிலாவினால் மூட, முற்றும் - முழுதும், போது தெரியாமையின் - பொழுது அறியப்படாமையால், குமுதமொடு சதம் இதழ் போதுமே - குமுதங்களோடு நூற்றிதழ்க் கமலங்களுமே, இருபோதையும் - இரு பொழுதையும், தெரிக்கும் - உணர்த்துகிற, தடம்பணை உடுத்த - பெரிய வயல்கள் சூழ்ந்த, தமிழ் - தமிழ் வழங்குகிற, வேளூர்—, சிறுபறை—, (எ - று.)

கோடி - வரிசை. இருசுடர் - சூரியசந்திரர்கள். இருபோதும் இராப்பொழுதும் பகற்பொழுதும். குமுதம் இராப்பொழுதையும், கமலம் பகற்பொழுதையும் தெரிவிக்கின்றன வென்பது கருத்து. (5)

வேறு

86. மழைமுகில் பிளிறு முழக்கென விரிசிறை
மடமயி லினமகவ
மால்கட லோலிடு மொலியென விரக
மடந்தையர் மனநெகிழப்

பழமறை யார்ப்பென வாகுதி வேட்டெழு
பண்ணவ ருண்மகிழப்
பரநா தத்தெரி யெனவனு பூதி
பலித்தவர் நெக்குருக

அழலவிர் சோதியெ மைய னடஞ்செய
ஆயிர மங்கையினேர்
அண்ண றுவைத்திடு குடமுழ வொடுசுடர்
ஆழி யவன்கொட்டு

முழவென வமரரு முனிவரு மார்ப்ப
முழக்குக சிறுபறையே
முத்தமிழ் பயில்பரு திப்பதி முருகன்
முழக்குக சிறுபறையே.

(இ - ள்.) மழை முகில் - குளிர்ச்சியையுடைய மேகங்கள், பிளிறு - ஒலிக்கின்ற, முழக்கு என - முழக்கமென்றெண்ணி, விரி சிறை - விரித்த கலாபத்தை யுடையனவாய், மடமயில் இனம் அகவ - இளமயிற் கூட்டங்கள் ஆடவும், மால்கடல் ஒலிடும் ஒலியென - பெரிய கடல் ஒலமிடுகிற சத்தமென்றெண்ணி, விரக மடந்தையர் - விரகங் கொண்ட மாதர்கள், மனம்நெகிழ - மன முருகாநிற்கவும், பழமறை ஆர்ப்பு என - பழமையாகிய வேத கோஷமென் றெண்ணி, ஆகுதி வேட்டு எழு - ஆகுதியை விரும்பி யெழுந்த, பண்ணவர் - தேவர்கள், உள்மகிழ - மனமகிழவும், பரநாதத்து ஒலியென - பரநாதத் தொலி யென்றெண்ணி, அநுபூதி பலித்தவர் - அநுபவம் பலிக்கப் பெற்றவர், நெக்கு உருக - மன நெகிழ்ந்துருகவும், அழல் அவிர்சோதி - அனல் விளங்குகிற ஒளியுருவாகிய, எம் ஐயன் நடம்செய - எம்மிறைவன் நடனஞ் செய்ய, ஆயிரம் அங்கையின் - ஆயிரம் கைகளையுடைய, ஓர் அண்ணல் - ஒரு பெரியோன், தூவைத்திடு - முழக்குகிற, குடமுழ வொடு - குடமுழாவுடனே, சுடர் ஆழியவன் கொட்டும் - ஒளியை யுடைய சக்கராயுதத்தை யேந்தினவனுகிய திருமால் கொட்டுகிற, முழவு என - முழவொலியென்றெண்ணி, அமரரும் முனிவரும் ஆர்ப்ப - தேவர்களும் முனிவர்களும் ஆரவாரிக்கவும், சிறுபறை முழக்குக—, முத்தமிழ்பயில் - முத்தமிழ் வழங்குகிற, பருதிப்பதி முருகன் - பரிதி புரி முருகனே, சிறுபறை முழக்குக—, (எ - று.)

மழை - மழைபெய்கிற வெனினுமாம். அகவுதல் - ஆடுதல். ஆகுதி - தேவருணவு (யாகத்திற் நரப்படுமுணவு). ஆயிரமங்கையினோரண்ணல் என்றது வாணசுரனை. முத்தமிழாவன - இயல் இசை நாடகம் என்பன

87. பெருவெளி முகடு திறந்திட் டண்டப்
பித்திகை வெடியாமே
பேரண் டத்துள வேதண் டங்கள்
பிதிர்ந்துதி ராகாமே
குருமணி சிதறிய வென்ன வுடுத்திரள்
கொட்டுண் டுதிராமே
குவடு படுந்திசை செவிடு படச்சிலர்
குடர்கள் குழம்பாமே

திருவிர லொடுநக கண்களி னுஞ்செங்
குருதி ததும்பாமே
சேயொளி நின்று துளும்பிட நின்சிறு
செங்கை வருந்தாமே

முருகலர் தாரவ னொருமுறை மெல்ல
முழக்குக சிறுபறையே
முத்தமிழ் பயில்பரு திப்பதி முருகன்
முழக்குக சிறுபறையே.

(இ - ள்.) பெருவெளி முகடு திறந்திட்டு - பெரு வெளியின் முகடு பிளந்திட்டு, அண்டப்பித்திகை வெடியாமே - அண்டச் சுவர் வெடிக்காமலும், பேர் அண்டத்து உள்ள - பெரிய அண்டங்களிலுள்ள, வேதண்டங்கள் - மலைகள், பிதிர்ந்து உதிர் ஆகாமே - சிந்தி யுதிராமலும், குருமணி சிதறிய என்ன - நிறமுள்ள மணிகள் சிதறின வென்னும்படி, உடுத்திரள் - உடுக்கூட்டம், கொட்டுண்டு உதிராமே - கொட்டுண்டு உதிராமலும், குவடு படும் திசை - குலமலைகள் பொருந்திய எட்டுத்திக்கிலுள்ளாரும், செவிடுபட - செவிடுபடும்படி, சிலர் குடர்கள் குழம்பாமே - சிலர் குடர்கள் குழம்பாமலும், திரு விரலொடு - திருவிரலோடு, நக கண்களிலும் - நகக்கண்களிலும், செங் குருதி ததும்பாமே - செங் குருதி தளும்பாமலும், சேயொளிநின்று துளும்பிட - செவ்வொளிநின்று ததும்பிட, நின்சிறு செங்கை வருந்தாமே - உனது சிறு செங்கை வருந்தாமலும், முருகு அலர் தாரவன் - வாசனையோடலர்ந்த பூமாலையை யுடையவனே, ஒருமுறை - ஒருதரம், மெல்ல - பைய, முழக்குக சிறுபறையே —, முத்தமிழ் பயில் பருதிப்பதி முருகன் —, (எ - று.)

அண்டச்சுவர் - சக்ரவாளகிரி. திசையெட்டென மேல் வருதலால் குவடு அஷ்டகுலாசலங்க ளென்பது பெறப்பட்டது. தாரவன் - அண்மைவிளி. (7)

88. வம்மி னெனப்புல வோரை யழைத்திடு
வண்கொடை முரசமென
வடகலை தென்கலை யொடுபயி லுங்கவி
வாணர்க ளோடிவர

அம்மென் மடப்பிடி பொன்னுல கின்றவ
ணங்கை மணம்புணரும்
அணிகிளர் மணிமுர சென்னவெ மையலெ
டம்மை மனங்குளிரத்

தெம்முனை சாயச் சமர்விளை யாடிச்
செங்கள வேள்விசெயுந்
திறன்முர செனவிமை யவர்விழ வயரச்
செழுநகர் வீதிதொறு
மும்முர சமுமதிர் காவிரி நாடன்
முழக்குக சிறுபறையே
முத்தமிழ் பயில்பரு திப்பதி முருகன்
முழக்குக சிறுபறையே.

(இ - ள்.) வம்மின் என - வாருங்களென்று, புலவோரை அழைத்திடு - புலவரை யழைக்கிற, வள் - வளவிய, கொடை முரசம் என - கொடைமுரசம் போலவும், வடகலை தென்கலையொடு பயிலும் - வடகலையைத் தென்கலையோடு பயில்கின்ற, கவி வாணர்கள் ஓடிவர - வித்வான்கள் ஓடிவரவும், அ - அந்த, மெல் - மெல்லிய, மடப்பிடி - இளம்பிடி போன்ற, பொன்னுலகு ஈன்ற அணங்கை - பொன்னுலகு பெற்ற தெய்வப் பெண்ணை, மணம்புணரும் - மணம் புணர்தற்குரிய, அணிகிளர் - அழகு விளங்குகிற, மணிமுரசு என்ன - மணிமுரசம் போலவும், எம் ஐயனொடு - எம்மிறைவனுடன், அம்மை மனம் குளிர - இறைவியின் மனமுங் குளிரவும், தெம் முனை சாய - பகைவரது முற்படை முரிந்தோடும்படி, சமர்விளையாடி - போர்விளையாடி, செங்கள வேள்விசெய்யும் - செங்கள வேள்விசெய்கிற, திறல்முரசு என - வெற்றி முரசுபோலவும், இமையவர் விழவு அயர - தேவர்கள் விழாச்செய்ய, செழுநகர் வீதி தொறும் - செழுமையாகிய நகரத் தெருத்தோறும், மும்முரசமும் அதிர் - மும்முரசங்களு முழங்குகிற, காவிரிநாடன் - காவிரி நாடனே, முழக்குக சிறுபறையே—, முத்தமிழ்—, (எ - று.)

'அம்மென் மடப்பிடி பொன்னுலகீன்ற வணங்கு' என்றது தெய்வயானையாரை. இமையாதவரை இமையவர் என்றது மங்கல வழக்கு (8)

சந்த விருத்தம்

89. பெருகுசுவைத்தெளி நறவொழுகக்கனி கனியமுதே
பிடிநடைகற்றிட வடிகள்பெயர்த்திடு மடவனமே
கருவரைநெக்குட னுருகமிழற்றுமொர் கிளியரசே
கருணைசெயத்தகு மலியனிடத்தெனு மொழிபுகலா
அருளில்புனத்தவர் மகளிருபொற்பதம் வருடல்செயா
அவண்முனைடுத்துகின் முடியின்முடித்திடு கரமலராற்
பருவயிரப்புய சயிலன்முழக்குக சிறுபறையே
பருதிபுரிச்சிறு குமரன்முழக்குக சிறுபறையே.

(இ - ள்.) பெருகு - பெருகாநின்ற, சுவை - சுவையுள்ள, தெளி நறவு ஒழுக - தெளிதேனொழுகா நிற்க, கனி - கனிந்த, கனி அமுதே - கனியின் அமிர்தமே, பிடிநடை கற்றிட - பெண் யானைகள் நடை கற் கும்படி, அடிகள் பெயர்த்திடும் - அடிகளைப் பெயர்த்திடுகிற, மட அன்னமே - இளமையாகிய அன்னமே, கருவரைநெக்கு - கரியமலைகள் நெக்குவிட்டு, உடன் உருக - விரைந்துருகும்படி, மிழற்றும் - குழறுகிற, ஓர் கிளி அரசே - ஒப்பற்ற கிள்ளையரசே, அளியனிடத்து கருணை செயத் தகும் - எளியேனிடத்தில் கிருபை செய்யத்தகும், என்னும் மொழிபுகலா - என்னுஞ் சொற்களைச்சொல்லி, அருள் இல் - இரக்கமில் லாத, புனத்தவர் மகள் - குறவர் மகளுடைய, இருபொன்பதம் வருடல் செயா - இரண்டு அழகிய பாதங்களைவருடி, அவள்முன் - அவளுக் கெதிரே, எடுத்து - தூக்கி, நின்முடியில் முகிழ்த்திடு - உன் சிரமீது கூப்புகிற, கரமலரால் - கைம்மலரால், பருவயிரம் - பெரு வயிரமலை போலும், புயசயிலன் - தோள் மலையை யுடையவனே, முழக்குக —, பருதிபுரி - பருதிபுரியி லெழுந்தருளிய, சிறு குமரன் - சிறு குமரனே, முழக்குக —, சிறுபறையே —, (எ - று.)

புகலா - செய்யா வெனும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம். 'அருளில் புனத்தவர்மகள்' என்றது வள்ளிநாயகியை. வருடல் செயா - வருடியெனப் பொருள்படுஞ் செய்யா வென்னும் வாய்பாட்டிறந்தகால வினை யெச்சம். சயிலன் - அண்மைவிளி. புய சயிலன் என மேல் வருதலால் வயிரம் ஈண்டு வயிரமலையென் றுரைக்கப்பட்டது. (9)

90. இழுமென்மொழித்தெளி தமிழின்வடித்திடு நவரசமே
இதயவிருட்டற வுணர்விலுதித்திடு சுடரொளியே
கழுவுமணிக்கல னடுவிலிழைத்திடு குலமணியே
கனிதருமுக்கனி யொடுவடிகட்டிய சுவையமுதே
ஒழுகுநறைச்செழு மலர்விரியக்கமழ் புதுமணமே
உருகுமுளத்தருள் பெருகியுவட்டெழு சலநிதியே
பழமறைகட்கொரு முதல்வன்முழக்குக சிறுபறையே
பருதிபுரிச்சிறு குமரன்முழக்குக சிறுபறையே.

(இ - ள்.) இழுமென்மொழி - இனிக்கின்ற சொற்களையுடைய, தெளிதமிழின் - தெள்ளிய தமிழினின்றும், வடித்திடு - வடித்திட்ட, நவரசமே —, இதயம் - மனத்திலுள்ள, இருட்டு - அஞ்ஞானவிருள், அற - ஒழிய, உணர்வில் - அறிவினிடத்தே, உதித்திடு - உதிக்கின்ற, சுடர் ஒளியே - ஒளிர்கின்ற சூரியனே, கழுவும் - கழுவப்பட்ட, மணி - மணிகளாலியன்ற, கலன் நடுவில் - ஆபரணங்களி னிடையே,

இழைத்திடு - இழைத்திட்ட, குலமணியே - உயர்ந்த மாணிக்கமே, கனிதரு - கனிந்த, முக்கனியொடு - முக்கனிகளோடு, வடிகட்டிய - வடித்த, சுவை அமுதே - சுவையுள்ள அமிர்தமே, ஒழுகுநறை - ஒழுகா நின்ற தேனையுடைய, செழுமலர் விரிய - செழுமையாகிய மலர்கள் விரிய, கமழ் - மணக்கின்ற, புதுமணமே —, உருகும் - உருகா நின்ற, உள்ளத்து - (அன்பரது) மனத்தில், அருள்பெருகி உவட்டெழு - அருள் வெள்ளம் பெருகித் ததும்புகிற, சலநிதியே - கடலே, பழமறைகட்கு - பழமையாகிய வேதங்களுக்கு, ஒரு முதல்வன் - ஒப்பற்ற முதல்வனே, முழக்குக சிறுபறையே -, பருதிபுரி —, சிறுபறையே —, (எ - று.)

இழும் - அதுகரணவோசை. இழும் மென்மொழியென்றும் பிரிக்கலாம். கழுவல் - சுத்தி செய்தல். இழைத்தல் - பதித்தல். முக்கனிகளாவன - வாழைக்கனி, பலாக்கனி, மாங்கனி யென்பன. இச் செய்யுளும் மேற் செய்யுளும் நாலசைச் சீர் கலந்த அறுசீர் ஆசிரியச் சந்த விருத்தமாக வகையுளி செய்தலும் உண்டு. பரிதிபுரி எனவும் பருதிபுரி எனவும் இரண்டு வகையாக் கூறுப. (10)

சிறுபறைப்பருவம் முற்றிற்று



10. சிறுதேர்ப் பருவம்

91. போரோடு படைதுறந் துடறிறந் தோடுசெம்
புனலோட வோடிகிமிரும்
புணரிப் பெருந்தானை யவுணப் படைத்தலைவர்
பூதப் படைத்தலைவர்மூன்

தாரோ டவிழ்ந்திட்ட குஞ்சிக் கிமைத்திட்ட
தழல்விழிக் கெதிர்செலாத
தாளுக்கு வாள்சோர் தடக்கைக்கு நாமநும்
தாலிக்கு வேலிகொலெனுப்

பீரோடு கொங்கைக்க ணீரோடு வெள்ளருவி
பெருகக் கடைக்கணிற்கும்
பெய்வளை யவர்க்கோத வவர்விழிக டொறுமிளம்
பேதையர்கள் கண்டொறுமெனத்

தேரோடு மொருபெருஞ் சிலையோடு நின்றவன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே.

(இ - ள்.) போர் ஓடி - போர்களத்தில் விரைந்து செல்லுகிற, படை துறந்து - ஆயுதங்களைவிட்டு, உடல் திறந்து - உடம்புகள் வகிரப் பட்டு, ஓடி - ஓடுகிற, செம்புனல் ஓட - செந்நீரோடும்படி, ஓடி நிமிரும் - ஓடி யுயர்ந்த, புணரி - கடல்போன்ற, பெருந்தானை - பெரும் படையையுடைய, அவுணப்படைத் தலைவர் - அவுணர் சேனைத்தலைவர் கள், பூதப்படைத் தலைவர்முன் - பூதசேனைத் தலைவர்களுக் கெதிரில், தாரோடு அவிழ்ந்திட்ட - பூமாலைகளோடும் அவிழ்ந்துபோன, குஞ் சிக்கு - குடுமிக்கு, இமைத்திட்ட - பிரகாசிக்கிற, தழல்விழிக்கு - நெருப் புப்போலும் கண்ணுக்கு, எதிர் செலாததாளுக்கு - எதிரேறி நடவாத அடிக்கு, வாள் சோர் - வாள் நழுவவிட்ட, தடம் கைக்கு - பெருங்கை களுக்கு, நாமனும் தாலிக்கு - அச்சத்தை விளைத்துள்ள உங்கள் தாலி கட்டும், வேலிகொல் என - வேலியோவென்று, பீர் ஓடி கொங்கை - பசலை பூத்த தனங்களின்மேல், கண்ணீர் ஓடி - கண்ணீரா யோடுகிற, வெள் அரிவி பெருக - வெள்ளருவி பெருகும்படி, கடைக்கண் நிற்கும் - வாயிலில் நிற்கிற, பெய்வளையவர்க்கு ஓத - மாதர்க்குச் சொல்ல, அவர் விழிகள்தொறும் - அவர்களுடைய கண்கள்தோறும், இளம் பேதையர்கள் கண் தொறும் என - இளம் பெண்களுடைய கண்களோறும் நிற் பதுபோல, தேரோடும் ஒரு பெருஞ் சிலையோடும் நின்றவன் - தேருட னும் ஒரு பெரு வில்லுடனும் நின்றவனே, சிறுதேர் உருட்டியருள்—, திருவளரவளர் - செல்வம் வளர வளர்கின்ற, கந்தபுரி வளர் இளங்குமர - கந்தபுரியில் வாழ்கின்ற இளங்குமரனே, சிறுதேர்—, (எ - று.)

சிறுதேர்ப்பருவம் - சிறுதேருருட்டுதலைத் தெரிவிக்கும் பருவம். (1)

92. கம்பக் களிற்றுக் கடற்ரூனை வீரர்கட்
கடைவிற் கடைக்கனலெழக்
கண்டொட் டுணுஞ்சில மருட்பேய் கரிந்தெழு
கடுங்குருதி வெள்ளமூழ்கித்
தும்பைத் தலைச்செம் மயிர்ச்சிகை யினைச்சுடு
கனற்சிகை யெனப்பதைப்பச்
சூட்டிறைச் சிக்குச் சிணுங்குங் குறட்பேய்க்கொர்
சூர்ப்பேய் கொழுந்தசைகள்கோத்

தம்பிற் சுடத்தான் கவந்தமொடு தொந்தமிட்
டாடும் பறந்தலைநிலத்
தானைப் பிணைக்குன்று மவுணப் பிணைக்காடும்
அளறுபட் டொழியநின்றோர்
செம்பொற் றடந்தே ருருட்டிவரு சேவகன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே.

(இ - ள்.) கம்பம் களிறு - கட்டுத்தறியிற் கட்டப்படுகிற யானை களையுடைய, கடல்தானைவீரர் - கடல்போலும் படைவீரரது, கண்கடை யில் - கடைக்கண்களில், கடைக்கனல் எழ - ஊழித்தீயெழ, கண் தொட்டு உண்ணும் - கண்ணைத் தோண்டி யுண்ணுகின்ற, சில மருள் பேய் - சில மருட்சியையுடைய பேய்கள், கரிந்து எழு - கரிந்து எழா நின்ற, கடுங்குருதி வெள்ளம் மூழ்கி - வேகமுள்ள உதிரவெள்ளத் திற்படிந்து, தும்பை தலை - தும்பை மாலையைத் தரித்த சிரசிலுள்ள, செம்மயிர் சிகையினை - செம்மயிர்ச் சிகையை, சுடுகனல் சிகையென - சுடுகின்ற தீச்சிகை யென்றெண்ணி, பதைப்ப - நடுங்கா நிற்க, சூட்டு இறைச்சிக்கு - சூட்டிறைச்சியின் பொருட்டு, சிணுங்கும் - அழுகிற, குறள்பேய்க்கு - குறும் பசாசுக்கு, ஓர் சூர்ப்பேய் - அச்சத்தைச் செய்கிற ஒரு பேயானது, கொழுந்தசைகள் - கொழுவிய மாமிச கண்டங் களை, அம்பில் கோத்து சுட—, தான் - தான், கவந்தமொடு - உடற் குறையோடு, தொந்தமிட்டு ஆடும் - தொடர்ந்து ஆடா நின்ற, பறந்தலை நிலத்து - யுத்த பூமியில், ஆனைப்பிணக்குன்றும் - யானைப் பிணமலையும், அவுணப்பிணக்காடும் - அசுரப்பிணக்காடும், அளறுபட்டு ஒழிய - சேறு பட்டொழியும்படி, நின்று—, ஓர் - ஒப்பற்ற, செம்பொன் - செம் பொன்னினியன்ற, தடம்தேர் - பெருந்தேரை, உருட்டிவரு சேவகன் - உருட்டிவந்த வீரனே, சிறுதேருருட்டியருள், திருவளர—, (எ - று.)

சூட்டிறைச்சி - தலைக்கறி, பறத்தலை நிலம் - போர்க்களம். (2)

93. வண்டேறு செந்நிறப் பங்கித் தலைக்கமல
வனமூடு குருதியாற்று
மால்யானை கையெடுத் தார்த்துநீந் தப்புணரி
மகரமீ னெனநினைந்து
கொண்டேகு சிறுகுடர்ப் பெருவலை யெடுத்தெறி
குறட்பேய் நெடுஞ்சினமுறக்

குறுநரி பிடித்தீர்ப்ப வலறுவதும் வீரர்தொடு
கொலைநேமி யவுணருயிரை
உண்டேகு வதுமொருவன் விடவோ லிடுங்கரிக்
குதவவரு திகிரியேய்க்கும்
ஒல்லென் பறந்தலை மறந்தலைக் கொண்டசூர்
உய்த்திட்ட விந்த்ரஞாலத்
திண்டேரை யுருளாது நிற்கப் பணித்தவன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர் வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே.

(இ - ள்.) வண்டு ஏறு - வண்டுகளேறப்பெற்ற, செந்நிறப் பங்கி தலை - செந்நிற மயிரையுடைய தலைகளாகிய, கமல வனமூடு - தாமரைக் காட்டிலே, குருதி யாற்று - உதிரநதியில், மால் யானை - பெரிய யானைகள், கையெடுத்து ஆர்த்து - கைதூக்கி ஆரவாரித்து, நீந்த - நீந்தாநிற்க, புணரி - கடலிலுள்ள, மகரமீன் என நினைந்து - மகர மச்சமென்றெண்ணி, கொண்டு ஏகு - கொண்டு செல்லுகிற, சிறுகுடர் பெருவலை - சிறு குடராகிய பெரிய வலையை, எடுத்து எறி - எடுத்து வீசுகிற, குறள்பேய் - குட்டைப்பேய், நெடுசினம் உற - பெருங் கோவங்கொள்ளும்படி, குறுநரி - குள்ளநரிகள், பிடித்து ஈர்ப்ப - பிடித்திழுக்க, அலறுவதும் - அலறுதலும், வீரர்தொடு - வீரர் விடுகிற, கொலைநேமி - கொலைச் சக்கரம், அவுணர் உயிரை —, உண்டு ஏகுவதும் - உண்டுபோவதும், ஒருவன்விட - ஒப்பற்றவனுகிய திருமால்விட, ஒலிடும் கரிக்கு - முறையிட்ட யானைக்கு, உதவவரு - உதவவந்த, திகிரி ஏய்க்கும் - சக்காத்தை நிகர்க்கிற, ஒல்லென் பறந்தலை - ஒல்லென்றொலிக்கிற போர்க்களத்தில், மறம் தலைக்கொண்ட - கோவத்தை மிகுதியாகக் கொண்ட, சூர் உய்த்திட்ட - சூரபன்மன் செலுத்திவந்த, இந்திரஞாலம் - இந்திரஞாலம் என்று சொல்லப்படுகிற, திண்தேரை - திண்ணிய தேரை, உருளாது நிற்க பணித்தவன் - உருளாது நிற்கும்படி கியமித்தவனே, சிறுதேருருட்டி —, திருவளர —, (எ - று.)

குடல் - குடர் எனப் போலியாயிற்று. ஈர்த்தல் - இழுத்தல். ஒலிட்டகரி - கஜேந்திரன். பணித்தவன் - அண்மைவிளி. (3)

94. பைங்கட் சிறைக்கால் கடைக்கால் செயக்கிரிகள்
விரிசிறை படைத்தெழுவபோற்
படருந்தன் வேகத்தி னெக்கப் பறக்கப்
பறந்தலைச் செந்தலையறும்

வெங்கட் டயித்திய ருடற்குறை தலைக்குறை
விரைந்துயி ரினைத்தொடர்ந்து
மீச்செல்லு மாச்செல் லெனச்செலப் பூமாரி
விண்டூர்ப்ப தெனவுடுவுகப்
பொங்கற் கடற்குட்ட மட்டதிக் குந்தமிற்
போர்செயப் பார்கவிழவெம்
பொறியுடற் சேடன் படந்தூக்கி யார்க்கும்
புகைப்படலம் வடவாமுகச்
செங்கட் பசுந்தோகை வாம்பரி யுகைத்தவன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே.

(இ - ள்.) பைங்கண் - பசுங்கண்களையுடைய, சிறைக்கால் - சிறகுக் காற்றினது, கடைக்கால் செய்ய - ஊழிக்காற்றை யுண்டாக்க, கிரிகள் - மலைகள், விரி சிறை படைத்து - விரிந்த சிறகுகள் பெற்று, எழுவ போல் - எழுவனவற்றைப்போல, படரும் - செல்லுகிற, தன் வேகத்தின் - தனது வேகத்தால், ஒங்கப்பறக்க - உடன் பறக்க, பறந்தலை - போர்க்களத்தில், செந்தலை அறும் - செந்தலை யறுபட்ட, வெங்கண் - தறுகண்மையுள்ள, தயித்தியர் - அவுணருடைய, உடற்குறை தலைக்குறை - உடற்குறைகளும் தலைக்குறைகளும், விரைந்து உயிரினை தொடர்ந்து - விரைவாய் உயிரைப் பின்பற்றி, மீச்செல்லும் - மேலே செல்லும், மா செல் என - கருமை பொருந்திய மேகம்போல, செல் - செல்லுகிற, அ - அந்த, பூமாரி - மலர்மழை, விண்டூர்ப்பது என - ஆகாயத்தை மூடுவதுபோல, உடு உக - உடுக்கள் சிந்த, பொங்கல் - பொங்கு தலையுடைய, கடல் குட்டம் - கடற் பள்ளங்களும், அட்டதிக்கும் - அஷ்டதிக்குகளிலும், தம்மில் போர்செய்ய - தம்மிற் போர்புரிய, பார் கவிழ - பூமியானது குப்புற, வெம் பொறி உடல் - வெவ்விய புள்ளிகளையுடைய தேகமுடைய, சேடன் - ஆதிசேடன், படம் தூக்கி ஆர்க்கும் - படமெடுத்து ஆர்த்தலாலுண்டாகிற, புகைப்படலம் - புகைக்கூட்டமாகிய, வடவாமுகம் - வடவைத்தியை நிகர்த்த, செங்கண் - செவந்த கண்களையும், பசுந்தோகை - பசுமையாகிய கலாபத்தையுமுடைய மயிலாகிய, வாம் பரி - தாவும் வாகனத்தை, உகைத்தவன் - செலுத்தினவனே, சிறு தே ருருட்டியருளே,— திருவளர—, (எ - று.)

படர்தல் - செல்லுதல். உடற்குறை தலைக்குறை யென்பவற்றிற்கு எண்ணும்மைகள் தொக்கன. உடுக்கள் - விண்மீன்கள், வாவும் வாமெ

னத் தொகுத்தல் பெற்றது. செங்கண் பசுந்தோகை யென்பதற்குச் செவந்த கண்களையுடைய பச்சைமயில் எனினுமாம். தோகை - சிலை யாகுபெயர். உகைத்தல் - செலுத்தல். (4)

95. நெய்வைத்த கூந்தற் பிடிக்குதவ நாற்கோட்டு
நிகளத் தடங்குன்றுவான்
நிமிருங் கதிர்க்குலைச் செந்நெலைப் பாகுபடு
நெட்டிலைக் கன்னல்கொலைஞர்க்
கைவைத் திடப்பரி முகஞ்செய்து வெய்யோன்
கடும்பரியை நட்புக்கொளுங்
கழனிவிரி காவிரித் திருநாட கற்பகக்
காட்டிற் பிறந்துபிரியா
மெய்வைத்த காதன்மை யரமகளிர் பேராய
வெள்ளந் திளைத்தாடியோர்
மென்னடைக் கேக்கற்ற பிடிபின் பிடிக்கமுலை
வேழங்க ளுடனுலாவுந்
தெய்வப் பிடிக்குக் கிடைத்ததொரு மழகளிறு
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே.

(இ - ள்.) நெய் வைத்த - நெய் பூசப்பட்ட, கூந்தல் - கூந்தலை யுடைய, பிடிக்குதவ - பெண் யானைக்குக் கொடுக்கும் பொருட்டு, நால் கோடு - நான்கு கொம்புகளையுடைய, நிகளம் - சங்கிலிபூண்ட, தடம் குன்று - பெரிய மலையானது, வான் நிமிரும் - ஆகாயமளவும் உயர்ந்த, கதிர்க்குலை செந்நெல்லை - கதிர்க்குலைகளோடு கூடிய செந்நெற்பயிர்களை, பாகுபடு - சருக்கரை படுகிற, நெடுஇலை கன்னல் கொல்லை - நெடிய இலைகளையுடைய கரும்புத் தோட்டங்களை, கைவைத்திட - கைவைக்கும் பொருட்டு, பரிமுகம்செய்து - குதிரைமுகஞ்செய்து, வெய்யோன் - சூரியனது, கடும் பரியை - வேகத்தையுடைய குதிரைகளை, நட்புகொள் ளும் - சிநேகித்தற்குரிய, கழனிவிரி - வயல்கள் பரந்த, திரு காவிரிநாட - அழகாகிய காவிரிநாடனே, கற்பகக் காட்டில் பிறந்து - கற்பகாடவியிற் றோன்றி, பிரியா - பிரியாத, மெய்வைத்த - உண்மையாகிய, காதன்மை - அன்பினையுடைய, அரமகளிர் - தெய்வப்பெண்களது, பேர் ஆய வெள்ளம் திளைத்து ஆடி - பெரிதாகிய ஆயவெள்ளம் படிந்தாடி, ஓர் மெல்நடைக்கு ஏக்கற்ற - ஒப்பற்ற மெல்லிய நடைக்கு ஏக்கற்ற, பிடி -

பெண்யானை, பின்பிடிக்க - பின்பற்ற, மூலை வேழங்களுடன் உலாவும் - மூலையானைகளோடுலாவுகிற, தெய்வப்பிடிக்கு - தெய்வயானைக்கு, கிடைத்தது - வாய்த்ததாகிய, ஒரு மழகளிறு - ஒப்பற்ற இளங்களிறே, சிறுதே ருருட்டியருளே—, திருவளர—, யருளே—, (எ - று.)

'நாற்கோட்டு நிகளத் தடங்குன்று' என்றது ஜராவதத்தை. நிகளம் - விலங்கெனினுமாம். குதிரைமுகஞ் செய்தல் - வளைதல் (குனிதல்). ஏக்கறல் - ஏங்கல். (இவ்வழகிய நடை யெமக்கில்லையே யென்றிரங்கல்). மழகளிறு - அண்மைவிளி. (5)

96. பற்றுவிற் காமன் கொடிப்படைக் கூரெலாம்
படைவீடு கயல்கடாவும்
பழனங்க ளோவத்ர சாலபூஞ் சோலைப்
பரப்பெலாங் காற்றேரொடுங்
கொற்றவங் கங்குற் கடாயானை யுங்கட்டு
கூடமே யெனினுமருதக்
கோமகன் குடிகொண்ட சோணை சேணுடு
குங்குமங் கொட்டுதிண்டோட்
பொற்றடங் குன்றினிரு கொங்கைப் பொருப்புமொரு
பூங்குழற் காடும்வெயில்கால்
புனைமணிக் கலையல்குன் மாக்கடலு மேந்தியோர்
புனத்தின்கண் மிகநுடங்குஞ்
சிற்றிடைக் கொல்குமென் கொடிபடர நின்றவன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே.

(இ - ள்.) பற்றுவில் - பிடித்த கருப்பு வில்லையுடைய, காமன் - மன்மதனது; கொடிப்படைக்கு - கொடிப்படைதனக்கு, ஊர் எல்லாம் - ஊர் முழுதும், படைவீடு - பாசறை, கயல்கள் தாவும் - கயல்மீன்கள் குதிக்கின்ற, பழனங்களோ - வயல்களோ, அஸ்த்ரசாலை - அம்புச்சாலை, பூஞ்சோலைப் பரப்பு எல்லாம் - மலர்ச்சோலைப்பரப்பு முழுதும், கால் தேரொடும் - தென்றற் காற்றுகிய தேருடனே, கொற்றம் - வெற்றியைத் தருகிற, அம் - அழகிய, கங்குல் - இரவாகிய, கடா யானையும் கட்டு - கடாயானையையும் கட்டுகிற, கூடமே எனினும் - கூடமேயாயினும், மருதம் கோமகன் - மருத நிலமாகிய ராஜகுமாரன், குடிகொண்ட - குடிகொண்டிருக்கிற, சோணை - சோணையனே, சேண் ஆடு - ஆகா

யத்தை யளாவிய, குங்குமம் கொட்டு - குங்குமம் அப்பிய, திண்தோள் - திண்ணிய புயங்களாகிய, தடம் பொன் குன்றின் - பெரிய பொன் மலை மேல், இருகொங்கை பொருப்பும் - இருதன மலையும், ஒரு - ஒப்பற்ற, பூகுழல் காடும் - மலர்க் கூந்தலாகிய காடும், வெயில்கால் - ஒளியை வீசுகிற, புனை - அலங்கரிக்கப்பட்ட, மணி - மணிகளிழைத்த, கலை - மேகலையுடுத்த, அல்குல் - நிதம்பமாகிய, மாகடலும் - பெருங்கடலும், எந்தி - தாங்கி, ஓர் புனத்தின்கண் - ஒப்பற்ற தினைப்புனத்தில், மிக அடங்கும் - மிகுதியாகத் துவளாநின்ற, சிற்றிடைக்கு - சிற்றிடையோடு, ஒல்கும் - அசைகின்ற, மெல்கொடிபடர நின்றவன் - மெல்லிய கொடி யானது படர்ந்தேறும்படி நின்றவனே, சிறு—யருளே—, திருவளர—, யருளே —, (எ - று.)

கொடிப்படை - தூசிப்படை (முற்படை). தாமரை நீலம் என்னும் மலர்களைத் தருதலால் பழனங்களோ அத்ரசாலை என்றார். கால் - காற்று. காற்றோர் என்றதனால் தென்றற்காற்றெனப் பட்டது. கடா யானை - ஆண்யானை, மதயானையுமாம். கூடம் - யானை குதிரைகள் கட்டுஞ் சாலை. சிற்றிடைக்கு உருபு மயக்கம். 'மென்கொடி' யென்றது வள்ளிநாயகியை. நின்றவன் - அண்மைவிளி. (6)

97. கோல்பாய் பசும்புண் ணசும்புகும் பத்தடங்
குன்றுகவுண் மடைதிறந்து
கொட்டுநெட் டருவியொடு தேனருவி யுந்திரை
கொழித்துடன் கோப்பமேதிப்
பால்பாய் பெருக்கா றுவட்டெழுத றன்றுணைப்
பாவைய ரொடுங்குடையுமப்
பாகீ ரதிக்குநிகர் தண்டுறை தொறுந்திசைப்
பாலர்மேற் படையெடுத்து
வேல்பாய் நெடுங்கட் கடற்றூனை யொடுமொருவன்
மேற்செல்ல நாற்றிசையிலும்
வெற்றிக் கயற்கொடி யெடுத்தென வெடுத்தெறியும்
வெண்டிரை கிழித்துவெடிபோம்
சேல்பாய் தடம்பணை யுடுத்தகா விரிநாட
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே.

(இ - ள்.) கோல்பாய் - தாறு பாய்ந்துண்டாகிய, பசும்புண் அசும்பு - பச்சைப்புண் கசித்துகொண்டே யிருக்கிற, கும்பம் - கும்பஸ்தலத்தை யுடைய, தடம்குன்று - பெரிய மலையானது, கவுள்மடை திறந்து - கபோலமடையைத் திறந்து, கொட்டு - சொரிகிற, நெடு அருவியொடு - பெரிய அருவியோடு, தேன் அருவியும்—, திரைகொழித்து - அலை யெறிந்து, உடன்கோப்ப - ஒன்றுய்க் கோத்துக்கொள்ள, மேதிபால் பாய் - எருமைப்பால் பாய்கிற, பெருக்கு ஆறு - பெருக்காறுனது, உவட்டெழு தல் - நிறைந்தெழுதலானது, தன் துணை - தனக்கிணையாகிய, பாவைய ரொடும் குடையும் - மாதர்களோடு மூழ்குகின்ற, அ - அந்த, பாகீரதிக்கு நிகர் - ஆகாய கங்கைக்குச் சமானமாகிய, தண் துறைதொறும் - குளிர்ந்த துறைதோறும், திசைப்பாலர் மேல் - திசைக்காவலர் மீது, படை யெடுத்து—, வேல்பாய் - வேல்போலப் பட்டுருவுகிற, நெடுங்கண் - நெடுகிய கண்களையுடைய, கடல்தானை யொடும் - கடல்போலும் சேனை யோடும், ஒருவன்மேல் செல்ல - ஒப்பற்றவனுகியமன்மதன் படையெடுத் துச் செல்லும்பொருட்டு, நால் திசையிலும் - நான்கு திக்கிலும், வெற்றி - வெற்றியைத் தருகிற, கயல்கொடி எடுத்தென - மீனக்கொடிகளை உயர்த்தினற்போல, எடுத்து எறியும் - எடுத்து வீசுகிற, வெள் திரை கிழித்து - வெள்ளிய அலைகளைப் போழ்ந்துகொண்டு, வெடிபோம் - மேலே தாவுகிற, சேல்பாய் - சேல்கள் பாய்தற்கிடமாகிய, தடம்பணை உடுத்த - பெரிய வயல்களாற் சூழப்பெற்ற, காவிரிநாட - காவிரி நாடனே, சிறுதே—, (எ - று.)

தாறு - அங்குசம். கோல்பாய் பசும்புண் ணசும்பு கும்பத்தடங் குன்று என்றது யானையை. வேல்பாய் நெடுங்கட் கடற்ருனையொடும் என்றமையானும், வெற்றிக்கயற் கொடியெடுத்தென வென்றமையானும் ஒருவன் என்றது மன்மதனை யுணர்த்திற்று. (7)

98. மீத்தந்த மாகத்து மேகத்தி லேடுமூடு
மீனிரியல் போகவுகளும்
வெடிவாளை மதியக டுடைத்தூற்று தெள்ளமுத
வெள்ளருவி யாற்பசுந்தண்
காத்தந்த சண்பகப் பூவேரி மாரிசெய்
காவேரி யாயிரமுகக்
கங்கையா கச்செய்து மீட்டுநர்ற் கோட்டுவெங்
களிறுபிளி றத்தாவிவான்
பூத்தந்த கற்பகக் காட்டினை யுழக்கிவிரி
பொற்ரு தெழுப்பிமற்றப்

பூந்துகட் படலத்தி னுற்றெய்வ நதியையும்
பொன்னிநதி யாகச்செயுந்
தேத்தந்த தண்பணையு டுத்ததீம் புனலுடை
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள நிளங்குமர
சிறுதே ருருட்டியருளே.

(இ - ள்.) மீத்தந்த மாகத்து - மேலிடத்திலுள்ள ஆகாயத்தில், மேகத்தினூடும் —, உடுமீன் இரியல்போக - உடுமீன்கள் ஓட்டெடுக்க, உகளும் - துள்ளுகிற, வெடிவாளை - வெடிவாளைகள், மதிஅகடு உடைத்து - சந்திரன் வயிற்றைக் கிழித்து, ஊற்று - அங்கிருந்து ஊற்றப்படுகிற, தெள் அமுதம் - தெள்ளிய அமிர்தத்தின், வெள் அருவியால் - வெள்ளிய அருவிப்பெருக்கால், பசுந் தண் காதந்த - பசிய தண்ணிய சோலை தந்த, சண்பகப் பூவேரி - சண்பகமலர்த் தேனூனது, மாரிசெய் - மழைபோலப் பெருகுகிற, காவேரி - காவேரி நதியை, ஆயிரமுகம் - ஆயிர முகங்களையுடைய, கங்கையாகச்செய்து - கங்கையாறாகச் செய்து, மீட்டும் - மறுபடியும், நால்கோடு - நான்கு கொம்புகளையுடைய, வெங் களிறு பிளிற - வெவ்விய யானையானது ஒலிக்கும்படி, தாவி - மேலெழுந்து, வான்பூதந்த - மேலான மலர்களைத்தந்த, கற்பகக் காட்டினை உழக்கி - கற்பகக்காட்டையலைத்து, விரி பொன்தாது எழுப்பி - விரிந்த பொன்போலும் மகரந்தத்தை யெழப்பண்ணி, அ - அந்த, பூதகள் படலத்தினுல் - மலர்த்துகட் கூட்டத்தினுல், தெய்வ நதியையும் - தேவ நதியையும், பொன்னி நதியாகச்செய்யும் - காவிரிநதியாகப் பண்ணுகிற, தேத்தந்த - இனிமையைத்தந்த, தண்பணை உடுத்த - தண்ணிய வயல்களால் சூழப்பட்ட, தீ - மதுரமாகிய, புனல் நாட - நீர் நாடனே, சிறுதே —, திருவளர — (எ - று.)

நாற்கோட்டு வெங்களிறு - ஐராவதம். தெய்வநதி - ஆகாய கங்கை. (8)

99. கள்ளவிழ் நறுங்கொடிகள் கழுகிற் படர்த்துபூங்
கற்பகத் தும்படர்தலாற்
காமன் பெருஞ்செல்வ மன்னவர்கள் குழுமியக்
கழுகின் கழுத்தில்யாத்த
வொள்ளொளிய செம்மணிப் பொன்னூசல்பன்முறை
யுதைந்தாட வாடுந்தொறு
மொண்கழு கொடுந்துணர்ப் பைங்கற் பகக்காடு
மொக்கவசை யத்தலையசைத்

தள்ளிலை யலங்கல்வே லெம்பிரா னேப்பாடி
யாடுகின் றூரெனத்தா
மலர்மாரி பொழிவபோ லங்கற் பகத்தெய்வ
மம்பொன்மலர் மாரிதூர்க்குந்
தெள்ளுதமிழ் விரிபுனற் காவிரித் திருநாட
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே.

(இ - ள்.) கள் அவிழ் - தேனோடு மலர்ந்த, கறுகொடிகள் - மணமுள்ள கொடிகள், கழுகில் படர்ந்து - கழுகமரத்தின்மேற் படர்ந்து, பூ - அழகிய, கற்பகத்தும் - கற்பக மரத்தின்மேலும், படர்தலால் - படர்வதனால், காமன் - காமனது, பெருஞ்செல்வம் - பெருஞ் செல்வத்தையுடைய, அன்னவர்கள் குழுமி - அப்பெண்கள் கூடி, அ - அந்த, கழுகின் கழுத்தில்யாத்த - கழுகமரத்தின் கழுத்திற் கட்டின, ஒள்ஒளிய - ஒட்பமாகிய வொளியையுடைய, செம்மணிபொன் னூசல் - செம்மணிகளாற் செய்யப்பட்ட பொன்னூசலை, பல்முறை - பலதரமும், உதைந்து ஆட ஆடுந்தொறும் - உதைந்தசைய ஆடுந்தோறும், ஒள்கழுகொடும் - ஒள்ளிய கழுகோடும், தூணர் - மலர்க்கொத்துகளையுடைய, பை - பசிய, கற்பகக்காடும் - கற்பகாடவியும், ஒக்க அசைய - கூடவே யசையும்படி, தலையசைத்து - தலையாட்டி, அள் - கூர்மையும், இலை - அச்சவடிவும், அலங்கல் - மலர் மாலையும் கொண்ட, வேல் - வேற்படையையுடைய, எம்பிரானை - எம் மிறைவனை, பாடி ஆடுகின்றூர் என - பாடி யாடுவோர் போல, தாம் - தாமும், அலர்மாரி பொழிவபோல் - மலர்மழை சொரிவனபோல, அம் - அழகாகிய, கற்பகத்தெய்வம் - கற்பகத் தெய்வமானது, அம் - அழகையுடைய, பொன்மலர் மாரி தூர்க்கும் - பொன் மலர் மழையால் தூர்க்கின்ற, தெள்ளு - தெளிந்த, தமிழ் - தமிழ்பாவிய, புனல் - நீரையுடைய, திருகாவிரி திருநாட - அழகாகிய காவிரி நாடனே —, சிறுதே—, திருவளர—, (எ - று.)

காமன் - மன்மதன். பெண்கள்! மன்மதனது சேனையாதலால், ''பெருஞ் செல்வ மன்னவர்கள்' என்றூர். கழுத்து - மேலிடம். யாத்தல் - கட்டுதல். (9)

100. வாராட்டு தடமுலைப் பாலொழுகி வழிவதென
மணிமுறுவ லிலவுகாலு
மழலைவாய் முத்துண்டு மூச்சிமோந் துந்திரு
மடித்தலத் தினிலிருத்திப்

பாராட்டி யுந்தமது கண்மணிப் பாவைநின்
படிவமா கக்காட்டியிப்
பாலரொடும் விளையா டெனப்பணித் துந்தங்கள்
பார்வைகளி யாடச்செயுந்
தாராட்டு மதிமுடித் தீராத வினைதீர்த்த
தம்பிரா னுந்தம்பிரான்
றழலுருவி லொருபாதி குளிரவொரு புறநின்ற
தையலு யகியும்வைத்துச்
சீராட்டி விளையாடு சேஞ பதிக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே.

(இ - ள்.) வார் ஆட்டு - கச்சணிந்த, தடம் - பெரிய, மூலை - மூலையி னின்றும், பால்ஒழுகி - பாலான தொழுகப்பெற்று, வழிவதுஎன - வழிந் தோடுதல் போல, மணி முறுவல் - முத்துப்போலும் பற்கள், நிலவு காலும் - நிலவையுமிழ்கின்ற, மழலைவாய் - மழலைச் சொற்களையுடைய வாயினை, முத்துண்டு - முத்தமிட்டும், உச்சி மோந்தும் - உச்சியை மோந்தும், திருமடித் தலத்தினில் இருத்தி - அழகிய மடித்தலத்தினில் வைத்துக்கொண்டு, பாராட்டியும் - அருமை பாராட்டியும், தமது கண் மணிப்பாவை - தமது கண்மணிப் பிரதிமையை, நின்படிவமாகக்காட்டி - உன்னுருவாகக்காட்டி, இ - இந்த, பாலரொடும் - சிறுவரோடும், விளை யாடுஎன பணித்தும் - விளையாடென்று நியமித்தும், தங்கள் பார்வை - தமது பார்வைகள், களியாடச்செய்யும் - களிப்பில் மூழ்கப்பண்ணுகிற, தார்ஆட்டும் மதிமுடி - மாலையாகத்தரித்த சந்திரகண்டத்தோடு கூடிய திருமுடியையுடைய, தீராத வினைதீர்த்த தம்பிரானும்—, தம்பிரான் - அத்தத் தம்பிரானது, தழல் உருவில் - நெருப்புருவத்தில், ஒருபாதி குளிர - ஒருபாதி குளிரும்படி, ஒருபுறம் நின்ற - ஒரு பக்கத்தில் நின்ற, தையலுயகியும் வைத்து சீராட்டி விளையாடு—, சேஞபதிக்கடவுள் - சேனைத்தலைவனுகிய கடவுளே, சிறுதேருருட்டி யருளே—, திரு வளர—, (எ - று.)

மணி முறுவல் என்பது முன்பின்னுக மாறி முறுவல்மணி யென் றுரைத்தலுமாம்.

(10)

சிறுதேர்ப்பருவம் முற்றிற்று

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

(உரையுடன்)

செய்யுள் முதற் குறிப்பு

(அம்முதற் பாகுதி)

செய்யுள்	எண் - பக்கம்	செய்யுள்	எண் - பக்கம்
அங்கைத் தலத்தம்மை	55 - 81	கருமுகி லுக்கரி	27 - 46
அற்ற வுடற்குறை	38 - 60	கருவீற் றிருந்த	80 - 144
இருக்கோ லிடும்பரி	11 - 25	கலைப்பா னிறைந்த	44 - 67
இருளற விமைக்குநின்	53 - 79	கள்ளவிழ் நறுங்கொடிகள்	99 - 136
இருளுந் தரங்கக்	83 - 118	கனியொடு சுவையடு	40 - 62
இழுமெ னருவி	60 - 88	கானக் குறப்பெண்	76 - 110
இழுமென்மொழித்தெளி	90 - 126	காலுறு கற்பகக்	6 - 17
உண்ணிலா வுவகைத்	33 - 53	கிலேக்குஞ் சகரர்	24 - 42
உண்ணெகிழ் தொண்ட	28 - 47	கும்பம தக்களி	19 - 36
உலகு குளிர	59 - 87	கும்பாதி காரிய	12 - 27
ஊற்றும் பசுந்தே	81 - 116	குருகு நாறு	41 - 63
ஊனுயு யிர்க்குயி	30 - 49	குழைய டர்ந்துவடி	3 - 10
ஒருபு றத்துமா	2 - 8	குழையொடு குழையெதிர்	17 - 34
ஒழியாத புவனத்	66 - 97	குறமென் னடையு	71 - 104
கங்கைமுடி யடிகட்கொர்	63 - 93	குன்றைத் திறந்திட்ட	68 - 100
கட்டுண்ட படர்சடைக்	54 - 80	கைக்கெட்டு மெட்டுக்	13 - 28
கடலேச் சுவற	36 - 58	கொழுநாண் மலர்க்கற்	72 - 105
கடாமுமிழ் கைக்கதக்	4 - 14	கோடுபடு கொங்கைக்	46 - 69
கம்பக் களிற்றுக்	92 - 128	கோல்பாய் பசும்புண்	97 - 134

செய்யுள்	எண்	பக்கம்
சமரிற் பட்டவர்	37	59
செம்பொற் கருங்கழ	51	76
செம்பொ னடிச்சிறு	16	33
சொற்றரு பெரும்புலவர்	62	91
சோலைப் புறமூப்	25	44
தரிக்குஞ் சுடர்ப்பரிதி	85	121
தருமன்னு பொன்னுலகு	65	96
தள்ளரும் பவக்கட	69	101
தன்னெஞ்சத் தெய்வச்	70	102
திங்கணூ தற்றிரு	20	37
தீற்றுஞ் சுதைவெண்	23	41
தூளிதூங்கு மழைமுகிற்	47	71
துறைபட்ட மறையவன்	8	20
தொடிக்குந்தொடைவெண்	22	40
தோலாத முத்தமிழ்	29	49
நஞ்சிற் றேய்த்துக்	58	85
நறவு விரிந்த	42	65
நெட்டிடற் பைங்கட்	67	99
நெய்வைத்த கூந்தல்	95	132
பயிறரு முதுமறை	9	22
பற்றவிற் காமன்	96	133
பாயிருட் போதத்	64	95
பில்கும் பசுந்தேன்	21	38
பிள்ளை மதிச்செஞ்	77	111
புயலுண் டிருண்ட	45	68
பூமரு வுயிர்க்குங்	48	72
பூமேவு கற்பகப்	1	6
பெருகுசுவைத்தெளி	89	125
பெருவெளி முகடு	87	123
பைங்கட் சிறைக்கால்	94	130
பைங்காய்க் கமுகு	5	15
பைந்தண் கமல	56	83
பொழியுங் கருணைப்	43	66
பொன்பூத்த குடுமிக் காப்பு :		1
பொன்னங் கொடிபோல்	75	108
போரோடு படைதுறந்	91	127
மடநடைத் தெய்வக்	34	55
மடல்வா யவிழ்ந்த	78	112
மண்டலம் போற்றுருவ	61	89
மதியு நதியு	49	73
மழவுமுதிர் கனிவாய்ப்	52	77
மழைக்கொந் தளக்கலப	32	52
மழைமுகில் பிளிறு	86	122
மாலி மயத்து	26	45
மானிறக் கடவுடிரு	7	18
மீத்தந்த மாகத்து	98	135
மீனேறு குண்டகழி	15	31
முடங்குந் திரைப்பரவை	31	50
முறுக்குடை நறைச்சத	10	23
மூரிக் களிறே	74	107
மைவிழிச் செங்கமல	14	30
மொய்ம்பிற் பெரும் புவன	84	120
வடிவி னழகு	50	75
வண்டேறு செந்நிறப்	93	129
வம்மி னெனப்புல	88	124
வழிக்குப் புறம்பா	73	106
வள்ளைக் குழையிற்	57	84
வளரிள வனமூலை	39	61
வாமாண் கலைப்பேர்	79	113
வாராட்டு தடமுலைப்	100	137
விண்ணெண் கடற்புவன	35	56
விரல்சுவை யுண்டு	18	35
வீளைக்கும் பெரும்புவன	82	117

செய்யுண் முதற்குறிப்பு முற்றிற்று.